ஸ்ரீ:



ஸ்ரீமதாண்டவன் வம்ச்யப்ப பூர்த்தி



ஸ்ரீமதாண்டவன்
ஷஷ்ட்யப்த பூர்த்தி
மலர்




1967

ஸ்ரீமதாண்டவன் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவ கமிட்டியார்

ஸ்ரீமதாண்டவன் ஷஷ்ட்யப்த பூர்த்தி மலர்

Digitized Book for Online Publication
With
Anugraham
From
His Holiness Srimad SriVaraha MahaDesikan



SRIRANGAM SRIMAD ANDAVAN ASHRAMAM

ஸ்ரீ:

பொருளடக்கம்

பக்கம்

அனுக்ரஹ பத்திரிகைகள் x

Messages xiii

வியாசங்கள்

உபயவேதாந்தம் 1
—ஸ்ரீ உப. வே. உத்தமூர் T. வீரராகவாசாரியார்

விசிஷ்டாத்வைதம் 6
—ஸ்ரீ உப. வே. பண்டிதராஜ திருமலை தாதாசாரியார்

ஆசார்ய மஹிமை 11
—ஸ்ரீ உப. வே. மதுராந்தகம் ஈச்சம்பாடி வீரராகவாசாரியார்

ப்ரபத்தி ப்ரபாவமும் அடியேன் அனுபவமும் 16
—ஸ்ரீ உப. வே. பைத்தாம்பாடி மஹாகவி ராமானுஜாசாரியார்

அருளிச் செயல்களும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயமும் 21
—ஸ்ரீ உப. வே. நாவல்பாக்கம் ஸ்ரீ கிருஷ்ண தாதாசாரியார்

அனகாம் ஆசார்ய ஸந்ததிம் வந்தே 26
—ஸ்ரீ உப. வே. R. கோபாலஸ்வாமி ஐயங்கார்

சிறுமாமனிசர் 32
—ஸ்ரீ உப. வே. திண்டுக்கல் D. ராமஸ்வாமி ஐயங்கார்

கீதாஸாரம் 36
—ஸ்ரீ உப. வே. திருக்கள்ளம் நரஸிம்ஹ ராகவாசாரியார்

பழுதற்ற வாழ்வு 45
—ஸ்ரீ உப. வே. ஸ்ரீகார்யம் சித்ரகூடம் விஜயராகவாசாரியார்

கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே 51
—ஸ்ரீ உப. வே. கோமடம் S. S. ஐயங்கார்

ஸிம்ஹஸ்தந்யம் 56
—ஸ்ரீ உப. வே. கோழியாலம் சடகோபாசாரியார்

புருஷார்த்தத்தின் எல்லை 60
—ஸ்ரீ உப. வே. புரிசை நடாதூர் கிருஷ்ணமாசாரியார்

ஸ்ரீ பாதுகை 65
—ஸ்ரீ உப. வே. கௌஸல்யா நந்தனசார்யார்

ஸதாசார்ய ஸமாச்ரயணம் 69
ஸ்ரீ உப. வே. காடந்தேத்தி ராகவாசாரியார்

தன்னிலை உணர்வோன் தன்மை — 79
—ஸ்ரீ உப. வே. அல்லுண்டு K. ஸ்ரீனிவாஸாசாரியார்

வைணவத்தின் தொன்மை — 84
—ஸ்ரீ உப. வே. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்

ஸத்ஸம்ப்ரதாயம் — 92
—ஸ்ரீ உப. வே. மன்னார்குடி ஸ்ரீநிவாஸ ராமானுஜாசாரியார்

மஹாகவி ஸ்ரீ வேங்கடாத்வரீ ஸேவித்த திருக் குடந்தை — 101
—ஸ்ரீ உப. வே. நாச்சியார் கோயில் ராகவாசாரியார்

ஸ்ரீ வைஷ்ணவம் — 106
—ஸ்ரீ உப. வே. P. S. ராமானுஜாசாரியார்

ஜங்கம பாரிஜாதம் — 111
—' ஆண்டவன் திருவடி '

பயாபயங்கள் — 117
—ஸ்ரீ உப. வே. K. வரதாசாரியார்

உத்தம பாகவதலக்ஷணம் — 124
—ஸ்ரீ உப. வே. ஸ. மா. கிருஷ்ணமாசாரியார்

தானம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல் — 126
—ஸ்ரீ உப. வே. ஸ்ரீராமஜயம் T. பக்தவத்ஸலன்

செய்யுள் விகாரமா, சொல் விஹாரமா? — 131
—ஸ்ரீ கி. வேங்கடசாமி ரெட்டியார்

திருப்பாவையின் அவதாரம் — 138
—ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி மாதவய்யங்கார்

கோயில் — 143
—ஸ்ரீ உப. வே. காஞ்சி ஸ்ரீதர தாதாசாரியார்

ஸ்ரீ தேசிகனும் ஆண்டாளும் — 147
—ஸ்ரீ உப. வே. ராமஸ்வாமி ஐயங்கார்

நமது ஸம்பிரதாயத்தின் சீர்மை — 150
—ஸ்ரீ உப. வே. தி. ஈ. ஸ்ரீநிவாஸ ராமானுஜாசாரியார்

ஸ்ரீபாத பரிமளம் — 154
—ஸ்ரீ உப. வே. கடலூர் D. S. ராகவன்

ஒன்பது படிகள் — 157
—ஸ்ரீ உப. வே. ஏ. ஜீ. வெங்கடாசாரியார்

திவ்ய ப்ரபந்தம் — 161
—ஸ்ரீ உப. வே. மன்னார்குடி வெங்கடாசாரியார்

அண்ணலோடு ஆராவமுதனைக் கண்ட அருள்மாரி — 166
—ஸ்ரீ உப. வே. E. D. ஸ்ரீநிவாஸாசாரியார்

தமிழ்மறையும் வடமொழி வேதமும் — 171
—ஸ்ரீ உப. வே. மேல்மா நரஸிம்ஹ தாதாசாரியர்

சரணாகதியின் ஆவசியகம் — 177
—ஸ்ரீ உப. வே. ராவ்பகதூர் R. கிருஷ்ணமாசாரியார்

புகழ்மாலைகள்

கண்டோம், கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம் — 178
—ஸ்ரீ உப. வே. A. S. ஐயங்கார்

பரமஹம்ஸ ப்ரபாவ பரிசயம் — 183
—ஸ்ரீ உப. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார்

ஸ்ரீ ஆண்டவனே உபாசிப்பவர் ஸ்ரீ ஆண்டவனே — 188
—பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்

ஆசார்ய குணபூர்த்தி — 192
—ஸ்ரீ உப. வே. K. விஜயராகவாசாரியார்

ஸ்வாமியுடன் அடியேன் பெற்ற அநுபவங்கள் — 197
—ஸ்ரீ உப. வே. வ. ந. சேஷாத்ரியாசார்யார்

ஆச்ரமோயம் விபாதி — 201
—ஸ்ரீ உப. வே. ஆர். வி. சேஷாத்ரி

சொல்லின் செல்வன் — 206
—ஸ்ரீ உப. வே. வாஸுதேவாசாரியார்

ஸ்ரீமதாண்டவன் — 209
—ஸ்ரீ உப. வே. பி. டி. நரஸிம்மாசாரியார்

திரு நாட் பாட்டு — 212
—ஸ்ரீ வி. வேங்கடசாமி ரெட்டியார்

ஆசார்யர்களின் பெருமை — 213
—ஸ்ரீ உப. வே. பருத்திப்பட்டு ரங்காசாரியார்

ஆண்டவன் போற்றித் திரு அகவல் — 217
—ஸ்ரீ உப. வே. கு. கிருஷ்ணமாசாரியார்

ஸ்ரீமத் ஆண்டவனுடன் பூர்வாச்ரம அநுபவங்கள் — 224
—ஸ்ரீ உப. வே. குங்குமம் வரதாசாரியார்

பல்லாண்டு — 227
—ஸ்ரீ ஆர். ஆராவமுதன்

ஆசார்யன் தைவம் போல் — 229
—ஸ்ரீ உப. வே. மா. திருமலாசார்யார்

திருநாமச் சிறப்பு — 232
—ஸ்ரீ உப. வே. வித்வான் அத்தி கிருஷ்ணமாசாரியார்

ஸ்ரீமதாண்டவன் ப்ரபாவம் — 235
—ஸ்ரீ உப. வே. வானமாமலை கோஸலாசாரியார்

நல் வாழ்வளிக்கும் திருவாக்கு — 238
—வித்யார்த்தி தி. ஈ. கிருஷ்ணதேசிகன்

ஸ்ரீமத் ஆண்டவன் பாத இலச்சினைபட நடந்தருளிய பிரதேசங்கள் — 243
—வித்யார்த்தி தி. ஈ. கிருஷ்ணதேசிகன்

ब्रह्मसूत्राधिकरणविवेकः 255
—श्री. उभ, वे: विद्वान् गोपालाचार्यः

श्रीनव नम्मांडवन् स्तवः 270
—महाकवि श्री उभ. वे. व. रामानुजाचार्यः

श्रीरङ्ग वैभवं 272
—जी. आर. श्रीनिवासदेशिकाचार्यः

मङ्गलमालिका 282
—श्री उ, वे. रंगाचार्यः

श्रीमते वेदान्तगुरवे नमः 284
—श्री. उ. वे. वि. कृष्णमाचार्य

श्रीमते वेदान्त रामानुजायगुरवे नमः 285
—श्री. उ. वे. एस. सम्पतैय्यङ्गारः

पराभवाब्द महिमस्तुतिः 288
—श्री उ. वे. जि. एस. वि, श्रीनिवासशेषन्

स्वधर्म. 293
—श्री उ. वे. रङ्गनाथाचार्यः

करुणाकाकुत्स्थ. 297
—श्री. उ. वे. रा. लक्ष्मणय्यङ्गार

The Greatness of Archa 303
—*Sri Ubhave A. Srinivasa Raghavan of Pudukottai*

Sri Ramanuja and Popular Religion 310
—*Professor K. C. Varadacharya*

The Genesis and Genius of Ubhaya Vedanta 313
—*Sri Ubhave N. Srinivasacharya*

Sarira-Sariri Bhava 320
—*Professor R. Ramanujachari*

Srirangam Srimad Andavan 327
—*Sri Ubhave R. Srinivasavaradha Aiyangar*

Moral Responsibility 332
—*Professor K. R. Applachari*

ಶ್ರೀಮದ್ ಆಂಡವನ್ 337
—ಶ್ರೀಮಾನ್ ಮತ್ತೂರು ಕೃಷ್ಣಮೂರ್ತಿ ಅವರು

ஸ்ரீ:

முன்னுரை

ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகனுடைய ஷஷ்டி அப்த பூர்த்தி கொண்டாட்டத்தின் ஒரு சின்னம் இருக்க வேண்டுமென்று பலர் அபிலாஷைப்பட்டதால், இந்த வெளியீட்டை எல்லார் அங்கீகாரத்தையும் முன்னிட்டு, ஸ்ரீமத் ஆண்டவன் திருவடி வாரத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

இதில் ஸம்ப்ரதாயம் பற்றிப் பன்மொழிகளில் மஹான்கள் விஷயப்ரதானம் செய்துள்ளார்கள். ஆண்டவன் ஆச்ரமம் பற்றியும் நாம் அறிய வேண்டிய விஷயங்கள் இம் மலரில் வெளிவந்திருக்கின்றன. இப்போது எழுந்தருளி யிருக்கும் ஆண்டவனுடைய அபிமானிகள் சில புகழுரைகளையும் ஸமர்ப்பித்துள்ளார்கள். இவை யெல்லாம் மஹனீயாளுடைய அநுபவத்துக்கு உத்தேசியமாக இருக்குமென்று எண்ணி இந்த ஞாபக சின்னத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமத் ஆண்டவன் அநேக திவ்ய தேசங்களில் மங்களா சாஸனம் பண்ணி எழுந்தருளுவது யாவரும் அறிந்ததே. ஆகையால், கிடைத்த வரையில், சில திவ்ய தேச எம்பெருமான்கள் படங்களும், பூர்வாசாரியர்கள் படங்களும் எல்லோருக்கும் உகப்பளிக்குமென்று சேர்க்கப்பட்டுள. அவசரத்தில் இம் மணிவிழா மலர் வரவேண்டி யிருந்தமையால் குற்றங்களைப் பொறுத்து, குதூஹலத்துடன் அங்கீகரிச்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

பொருளும், விளம்பரங்களும் வழங்கிய சிஷ்ய, பக்த, ஆப்த நண்பர்களுக்கும், கட்டுரைகள் அநுக்ரஹித்தவர்களுக்கும் அடியோங்களுடைய கிருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறோம். அருள்மொழி அநுக்ரஹித்த மடாதிபதிகளுக்கும், பாராட்டுச் செய்தி அனுப்பிய பெரியோர்களுக்கும் கடமைப் பட்டுள்ளோம். இம் மலரில் அச்சிடப்பெற்றுள்ள படங்களுக்கு 'பிளாக்குகள்' கொடுத்து உதவிய ஸ்ரீ M. O. அழகிங்க ராச்சாரியார், ஸ்ரீ C. P. S. ராகவன், ஸ்ரீ D. சேஷாத்ரி, ஸ்ரீ கோபாலதேசிகன் மற்றும் ஸ்ரீ நரஸிம்ஹப்ரியா—இவர்களுக்கு உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இம் மஹோத்ஸவ ஸமயத்தில் சில மஹான்கள் விசேஷ கைங்கர்யங்களை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஸ்ரீ M. D. ஸுதர்சனையங்கார் ஸ்வாமி ஸ்ரீமதாண்டவனுக்குத் திரு நாராயணபுரத்தில் ஓர் ஆச்ரமம் நிருமாணிக்க ரூ. 15,000 ஸமர்ப்பித்துள்ளார். ஸ்ரீ T. S. ராஜம் குடும்பத்தார் ஸ்ரீம தாண்டவன் நிர்வாஹத்தில் வேத சாஸ்த்ர வேதாந்த ஸம்ஸ் கிருத கலாசாலை ஒன்றை நடத்த பெரிய கட்டடம் வாங்கி யளிக்கிறார்கள். பாதுகா ஸஹஸ்ரம் என்னும் சிறந்த நூலை அச்சிட்டு இலவசமாக வழங்கப்போகிறார்கள். மேலும் இவ் விழா வெகு சிறப்புற நடைபெறக் கோலாகல ஏற்பாடுகள் அனைத்தையும் உற்சாகத்துடன் செய்து வருகிறார்கள். இம் மஹனீயர்களுக்கு நமது மட்டற்ற கிருதஜ்ஞதையைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மிகக் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அழகாக அச்சிட்டு, நூலைக் குறித்த காலத்தில் அளித்த "ஹோ அண்ட் கோ" அச்சகத்தாருக்கு நன்றி செலுத்துகிறோம். இவ் வெளி யீட்டுக்குப் பலவாற்றலும் உதவிய ஸ்ரீமான் ஆர். கே. ஸ்வாமி அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம்.

இப்படிக்கு,

கமிட்டியார்

ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம:

ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ முனி கருணாலப்த வேதாந்தயுக்மம்
ஸ்ரீமத் ஸ்ரீவாஸ யோகீஸ்வர குருபதயோரர்பித ஸ்வாத்மபாரம் |
ஸ்ரீமத் ஸ்ரீரங்கநாதாஹ்வய முனி க்ருபயா ப்ராப்தமோக்ஷார்சமம்தம்
ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ முனிமபரம் ஸம்ச்ரயே தேசிகேந்த்ரம் ||

(பராபவ, பங்குனி, புஷ்யம்)

ஸ்ரீமதாண்டவன் ஷஷ்ட்யப்த பூர்த்தி மலர்



ஸ்ரீமத் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் (திருக்குடந்தை ஸ்ரீமதாண்டவன்)

SRIMAD ANDAVAN
SHASHTIABDAPURTHI CELEBRATIONS COMMITTEE

Patron	M. Sudarsanam Iyengar
President	T. S. Rajam
Vice-Presidents	R. Gopalaswami Iyengar
	D. Ramaswami Iyengar
	M. S. Ramarathnam
	S. K. Venkatranga Iyengar
Secretary	N. G. Krishna Iyengar
Treasurer	K. Srinivasan
Joint Secretaries	Chithrakoodam Vijayaraghavachariar
	Singanur V. K. S. Desikachariar
	T. Parthasarathy
	M. S. Santhanam
	Vidwan H. Gopalachariar
	S. Sampath Iyengar

Committee Members

Acharya, Dr. B. G.
Applachariar, K. R.
Aravamudhan, D.
Adinarayanan
Bhooderi Kalyanam Iyengar
Balakrishna Pillai, E. V.
Chakravarthy, R.
Duraisamy Iyengar, M.
Desikachari, S. N. G.
Jagannadhan, R.
Jagannadha Iyengar, M. S.
Krishnaswamy Iyengar, N.
Kasturi Ranga Iyengar, G.
Krishnaswamy Sarma, V.
Krishnamurthi, V.
Narayanan, R.
Nambi, V.
Nambi Iyengar, S.
Raghavan, C. P. S.
Rangachari, G.
Ramanujam, N. R.
Ravindran, S.
Ramaswami Iyengar, S.
Ramanujam, P. K.
Rajagopalachari, S. S.
Raghavachariar, G.
Ramanujachari, R.
Rajam, S.
Rajagopalan, U.
Raghavachariar, T.
Rajagopalachari, P. V.
Ramanujam Iyengar, R.
Seshadri, Dr. V. K.
Santhanam Iyengar, P. A.
Srinivasachari, V.
Srinivasa Varadan, R.
Srinivasan, R.
Sundaram Iyengar, T. S.
Sesha Iyengar, T.
Srinivasachari, V. R.
Srinivasaraghavan, R.
Sundararaja Iyengar, V. V.
Srirangachari, S.
Srinivasavaradan, N.
Satakopa Iyengar, Dr. K. G.
Santhana Reddiar
Thathachariar, R. V. R.
Thiruvenkatachari, T. A.
Vedanta Desikan (Jawahar)
Venkatachari, K.
Varadachariar, A. S. V.
Venkatavaradachari, V.

Souvenir Committee	R. Gopalaswami Iyengar (*Convener*)
	D. Ramaswami Iyengar
	S. S. Iyengar
	D. Aravamudhan
	K. R. Applachariar

அனுக்ரஹ பத்ரிகா

ஸ்ரீ:

ஸ்ரீரங்கம்

குசலம்

ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ யதிந்ருபதி ஸம்ப்ரதாய ப்ர தீபம் பாத்ரேஷுஸ்நேஹ பூர்வம் சுபகுணதசயா ஸம்யுதேஷு ப்ரகாச்ய தத்வாலோகேந லோகேந லோகான் அபகததிமிரான் ஆசதாப்யாம் விதன்வன் ஜீயான் நாராயணஸ்ய ஸ்மரணமிஹ முனே: ஸ்ரீநிவாஸஸ்யபூயாத்

ஸ்ரீமதாண்டவன் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் ப்ரக் ருதம் ஷஷ்டியப்த பூர்த்தி மஹோற்சவம் கண்டருளுவது போல் சதாப்த பூர்த்தி மஹோத்சவத்தையும் கண்டருளி லோகோஜ் ஜீவனம் செய்து வருமாறு ஸ்ரீகாந்தனுடைய ஸங் கல்பம் பெருக வேண்டும்.

அதிகாரிகளான மித்ரர்களும் யதாதிகாரம் பஞ்சஸம்ஸ் காரம் க்ரந்த காலக்ஷேபம் சரணாகதியுமாகிய அவச்ய கர்த் தவ்யங்களைப் பூர்த்தி செய்துகொண்டு க்ருதக்ருத்யர்களாய் உஜ் ஜீவனம் பெறவேண்டும்.

இவ்வாறு, ஸஹநாவவது
ஸஹநௌ புநக்து

இத்யாதியான உபநிஷத்தின்படி பரஸ்பரம் ஆத்ம க்ஷேம முண்டாக வேணுமென்று ஆசாஸன பூர்வமாக

நாராயணஸ்மரணம்

ஸ்ரீமதாண்டவன்
பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆச்ரமம்

ஸ்ரீ:

வாநமாமலை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய உபய வேதாந்த ப்ரதிஷ்டாபன ஆசார்யராய் ஸ்ரீமத் ரம்ய ஜாமாத்ர யதி வரக்ருபாலப்த ஸ்ரீவரமங்கா ஸமேத ஸ்ரீதேவநாயக அந்த ரங்க கைங்கர்யைக துரந்தரராய் அகண்ட மஹீமண்டல அலங்கார மஹீபால கோடீர கோடி கடித மணிகிரண படல பாடலித வாத பீடபர்யந்தாசார்யராய் பரம புருஷார்த்த லக்ஷண விலக்ஷணமோக்ஷக ப்ரயோஜனர்த்த பஞ்சக ஞானகஸாதன ஸ்ரீமத் அஷ்டாக்ஷராதி ரஹஸ்யத்ரய ஜகத் உஜ்ஜீவன ஆசார்யராய் ஸகல முனிஜன மானஸாரவிந்த ஸந்தோக ஸமுல்லாஸ ஸமுல்லஸித ஸ்ரீராஜ ஹம்ஸாவதார ராய் ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்த நிர்த்தாரகாசார்ய ஸார்வ பௌமராய் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரராய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீவானமாமலை ராமானுஜ ஜீயர்,

ஸகல ஸத்குண ஸம்பன்னர்களாயும் ஸ்ரீ பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்ய நித்ய நிரதர்களாயும் நம்முடைய மடம் அரங்கநகரப்பன் ஸந்நிதிக்கு முக்ய அந்தரங்கராயும், இருக்கிற நம்முடைய ஸ்ரீமத் ஆண்டவன் ஷஷ்டி யப்த பூர்த்தி விழாக் குழுவினருக்கு ஸ்வரூபாநுரூபம்க்ரியமாணம் மங்களாசாஸனம்.

இவ்விடம் வானமாமலையில் நம்முடைய மடம் அரங்க நகரப்பன் ஸந்நிதி நித்யததீயாராதன உபய வேதாந்த கால க்ஷேபாதிகள் அவிச்சின்னமாய் நடந்து வருகிறது. அவ் விடம் உங்களுடைய சுபயோக க்ஷேமாதிசயங்களுக்கு அடிக் கடி யெழுதியனுப்பிக் கொண்டிருக்கவேணும்.

இப்பவும் ஸ்ரீமத் உபய வேதாந்தங்களிலும் ஸம்யக் அவகா கித்து ஸரஸமானமுறையில் மிகவும் ஸாரமான அர்த்தவிசேஷங் களை உபதேசித்துக்கொண்டு ப்ரக்ருதத்தில் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஸ்தானத்தை அலங்கரித்து எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமதாண் டவன் வேதாந்த ராமானுஜ மஹா தேசிகனுடைய ஷஷ்டியப்த பூர்த்தி மஹோற்சவத்தைச் சிறந்த முறையில் கொண்டாடு வதைக் கேட்டு மிகவும் ஸந்தோஷித்து ''ஸ்ரீமத் ஆண்டவன் பல்லாண்டு பல்லாண்டுகள் இப்படி ஜகத் உஜ்ஜீவன கார்யங் களால் அநுக்ரஹித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கவேணும்'' என்று எம்பெருமான் ஸந்நிதியில் ப்ரார்த்திக்கிறோம்!

அநேக மங்களா சாஸனம்!!

ஸ்ரீ ராமாநுஜன்

ஸ்ரீ வாநமாமலை ஜீயர்

ஸ்ரீ:

திருக்குறுங்குடி

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகா சார்யோபய வேதாந்த ப்ரதிஷ்டாப நாசார்யாணும், ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண பத்வாந்த: கரணநாம் அகண்ட மஹீமண்டலா லங்கார, மஹீபால கோடீர கோடிகடித படல பாடலிதவாத பீடபர்யந்தாசார்யாணும், ஸ்ரீபகவத் ராமாநுஜ நியமித சதுஸ் ஸப்ததி ஸிம்ஹாஸநாதிபதி ஷ்வேகதமாநாம், ஸ்ரீ ராமாநுஜ ப்ரதிஷ்டாபித ஸ்ரீ குருங்கநகரி விராஜமான மடாதிபதிநாம், ஸ்ரீ நம்பி நாராயண ராமாநுஜ யதீந்த்ராபர நாமதேய ஸ்ரீ மஹா க்ருபாப்த ராமாநுஜ ஸம்யமீந்த்ர பத்ரபீட ஸ்திதா நாம், அஷ்டசத்வாரிம் சத் ஸ்தானமலங்க்ருதப்தாம், சமத மாதி ஸமஸ்த ஸத்குணகண மஹார்ணவாநாம், ஸ்ரீ பரகால ஸம்யமிவராணும் ஸ்ரீமுக பத்ரிகா.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யோபய வேதாந் தாசார்யராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகரின் ஷஷ்டியப்த பூர்த்திமஹோத்ஸவம் நடைபெறுவதாகக் கேட்டு பரம ஸந்தோஷமடைந்தோம். துரீயாச்ரம நிர்வஹணத் துக்கு அவசியாபேக்ஷிதங்களான ஞாநாநுஷ்டான வைராக்யாதி கல்யாண குணகணங்களினால் ஸுப்ரஸித்தரா யெழுந்தருளி யிருக்கிறார். இந்த ஸ்வாமி பிரகிருதத்தில் பாதசாரியாக திவ்ய தேசயாத்திரை மேற்கொள்வது துர்லபமாகிவிட்டது. இந்த ஸ்வாமி அநாயாசமாக பாதசாரியாகவே யாத்திரை மேற் கொண்டு திவ்ய தேசத்து எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்தருளின திடவைராக்யம் ஆச்சரியமானது. யாத்ரா மார்க்க மத்தியில் ஆங்காங்கே எம்பெருமானர் தர்சனமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையும், ஆழ்வார்களின் அருளிச் செயல் ரஹஸ்யங்களையும் உலகோர் போற்றும் வகையில் எளிய நடையில் உபந்யஸித்துக் கொண்டு எழுந்தருளுகிறார். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் பேரில் இதர மதாந்தஸ்தர் களின் துவேஷம் அதிகரித்துவரும் இந்நாளில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கு செய்து வரும் பணி வாசாம கோசரம். பரம ஸாத்விகரான இந்த ஸ்வாமியின் ப்ரதிபா சக்தி பரம விலக்ஷணமானது. உபய விபூத்யைச்வர்யங்களையு முடைய எம்பெருமானர் திருநாமத்தையும், கவிதார்க்கிக ஸிம்ஹமான தேசிகனது திருநாமத்தையும் ஒருங்கே பூண்டவராதலால் ஸகல ஐச்வர்யங்களும் இந்த ஸ்வாமியிடம் பூரணமாக இருக் கிறது. ஆச்ரம ப்ரயுக்தமான ஆசாரங்களையும் குறைவற அநுஷ்டித்துக் கொண்டு எம்பெருமானர் ப்ரவசனத்தையும் நிறைவேற்றிக்கொண்டு சதாபிஷேக மஹோத்ஸவம் கண்டருள வேணுமென்று ஸ்ரீவைஷ்ணவ நம்பி ஸந்நிதியில் பிரார்த்திக்கிறோம்.

பேரருளான ராமாநுஜ ஜீயர்

SRIRANGAM SRIMAD ANDAVAN ASHRAMAM

MESSAGES

Rashtrapati Bhavan
New Delhi

The President is glad to learn that the devotees and admirers of Srimad Andavan are celebrating his Shashtiabdhapoorthi. He sends his best wishes for the success of the celebrations.

Secretary to
The President of India

Kaudiar Palace,
Trivandrum

I have just received the letter of 25th March regarding Srimad Andavan's Shashtiabdhapoorthi and the short note. While I have had the pleasure and privilege of meeting Swamiji once recently

in Trivandrum I have not had enough contacts with him or read about his philosophy to the extent to make it possible for me to do justice in writing a note or article as indicated in the letter. In the circumstances I have to be satisfied with sending my best wishes to Srimad Andavan on this important occasion and pray for his long life and for a further period of spiritual blessing and service to the humanity.

RAMA VARMA

May it please your Holiness,

Many, many a Dandavath Pranamams at the Lotus feet of your Holiness.

I pray to our Lord Sri Lakshmi Hayagreeva Perumal that the Tiru-Avathara day of your Holiness on the 18th April should pass off very well and that your Holiness must be spared for long, very long age saving millions of suffering sinners like us to bless.

Hony. Secretary, Sri Parakala Mutt

"Vidhana Soudha"
Bangalore

I am glad to know that the Shashtiabdhapoorthi of Srimad Andavan is being celebrated and a Souvenir will be published to mark the auspicious occasion.

Srimad Andavan has made tremendous contribution towards the spiritual upliftment of the people. His Holiness has made a deep study of Hindu philosophy and interprets it in easy and understandable language to the masses and people whom he is happy to meet. I have had occasion to hear him and be enlightened.

On this happy occasion, I wish His Holiness many happy returns of the day and pray that God may bestow on him good health and long life so that he may continue to lead people to higher standards of spiritual living.

S. NIJALINGAPPA
Chief Minister of Mysore

Bihar Governor's Camp
Patna

I am extremely glad to learn that a Committee has been formed to celebrate Srimad Andavan's Sashtiyabthapoorthy on the 18th April 1967 in a decent manner. I have had the pleasure of having his Darshan in his Purvashram and hearing his discourses on Prabandhams and his religious and philosophical discourses at Delhi. He is one of our eminent scholars in Visishtadvaita philosophy. At an early age he dedicated himself to the propagation of our Sampradaya. His discourses were highly interesting and instructive. His acceptance of the Ashram is the highest sacrifice that he has made for the benefit of Sri Vaisnavas. His sweet temper, his knowledge and life of devotion has endeared him to one and all of Srivaisnavas irrespective of Paramparas to which they may belong.

I pray to Lord Venkateswara that He may be granted a full hundred years of life, if not more, with health and cheer to guide the community both spiritually and morally in an ever increasing measure. I wish the celebrations every success. Please convey my heartiest greetings and my Shashtanga-danda Pranams.

M. ANANTHASAYANAM AYYANGAR


ஸ்ரீ ரங்கநாத பாதுகா



ஸ்ரீ ரங்கநாதர், ஸ்ரீரங்கம்

Courtesy: Divyakshetras in India



ஸ்ரீ ரங்கநாயகித்தாயார், ஸ்ரீரங்கம்

Courtesy: Divyakshetras in India



ஸ்ரீ வரதராஜன், காஞ்சிபுரம்



ஸ்ரீ பெருந்தேவித்தாயார், சாஞ்சிபுரம்



ஸ்ரீ ஆராவமுதன், திருக்குடந்தை

Courtesy: *Divyakshetras in India*



ஸ்ரீ கோமளவல்லித்தாயார், திருக்குடந்தை

Courtesy: Divyakshetras in India




ஸ்ரீ பார்த்தஸாரதி, திருவல்லிக்கேணி



ஸ்ரீ வீரராகவர், திருவள்ளூர்

Courtesy: Chitra Thiruppavai




பெருமாளும் தாயாரும், ஸ்ரீபுள்ளபூதம்குடி

Courtesy: Divyakshetras in India




ஸ்ரீ தேவநாதன், திருவஹீந்திரபுரம்

Courtesy: Lifco



ஸ்ரீ ஆண்டான், ஸ்ரீ ரங்கமன்னர், ஸ்ரீ கருடாழ்வார், ஸ்ரீ வில்லிபுத்தூர்

Courtesy: *Divyakshetras in India*



ஸ்ரீ சக்ரபாணியும், தாயாரும், திருக்குடந்தை



ஸ்ரீ பெரியாழ்வார், ஸ்ரீவில்லிபுத்தூர்




ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீபெரும்பூதூர்



ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன், திருவஹீந்திரபுரம்

Courtesy: Chitra Thirappavai



ஸ்ரீ ஸ்ரீனிவாசர் திருமலை





திருக்குறுங்குடியில்
மங்களாசாஸனம்



ஸ்ரீ பத்ரிநாராயணன், பத்ரிகாச்ரமம்

திருவனந்தபுரம் விஜயம்





ஸ்ரீ திருநாராயணன், திருநாராயணபுரம்



மதுரையில்
ஸ்ரீ அழகர்
மங்களாசாஸனம்



ஸ்ரீ செல்வப்பிள்ளை, மேல்கோட்டை




சிஷ்யர்களுடன்
ஸ்ரீமதாண்டவன்




ஸ்ரீ ஹயக்ரீவன், திருவஹீந்திரபுரம்




மதுரையில்
ஸ்ரீமதாண்டவன்



ஸ்ரீ ஸ்ரீனிவாசன், ஸ்ரீ வஞ்சுளவல்லி — நாச்சியார் கோவில்
பாதுகா ஆராதனம்





ஸ்ரீ கோவிந்தராஜன், சிதம்பரம்



கோயமுத்தூர்
விஜயம்



ஸ்ரீ ராமனும் சீதையும், வடுவூர்



பெங்களூரில்
ஸ்ரீ மதாண்டவன்



ஸ்ரீ நித்ய கல்யாணன், திருவிடந்தை



ஸ்ரீ நம்பிகள், திருக்குறுங்குடி.



ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவன், ஸ்ரீ சின்னண்டவன், ஸ்ரீ பெரியாண்டவன்,
ஸ்ரீ திருக்குடந்தை (காடந்தேத்தி) ஆண்டவன், ஸ்ரீ நம்மாண்டவன்



காஞ்சிபுரம்
ஸ்ரீ வரதராஜன்
மங்களாசாஸனம்



திருவஹீந்திரபுரத்தில் ஏள்ளி இருக்கும்







ஆழ்வார்கள், ஆசார்யர்கள்







ஸ்ரீ தேசிகன், தூப்புல்



திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி கோயில் விஜயம்



பெங்களூர் விஜயத்தில் ஸ்ரீமதாண்டவனும் 'கஜேந்திரனும்'



உத்திரமேரூர் விஜயம்

ஸ்ரீ:

உபய வேதாந்தம்

(ஸ்ரீ. உப.வே. உத்தமூர். தி. வீரராகவாசார்ய ஸ்வாமி)

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய — உபய வேதாந்தாசார்ய—ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யராய் திருக்குடந்தை ஆண்டவனென்று ப்ரஸித்தரான ஸ்ரீவேதாந்த ராமாநுஜ மஹாதேசிகனின் ஷஷ்ட்யப்த பூர்த்தியின் ஞாபக மாக வெளியிடப்படும் மலரில் அடியேனுக்கும் சிறிது இடம் அளித்திருக்கின்றனர். விஷயம் உபய வேதாந்தமென்பது. இதன் பொருள் இருவகையான வேதாந்த மென்பதே. வேதத் தில் ஒவ்வொரு சாகையிலும் முடிவிலுள்ள உபநிஷத்து வேதாந்த மெனப்படும். அது முன் பாகமான கர்ம காண்டத் தில் ஓதப்பெற்ற எல்லா தர்மங்களாலும் ஆராதிக்கப்படு கின்றவனும் எல்லாம் படைக்கின்றவனுமான, ஸ்ரீமந் நாரா யணனே பரதத்துவ பரமஹித பரம புருஷார்த்தமாகத் தெரி விக்கும். இதன் பொருளில் வரக்கூடும் ஸம்சய விபரீதஞ் ஞானங்களை விலக்கி உண்மையான பொருளை வியாஸ பகவான் தமது ப்ரஹ்மஸூத்ரம் வாயிலாக வெளியிட்டிருக்கிறார். இத னையும் வேதாந்த மென்பர். வடமொழியிலுள்ள இவை ஒரு வகை. மற்றொரு வகையாம் ஆழ்வார்களின் அருளிச் செயல் களாகிய வேதாந்தம். இவை தமிழ் வேதாந்த மென்றும் தமிழ் வேதம் வேறொன்றிருப்பதாகவும் அதற்கு இது அந்த மான பாகமென்றும் நினைக்கவேண்டா. இதே தமிழ் வேதம். உபநிஷத்தென்கிற வேதாந்தத்தின் விழுப்பொருளே இங்கு ப்ரதானமாகச் சொல்லப்படுகிற படியால் இவற்றையே வேதாந்த மென்கிறது. 'ஸர்வே வேதாயத்பதமாமநந்தி' 'ஸர்வே வேதா யத்ர ஏகம் பவந்தி' என்கிற படி வேதத்தின் பாகங்களெல்லாம் எம்பெருமானைப் பற்றியவையே யென்றா லும் நேருக்கு நேராக அவனை வேதாந்தமே சொல்லும். முன் பாகமான கர்ம காண்டம் ஆராதிக்கப்படும் பல தேவதைகளைக் குறிக்கின்றது, அங்கு அவற்றிற்கு அந்தர்யாமியாக இவன் வேதத்தினால் கருதப்பட்டிருந்தாலும் வ்யக்தமாகவில்லை. உப நிஷத்தென்பது இவனே ஸ்ருஷ்டிமுதலானவற்றைச் செய் கின்றவன், ஸர்வாந்தர்யாமி, உபாயமாகின்றவன். முடிவில்

பெறப்படும் பேறுமிவனே என்று வ்யக்தமாகக் கூறி பூர்வ காண்டத்திற் கூறியவை யெல்லாம் இவனுக்கே ஆராதனங்க னென்கிறது. ஆகையால் உபநிஷத்து வேதத்தில் சிறந்த தாகும்.

உபநிஷத்துக்களை விட திவ்ய ப்ரபந்தங்களுக்கு ஒருவகை ஏற்றமுண்டு. காரணமான பரதேவதையை இன்னதென்று நாம் எளிதில் தெளியும்படி சொல்லாமல், ஸத், அஸத், ப்ரஹ்மம், ஆத்மா என்றூற் போன்ற பொதுவான பதங்களைக் கொண்டும், சிற்சில இடங்களில் ஆகாசம், ப்ராணன், சோதி, ஹிரண்யகர்ப்பன், ருத்ரன் என்றவாருக வேறு பொருளையே தரும் பதங்களைக் கொண்டு ஒன்றுக்கொன்று முரண்படுகிற வகையிலும் வர்ணிப்பதால் நாராயணனே பரதேவதை என்று நன்கறியவாகிறதில்லை, 'நாராயணன் நான்முகனைப் படைத் தான், நான்முகனும் தான் முகமாய்ச் சங்கரனை' என்று திவ்ய ப்ரபந்தத்திற் சொன்னதும் அங்கே மஹோபநிஷத்தில் ஓதப்பட்டிருந்தாலும் இவ்வாருன வாக்யம் மட்டுமின்றி வேறு வகையான வாக்யங்களும் சேர்ந்திருப்பதால் விசேஷ ஆராய்ச்சி யில்லாமல் தெளிய முடிகிறதில்லை.

இத்துடன் பல உபாக்யானங்களையும், ஒன்றை மற்றொன் ருக ஏறிட்டுச் செய்யும் பலத்ருஷ்டி உபாஸனைகளையும் பல வகையான பக்திமார்க்கமாகிற உபாஸனங்களையும், மற்ற தேவதைகளையுங் கூட இடையிடை கலந்து உபநிஷத்துக்கள் ப்ரஹ்மத்தைச் சொல்லுகின்ற படியால் நிர்ணயம் பெறுகை யென்பது எளிதிலாகிற திலில்லை. பல விடங்களில் ஸாங்க்ய யோக மதங்களே கூட சொல்லப்படுமோ என்று கூட நினைக்க வேண்டி யிருக்கிறது. இத்தகைய காரணங்களாலேயே ப்ரஹ்ம ஸூத்ர மென்கிற மீமாம்ஸா க்ரந்தம் ஏற்பட வேண் டியதாயிற்று. இவ்வளவு செய்தும் ஏதோ தத்துவ நிர்ணயம் பெறப்படுகிறவளவேயாகுமல்லது எம்பெருமானை ஸ்வரூபரூப குண விபவங்களோடு ஆழ்ந்தனுபவிப்ப தென்பது அங்கே துர் லபமாம். ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் ஒவ்வொரு பாசுரமும் எம்பெருமானைப் பற்றியதே. அவன் திருநாமமும் திருமேனியும் குணசேஷ்டிதங்களும் அனுபவிக்கலாகாத பாசுரமே கிடையாது. ஒவ்வொன்றிலும் அவன் மேன்மை விளங்கும். இதர தேவதைகளின் கீழ்மையும் அவனது அனு பவத்திற்குள்ள சிறப்பும் சால வழகாகத் தெளிவதாம். உப நிஷத்துக்கள் பரரூபத்தை அல்லது பரமாத்ம ஸ்வரூபத்தைப் பெரும்பாலும் புகழ்ந்து நிற்கும். அவனது அவதாரங்களைச் சொல்வதே தேட்டமாகும். அப்படியிருக்க அர்ச்சா ரூபங்

களின் வர்ணனைக்கு அவகாசமேது? நமக்குத் தஞ்சமான ரூபம் அர்ச்சையே. யோகத்திலாழ்ந்தவருக்கு உபயோகப் படும் உபநிஷத்துக்களைக் கொண்டு நாம் பெறுவதைவிட அர்ச்சா விஷயமான திவ்யப்ரபந்தங்களைக் கொண்டு நாம் பெறுவதே விசேஷமாயிருப்பதால் இவையே முக்கியமாகின் றன. மேலும் நமக்கு எம்பெருமானைப் பெறச் செய்யலான உபாயம் சரணாகதியே. அதனையே ப்ரதானமாகக் காட்டு பவை திவ்யப்ரபந்தங்கள். இப்படி பல காரணங்களாலே தமிழ் மறைகளையும் சேர்த்து உபய வேதாந்தம் நாம் கற்க வேண்டுமென்று நாதமுனிகள் தொடக்கமாக நமக்கு உப தேச ஸம்ப்ரதாயம் ஏற்பட்டிருக்கிறது.

இதனால் அருளிச் செயல்களுக்கு வேதத்தைப் போல் பூர்ண மான ஸ்வாதந்த்ர்யம் கொடுத்ததாகாது. இதிஹாஸ புரா ணங்கள் வேதத்திற்கு உபப்ருஹ்மணங்களாகின்றது போல் இவையும் உபப்ருஹ்மணங்களே. அவைகளால் எம்பெருமா னிட உண்டாம் ஈடுபாட்டுக்கு மேலாக இவற்றின் மூலம் ஈடுபாடு உண்டாகிறதென்ற சிறப்பு உண்டு. இதனை ஸத்ய: பரமாத்மநி சித்தரஞ்ஜகதனம்' என ஸ்ரீதேசிகன் அருளிச் செய்தார். எல்லோருக்கும் எளிதில் அறிந்த பாஷையாயிருப் பதும் ஒரு காரணம். உபப்ரும்ஹண மென்றால் ஒவ்வொரு வேதவாக்யத்தை யெடுத்து விரித்துரைப்பது என்ற பொரு ளல்ல. சில வேதபாகங்களை மட்டும் ஒதினவர்க்கு ஓதாத வேதவாக்யங்களை யறியாமையால் நிர்ணயம் செய்ய முடியா மையைக் கண்டு எல்லா வேதங்களையும் கண்டிருக்கும் மஹ ரிஷிகள் எல்லாம் சேர்த்து விமர்சனம் செய்து பெற்ற தத்துவ ஹித புருஷார்த்தங்களைத் தெளிவுபடுத்தி இவையே வேதார்த் தமென்று சொல்லி யிருப்பதால் அவை உபப்ருஹ்மணங்கள். அவற்றில் ஸாத்துவிக ராஜஸ தாமஸங்களான பாகங்கள் உண்டு. ஸாத்விகாம்சம்மட்டும் அவற்றினின்று நாம் கொள்ள வேண்டுமென்பது ஆழ்வார்களின் அருளிச் செயல்களினின்று தேறும். நேரில் கண்ட வேதங்களில் காணுதவற்றை மஹ ரிஷிகளின் க்ரந்தங்களினின்று காண்கிறது போல் அவர்களும் காணுத பல விஷயங்களை ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகளி னின்று நாம் காண்கிறோம். பிரமனின் அருளைத் தவத்தின் மூலம் பெற்ற பரமரிஷிகளை விட எம்பெருமானே அருள மயர் வறமதி நலம்பெற்ற அபிநவ தசாவதார மெனப்படும் ஆழ் வார்களுக்கு ஏற்றமுண்டே. இவர்கள் அருளிச் செய்தபடி பெரிய பிராட்டியாரோடு பெருமானுக்கு ஒழிவில் காலமெல் லாம் உடனாய் வழுவிலா அடிமையே அனுபவ பரீவாஹமாகி மோக்ஷமென்கிற மஹா புருஷார்த்தமாகும்.

இவர்கள் வேதத்திற்குப் போல் ஸ்மிருதி இதிஹாஸ புராணங்களுக்கும் உபப்ருஹ்மணம் செய்தவர்கள். அவ்வாறே ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கும் உபப்ருஹ்மணம் இவர்களால் செய்யப்பட்டுள்ளது. பெரியாழ்வார் திருப்பல்லாண்டில், 'அண்டக்குலத்துக்கு அதிபதியாகி அசுரரிராக்கதரை, இண்டைக் குலத்தை யெடுத்துக்களைந்த விருடீகேசன் தனக்கு தொண்டக் குலத்திலுள்ளீர் வந்தடி தொழுதாயிர நாமம் சொல்லி பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே' என்கிற பாசுரத்திலே சாரீரக மெனப்படும் ப்ரஹ்ம ஸூத்திரத்தின் பொருளை அடைவாகக் குறித்துள்ளது காண்க. ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு அத்யாயங்கள் நான்கு. ஒவ்வோர் அத்யாயத்திற்கும் நான்கு பாதங்கள். முதல் அத்யாயத்திலே எல்லாவுலகுக்கும் காரணமாய் ஸ்வாமியான வனென்பது தெளிவிக்கப் பெற்றது. இதனை स्वशेषाशेषार्थः என்று ஸ்ரீ தேசிகன் ஸங்க ரஹித்தருளினார். இங்கே அண்டக் குலத்திற்கு அதிபதியாகி என்பது அப்பொருளையே விளக்கும். இரண்டாம் அத்யாயத்தில், வேதவித்தமான ஸ்ரீமந் நாராயணனை பாஹ்ய குத்ருஷ்டி மதங்களைக் கொண்டு மறுக்க முடியா தென்றறிவித்து பிர மதங்களைப் போக்கியிருப்பதை, அசுரர் இராக்கதரை——களைந்த என்ற பாகத்தினாலே குறித்தருளினார். எல்லா மதங்களையும் அழித்து பாஞ்சராத்ரம் உபதேசித்ததாலே ஆஸுர ராக்ஷஸ, நிலைகள் அழிந்தன. இரண்டாம் அத்யாயத்திலே மேலே இந்திரியாதிகளை அவன் படைத்து நேராகவும் தேவதாந்தரங்கள் மூலமாகவும் ஆள்வதும், பிரமனைக் கொண்டு ப்ரஜைகளைப் படைப்பதும் இருடீகேசன் தனக்கு என்ற விடத்திலே கருதப்படும். மூன்றும் அத்யாயத்திலே வைராக்ய பூர்வமாக அவனுக்குத் தொண்டு செய்வது அதாவது அவனை த்யானம் செய்வது நாம ஸங்கீர்த்தனம் முதலான வர்ணாச்ரமதர்மங்களையும் செய்வதென்று சொன்னதையே தொண்டக்குலத்து என்ற மூன்றும் அடி தெரிவிக்கும். நான்காம் அத்யாயத்தில் சரீரத்தை விட்டு அர்ச்சிராதிமார்க்கமாக வைகுந்தம் சென்று ஒரு குறையுமில்லை யாகையாலே தனக்குப் பலன் ஒன்றும் கோலாமல் அவனுக்குப் பல்லாண்டு பாடுவதே விஷயமாகும். அதே இங்கும் நான்காம் அடி கூறும். பூர்வ மீமாம்ஸையிற் சொன்ன சேஷத்வத்தை பாகவதபர்யந்தமாக்கி, 'தம்மை விற்கவும் செறுவார்களே யென்று பாகவத சேஷதவம் க்ரயம் செய்யுமளவுக்கு வளர்ந்ததென விரித்துரைத்த பெரியாழ்வார்

வேதாந்த விழுப்பொருளாகப் பெருமானைச் சொல்லுகின்றவர், இப்படி சாரீரகார்த்தத்தை அடைவாகச் சொல்வதில் ஓர் ஆச்சர்யமுமில்லை.

இதுபோல் நம்மாழ்வாரும் திருவாய்மொழியின் தொடக்கத்திலே 'த்விகாப்யாம்த்வ்யஷ் டாங்க்ரி:' என்று ஸ்ரீதேசிகன் அருளிச் செய்தபடியே அதிகாரண ஸாராவளியில் ஸ்ரஷ்டா தேஹீ என்று தொடங்கி அவர் அருளிச் செய்த பதினெட்டு பாதங்களின் பொருள்கள் பதினெட்டும் 21 பாட்டுக்களிலே காணக்கிடக்கின்றன. முதற் பாசுரம் முதல் ஸூத்ரத்தில் உள்ள ப்ரஹ்மசப்தத்தின் பொருளை விளக்கும். 2-வது பாட்டு 'ஸத்யம் ஞானம் அநந்தம் ப்ரஹ்ம' என்ற சேதநாசேதந வைலக்ஷயண்யத்தை விரித்துரைக்கும். இப்படி விலக்ஷணனாய் காரணமானவன் எல்லாவற்றிற்கும் உயிராகப் பரந்துள்ளவன் தேஹீ என்பதை 3, 4 பாசுரங்கள் கூறும். இவ்வாறுக எட்டுப் பாதங்களின் பொருளை முதற்றிருவாய் மொழியில் அருளிச் செய்து மேற்றிருவாய் மொழியில் வைராக்ய பாதம் முதலான மேலெட்டிலுள்ள விஷயங்களை அருளிச் செய்தார். இவை யெல்லாம் பழைய வ்யாக்யானங்களை யெல்லாம் ஆராய்ந்து நாம் எழுதிய பிரபந்த ரக்ஷையிலே விரிவாகக் காணவாகும். உபநிஷத்து முதலானவற்றை யறியாதாரும் ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யாதிகளிலே தெளிவு பெறுதவர்களும் பாசுரங்களின் வாயிலாகவே எல்லாம் சாமான்யமாக அறிந்து கொள்ளலாம். தமிழ் தெரியாதவர்கள் வடமொழியிலுள்ள வேதாந்த சாஸ்த்ர க்ரந்தங்களினின்றே எல்லாம் அறியலாம். ஒன்றோடொன்று சேர்த்து அனுபவிக்கின்றவர்களின் ரஸானுபவம் விலக்ஷணமாயிருக்கும். ஊன்றிச் சுவைப்பார்க்கு ஒவ்வொரு சொல்லும் விசேஷம் சொல்லவாகும். எல்லோரும் எளிதில் அறியக்கூடுமாறு அமைந்த ஆழ்வார் திவ்ய ஸூக்திகளை மேன்மேல் கேட்பார் குழாமாகக் கூடிக் கேட்டுக் களிந்துருகும்படி சொல்லிக் கொண்டே உபந்யாஸங்களை முன்போல் இவ்வாச்ரமத்திலும் எங்கும் செய்து கொண்டு, அநதிகாரிகளான லௌகிகர்களும் ஸ்ரீவைஷ்ணவமதத்தில் பற்றுவைத்து உய்யும்படி பேருதவி செய்துவரும், இந்த ஆண்டவனுக்கு இவ்வறுபதாண்டு பூர்த்தி விழாவில் அறுபது சாதுர்மாஸ்ய காலம் ஆயுளாரோக்யாதிகளை யளித்து நல்லொழுக்கத்திலே ஆர்ஜவம், ஆச்ரமதர்மம் எல்லாவற்றிலும் எல்லோரும் விளங்கும்படி உபதேசம் செய்துவர வல்லமையுமளிக்கும்படி பெரியபிராட்டியாரையும், பெரிய பெருமாளையும் ப்ரார்த்திப்போமாக.

ஸ்ரீ:

விசிஷ்டாத்வைதம்

(ஸ்ரீ உப. வே. பண்டிதராஜ திருமலை தாதாசார்யஸ்வாமி)

ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினால் பகவான் ஒருவன் இருக்கிறான் என்று தீர்மானிக்க முடியாது. இது யாவரும் ஒப்புக் கொண்ட, விவாதமில்லாத, விஷயம். நையாயிகர் முதலான சில சாஸ்த்ரகாரர்கள் அனுமானத்தினால் பகவான் இருப்பதாக ஸாதிக்கின்றார்கள். ஆனால் அதைப் பலர் மறுக்கின்றார்கள். பகவானைப்பற்றிய அனுமானத்தில் பல பல குற்றங்கள் இருக்கின்றன. ஆகையால் அதனால் உலகத்திற்கெல்லாம் கர்த்தா ஒருவன் இருக்கின்றான் என்பது உணரப்படும் என்றாலும் அவன் உயர்ந்த ஒரு ஜீவாத்மாவாகத் தேறுவானேயன்றி ஸகலதுக்கங்கள் சிறிதுமில்லாத பகவானாகத் தேறமாட்டான் என்று வலுவான ஆக்ஷேபம் செய்கின்றனர். ஜீவாத்மாக்களைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டு ஸர்வக்ஞனாய், ஸர்வ சக்தனாய், வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத பேரானந்த முடையவனாய் ஸர்வ கல்யாண குணங்களும் நிறையப் பெற்றவனான ஸர்வேச்வரனை வேத சாஸ்த்ர மூலமாகவே அறிய வேண்டுமென்கின்றனர்.

பகவானை ஆத்மாவென்றும் ப்ரஹ்மம் என்றும் வேதங்கள் பேசுகின்றன. அறிவு உள்ளவையும் அறிவில்லாதவையுமான பல பல பொருள்கள் கொண்ட இவ்வுலகை நாம் ப்ரத்யக்ஷமாகக் காண்கின்றோம். இவற்றையெல்லாம் படைத்துக் காக்கின்ற பரம் பொருள் ஒன்று உளது. அதுதான் ப்ரஹ்மம், என்று வேதங்கள் கூறுகின்றன. நாம் ப்ரத்யக்ஷமாகக் காணும் உலகிற்கு எது காரணமோ அது ப்ரஹ்மம் என்று ஜகத் காரணத்வம்—உலகத்திற்குக் காரணமாயிருத்தல்—ப்ரஹ்மத்திற்கு லக்ஷணம் கூறப்பட்டதாகின்றது.

ப்ரஹ்மம் என்ற சொல்லுக்குப் ''பெரிதான ஒன்று'' என்பது பொருள். குறிப்பிட்ட ஒருவிதத்தில் அல்லது பல விதங்களில் பெரிது என்பதல்லாமல் வரையறையின்றி எல்லா விதங்களிலும் பெரிது, என்று இச் சொல் கூறுகின்றது. ஸ்வரூபத்திலும் பெரிது. குணங்களை எடுத்துக்கொண்டால் அவற்றில் ஒவ்வொன்றிலும் பெரிது, என்று கொள்ளவேண்டும்.

ஸ்ரீ:

விசிஷ்டாத்வைதம்

(ஸ்ரீ உப. வே. பண்டிதராஜ திருமலை தாதாசார்யஸ்வாமி)

ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினால் பகவான் ஒருவன் இருக்கிறான் என்று நிர்மானிக்க முடியாது. இது யாவரும் ஒப்புக் கொண்ட, விவாதமில்லாத, விஷயம். நையாயிகர் முதலான சில சாஸ்த்ரகாரர்கள் அனுமானத்தினால் பகவான் இருப் பதாக ஸாதிக்கின்றார்கள். ஆனால் அதைப் பலர் மறுக்கின் றார்கள். பகவானைப்பற்றிய அனுமானத்தில் பல பல குற்றங் கள் இருக்கின்றன. ஆகையால் அதனால் உலகத்திற்கெல் லாம் கர்த்தா ஒருவன் இருக்கின்றான் என்பது உணரப்படும் என்றாலும் அவன் உயர்ந்த ஒரு ஜீவாத்மாவாகத் தேறுவானே யன்றி ஸகலகுக்கங்கள் சிறிதுமில்லாத பகவானைத் தேற மாட்டான் என்று வலுவான ஆக்ஷேபம் செய்கின்றனர். ஜீவாத்மாக்களைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டு ஸர்வக் ஞனாய், ஸர்வ சக்தனாய், வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத பேரானந்த முடையவனாய் ஸர்வ கல்யாண குணங்களும் நிறையப் பெற்றவனான ஸர்வேச்வரனை வேத சாஸ்த்ர மூல மாகவே அறிய வேண்டுமென்கின்றனர்.

பகவானை ஆத்மாவென்றும் ப்ரஹ்மம் என்றும் வேதங்கள் பேசுகின்றன. அறிவு உள்ளவையும் அறிவில்லாதவையுமான பல பல பொருள்கள் கொண்ட இவ்வுலகை நாம் ப்ரத்யக்ஷ மாகக் காண்கின்றோம். இவற்றையெல்லாம் படைத்துக் காக்கின்ற பரம் பொருள் ஒன்று உளது. அதுதான் ப்ரஹ் மம், என்று வேதங்கள் கூறுகின்றன. நாம் ப்ரத்யக்ஷமாகக் காணும் உலகிற்கு எது காரணமோ அது ப்ரஹ்மம் என்று ஜகத் காரணத்வம்—உலகத்திற்குக் காரணமாயிருத்தல்— ப்ரஹ்மத்திற்கு லக்ஷணம் கூறப்பட்டதாகின்றது.

ப்ரஹ்மம் என்ற சொல்லுக்குப் ''பெரிதான ஒன்று'' என்பது பொருள். குறிப்பிட்ட ஒருவிதத்தில் அல்லது பல விதங்களில் பெரிது என்பதல்லாமல் வரையறையின்றி எல்லா விதங்களிலும் பெரிது, என்று இச் சொல் கூறுகின்றது. ஸ்வரூபத்திலும் பெரிது. குணங்களை எடுத்துக்கொண்டால் அவற்றில் ஒவ்வொன்றிலும் பெரிது, என்று கொள்ளவேண்டும்.

உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் இரண்டு கூறுகப் பிரிகின்றன: அறிவில்லாதது அறிவுள்ளது என்று. இவற்றில் அறிவில்லாதது தன் ஸ்வரூபத்திலும் தன்மைகளிலும் மாறிக் கொண்டே யிருக்கும். அறிவுள்ளது ஸ்வரூபத்தில் மாறுபடா மல் தன் தன்மையான அறிவில் மாறுபாடு அடைந்துகொண்டு இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும். ப்ரஹ்மம் என்ற பரம்பொருளுக்கு அறிவில்லாத வஸ்துவைப் போலவோ அறிவுள்ள வஸ்துவைப் போலவோ எக்காலத் திலும் எவ்விடத்திலும் மாறுபாடு கிடையாது. எப்பொழு தும் எங்கும் தன் சிறப்பு சிறிதும் குன்றாது விளங்குகின்றது அது. இப்படி உலகாகவும் அதிலுள்ள பல பொருள்களாக வும் காணப்படும் அறிவில்லாத ஜடப்பொருளைக் காட்டிலும், உலகில் பிறந்து மரித்துத் துன்பங்களை அனுபவிக்கும் ஜீவாத் மாவைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்ட ப்ரஹ்மம் என்கிற பரம் பொருள், இவ்வுலகும் இதிலுள்ள எல்லாப் பொருள் களும், இதில் பிறந்திறந்து, இன்ப துன்பங்கள் அநுபவிக்கும் ஜீவர்களும் உண்டாவதற்கும் நிலை நிற்பதற்கும் முடிவில் அழிவதற்கும் காரணமாய் இருக்கிறதென்று சாஸ்திரங்கள் விளக்கிக் கூறுகின்றன. இதனால் ஜடப்பொருள், ஜீவர்கள், பரம் பொருள், என்ற இவை மூன்றும் உண்மைப் பொருள்க ளென்றும் பரஸ்பரம் வேறுபட்டவை என்றும் ஸந்தேஹத் திற்கு இடமில்லாமல் விளக்கம் செய்யப்பட்டதாகிறது. இப்படி ஜடப்பொருளைக் காட்டிலும், ஜடமல்லாத ஜீவர் களைக் காட்டிலும் வேறுபட்டவன் பகவான் என்ற அறிவு மோக்ஷத்திற்குக் காரணமென்றே உபநிஷத்துக்கள் கூறு கின்றன.

இனி இப்படி மற்ற எல்லாப் பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டவன் பகவான் என்று பேதமே உண்மையானால் 'எல்லாம் பகவான்', என்று அபேதம் கூறப்பட்டிருப்பது எப்படிப் பொருந்துமென்று பார்க்கவேண்டும். உலகத்திற் குக் காரணமான பரப்ரஹ்மம் என்கிற பகவானே உலத்திற்கு, உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவுக்கும், 'ஆத்மா' என்றும் உபநிஷத்துக்கள் கூறுகின்றன. ஒரு வஸ்துவின் உள் புகுந்து நின்று அதைத் தாங்கி அதைத் தனக்காக உபயோகித்துக் கொள்ளும் அறிவுள்ள வஸ்துவே 'ஆத்மா' எனப்படுகிறது. இது ஆத்மாவானால், இது எந்தப் பொருளுக்கு ஆத்மாவா கின்றதோ அந்தப் பொருள் ஆதற்கு உடல், அதாவது சரீரம், ஆகின்றது. உதாரணமாக நம்மையும் நமது உடலையும் எடுத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு உடலில் ஒவ்வொரு ஜீவாத்மா இருக்கின்றது. இது ஐந்து பூதங்

களாலாகிய உடலைத் தாங்குகின்றது. ஜீவன் இதன் உள்ளிருந்து இதைத் தரிக்காவிட்டால் இது விழுந்துவிடும். சவமாகிவிடும். இதைத் தரித்து தன்னிஷ்டப்படி நியமித்துத் தனக்கு வேண்டிய காரியங்களை முடித்துக் கொள்ளுகின்றது ஜீவன். ஆகவே இது ஆத்மாவாகவும் மற்றொன்று இதற்கு உடலாகவும் ஆகின்றது.

இப்படியே பகவான் உலகத்திற்கெல்லாம் ஆத்மாவென்றால் உலகமெல்லாம் அவனுடைய உடல் என்பது கிடைக்கின்றது. ஜீவனுக்கு ஒவ்வொரு உடலே உள்ளது. எல்லாவற்றிற்கும் ஆத்மாவான பகவானுக்கோவெனில், உலகிலுள்ள அறிவில்லாததும் அறிவுள்ளதுமான ஒவ்வொரு பொருளும் உடலாகின்றது. இதை உபநிஷத்துக்கள் ''அவனுக்கு ப்ருதிவீ சரீரம், நீர் சரீரம், தீ சரீரம்'' என்றிப்படி ஸ்பஷ்டமாகவும் விஸ்தாரமாகவும் கூறுகின்றன. இப்படி உலகமெல்லாம் பகவானுடைய கார்யமாயிருப்பதோடு அவனுடைய உடலாகவும் இருக்கிறதென்று கண்டோம். இனி ஜீவாத்மாவையும் அவனுடைய உடலையும் பற்றி மற்றொரு விஷயம் காண்போம்.

அறிவுள்ள ஜீவாத்மா வேறு. அறிவில்லாத ஐம்பூதங்களாலாகிய அவனுடைய உடல் வேறு என்பது தெளிவு. ஜீவாத்மா அழிவில்லாதவன். உடல் அழிவுள்ளது. ஒரு ஜீவன் மரிக்கிறது என்றால் அவன் உடல் அழிகின்றது என்பது பொருள். இப்படியே பிறக்கிறது என்றால் புதிய உடல் ஒன்றைப் பெறுகின்றது என்பது பொருள். ஆகவே ஒரே ஜீவனுக்கு அழிவதும் உண்டாவதுமாகப் பல பல உடல்கள் உள்ளன. இவற்றில் ஒன்று மனித உடலாயிருக்கும், மற்றொன்று விலங்கு உடலாயிருக்கும். இன்னுமொன்று செடி, கொடி உடலாயிருக்கும். இப்படியே ஒன்று ப்ராஹ்மண உடலும் மற்றொன்று க்ஷத்ரிய உடலுமாக இருக்கும். ஆகவே இந்த வேறுபாடுகள் எல்லாம் உடலைச் சேர்ந்தவை. ஜீவனைச் சேர்ந்தவை அல்ல. ஜீவன் எப்பொழுதும் எவ்வித உடல் பெற்றாலும் ஒரே மாதிரியாய் இருப்பவன். மனிதனாய்ப் பிறக்கிறான் என்றால் மனிதவுருவமான உடல் பெற்றுத் தோன்றுகிறான் என்று அர்த்தம். விலங்காய்ப் பிறக்கிறான் என்றால் விலங்குருவமான உடல் பெற்றுத் தோன்றுகிறான், என்று அர்த்தம். ஜீவன் தன் ஸ்வரூபத்தில் மனிதனல்லன், விலங்கல்லன், ப்ராஹ்மணன் அல்லன், மற்ற யாருமல்லன். உடல்தான் இவை எல்லாமாக இருக்கிறது. இப்படி ஆத்மாவும் மனிதன் முதலானவையாயிருக்கும் அதன் உடலும் முற்றிலும் வேறுபட்டவையாயினும், இந்த வித்வான் ஒரு

மனிதன், ஒரு ப்ராஹ்மணன் என்று அபேதமாகக் கூறுகின்றோம். இவ்விதம் கூறுவதில்லை யென்று மறுக்க முடியாது. இப்படிக் கூறுவது தவறு என்பதும் கூடாது. ஆகையால் உலகம் முழுவதிலுமுள்ள இந்த வ்யவஹாரத்திலுல், உடலைக் குறிக்கும் சொற்கள் அது உள்ளவனையும் குறிக்கும் என்ற இயல்பு மொழிக்கு உண்டு என்று தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. இந்த உலக வழக்கின்படியே உபநிஷத்துக்களும் பேசுகின்றன. பகவானுகிற ஸத்து ''நான் பலவாக ஆவேன். அதற்காகப் பிறப்பேன்'' என்று ஸங்கல்பித்துத் தேஜஸ்ஸை உண்டாக்கிற்று, என்று கூறி ஓர் உபநிஷத்து உடனே ''அந்த தேஜஸ்ஸு, 'நான் பலவாக ஆவேன். அதற்காகப் பிறப்பேன்' என்று ஸங்கல்பித்து நீரை உண்டாக்கிற்று'' என்கிறது. இங்கு 'தேஜஸ்ஸு' என்ற சொல் தேஜஸ் உருவத்திலுள்ள பகவான் என்கிற பொருளைக் குறிக்கிறதென்பது ஸ்பஷ்டம். ஆகவே உலகமெல்லாம் ப்ரஹ்மம் என்றுல் உலகத்தை எல்லாம் உடலாக உடையது ப்ரஹ்மம் என்பது கருதப்பட்டது என்று கொள்வதில் எவ்வித ஸந்தேகத்திற்கும் இடமில்லை. இப்படி ப்ரத்யக்ஷம், அநுமானம், வேதம் ஆகிய எல்லா ப்ரமாணங்களாலும் அறியப் படுகின்ற பேதத்தை வைத்தே உபநிஷத்துக்கள் அபேதத்தைப் பேசுகின்றன என்பது தெளிவு.

ஜீவாத்மா அழியாத வஸ்து என்பது கூறப்பட்டது. உலகிலுள்ள ஜடப் பொருள்கள் அழிவதைக் காண்கின்றோம். ஆனுல் அந்த அழிவு சூன்யமாய்ப் போவதன்று. மண்ணுல் ஆகிய குடம் உடைந்தால் பல ஓடுகளாகின்றது. அவையும் அழிந்தால் முடிவில் மண்ணுகிவிடுகின்றன. இப்படி அந்தந்த உருவம் மாறுகின்றதேயன்றி வஸ்து ஒன்றுமே இராமல் சூன்யமாகி விடுகின்றது என்பதில்லை. ஆகவே ஜடப் பொருளும் நித்யமே. பல பல உருவங்கள் தோன்றி மறைகின்றன. ஆகிலும் இவ்வுருவங்களையெல்லாம் எடுக்கும் ஜடப்பொருள் அழிவதில்லை. ப்ரளய காலத்தில் ஸூக்ஷ்மமாயிருக்கும். ஸ்ருஷ்டி காலத்தில் பெரிதாகிப் பல வுருவங்களைக் கொண்டு வெவ்வேறு பொருள்களாகத் தோன்றும். இவ்வித மாறுபாடுகள் இருந்தாலும் வஸ்து எப்பொழுதும் இருக்கின்றதாகையால் நித்யமே.

இப்படி பகவானுக்கு உடலான ஜீவாத்மாக்களும் ஜடப் பொருளும் நித்யமானவையாகையால் அவன் எக்காலத்திலும் இவற்றுடன் கூடினவனுகவே இருக்கின்றன். இவற்றை விட்டு பகவானை, பகவானை விட்டு இவையோ, பிரிந்து

தனியே இருப்பது எப்போழுதும் கிடையாது. இவ்விதமாக சித் என்கிற ஜீவாத்மாக்களுடனும் அசித் என்கிற ஜடப் பொருளுடனும் கூடியிருக்கிறது ப்ரஹ்மம் என்ற கருத்தையே 'விசிஷ்டம்' என்ற வட சொல் குறிக்கின்றது. ஆநந்தமய மான திவ்ய ரூபம் முதலியவற்றுடனும் ஸமஸ்த கல்யாண குணங்களுடனும் கூடியிருப்பதாலும் பரஹ்மம் விசிஷ்டமா கிறது.

அத்வைதம் என்ற சொல் ''ஒன்றே உளது. இரண்டாவது இல்லை'' என்று, இரண்டாவது இல்லாமையைக் குறிக் கின்றது. எல்லாவுலகங்களையும் அவற்றிலுள்ள எல்லாப் பொருள்களையும் தனக்கு உடலாகக் கொண்டதும், உலகங் களுக்கெல்லாம் காரணமானதும், ஸகல கல்யாண குணங்கள் நிறைந்ததும், ஸர்வ ஸ்வதந்த்ரமானதும், மற்றும் பல பல பெருமைகளை உடையதுமான ப்ரஹ்மம் ஒன்றே. இதற்கு ஸமமாகவோ மேற்பட்டதாகவோ மற்றொரு தத்வம் கிடையாது. இப்படி விசிஷ்டமான உயர்ந்த பரம்பொருள் தனக்கு நிகராகவோ மேற்பட்டதாகவோ மற்றொன்றில்லாமல் ஒன்றுகவே இருத்தலே விசிஷ்டாத்வைதம் என்ற சொல் குறிக் கின்றது. இதுவே ஸ்ரீமத் பாஷ்யாதிகளில் பகவத் ராமானுஜ ரால் விளக்கப்பட்ட நமது ஸித்தாந்தம்.

ஸ்ரீ:

ஆசார்யமஹிமை

(ஸ்ரீ உப. வே. மதுராந்தகம் திருமலை
ஈச்சம்பாடி வீரராகவாசார்யர்)

ஆசார்யனை (1) தேவன் என்றும், (2) தேவனுக்கு ஒப்பானவன் என்றும், (3) தேவனுக்கு மேம்பட்டவன் என்றும், (4) தேவனுடைய தூதன் என்றும் நான்கு விதமாகப் பிரமாண ஸம்பிரதாயங்கள் கூறும். இப்படிக் கொண்டாடுவதற்குக் காரணம் ஆசார்யனுடைய மஹிமையே. இங்கு தேவன் என்பவன் 'சிலையினிலங்கை செற்ற தேவனே தேவன்'. தேவனெம்பெருமான், ''ஸாக்ஷாந் நாராயணோதேவ:'' எனப்பட்ட வெம்பெருமானே. ''தேவ'' என்கிற சப்தத்திற்குப் பத்து விதமான பொருளுண்டு. அவை யாவையும் ஆசார்யன் பக்கலிலே பொருந்தியவை. அவையாவன:

''திவு (1) க்ரீடா, (2) விஜிகீஷா, (3) வ்யவஹார, (4) த்யுதி, (5) ஸ்துதி, (6) மோத, (7) மத (8) ஸ்வப்ந, (9) காந்தி, (10) கதிஷு என்கிறது, வியாகரண நூல். எம்பெருமான் பக்கலிலும் ஆசார்யன் பக்கலிலும் இவை ஸமந்வயம் பெறுகின்றன.

(1) ''க்ரீடை''

(1) பகவான் 'இன்புறு மிவ்விளையாட்டுடையான்'', ''வீட்டைப் பண்ணி விளையாடும்.'' இது அவன் லீலை. ஆசார்யனும் ''சிறுமாமனிசராய் என்னை யாண்டார்'' என்று சிறுமையும் மேன்மையும் கலந்ததொரு வடிவமாயிருப்பவன். அவனுக்கு விஞ்சியிருப்பது நீர்மையே. ''பால்யேரதிஷ்டாஸேத்'' என்கிற பாலத் தன்மையுடையவன். ஆச்ரித ஸம்ரக்ஷணம் ஆசார்யனுடைய லீலை.

(2) ''விஜிகீஷை''

(2) பகவான் ''தோற்றுமே மட நெஞ்சம் எம்பெருமான் நாரணர்க்கு'' என்கிறபடி தன் வடிவழகாலும் குணங்களாலும் அடியாரை தோற்பிக்கும். ஆசார்யனும் ''ஆரணநூல்

வழிச் செல்வை யழித்திடும் ஐதுகர்க்கோர் வாரணமாய் அவர் வாதக்கதளிகளை—மாய்க்கும்'' '' வியன்கலைகள் மொயத்திடு நாவின் முழக்கொடு வாதியார் மூலமறக் கைத் தலன''ன் ரே ஆசார்யன்.

(3) '' வ்யவஹாரம் ''

(3) பீதக ஆடைப்பிராளர் பிரமகுருவாகிவந்து ஸகல ஜகத் திற்கும் ஹிதமாய் வேத வேதாந்த ப்ரவசநம் பண்ணுகை தேவனுக்கும் ஆசார்யனுக்குமே யுள்ளது.

அல்லது வியவஹாரம் என்பது வழக்காய் ச்ருதிஸ்ம்ருதி களைக் கையிலே பிரமாணமாகக் கொண்டு ஸம்ஸாரிகளான சேதநரோடே வழக்கிட்டுத் தமக்கு அடியாக்குமவர்களிரு வரும்.

(4) '' த்யுதி ''

(4) ''நிறைந்த சோதிவெள்ளம் சூழ்ந்த'' பரஞ்சோதி யன்ரே எம்பெருமான். ஆசார்யனும் அப்படியே. ''ப்ரஹ்ம மவித இவதே ஸோம்யமுகம் பாதி'' என்கிற ப்ரஹ்ம தேஜஸ்ஸை பெற்று விளங்குகின்றனன்ரே.

(5) '' ஸ்துதி ''

(5) ''ஸ்துதி'': ''ஏத்த ஏழுலகம்'' என்று எல்லோராலும் ஸ்தோத்ரம் செய்யப் பெற்றவனெம் பெருமான்.'' ஆசார் யனும் ''இன்னிசை பாடித்திரிவனே'' என்றும் ''குரும்ப்ர காசயேத்'' என்றும் துதிக்கப்படுகிறன்.

(6) '' மோதம் ''

(6) ''ஸ ஏகோப்ரஹ்மண ஆநந்த: ச்ரோத்ரியஸ்யசா காம ஹதஸ்ய'' என்கிற யோகஸாம்ய மிருவருக்கு முண்டன்ரே.

(7) '' மதம் ''

(7) ''அவாக்ய ரா தர:'' ''தன்னைப்பாரில்லப்பன்'' எம் பெருமான், ஆசார்யனை வெனில் பண்டருமாறன் பசுந்தமிழ் ஆநந்தம்பாய் விண்டிட எங்களி ராமாநுஜ முனிவேழம்'' என்றிருப்பவன்.

(8) '' ஸ்வப்நம் ''

(8) பாற்கடலின் பையத்துயின்று யோக நித்ரை செய்யும் பரமனைப் போலவே தேசிகனும் ''ருக்மாபம் ஸ்வப்நதீகம்

யம்'' எனப்படும் பகவானே த்யாநித்தும் ஆச்ரிதரக்ஷண சிந்தை யாகிய நித்ரையிலமர்ந்துமிருக்கும்.

(9) ''காந்தி''

(9) அடியார்களை கவர்ச்சி செய்யும் காந்தி இருவருக்கு மொக்கும்.

(10) ''கதி''

(10) ப்ராப்யனும் ப்ராபகனும் எம்பெருமானேயன்றே. ஆசார்யனும் ''இஹாமுத்ரச தத்யாதெள சரணம் தேசிகா விது:'' என்கிறபடியே ப்ராப்யனும் ப்ராபகனுமாகிறான். ''நாராயணனே நமக்கே பறை தருவான்'' பண்டை வல்வினை பாற்றியருளினன் இத்யாதிகளை நினைப்பதிங்கு.

ஆசார்யன் விபவாவதாரம்

எம்பெருமானுடைய ஐந்து ரூபங்களில் ஆசார்யன் விபவாவதாரம். ஆகையால் அவனே தேவன் என்கிறது. இதை குருபரம்பரா ஸாரத்திலே தேசிகன் வெளியிட்டருளினர். அதாவது—

''இப்படி தான் ப்ரவர்த்திப்பித்த ஸத் பதத்திற்கு ப்ரகடராயும் ப்ரச்சன்னராயு மிருந்துள்ள பாஷண்டிகளால் உபரோதம் வாராமைக்காக ''ஸாக்ஷாந்நாராயணே தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும்: மக்னநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ர பாணிநா'' என்றும் ''பீதகவாடைப் பிரானர் பிரம குருவாகி வந்து என்றும் சொல்லுகிறபடியே அகஸ்த்யஸேவிதமான தேசத்திலே அநேக தேசிகாபதேசத் தாலே அவதரித்தருளினன். இத்தைக் கணிசித்து ''கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயண: . . .'' என்று மஹர்ஷி அருளிச் செய்தான்'' என்று.

தத்வத்ரயாதிகாரத்திலும்—

''சில ஜீவர் விக்ரஹ விசேஷத்தாலும் சக்தி விசேஷத் தாலும் அதிஷ்டித்து அதிசயித கார்யங்களை நடத்துகிற தும் விபவபேதம்'' என்றருளிச்செய்தார்.

இனி ஆசார்யன், தேவனுக்கு ஒப்பானவன் என்கிறதை விவரிக்க ப்ராப்தமாகிறது.

''தேவமிவாசார்யமுபாஸீத'' என்கிறது உபநிஷத்து. ஆசார்யஸ்ஸத்பிரப்ரத்யுபகரணதியா தேவவத்ஸ்யாது பாஸ்ய:'' என்கிற பத்யத்திலுலே ந்யாஸவிம்சதியிலே இதை விவரணம் செய்தருளினர் தேசிகன். ''அஜ்ஞாநத்வாந்த ரோதாத்...தேவவத்ஸ்யாதுபாஸ்ய:'' என்கிற சுலோகத்திலே கண்ணிநுண் சிறுத்தாம்பிலே ஸ்ரீ மதுரகவிகள் அருளியபடி பத்துக் காரணங்களாலே தேவனையொத்தவனுகிறான் ஆசார்யன் என்பது இதன் உட் பொருள். இன்பத்திலினரஞ்சுதலில், இசையும் பேற்றில், இகழாத பல்லுரவி விராகம் மாற்றில், தன் பற்றில் வினை விலக்கில் தகவோக்கத்தில் தத்துவத்தையுணர்த்துதலில் தன்மை யாக்கில், அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் நிற்க அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்டு துன்பற்ற மதுரகவி தோன்றுக்காட்டும் தொல் வழியே நல் வழிகள் துணிவார்கட்கே.''

ஆசார்யன் எம்பெருமானுக்கு மேல் பட்டவனுமாகிறான். ஏற்றி மனத்தெழில் ஞானவிளக்கை இருளகற்று மாற்றினவன் ஆசார்யனேயன்றே! பகவானுடைய தூதர்கள் ஆசார்யா: சேஷசேஷிகளான ஜீவாத்ம பரமாத்மாக்களுக்குப் பரஸ்பரலாபம் ஆசார்யர்களாகிற தூதர் முகத்தாலேயன்றே ஏற்படுகின்றது. திருவாய் மொழி முதலிய ஆழ்வார் திவ்யஸூக்திகளில் பகுதிகள் முதலியவற்றைத் தூதுவிடுதலின் ஸ்வாபதேசார்த்தம் ஆசார்யர்களே என்பது ஸம்பிரதாயம் ''தேசிகாஸ்தரதூதா:'' என்றருளினர் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியிலே.

ப்ரத்யுபகாரமின்மை

''ஆசார்யனுக்கு ஸத்ரு சப்ரத்யுபகாரம் பண்ணவாவது விபூதி சதுஷ்டயமும் ஈச்வரத்வயமும் உண்டாகில்'' என்பதாக ஸ்ரீ வசந பூஷணம். ஸ்வாமி தேசிகனும் சிஷ்யக்ருத்யாதிகாரத்திலே—''இவ்வர்த்தங்களை எல்லாம் மிடியனுக்கு அகத்துக்குன்னே மஹா நிதியைக் காட்டிக் கொடுக்குமாப் போலே வெளியிடுகையாலே மஹோபகாரகனான ஆசார்யன் திரட்டில் சாஸ்த்ரங்கள் சொல்லிய சிஷ்யக்ருத்யங்கள் யாவையும் ப்ரத்யுபகாரமன்று என்றும் சிஷ்யனுக்குச் செய்ய வேண்டியதாவது—ஆசார்யன் உபதேசித்த மந்த்ரமந்த்ரார்த்தங்களை அபாத்ரத்திலே வெளியிடாது பாத்ரத்திலே உபதேசித்துத்

தானும் யதோபதேசம் நடந்து கொள்ளவேணு மென்பதே என்றும் நமக்கு உபதேசித் தருளினர்.

ஆகார்ய பக்திக்கு மூன்று ஆகாரங்கள் நித்யம், நைமித்திகம் காம்யம் என்பதாக கர்மாக்களை மூன்றாகக் கொண்டிருக்கிறார்கள். ஸ்நானம் ஸந்த்யை முதலியதைப்போல் ஆசார்ய பக்தியும் நித்யகர்த்தவ்யமாகும். ப்ரதிஷித்த ஸம்பாஷணத்திற்கு ப்ராயச் சித்தமாய் நைமித்திகமுமிதுவே. ஜ்ஞானத்தையதாவத்தாக விளைவிப்பது ஆசார்ய பக்தியே யாதலால் காம்யமுமாகிறது.

ஸ்ரீரஸ்து

ஸ்ரீ:

ப்ரபத்தி ப்ரபாவமும் அடியேன் அனுபவமும்

(ஸ்ரீ - உப. வே பைத்தாம்பாடி - திருமலை நல்லான் சக்ரவர்த்தி மகாகவி - வ - ராமானுஜாசாரியர்)

ப்ரபந்நாதந்யேஷாம் நதிசதி முகுந்தோ நிஜபதம்
ப்ரபந்நச்ச த்வேதா ஸுசரித பரீபாக பிதயா!
விளம்பேந ப்ராப்திர் பஜந ஸுகமேகஸ்ய விபுலம்
பரஸ்யாசு ப்ராப்தி: பரிமித ஸுகா ஜீவிததசா!!

ப்ரபத்தி செய்து கொள்ளாதவர்களுக்கு பகவான் தன் பதமான மோக்ஷத்தைக் கொடுப்பதில்லை.

அந்தப்ரபன்னன் 2 விதம். அவனுடைய நடவடிக்கைக்கு ஈடாக ஒருவனுக்கு விளம்பித்து (மோக்ஷம்) கிடைக்கிறது. ஆனால் பகவதனுபவம் அதிகம். இன்னொருவனுக்கு சீக்கிரம் (மோக்ஷம்) கிடைக்கிறது. இவனுக்கு ஜீவித்காலத்திற்குள் மட்டில் பகதனுபவம், என்று ஸ்வாமிதேசிகன் ஸாதிக்கிறபடியால் அவச்யம் ப்ரபத்தி செய்து கொள்ள வேண்டியது.

(இங்கு ப்ரபத்தி என்பது பகவானைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்வது)

ப்ரபன்னன்: 2 விதம். ஒருவன் அங்கப்ரபத்தி செய்பவன், அதாவது பக்தன். இரண்டாவது ஸ்வதந்த்ரப்ரபத்தி செய்பவன் (அதாவது பக்திக்கு அங்கமாக இராமல் நேராகச் கெஞ்சிக் கேட்டுக் கொள்வது). இந்தப் பக்தி - 32 - பகவத் ப்ரபத்தி ஸாதனமான ப்ரம்ம வித்யைகளுக்கும் வேண்டும். இதில் 31 பக்தி யோகத்தைச் சேர்ந்தது. 32-வது தான் ஸ்வதந்த்ரப்ரபத்தி. இக்காலத்தில் நமக்கு அந்த 31-ம் அனுஷ்டானத்தில் இராததால் ஸ்வதந்த்ரப்ரபத்தியே பெரியோர்களால் கடைப்பிடிக்கப்பட்டது. இப்ரபத்தியின் ப்ரபவம்

ப்ராரப்தேதர பூர்வ பாபமகிலம் ப்ராமாதிகஞ்சோத்தரம்
ந்யாஸேநக்ஷ பயந்நப்யுகதப்ராரப்த கண்டம்சந;!
தீபூர்வோத்தர பாப்மநாமஜநநாத் ஜாதேபி தந்நிஷ்க்ருதே:
கௌடில்யே ஸதி சிக்ஷயாப்யநகயந்க்ரோடீகரோதிப்ரபு:

(இந்த ஜன்மத்தில் தொடங்கும் பாபங்களுக்கு முன் ஜன்மத்திலுள்ள பாபங்களையும்) தெரியாமல் தவறியுள்ள நம்முடைய ப்ரபத்திக்குப் பிறகு நேரும் பாபங்களையும், ஒப்புக்கொள்ளப்படாத இந்த ஜன்மத்திலுள்ள பாபகண்டத்தையும் தன்னிடம் ப்ரபத்தி செய்ததால் போக்கியும், புத்திபூர்வமான பாபம் உண்டாகாது. அப்படி உண்டானாலும் அதற்குத் தக்க பிராயச்சித்தம் செய்யாமலிருந்தால் தண்டித்தும் (இந்த ஜன்மத்திலேயே குருடன், முடவன் முதலானவராகச் செய்து பாபங்களைப் போக்கி) பகவான் இந்த ஜன்மமுடிவிலேயே மோக்ஷம் கொடுக்கிறான் என்று ஸ்வாமி தேசிகனால் பரக்கப் பேசப்பட்டது.

இப்படியுள்ள ப்ரபத்தி ஸ்வ நிஷ்டை, உக்தி நிஷ்டை, ஆசார்ய நிஷ்டை, பாகவத நிஷ்டை என்று நான்கு விதமாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், உக்தி நிஷ்டையும் ஆசார்ய நிஷ்டையும் மாத்திரம் இப்பொழுது அனுஷ்டானத்திலுள்ளது. இதை நமக்காக எந்த ஆசார்யன் அனுஷ்டிக்கிறாரோ, அந்த ஆசார்யன் தான் முக்யாசார்யன்.

இது விஷயமாக ஒரு ஸமயம் நடந்ததை இங்கு குறிப்பிடுகிறேன். கோழியாலம் ஸ்ரீமத் ஸ்வாமி திருச்சானூர் ஆச்ரமத்திலே எழுந்தருளியிருந்த பொழுது அடியேன் அங்கே போக நேர்ந்தது. அந்த ஸமயம் ஸ்ரீ புலிக்குன்னம் ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமி ஆச்ரமகைங்கர்யம் செய்து வந்த போது அவரிடம் (ஒரு நாள்) ''பைத்தாம்பாடி ராமானுஜாச்சாரியர், ஏதாவது நுட்பமான விஷயம் கேட்பர்—பதில் சொல்ல வேண்டியிருக்கும்'' என்று ஸாதித்தாயிற்றும்.

அப்பொழுது சிலர் மட்டும் பக்கத்திலிருந்தார்கள். அடியேன் ப்ரணமங்களுடன் பின் கூறியவற்றை விண்ணப்பித்துக் கொண்டேன். ''இக் காலத்தில் ஸ்வநிஷ்டை செய்து கொள்பவன் கிடையாது. ஒருவன் ஓர் ஆசார்யரிடமோ பலரிடமோ ஸ்ரீபாஷ்யாதி ஸகலக்ரந்தங்களையும் ஸேவித்தான். பரந்யாஸம் மட்டில் ஆகவில்லை. கட்டுக் கட்டாகச் சுவடிகள் ஆய்விட்டதும் மரித்துவிட்டான். அவன் கதியென்ன? ஒரு

வன் சிசுவாயிருந்த போதே ஏதோ காரணத்தினல் பரந்யாஸம் ஓராசார்யனிடம் அவனுக்கு நடந்தது. பிறகு வயது வந்ததும் தெரிந்து வேறு ஆசார்யர்களிடம் கிரந்த காலக்ஷேபம் செய்து (பிறகு) மரித்துவிட்டான். அவன் கதியென்ன?''

''பரந்யாஸம் செய்த ஆசார்யன் தானே முக்யம்?'' என்று இவைகளை விண்ணப்பித்தேன். உடனே ஸ்ரீமத் ஸ்வாமி, ''பார்த்தீர்களா! நான் முன் சொன்னது ஸரியாகிவிட்டது. ஸரியான பதில் சொல்ல வேண்டும்,'' என்று ஸாதித்தருளியாயிற்று. பிறகு ஸ்வாமி ஸாதித்தருளியதை இங்கே ஸமர்ப்பிக்கிறேன்.

''பால்யத்தில் பரந்யாஸம் ஆனவனுக்கு மோக்ஷம் கிடைத்துவிட்டது. கட்டுக்கட்டாகச் சுவடி ஆயிருந்தவனுக்குச் சரணாகதி உபாயம் அனுஷ்டிக்காததால் மோக்ஷம் கிடைக்காது. ஆதலால் சரணாகதி செய்து வைத்தவரே முக்ய ஆசார்யன். இது விஷயமாகப் பெரியோர் என்ன சொல்லியிருந்தாலும் சரணாகதி செய்து வைத்த ஆசார்யனே முக்ய ஆசார்யன்,'' என்றும் ''சரணாகதி செய்து வைத்த ஆசார்யனுக்குத்தான் முதல் ஸம்பாவனை பண்ணவேண்டும்,'' என்றும் கூறினர். மேலும் ஸ்வாமி ஸாதித்தது, ''ஸ்ரீமத் சின்னண்டவன் 'ஆசார்யஸம்பாவனை விசாரம்' என்னும் க்ரந்தத்தில் இது விஷயமாக விஸ்தாரமாக ஸாதித்திருக்கிறார்'' என்றும் ஸாதித்தாயிற்று. பிறகு அடியேனுக்கு அந்த க்ரந்தம் கிடைத்தது. ஸேவித்ததில் ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி ஸாதித்தது சரியே என்று அறிந்தேன். இதற்கு நிதர்சனம் குரும்பரம்பரைக் கதையில் காணப்படும் ஒரு ஸம்பவம்:

ஸ்ரீபராசரபட்டர் தமது திருத்தகப்பனாரான ஸ்ரீகூரத்தாழ்வானிடம் காலக்ஷேபம் செய்துகொண்டிருந்தார். அப்போது கூரத்தாழ்வான் பட்டரைப் பார்த்து, கடுக உடையவரிடம் போய், பரந்யாஸம் செய்துகொள்', என்று ஸாதிக்க, ஸ்ரீபட்டரும் கிளம்ப, ஸ்ரீகூரத்தாழ்வான் 'அவ்வளவு தூரம் போவதற்குள் இந்த ஜீவனிருப்பது நிஜமோ, இங்கு வா' என்று அழைத்துத்தானே அவருக்காக சரணாகதி அனுஷ்டித்தாயிற்றும். ஆதலால் சரணாகதி செய்து கொள்வது முக்கியமானது. சரணாகதி செய்து வைக்கும் ஆசார்யன் வெகு முக்கியமானவர்.

நிற்க, ஸ்ரீசின்னண்டவன் ஆசார்ய வம்சத்தில் அவதரித்த இப்போதுள்ள ''நவ நம் ஆண்டவனிடம்'', அடியேனுக்குள்ள அநுபவத்தை விண்ணப்பிக்கிறேன்.

முன் ஒரு ஸமயம் அடியேன் திருக்குடந்தை போக நேர்ந்தது. அப்போது நம் ஆண்டவன் திருக்குடந்தைக்குக் கிழக்கில் காவேரிக் கரையிலுள்ள ஆச்ரமத்தில் எழுந்தருளியிருந்தார். அது தெரிந்து அங்கு காலை சுமார் 8-30 மணிக்கு தெண்டம் ஸமர்ப்பிக்க அடியேன் சென்றேன். அப்போது அங்கே ஸ்ரீமதாண்டவன் சிஷ்யகோடிகளுக்கு காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருந்தார். அடியேன் தெண்டன் ஸமர்ப்பித்து விட்டு (ஸ்ரீமதாண்டவன் உட்காரும்படி ஸம்க்ஞை செய்ததால்) உட்கார்ந்தேன்.

பிறகு காலக்ஷேபம் முடிந்ததும் அடியேன் மறுபடி தெண்டன் ஸமர்ப்பித்தேன். ஸ்ரீமத் ஸ்வாமி நடுவில் நிறுத்தி, குசலப்ரச்னம் செய்தாயிற்று. அப்போது (இப்பொழுது ஸ்ரீமதாண்டவனுக எழுந்தருளியிருக்கும்) நவ நம் ஆண்டவன் அங்கே காலக்ஷேபம் செய்து கொண்டிருந்ததால், கூடவே இருந்தார். அடியேன் உடனே தாஸன் எழுதியிருந்த ''முனித்ரய விஜயம்'' என்ற பெயர் கொண்ட ரூபகத்தை வாசித்துக் காட்டினேன். நம் ஆண்டவனும் அதைக் கேட்டு சிலாகித்தாயிற்று. கூடயிருந்த நவ நம் ஆண்டவனும் திருச் செவிசாற்றியாயிற்று. பிறகு இந்த ஸம்பவம் அடியேனுக்கே மறந்துபோய்விட்டது.

அதன் பிறகு பல ஆண்டுகள் கழிந்தன. ஸமீபத்தில் ஸுமார் 6 அல்லது 7 ஆண்டுகளுக்கு முன் ப்ரக்ருதத்தில் உள்ள ஆண்டவன் (பூர்வாச்ரம தசையில்) திருவஹீந்திர புரத்திற்கு எழுந்தருளியிருந்தார். ஆங்கு ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் அடியேனை ஸந்தித்து விசாரித்துப் பேசிக் கொண்டிருக்கும் போது ஸ்வாமியே (நவநம் ஆண்டவனே) பின் கண்டவாறு முன் கூறிய ஸம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டருளியாயிற்று. அது வருமாறு. ''திருக் குடந்தையில் நான் நம் ஆண்டவனிடம் காலக்ஷேபம் செய்துகொண்டிருந்த போது அங்கே ஸ்வாமியிடம், ''முனித்ரய விஜயம்,'' என்னும் நாடகத்தை வாசித்துக் காட்டியது நீர் தானே!'' என்று கேட்டருளியாயிற்று. ஸ்வாமியின் ஞாபக சக்தியைக் கண்டு அடியேன் திகைத்து விட்டேன். முன் நடந்த விஷயம் எல்லாம் நினைவுக்கு வந்தன. அது முதல் ஸ்ரீமத் ஆண்டவன் அடியேனிடம்

வெகு கிருபையாக எழுந்தருளியிருக்கிற படியை இதன் மூலம் விண்ணப்பித்துக் கொள்கிறேன். ஸ்வாமியின் ஞாபக சக்தி அபாரம். அதனாலேயே அடியேன் இப்பொழுது ''ஆத்மா பலாபரிணயம்'' என்னும் நூலை (அடியேன் எழுதியது) அங்கு முத்ரிக்கும்படி ஸமர்ப்பித்திருக்கிறேன். ஸ்ரீமத் ஸ்வாமி சரிதம் விரிவாகத் தெரியாததால், ''ஸ்ரீநவ நம் ஆண்டவன் ஸ்தவ:''—10, 12, ச்லோகங்களால் அடியேனுக்கு ஸ்வாமியிடமுள்ள ப்ரதிபத்தியை வெளிப்படுத்தியுள்ளேன்.

ஸ்ரீ:

அருளிச்செயல்களும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமும்

(ஸ்ரீ. உப. வே. நாவல்பாக்கம் கிருஷ்ணதாத்தாசாரியர் ஸ்வாமி)

ஸ்ரீயப்பதியான நாராயணன் 'பரித்ராணய ஸாதூநாம்' என்கிறபடி மத்ஸ்ய கூர்மாத்யவதாரங்கள் எழுந்ததுபோல் ''பூர்வோத்பன்னேஷு பூதேஷு தேஷு கலௌ ப்ரபு: அநுப்ரவிச்ய குருதே யத் ஸமீஹிதமச்யுத:'' என்கிறபடியே பராங்குச பரகாலாதி ரூபத்தாலே, அபிநவமாக ஒரு தசாவதாரம் செய்து மேகங்கள் ஸமுத்ர ஜலத்தை வாங்கி எல்லோருக்கும் பயன்படும் படியான தண்ணீராய் வர்ஷிப்பதுபோல், வேதங்களின் ஸாராம்சங்களை எல்லோரும் அதிகரிக்கத் தக்கதான எளிதாயும் இனிதாயுமான தமிழ் ப்ரபந்தங்களால் உலகிற்குச் செய்த உபகாரம் மிகவும் பெரிது.

''மிக்க வேதியர் வேதத்தினுட் பொருள் நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினர்' என்று மதுரகவி யாழ்வார் சொல்லு முள்ளது. ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் ஸ்தோத்ர பாஷ்யத்தில் ''மாதாபிதா யுவதய'': என்கிற ச்லோக வ்யாக்யானத்தில் ''பராசர ப்ரபந்தாதபி வேதாந்த ரஹஸ்ய வைசத்யாதிசய ஹேதுபூதைஸ்ஸத்ய: பரமாத்மனி சிதரஞ்ஜகதமை: ஸர்வோபி ஜீவ்யை: ரூப ப்ருஹ்மணே: என்னும் பிரதான சதகம் என்கிற ரஹஸ்யத்தில் உபப்ருஹ்மணங்களில் பிரதானமானது ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் என்றும், பாதுகாஸஹஸ்ரத்தில் ''ஆம்ஞயாஞம் ப்ரக்ருதிமபராம் ஸம்ஹிதாம் த்ருஷ்டவந்தம்'' என்றும் மற்றுமிப்படி இதன் பெருமையைப் பலவாறுகப் புகழ்ந்திருக்கிறார்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமே நம்மாழ்வார் மூலமாக விளங்கியது. இதை ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸம்ப்ரதாய பரிசுத்தியில் ஸத்ஸம் ப்ரதாயத்தாலன்றி உபநிஷத்தின் அர்த்தங்களை அறியக்கூடாது. அறிந்தாலும் பயன்படாதென்று ப்ரமாணங்களைக்கொண்டு நிரூபித்து அப்படிப்பட்ட வேதாந்த ஸம்ப்ரதாயத்திற்குக் கலியுகத்தில் ப்ரஹ்மநந்தி முதலிய

வர்களுக்குப் பிறகு நம்மாழ்வார் பிரவர்த்தகராஞர். அந்த நம்மாழ்வார் மதுரகவிகள் முதலான ஸம்ப்ரதாயத் தாலும் யோகதசையில் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டு, உபதேச முகத்தாலும் நாதமுனிகளுக்கு ஆசார்யராஞர். அந்த நாத முனிகள் மூலமாகவே, பின்னிட்டு ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ர தாயம் பரவியுள்ளதென்றும் ''நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்'' என்றும் மற்ரொரு விடத்திலும் ஸாதித்துள்ளார். மிகவும் கம்பீரமாயும் அனந்தமாயுள்ள வேதங்களையும் அவற்றின் பொருள்களையும் மஹர்ஷிகள் தவிர மற்றவர்கள் அறிய முடியாதாகையால் அதை அறிந்த மஹர்ஷிகள் செய்த ஸ்மிருதி, இதிஹாஸம், புராணம் முதலிய உபப்ருஹ் மணங்களைக் கொண்டே அந்த வேதார்த்தங்களை நிச்சயிக்க வேண்டும் என்று.''

''இதிஹாஸ புராணப்யாம் வேதம் ஸமுபப்ருஹ்மயேத் : பிபேத்யல்பச்ருதாத்வேத: மாமயம் ப்ரதரிஷ்யதி: || என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றைவிட ஆழ்வார் திவ்ய ஸுக்தி ஏற்றமானது.'' தேஹாத்மாபிமானிகளைக்காட்டி லும் தேஹாத்ம விவேகம் கைவந்த ரிஷிகளுக்கு நெடுவாசி யுண்டு. அந்த ரிஷிகளைக் காட்டிலும் பகவான் அருளாலேயே மயர்வறமதிநலம் பெற்ற ஆழ்வார்களுக்கு நெடுவாசியுண்டு, என்று அபியுக்தர்கள் சொல்படி உள்ளது. மிகவும் ஞானதி கர்களான கபிலர், பிரஹஸ்பதி, நான்முகன் போன்றவர் களுக்கும் கர்ம்வசியர்களாக இருப்பதன் அடியாகச் சிற்சில விஷயங்களில் பிரமம், பிரமாதம் முதலியவையுண்டு, என்று பிரஹ்மஸூத்ர பாஷ்யாதிகளில் சொல்லி யிருப்பதால் அவ தார புருஷர்களான ஆழ்வார்களுக்கு ஒரு விஷயத்திலும் அந்த மாதிரியான தோஷங்கள் கிடையாதாகையாலும் அவர்கள் மற்றவர்கள் போலன்றிக்கே, ''உண்ணும் சோறும் பருகு நீரும், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணனே'' என்று, உலகத்தை மறந்து பகவானையே அநுபவித்துக் கொண்டிருப்பதாலும் மற்றவர்கள்போல் மேற்கூறியதோஷங் கள் ஏற்படுவதற்கில்லை யென்றும் அவர்கள் சரித்ரமூலமாயும் பகவதநுபவ பரீவாஹமாக வரும் அவர்கள் பாசுரங்களாலும் விளங்குவதாலும் இதிஹாஸ புராணதிகளைவிட தத்வ, ஹித, புருஷார்த்தங்களைத் தெளிவாக விளக்குவதாலும் இவர்கள் தனியானவர்களென்று கருத்து, அதனாலேயே, நம் ஸித்தாந் தத்தில் முக்கியமான விஷயங்களில் மாறுபாடு இராமல் ஒரே மாதிரியான நிலை எல்லா ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர் களிடமும் உள்ளது. அவர்களிலும் நம்மாழ்வார் பெருமை

தனியானது. பாதுகாஸஹஸ்ரத்தில் ''யோகக்ஷேமம் ஸகல ஜகதாம் த்வய்யதீனம் ஸஜானன்'' என்றும் பக்த்யாபரம் பவது தத் பரதஸ்ய ஸாதோஸ்த்வத் ப்ரார்த்தனம் பகு பதெள மணிபாதரக்ஷே: கேஞசயேன ஸமுனி: பரமார்த்த தர்சி பத்ராய தேவி ஜகதாம் பவதீமவாதீத் | வால்மீகி பகவான் உலகத்தின் யோக க்ஷேமம் உன்னதீனமென்று சொல்லுகிறு ரென்றும், ஸமாக்யா பத்ததியில்—சடகோபஜ—பாதுகையின் உருவம் என்றும் ஸ்வாமி சொல்வதால்

அதிரோஹார்ய பாதாப்யாம் பாதுகே ஹேமபூஷிதே
ஏதேஹி ஸர்வலோகஸ்ய யோக க்ஷேமம் விதாஸ்யத:

என்கிற ஸ்ரீமத் ராமாயண ச்லோகத்தில், ஸ்ரீராகவனுடைய பாதுகைகள் நம்மாழ்வாராக அவதரித்து, அவர் மூலமாயும் நம்மாழ்வாராக அவதரித்து, அவர் மூலமாயும் அவர் அருளிச் செயல் மூலமாகவும் உலகிற்கு ஏற்படக்கூடிய சாசுவதமான யோக க்ஷேமத்தையும் த்ரிகாலஞ்ஞரான வால்மீகி பகவான் கருத்தில் கொண்டே இப்படிச் சொல்லியிருக்கிறுன். மேலும், ஸ்ரீபாதுகையின் கீழ், பரதாழ்வான் முகமாக நடந்த 14 வருஷ காலம் ராஜ்ய பரிபாலனத்தில் ஏற்பட்ட யோக க்ஷேமங்கள்மட்டு மென்று கொண்டால், அது அப்போதிருந்தவர்களே மட்டுமே சேர்ந்ததாயிருப்பதால் எல்லா உலகங்களுக்கும் என்கிற சொல்லுக்குக் குறுகின அர்த்தம் கொள்ள நேரிடும். மேற்கூறிய பக்ஷத்தில் அது இராததால் இப்படியும் ஸ்வாமி அபிப்ராய மிருக்கலாம். ஆழ்வார்களால் ஏற்பட்டுள்ள சிறப்பு சிலவற்றைக் கூறுவம்.

அந்தர்யாமி ப்ராஹ்மணம் முதலிய சுருதிகளில் சொன்ன ஜகத்திற்கும் பகவானுக்குமுள்ள சரீர சரீரி பாவம் என்கிற ஸம்பந்தம் ''உடல்மிசையுயிரெனப் பறந்தெங்கும் கிடந்துளான்'' என்பதுபோன்ற பாசுரங்களால் நன்முகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த ஸம்பந்தத்தால் பகவானுக்கு எல்லாம் சேஷமென்று ஸித்திக்கிறது. அதில் சேதனர்களால் ஏற்படும் அதிசயம் அவனுகந்த கைங்கர்யங்கள் பர்யந்தமாவதால் மேம்பட்டதாகிறது. சேஷனை சேதனன் தாஸனுகிறுன். தாஸனுக்கு எடுத்தது அடிமை, கைங்கரியம், பகவானுடைய ஏவலைச் செய்வது, இதுதான் உத்தம புருஷார்த்தம். இதன் எல்லை நிலம் பாகவத கைங்கரியம். ''ஒழிவில் காலமெல்லாம் உடனுய்மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டும் நாம்'' ''தொண்டர், தொண்டர், தொண்டர்'', ''அடியார் அடியார்'' என்றும், ''அடியார்கள் குழாங்களோடு கூடுவதென்று

கொலோ'' என்றும், ''மாலையுற் றெழுந்தாடிப் பாடித்திரிந் தரங்கனெம்மானுக்கே, மாலையுற்றிடுந் தொண்டர் வாழ்வுக்கு மாலையுற்றதென் நெஞ்சமே'' என்றும் ''அடியார்க்காட்படுத் தாய அடியார்க்கென்னை யாட்படுத்தும் விமலன்'' ''உனக்கே நாமாட் செய்வோம்'' என்றும் புருஷார்த்த காஷ்டையான பகவத் பாகவத கைங்கரியத்தை ஆழ்வார்கள் பலவாறுகக் கொண்டாடியிருக்கிறார்கள். ஆகவே தான் நம்மாசாரியர்கள் கைங்கரியம் புருஷார்த்தமென்று அறுதியிட்டார்கள். உலகில் ஏவல் செய்வது வெறுக்கத் தக்கதாயும் சாஸ்திரங்களிலும் ஸேவா வ்ருத்தி நிந்திக்கப்பட்டிடுப்பதாலும், கைங்கரியம் எப்படிப் புருஷார்த்தமாகு மென்றால், கருமவசியாய் ஒரு பிரயோசனத்திற்காக ஒருவரிடம் தாஸனையிருப்பதுதான் மேற்கூறியபடி யுள்ளதே தவிர, ஸ்வரூப ப்ராப்தமான கைங்கரியம் பர்த்தாவினிடத்தில் பதிவ்ரதை செய்யும் பணிவிடை போல் மஹாநந்தாவகமா யிருக்கும்.

மேலும், தன்னை எந்த மாதிரி நினைக்கிறானே அதற்கேற்ற படி புருஷார்த்தம் இருக்கிறதென்பது உலகில் பிரசித்தம். புலி, பசு முதலிய ஜீவராசிகளில் தன் நினைவிற்கேடாக ருசிகள் மாறுபட்டிருக்கின்றன.

பகவானுக்கே சேஷன் என்று ஸ்வரூபம் தெளிந்தவன் அதற்கேற்ப கைங்கரியத்தைத்தான் விரும்புவான்; ஸ்வதந்த்ரனாயிருப்பதை விரும்ப மாட்டான். அந்த கைங்கரியமும் ''ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப'', முதலானவைகளால் பிராட்டியுடன்கூடிய பகவானிடத்தில் என்றும்.

பிராட்டி புருஷகாரையாயிருக்கும் விசேஷத்தையும், அந்த திவ்ய தம்பதிகளுடைய ஸகல கல்யாண குணங்களையும் பலவாறுக அநுபவித்து ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள்.

தற்காலம் ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி ஸ்ரீரங்கம் பெரியாண்டவன் பரம்பரையில் விளங்கும் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்யோபய வேதாந்தாசார்ய, பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யராய், ஸ்ரீமுனித்ரய ஸித்தாந்த ஸ்தாபகாசார்யரான ஸ்ரீமத் வேதாந்தராமாநுஜ மஹாதேசிகன், ஸ்ரீமந்நாதமுனிகள் மூலமான நம் ஸம்ப்ரதாயம் விளங்குவதற்கே மூல காரணமான ஆராவமுதாழ்வான் திருவடி வாரத்தில் அவன் கடாக்ஷம் பெற்று பூர்வாச்ரமத்தில் பால்யத்திலேயே சாஸ்திரப்படி அத்யயனம் செய்து, குருமுகமாக, சாஸ்திரங்களைக் கற்று, கிரந்த சதுஷ்டயங்களையும் ஸ்வாசார்யஸன்னிதியில் பூரணமாக காலக்ஷேபம் செய்தும், நாலாயிர

திவ்யப்ரபந்தங்களையும் அத்யயனம் செய்து தாரணம் பண்ணி, அர்த்தங்களையும் அநுபவ பர்யந்தமாக அறிந்து, சென்னைக்கு எழுந்தருளி ''ஆசிஜ்ஞேதி ஸ சாஸ்த்ராணி. ஆசாரே ஸ்தாயித்யபி ஸ்வய மாசரதே யஸ்மாத் தஸ்மாத் ஆசார்யே உச்யதே'', என்று சொன்னபடி பல இடங்களில் எல்லாரும் புரிந்து கொள்ளும்படி உபந்யாஸங்கள் வெகு அழகாகவும் ரஞ்ஜகமாகவும் செய்து பல்லாயிரக் கணக்கானவர்களை ஆனந்தப் பரவசர்களாகச் செய்தும், பல பேர்களுக்கு காலக்ஷேபக்ரந்தங்கள் ஸாதித்தும், பகவத் பக்தியையும் ஆஸ்திக்யத்தையும் வளர்த்து, பம்பாய், டெல்லி, கோயமுத்தூர் போன்ற பெரிய நகரங்களிலும் உபந்யாஸங்கள் செய்து லோகோஜ்ஜீவனம் செய்தாரென்பது பிரசித்தமானது.

உபந்யாசங்கள் சொல்லழகும், பொருளழகும் ஸம்ஸ்கிருத வசனங்களும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளும் நிறைந்தும் மனத்தை ஆகர்ஷித்தும் உள்ளவை. தனிப் பெருமையுடையவை அதோடு சாந்தி, தாந்தி, தயை, பொறுமையும் எப்போதும் ஸ்மித பூர்வபாஷி, என்கிறபடி சிரித்த முகத்தோடும் ம்ருது பாஷணமும் பிறர் சிறுமை பார்க்காமல் எல்லோரோடும் நெருங்கிப் பழகும் தன்மையும், இப்படிப் பல ஆத்ம குணங்களும் சேர்ந்தும் அருளிச் செயல்களில் அந்நியாதிருசமான பாண்டித்யமும் அநுபவமும் ஸ்வாமிக்குத் தனியானதும் உலகப் பிரசித்தமுமானது. தன் பெருமையை ஆவிஷ்கரிப்பது கிடையாது.

எப்பொழுதும் பகவதனுபவத்தால் வைராக்கியம் ஏற்பட்டு, ஆசார்ய நியமனப்படி துரீயாச்ரமம் ஸ்வீகரித்து விசேஷ லோகோஜ்ஜீவனம் செய்தாகிறது. இப்படிப்பட்ட ஆசாரியரின் உபதேசமும் அனுக்ரஹமும் உலகிற்கேற்பட வேண்டுமென்று பெரிய பெருமாளைப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

அநகாம் ஆசார்ய ஸந்ததிம் வந்தே

(ஸ்ரீ. உப. வே. R. கோபாலஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி
அட்வகேட், சென்னை)

என்னுயிர் தந்தளித்தவரை சரணம் புக்கி
யானடைவே அவர்குருக்கள் நிரைவணங்கி
பின்னருளால் பெரும்பூதூர் வந்தவள்ளல்
பெரிய நம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.

பாபிஷ்ட: க்ஷத்ரபந்துச்ச புண்டரீகச்ச புண்யக்ருத்
ஆசார்யவத்தயாமுக்தெள தஸ்மாதாசார்யவான்பவேத்||

இவ்வுலகில் காணப்படும் ஜீவராசிகளெல்லாம் பூர்வஜன்ம புண்ய பாபங்களுக்கு அனுரூபமான ஜன்மங்களெடுத்து சுக துக்கங்களை அனுபவிக்கின்றன என்பது நமது ஹிந்து மதத்தினர் எல்லோருக்கும் உள்ள பொதுவான நம்பிக்கை. இப்படியே இந்த ஸம்ஸார சக்கரத்தில் புனரபி ஜனனம் புனரபி மரணமாக சுழன்று சுழன்று அவதியுறும் ஜீவராசிகளின் மீது தயை கூர்ந்து மதஸ்தாபகர்களான மஹதாசார்யார்கள் தீர்க்க சர்ச்சை செய்து நாம் உஜ்ஜீவிக்க அவரவர்கள் கண்டறிந்த தத்வங்களை நமக்குத் தந்துப் போந்தனர்.

எத்தனையோ ஜன்மங்களுக்குப் பிறகு, நாம் ஜன்மாந்தரங்களில் செய்த புண்யலேசத்தினாலும் ஸ்ரீ எம்பெருமானின் தயையாலும் இந்த உத்தமமான மனுஷ்ய ஜன்மம் கிடைக்கப் பெற்றோம். இந்த ஜன்மத்திலிருந்துதான் முக்திபெற சுலபம் என்றும், ஸம்ஸாரக் கடலை நீந்தி அக்கரை சேர்வதற்கு இந்த சரீரம் ஒரு சிறந்த தெப்பக்கட்டை என்றும் கூறுவதுண்டு. இந்த மனுஷ்ய சரீரத்திற்குக் கிடைக்கப் பெற்ற மஹத்தை ச்வர்யம் ''ஞானம்'', ''பகுத்தறிவு'' என்பன. நாம் நம்

மைத் தெரிந்துகொண்டு, மேலேயார் வகுத்துள்ள சிறந்த வழிகளைக் கடைப்பிடித்து, பிறவித் துயரை அகற்ற, இவை கள் சிறந்த சாதனங்கள். ஆனால் இந்தப் பிறவியிலும், இவைகளைச் செவ்வனே பயன்படுத்திக் கொள்ளாமல் இந்த சம்சார சாகரத்திலேயே மக்னர்களாகிவிடுகிறோம். ஒரு சிலரே சிறந்தவற்றைக் கண்டும் கேட்டும் கடைத்தேறும் பாக்கியம் பெற்றிருக்கின்றனர். தன்னைப்பற்றியும் தான் இந்த உலகத்தில் வந்த கார்யத்தையும், அதைப் பிரயோ ஜனப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்களும் ஒருசிலரே. இவர்களிலும் சிலரே தான் தெரிந்துகொண்ட வைகளை மற்றவர்களுக்குத் தெரியும்படி சொல்லி அவர்களைக் கடைத்தேற்றுவிக்க வேண்டுமென்று எண்ணுபவர்கள்.

இந்த மனுஷ்யசரீரிகள் இந்த ஜன்மத்திலாவது முக்தி பெற வேண்டுமே என்ற பரம கருணையினால் பகவான் தானே, அந் தந்த சந்தர்ப்பங்களுக் கேற்ப, தன்னுடைய அம்சபூதர் களான ஆசார்யர்களைச் சிருஷ்டித்து நம்மைக் கடைத்தேறச் செய்கிறான். தான் நேரில் வந்து செய்ய முடியாதவைகளை ஆசார்யர்களைக் கொண்டு செய்வித்து வருவதால் நம் ஆசார் யர்கள் எம்பெருமானுடைய அம்சங்களே. அவர்களை பேசும் தெய்வங்கள். இந்தக் கிரமத்தைக் கொண்டே எம் பெருமானையும் பெரிய பிராட்டியாரையும் ஆசார்ய கோஷ்டி யிலே சேர்த்து அனுபவிக்கச் செய்வது நம் தேசிகன் ஸம்பிர தாயத்தின் பெருமை. முதலில் காணும் பாசுரத்தில் ஆரோ ஹண க்ரமத்தில் அஸ்ம தாசார்யாளிலிருந்து எம்பெருமான் வரை ஸேவிக்கிறோம். அவரோஹணக்கிரமமாக ஆபகவத்த: ப்ரதிதாமநகாம் ஆசார்ய ஸந்ததிம்வந்தே என்ற முறையில் எம்பெருமான் பிரதம குருவாகக் காட்டப்படுகிறான். நம் ஸ்வாமி தேசிகன் 'அத்யாஸீனதுரங்கவத்தா' என்கிற ச்லோ கத்தில் 'ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாம் தன்யாம் நமன்யாமஹே' என்றருளிச் செய்தார். மேற்கூறியவைகளினால் ஆசார்யாளின் பெருமையும், ஆசார்ய கடாக்ஷத்திற்குப் பாத் திரமானவர்களுக்கு மோக்ஷம் சித்தம் என்பதும் தெள்ளத் தெரிவன. ஸம்ஸாரத்தைக் கடப்பதற்கு அதுவே பெரிய உபாயம் என்பதை இந்த ச்லோகத்தினால் ஸ்வாமி நிஷ்கர் ஷித்து அருளினார்.

ஸம்ஸாராவர்த்ததே வேகப்ரசமன சுபத்ருக் தேசிகப்ரே
க்ஷதோஹம்
ஸம்த்யக்தோன்யைருபாயை: அநுசிதசரிதைஷ்வத்ய சாந்
தாபிஸந்தி:

ஸித்திர்பவதி வானேதிஸம்சயோச்யுத ஸேவிஞம் |
நஸம்சயோ அஸ்தி தத்பக்த பரிசர்யாரதாத்மஞம் ||

என்ற காரிகையாலும் இந்த பாவத்தை உறுதிப்படுத்தினர்.

இந்த ஆசார்யர்கள் நம்முடன் கூட இருந்து, நம்முடைய இளப்பத்தைத் தெரிந்தவர்களானதால் நம்மிடம் தயை கூர்ந்து, நமக்காக எம்பெருமானிடம் பரிந்து பேசி நம்மையும் ஒரு வஸ்துவாகத் திருவுள்ளம் பற்ற வேணுமென்று பலகாலம் பிரார்த்தித்து, எம்பெருமானுக்கு நம்மிடமுள்ள கோபத்தை சமனம் பண்ணி ஜீவனைப் பெருமாள் திருவடிவாரத்தில் ஸமர்ப்பிக்கிற சாமர்த்தியம் உள்ளவர்கள். எம்பெருமானும் இந்த ஆசார்யர்கள் தனக்கு வேண்டியவர்களாதலால் அவர்கள் சிபார்சை உல்லங்கனம் செய்யாது அங்கீகரித்தருள்கிறான்.

மாம் மதீயம் ச நிகிலம் சேதனு சேதனத்மகம்
ஸ்வகைங்கர்யோ பகரணம் வரத ஸ்வீகுரு ஸ்வயம்

என்றல்லவோ ஆசார்யாளின் பிரார்த்தனை. ஸ்ரீமதாசார்யர்களுக்கு ஜீவன் கடைத்தேற வேண்டுமே என்ற கருணையையும் அதற்காக அவர்கள் செய்கிற மஹோபகாரமும் எவ்வளவு சொன்னாலும் போருது. பசு, பக்ஷி என்று கூடப் பாராமல் கஷ்டப்படும் ஜீவன்களைக் கடைத்தேற்றப் பாடுபடுகிறார்கள்.

பசுர்மனுஷ்ய: பக்ஷீவாயேச வைஷ்ணவ ஸம்ச்ரயா:
தேனைவதே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம்பதம்

ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் சஞ்சாரத்தில் அரியக்குடியில் எழுந்தருளியிருக்கும்பொழுது, தினம் காலக்ஷேப சமயங்களில் ஒரு பசுமாடு வாசற்படி வரை வந்து காலக்ஷேபம் நடப்பதையே பார்த்துக் கொண்டிருக்கும். எவ்வளவு முறைவெளியில் கொண்டுவிட்டாலும் திரும்பி வந்துவிடும். காலக்ஷேபம் முடிந்த பிறகு ஸ்ரீமதாண்டவன் தடவிக்கொடுத்த பிறகுதான் போகும். இதை ஆச்சர்யமாய் பிரஸ்தாபிக்கிற சமயத்தில் ஒரு ஸ்வாமி, அந்தப் பசுவிற்கு உபாயானுஷ்டானம் ஆகிவிட்டதென்றும், ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி அரியக்குடியில் எழுந்தருளியிருந்த சமயம் இந்தப் பசு சீக்காய் இருந்ததாயும், இதன்மேல் கிருபை செய்து அதற்கு உபாயானுஷ்டானம் செய்தாயிற்று என்றும் சொன்னார். ஒரு சமயம் ஸ்ரீமத் தேரெழுந்தூர் ஆண்டவன் திருவெள்ளறைக்கு எழுந்தருளும் போது ஒரு குதிரை வண்டிக்காரன் சவுக்கினால் குதிரையை ரொம்ப அடித்துவிட்டானும். இதைக்கண்டு பொறுக்காத

ஸ்ரீமத் ஆண்டவன் அந்தக் குதிரையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கதறி அழுது அதற்கு உபாயானுஷ்டானம் செய்து வைத்தாயிற்று. ஸ்ரீமதாசார்யர்களின் அநந்ய ப்ரயோஜன மான கருணைக்கு இன்னும் எவ்வளவோ உதாஹரணங்களைச் சொல்லலாம். நம்மால் அவர்களுக்கு ஆகவேண்டியது ஒன்று மில்லை. நாம் ஸர்வஸ்வத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது. அவர்களே நமக்கு ஸர்வவித பந்துக்களும் ஆகிறார்கள். சொல்லப்போனால் மற்ற பந்துக்களை விட ஆசார்யனே உயர்ந்த விதமான பந்து. நமக்கு எம்பெருமான் ஆசார்யன் மூலமாகவே பிராப்தம் ஆகிறான். ஆகையால் நம் ஸம்ப்ர தாயப்படி ஆசார்ய ப்ரதிபத்தி ஸம்ஸாரத்தைத் தாண்டு வதற்கும் மோக்ஷத்தை அடைவதற்கும் சுலபமான மார்க்க மாக நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தான் ஒருவர் இறந்துவிட்டால் ''ஆசார்யன் திருவடி அடைந்துவிட்டதாக'' சொல்வது ஸம்ப்ரதாயம். ஸ்ரீமத் ராமாயணத்தில் சபரி ஸ்ரீ ராகவன் முன்னிலையில் சரீரத்தை விடும்பொழுதும்கூட, ''நான் என்னுடைய ஆசார்யன் திருவடிக்குச் செல்கிறேன்'' என்றுதான் சொன்னாள். ''யானஹம் பர்யசாரிஷம்'' என்று வாக்கியம். நமக்குள்ள ஆசார்ய ப்ரதிபத்தி, சிறந்த பதிவ்ரதா சிரோமணிகள் பர்த்தாவினிடத்தில் வைத்துள்ள பக்தி போல இருக்க வேண்டும். பர்த்தாவினிடம் குறைகளிருந்தாலும் பதிபக்தி குறையாமலிருக்க வேண்டுமாப் போலே, ஆசார்யர்களும் நம்மைப்போல் மனுஷ்யர்கள் தானே என்று அலக்ஷியமாக நினையாமல் நிச்சலமான பக்தி செய்யவேண்டும்.

அசிதில குருபக்தி ஸ்தத் ப்ரசம்ஸாதிசீல: ப்ரசுர பகுமதிஸ்
தத் வஸ்து ஸ்த்வவாவாதி கேபி
குணவதி விநியோக்தும் கோபயன் ஸம்ப்ரதாயம் க்ருத
விதனகவ்ருத்தி: கிம்ன விந்தேன்னிதானம்

இவர்களும் லோகத்திலே நம்மைப்போல் கஷ்டங்கள் அனு பவிக்கிறார்களே. அவர்களிடத்தில் சில தோஷங்கள் காணப் படுகின்றனவே, இவர்கள் நம்மை எப்படிக் காப்பாற்ற முடியும் 'ஸ்வயம் தரிதும் அக்ஷம: கதமஸௌ பரான் தாரயிஷ்யதி' என்று நினைக்கக்கூடாது. ஆசார்யன் செய்த உபகாரத்திற்கு நம்மால் ஒன்றும் கைம்மாறு செய்ய முடியவில்லையே என்ற எண்ணத்துடன் கிருதக்ஞதை உள்ளவர்களாக இருக்க வேண் டும். ''ஏற்றி மனத்தெழின் ஞான விளக்கை இருளினத்தும் மாற்றினவர்க்கொரு கைம்மாறு மாயனுங்காணகில்லான்'' என்று ஸ்வாமி தேசிகனுடைய கட்டளை.

ஸ்ரீராமகிருஷ்ணத்யவதாரங்களில் ஆசார்ய பக்தியை நடத்திக் காண்பித்திருப்பது ஸுப்ரஸித்தம் ஆசார்ய: ஸத்பிரப்ரத்யுபகரணதிவா தேவவத்ஸ்யாது பாஸ்ய: என்று ஸ்வாமி தேசிகன் நிஷ்கர்ஷித்தார். ஆசார்யானுக்ரஹத்தால் லக்ஷ்மி கடாக்ஷத்தையும் பெறுகிறான் என்றும் ப்ரஸித்தம்.

இப்பேர்க்கொத்த ஆசார்யர்களில் நம் ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயத்தில் ஒரு அஸாதாரணமான பெருமை இருக்கிறது. ஸ்ரீமத் ராமாயணத்தில், ஸ்ரீராமன் திருவயோத்யைக்கு எழுந்தருள மறுத்தபோது, அருகிலிருந்த வஸிஷ்டர் ஸ்ரீராம பாதுகைகளை ப்ரார்த்தித்து வாங்கிக் கொள்ளும்படி ஸ்ரீபரதாழ்வானுக்கு நியமித்ததாக ஸர்வமும் தெரிந்த வஸிஷ்டர் ஸ்ரீபாதுகைகளின் பெருமை தெரிந்தே, ஸ்ரீராமனுக்குப்ரதிநிதியாக பாதுகைகளை பிரார்த்திக்கச் செய்தார். ஸ்ரீபாதுகைகளின் பெருமையையும் அவைகள் ராஜ்யபாரம் செய்த அழகையும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தில் பரக்கப் பேசியுள்ளார். அதே மாதிரி ஸ்ரீமதாண்டவன் ஸந்நிதியிலும் நம்பூர்வாசார்யாளின் பாதுகைகளை தினம் எம்பெருமான் திருவாராதனம் போலவே ஆராதித்து வருவதும், ஸ்ரீபரதாழ்வான் ஸ்ரீராம பாதுகைகள் ஸந்நிதியிலே ராஜ்ய விஷயங்களை அன்றுடம் விஞ்ஞாபித்து அந்த நியமனத்தின் பேரிலே காரியங்கள் செய்தாப்போலே, ஆச்ரமத்து விஷயங்களை பாதுகைகள் ஸன்னிதியில் விஞ்ஞாபித்து அந்தப் பாதுகைகளின் நியமனம் பெற்றே காரியங்கள் நடந்தேறி வருகின்றன.

தவிர ஸஞ்சாரங்களிலெல்லாம் பாதுகைகள் எழுந்தருளியாகிறது, பாதுகைகளுக்காகவே சஞ்சாரம் என்றபடி ஸ்ரீமதாண்டவன் சிஷ்யர்களுக்கும், பெருமாள் தீர்த்தம் ஸாதிப்பதுடன் பாதுகைகள் தீர்த்தம், பாதுகைகள் முதலிய சாதித்து வருவது வழக்கம். பல சிஷ்யர்கள் தங்கள் குறைகளை ஸ்ரீமதாண்டவனிடம் விஞ்ஞாபிக்க அவர்கள் ஸ்ரீபாதுகைகள் ஸன்னிதியில் விஞ்ஞாபித்து கஷ்ட நிவர்த்தி ஆகியிருக்கிறது எத்தனையோ. ஸ்ரீமதாண்டவன் என்ற தேரெழுந்தூர் ஆண்டவன் ஒரு சிஷ்யரிடம் ''ஏண்டா, உன் ஆத்தில் யாருக்காவது உடம்பு சரியில்லாவிட்டால் மற்ற பந்துக்களுக்கெல்லாம் எழுதுகிறாயே, எனக்கும் ஒரு லெட்டர் போடக் கூடாதா? இந்த ஸந்யாஸிக்கு எதற்குத் தெரிவிக்க வேண்டுமென்று நினைக்காதே. என்னிடத்தில் தெரிவித்தால் நான் பாதுகைகள் ஸன்னிதியில் இந்த ஜீவன் கஷ்டப்படுகிறதே, சொஸ்தம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்வேன். சொஸ்தமாகிவிடும்''

என்று சாதித்தாச்சு. இதனால் ஸ்ரீ ஸ்வாமியினுடைய கிருபையும், ஸ்ரீ பாதுகைகளிடமுள்ள திடமான நம்பிக்கையும் நன்றாகத் தெரிகிறது. இது நம் ஆண்டவன் ஆசிரமத்தில் தனிப் பெருமை. ஸ்ரீராம பாதுகைகளே, ஸ்ரீ பரதாழ்வான், ஸ்ரீராமன் நேரில் எழுந்தருளி ராஜ்யம் செய்வதாக எப்படி நினைத்தாரோ அதே மாதிரிதான் நம்பூர்வாசார்யர்கள், தம் தம் பாதுகைகள் மூலமாக நித்யமாக ''இன்றுமொரு நூற்றாண்டிரும்'' என்கிற கிரமத்தில் நம்முடனேயே எழுந்தருளியிருந்து நம்மை யெல்லாம் குளிர கடாக்ஷித்து அனுக்ரஹித்து வாழ்வித்து வருகிறார்கள். அந்த ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களாக நாம் இருக்க பாக்கியம் பெற்றோமே என்று பெருமிதமடைந்து நாம் ஆசார்யாளுக்கு கிருத்க்ஞதையுடனிருந்து ஸர்வ க்ஷேமங்களையும் பெற்று வாழ்வோமாக. ஸ்ரீபாதுகா ராஜ்யத்தில் ஸ்ரீ திருவயோத்யைமிகப் பெருமையுடனிருந்தது போல், நம் பூர்வாசார்யர்களின் பாதுகைகளின் அனுக்ரஹத்தால் நம் ஸ்ரீமதாண்டவன் ஸன்னிதி புங்காலு புங்கமாக விருத்தியடைந்து வருகிறது.

எல்லாப் பிரகாரத்தாலும் கைலவித பந்துவான ஆசார்யனின் திருவடியே தஞ்சம் என்பது நிஷ்கர்ஷமாக அறியலாம். ஆகையால் இதுவே தொல்வழி, நல்வழியும் கூட.

ப்ரதிதாம் (அஸ்மத்) ஆசார்ய ஸந்நிதிம் வந்தே
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகாய நம:

ஸ்ரீ:

சிறுமாமனிசர்

(ஸ்ரீ உப. வே. திண்டுக்கல் ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி)

த்வய்யாசார்யை: விநிஹிதபரா:
தாவகா ரங்கநாத!
த்வத் கைங்கர்ய ப்ரவண மநஸ:
த்வத் குணஸ்வாத மத்தா: |
த்வய்யேகஸ் மிந்நபி விஜ்ஞதோ
முக்த வத் ஸாதநத்வம்
த்வச் சேஷ த்வஸ் ஸ்வரஸரஸிகா:
ஸூரயோமே ஸ்வதந்தாம் ||

(ந்யாஸ திலகம்)

நம்மாழ்வார் ''நெடுமாற் கடிமை'' (8-10) திருவாய் மொழியில் ''சிறுமாமனிசர்'' என்று கொண்டாடும் மஹாத் மாக்களுடைய இயல்பும் மனப்பான்மையும் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனால் இந்த ச்லோகத்தில் அழகாகச் சித்திரிக்கப் படுகின்றன. உருவு சிறுத்து மாஹாத்ம்யம் (பெருமை) கனத்திருப்பதுகொண்டு அவர்கள் சிறுமனிசர்களும் ஆகிறார் கள், மாமனிசர்களும் ஆகிறார்கள். அவர்கள் நிலைமைக்கு உவமை அதே பாசுரத்தில் காண்கிறது—''சிறுமாமேனி'' என்ற வாமனன் வடிவைக் குறிக்கும் வர்ணனை.

அத்தகைய மஹான்களுக்குள்ள ஆறுவகையான பெருமை கள் இந்த ச்லோகத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. அவை களை ஒவ்வொன்றாக எடுத்து அனுபவிப்போம். அதற்குமுன் ச்லோகத்தில் காணும் ஆறு முன்னிலைச் சொற்களைப் பார்க்க வேண்டும். த்வயி; (2nd person) தாவகா; த்வத்; த்வத்; த்வயி; தவத் (த்வயி—உன்னிடத்தில்; த்வத்—உன்னுடைய; தாவக—உன்னைச் சேர்ந்த) ஒவ்வொரு பாதமும் ஆரம்பிப்பது ''த்வயி'' அல்லது ''த்வத்'' என்ற சொல்லைக்கொண்டு. இது கொண்டே மஹான்கள் ''நான், எனது, என்னில்'' முதலிய (1st person) தன்மை இடத்தைக் குறிக்கும் சொற்களைக் கையாளுவதைவிட்டு, எம்பெருமான் திறத்தில் ''நீ, உன்னை,

உன்னுல், உனது'' என்றெல்லாம் முன்னிலை இடத்தையே பெரிதும் பாராட்டுவார்கள். அஹங்கார மமகாரங்களைப் பெரிதும் மதிப்போடு பாராட்டுவது ஸம்ஸாரிகள் நிலை. ''யானே, என்றனதே'' என்பதை ஒழித்து ''நீயே, உலகெல்லாம் நின்னருளே நிற்பனவும்'' என்ற திருமழிசை யாழ்வார் போலவும், பெற்றனை நீயே மற்றுள்ளதெல்லாம், பெறுவது, நின்னை உறுவது கொள்வார் . . . யென்று பாடிப் போந்த ஸ்வாமி தேசிகன் போலதும் திருமாலையே பாராட்டுவது ஸம்ரிகள் நிலை. இது ச்லோக அமைப்பாலேயே கிடைக்கும் பொருள். இது நிற்க, ச்லோகத்தில் பேசப்படும் ஆறுவிதமான அவர்களது தன்மைகளை இப்போது உட்புகுந்து ஒவ்வொன்றுக அனுபவிப்போம்.

(1) த்வயி ஆசார்யை: விநிஹித பரா:—ஆசார்யர்களால்—அதாவது அவர்களது ஆசார்யர்களால்—உன்னிடத்திலே ஸமர்பிக்கப்பட்ட தம் ஆத்ம ரக்ஷாபரத்தையுடையவர்கள் இதனால் நிர்ப்பரர்களாகவும் க்ருதக்ருத்யர்களாயுமுள்ளவர்கள் என்று சொல்லப்பட்டது, நெடுங்காலமாகத் தூக்கமாட்டாமல் தூக்கி வந்த பெரும் சுமையை இறக்கிவைத்தவுடன் எவ்வளவு நிம்மதி ஏற்படும்? அந்த நிம்மதியை அடைந்தவர்கள். அதுவும் ஆசார்யர்கள் கிருபையால் ஏற்பட்ட நிம்மதி.

(2) தாவகா:—உன்னைச் சேர்ந்தவர்கள்; ஹே ரங்கநாத! உன்னுடைய உடமை என்று தங்களைக் கருதுபவர்கள். ''ராஜ்யம் என்ன நான் என்ன, இருவர்களும் இராமபிரானுடைய ஸொத்தல்லவா'' (ராஜ்யம்ச அஹம் ச ராமஸ்ய) என்று பேசிய பரதாழ்வான்போல் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அவனதாக்கி வைத்தவர்கள். ''என்னையும் என் மூன்றையும் அவனதாக்கி வைத்தவர்கள். ''என்னையும் என்னுடைமையையும் உன் சக்கரப்பொறி பொத்திக்கொண்டு'' என்றும் திருப்பொலிந்த சேவடி என் சென்னியின்மேல் பொறித்தாய் . . . என்னை உனக்கு உரித்தாக்கினையே'' என்றும் ''உனக்கிடமாயிருக்க என்னை உனக்குரித்தாக்கினையே'' என்றும் ''சென்னியோங்கு'' திருமொழியில் பெரியாழ்வார் அனுஸந்தித்தபடி, அவன் வஸ்து நாம் என்று காட்ட சக்கரப் பொறியும், சேவடிப் பொறியும் (பொறி—முத்திரை, Seal) தாங்கி வருபவர்கள். ''தேசமறிய உமக்கே ஆளாய்த்திரி'' யுமவர்களாகையால் பார்த்தமாத்திரத்தில் இவர்கள் அவனை (ஸ்ரீவேச்வரனை)ச் சேர்ந்தவர்கள் என்று தெரியும்படி இருப்பவர்கள். ''எனக்குரியன என் பரம் என் பேறு என்னது

இவையனைத்தும் இறையில்லா இறைக்கு அடைத்தோம்'' என்பதே இவர்கள் அனுஸந்தானம்.

(3) ''த்வத் கைங்கர்ய ப்ரவணமநஸ:—உனக்குத் தொண்டு புரிவதிலேயே ஆசை மிகுத்த உள்ளம் படைத்தவர்கள். நாமெல்லாம் பிறர்க்கே உழைத்து ஏழையாகிவருகிறோம். இங்கே ''பிறர்'' என்னும் சொல்லுக்கு நம் உடல், மனம், இந்த்ரியங்கள், உற்றார், உறவினர் எல்லாமே பொருள். அந்த நிலை நீங்கி ''உனக்கே நாம் ஆட்செய்வோம்'' என்று உறுதியான மனப்பான்மை பெற்று அவ்வளவிலும் ''தனக்கேயாய் எனைக்கொள்ளும்'' என்றபடி ஒருவிதப் பயனையும் எதிர்பாராமல் அவன் முகோல்லாஸமே புருஷார்த்தம் என்று எண்ணி யிருப்பவர்கள்.

(4) த்வத்குணஸ்வாதமத்தா:—உனது கல்யாண குணங்களைச் சுவைத்துச் சுவைத்துப் பெருமிதம் கொண்டவர்கள். எம்பெருமானுடைய குணங்கள் ''ஈர்கின்ற குணங்கள்''—பற்றியிழுத்து ஈடுபடச் செய்யுமவை. குரவையாச்சியர் (6-4) திருவாய்மொழியில் ஆழ்வார் அனுபவித்ததுபோல. ''எனக் கெவ்வுலகம் நிகரே'' என்றும் ''எனக்கு இனியார் நிகர் நீணிலத்தே'' என்றும், திருமழிசைப் பிரானைப்போல் ''என் மதிக்கு விண்ணெல்லாமுண்டோ விலே'' என்றும் தற்பெருமை கொள்ளும்படி எம்பெருமானுடைய குணங்களை யுன்னி யுன்னி மகிழ்வார்கள்.

அக்குணானுஸந்தானத்தால் ஏற்படும் அன்பெனும் நறவம் (கள்) மாந்தி (குடித்து) வெறிகொண்டவர்கள் என்பதை மத்தா: என்ற சொல் காட்டிக் கொடுக்கிறது. அதன் பயனாக அவர்கள் செய்யும் கார்யங்களை ''மொய்ம்மாம் பூம் பொழில்'' (3-5) திருவாய்மொழியில் காணலாம். ''பண்கள் தலைக்கொள்ளப் பாடிப் பறந்தும் குனித்துழல்வார்களாம், வீதிகள் தோறும் துள்ளுவார்களாம். மத்தா: என்றபோது உந்மத்தா: என்றே பொருள் கொள்ளலாம்.

(5) த்வய்யேகஸ் மிந்நபி விஜ்ஞாத: முக்தவத் ஸாதநத்வம் —உன் ஒருவனிடம் கூட, முக்தர்கள் எப்படியோ அப்படி, ஸாதன புத்தியைச் செய்யாதவர்கள். அதாவது உன்னைக் கொண்டு வேறு பயன்களைப் பெறப்பார்ப்பது என்பது அவர்களிடத்தில் காணமுடியாது. ''உன்னலல்லால் யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன்'' என்பது உன்னைத் தவிர வேறெருவரிடமும் எதையும் யாசிக்கமாட்டேன் என்பதைக் காட்டுகிறது. உன்னிடமும் ஒன்றும் யாசிக்க

மாட்டேன் என்பது அதனிலும் உயர்ந்த நிலை. முக்தர் களுக்கு எப்படி ஒன்றும் தேவையில்லையோ அப்படியே இவர் களுக்கும்.

(6) தவத் சேஷத்வ ஸ்வரஸ ரஸிகா:—உன் விஷயத்தில் தாங்கள் சேஷ வ்ருத்தி செய்வதில் மிகுந்த ருசியுடையவர்கள். உனக்குத் தாஸர்களாயிருப்பதில் பேரின்பம் கண்டவர்கள். குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது என்று எம் பெருமானை மடி பிடித்துத் தம் அடிமைத் தனத்தை ஸ்தா பித்துக் கொள்ளப் பார்ப்பார்கள். ''கேசவ நம்பியைக்கால் பிடிப்பது'' பேறு இவர்களுக்கு ''வடிவினையில்லா மலர்கள். மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடியை''த் தாமும் பிடிக்கப் பேராவல் பூண்டவர்கள். இதில் இவர்கள் காணும் இன்பம் மிகப்பெரிது. இதைவிட்டு உலகம் மூன்றினைரு நல் வீடு பெறினும் மதிக்கமாட்டார்கள். ''அச்சுவை பெறினும் வேண்டேன்'' என்பதே இவர்கள் பாசுரம். இப்படிப்பட்ட பெருமைகள் வாய்ந்த மஹாத்மாக்கள் எனக்கு இனியராக வேண்டும் என்று ச்லோகத்தின் இறுதியில் ப்ரார்த்திக்கப் படுகிறது. ஸுரிகள் எனக்கு ருசிக்கட்டும். அமுதினு மாற்ற இனியன் எம்பெருமான். அவனிலும் இனியர் அவ னைப் பயிலும் திருவுடையார்கள்.

ஆகவேதான் புருஷார்த்த காஷ்டாதிகாரத்தில் ''சுத்தா நாம்து லபேமஹி ஸ்திரதியாம், சுத்தாந்த ஸித்தாந்திநாம் முக்தைச்வர்ய திந ப்ரபாத ஸமயா ஸத்திம் ப்ர ஸத்திம் முஹு:'' என்று ப்ரார்த்திக்கப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட மஹாத்மாக்களுடைய பாததூளி படுத லால் இவ்வுலகம் பாக்கியம் புரிந்துள்ளது என்று பெரியாழ் வார் பாசுரம். அவர்களுடைய கடாக்ஷமும் அருளுமே நமக் குத் தஞ்சம்.

ஸ்ரீ:

கீதாஸாரம்

(திருக்கள்ளம் ஸ்ரீ உப. வே. நரஸிம்ஹராகவாசாரியர் ஸ்வாமி)

பகவான் பரம கருணையினால், பிரளய காலத்தில் அசேதநப் ராயர்களாயிருந்த சேதநர்களைப் படைத்து அவர்களுடைய அஜ்ஞாநமாகிற அந்தகாரம் விலகுவதற்காகவும், அவர்கள் நன்மை தீமைகளை அறிந்து தீமையை விலக்கி நன்மைகளை ஏற்று வாழ்வதற்காகவும் வேதமாகிற தீபத்தையும் அனுக்ர ஹித்தான். ''ஹர்த்தும் தம: ஸதஸதீச விவேக்து மீச: மாநம் ப்ரதீபமிவகாருணிகோ ததாதி'' என்கிற பட்டர் ச்லோகத்தை யும் ''அசிதவிசிஷ்டாநத ப்ரளயே ஜந்தூநவலோக்ய'' என்கிற தேசிகன் வாக்கையும் அனுஸந்தித்தால் இவ்வர்த்தம் ஸ்பஷ்ட மாகும்.

அறியப்படும் பொருள் மேயமென்றும் அறிவதற்கு ஸாதந மானது மாநம் என்றும் வ்யவஹரிக்கப்படுகிறது. மேயத்தில் சிறந்தது ப்ரமேயம். மாநத்தில் சிறந்தது ப்ரமாணம். ப்ரத் யக்ஷாதிகள் மாநங்கள். வேதமே ப்ரமாணம். பகவத் வ்ய திரிக்தமான பதார்த்தங்கள் மேயங்கள். பகவானே ப்ரமே யம். ''வேதாச் சாஸ்த்ரம் பரம் நாஸ்தி நதைவம்கேசவாத் பரம்'' என்கிற ச்லோகமானது வேதத்திற் காட்டில் சிறந்த ப்ரமாணமுமில்லை, கேசவனைக் காட்டிலும் சிறந்த ப்ரமேயமு மில்லை என்கிறது.

இதிஹாஸ புராணங்களின் ஸஹாய மின்றி வேததாத்பர் யத்தை எவனும் உணர முடியாது. இதிஹாஸ புராணங் களில் இதிஹாஸம் சிறந்தது. ஸ்ரீமத் ராமாயணமும் மஹா பாரதமும் இதிஹாஸங்கள். இவைகளில் ந்யாஸோபாஸநாதி ஸர்வ சாஸ்த்ரார்த்த உபப்ரும்ஹணம் என்ற முறையில் ஸ்ரீ மஹா பாரதம் ப்ரதாநம். இதில் அத்யாத்ம பாகம் (ஆத்ம ஸ்ரூபஸ்வபாவாதிகளைச் சொல்லக் கூடிய பாகம்) ப்ரதாநம். அதிலும் ''அத்ரோபநிஷதம் புண்யாம் க்ருஷ்ணத்வைபாயநோ ரப்ரவீத்'' என்னும்படி ஸர்வோபநிஷத்ஸாரமான கீதா சாஸ்த்ரம் ப்ரதாநம்.

பாரதம் ஐந்தாவது வேதம் என்று போற்றப்படுகிறது. இதற்கு உபநிஷத்ஸ்தானத்திலுள்ளது பகவத்கீதை. வேதங்களில் புருஷஸூக்தம் ப்ரதானம். புராணங்களில் விஷ்ணு புராணம் ப்ரதானம். பாரதத்தில் பகவத் கீதை ப்ரதானம், தர்ம சாஸ்த்ரங்களில் மனுதர்மசாஸ்த்ரம் ப்ரதானம் என்றும் கீதை, கங்கை, காயத்ரீ, கோவிந்தன் என்கிற நான்கு பதார்த்தங்கள் ஹ்ருதயத்திலிருந்தால் மறு பிறவி கிடையாது என்றும், ப்ரமாணங்கள் பேசுகின்றன.

நம்மாழ்வார் ''அறிவினில் குறைவில்லா அகல் ஞாலத்தவ ரறிய நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத்தொரு மூர்த்தி'' என்று பகவான் செய்த பேருபகாரத்தைக் கொண்டாடுகிறார்.

அர்ஜுனனுக்கு யுத்தத்தில் உத்ஸாஹத்தை உண்டு பண்ணுவது என்கிற வ்யாஜத்தினால் வேதாந்த ஸாரமாய், பரம புருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதனமாயும் கர்ம ஞான நிஷ்பாத்யமுமான பக்தியோகத்தை உபதேசித்தருளினான். ''பார்த்தம் ப்ரபந்த முத்திச்ய சாஸ்த்ராவதரணம் க்ருதம்'' என்று ஆளவந்தார் அருளிச் செய்தார். ''உத்திச்ய,'' என்கிற பதத்திற்கு ஸ்வாமி தேசிகன் ''வ்யாஜீக்ருத்ய'' என்று பொருள் அருளினார்.

துளியும் கலக்கமில்லாத அர்ஜுனனை ஹ்ருஷீகேசனை (இந்திரியப்ரேரகனை) வாஸுதேவனே கலங்கச் செய்து சோகாவிஷ்டனைப் ப்ரபந்நனை அவனை வ்யாஜமாகக் கொண்டு உபநிஷத்ஸாரமான கீதையை ஸகல லோகோஜ்ஜீவநார்த்தமாக அருளிச் செய்தான். ''ஹ்ருஷீகேசம் ததாவாக்யம்,'' ஏவமுக்தோஹ்ருஷீகேச:'' ''தமுவாசஹ்ருஷீகேச: ப்ரஹஸந்நிவ பாரத'' என்கிற விடங்களில் ஹ்ருஷீகேச சப்தப்ரயோகத்தின் ஸ்வாரஸ்யத்தை ஆராய்ந்தால் இவ்வர்த்தம் ஸ்பஷ்டமாகும். உபநிஷத்துக்கள் பசுக்கள், பால் கறப்பவன் கோபாலன், அர்ஜுனன் கன்றுக்குட்டி, பண்டிதர்கள் போக்தாக்கள், கறக்கப்பட்டதோ கீதையாகிற அமுதம் என்று ப்ரமாணம் பேசுகிறது. அர்ஜுனனைக் கன்றுகச் சொன்ன படியாலேயே அவன் அறிந்த அம்சம் குறைவு என்று ஸ்பஷ்டமாகிறது. உலகானுபவத்திலே கன்று சாப்பிடுகிற பால் ஸ்வல்பம் என்றும் யாவரு மறிந்ததே. நம் ஆசார்யர்கள் தான் பரிபூர்ணமான ஸாரார்த்தங்களை உணர்ந்தவர்கள் என்பது ஸித்தம். ஸ்ரீமந் நாராயணனை பக்தியாகிற உபாயத்தினால்தான் அடைய முடியும் என்பதுதான் கீதாஸாரம். பக்திக்கு ஸாதனங்கள் கர்

ம ஜ்ஞாந வைராக்யங்கள். வைராக்யமானது கர்மயோகத்தி லேயே உள்ளடங்கியிருந்தாலும் தனித்துச் சொன்னது அத னுடைய ப்ராதான்யத்தைத் தெரியப்படுத்துவதற்காக. ''ஸ்வ தர்ம ஜ்ஞாந வைராக்ய ஸாத்ய பக்த்யேக கோசர: நாராயண: பரம்ப்ரஹ்ம கீதாசாஸ்த்ரே ஸமீரித:'' என்று ஆளவந் தாரும், ''கருமமும் ஞாநமும் கொண்டெழும் காதலுக் கோரிலக்கென்று அருமறையுச்சியுள் ஆதரித்தோதும் அரும் பிரமம் திருமகளோடு வரும் திருமாலென்று தானுரைத்தான் தருமமுகந் தநஞ்சயனுக்கு அவன் சாரதியே'' என்று தேசிகன னும் கீதாஸாரம் என்ன வென்பதை விளக்கி அருளிச் செய் தார்கள். ஸ்வாமி தேசிகன் ''திருமகளோடு வரும் திருமால்'' என்று அருளிச் செய்தது உபாஸநத்தில் பகவானைப் போல் பிராட்டிக்கும் உத்தேச்யத்வமுள்ளது என்பதைத் தெரிவிக் கைக்காக. கீதா சாஸ்த்ரம் 18 அத்யாயங் கொண்டது. இது, மூன்று ஷட்கங்களாகப் பிரிக்கப்படுகிறது.

முதல் ஷட்கத்தில் ஜீவஸாக்ஷாத்காரத்திற்கு ஸாதநமான யோகத்தை இலக்காகக் கொண்ட கர்ம யோகஜ்ஞாந யோகங் கள் பேசப்படுகின்றன.

இரண்டாவது ஷட்கத்தில் பரிபூர்ண ப்ரஹ்மாநுபவஸாதந மான பக்தியோகம் பேசப்படுகிறது.

மூன்றுவது ஷட்கத்தில் ப்ரக்ருதி, புருஷன், கார்யப்பரபஞ் சம், ஸர்வேச்வரன், கர்ம, ஜ்ஞாநம், பக்தி என்கிற முன்பு சொல்லப்பட்ட பல விஷயங்கள் மிகத் தெளிவாக விவரித்துக் காட்டப்படுகின்றன.

''நத்வேவாஹம் ஜாது நாஸம்'' என்கிற ச்லோகம் ஆரம் பித்து ''ஸர்வதர்மாந் பரித்யஜ்ய'' என்கிற ச்லோக பர்யந் தம் கீதா சாஸ்த்ரோபதேசம். இதற்கு முன்னுள்ளது உபோக்காதம், மேலுள்ளது பலச்ருதி முதலிய உபதேச சேஷம்.

கீதைக்குப் பல பல வ்யாக்யாநங்கள் இருந்த போதிலும் எம்பெருமானார் அருளிச் செய்த பாஷ்யத்திற்கு ஸமமான ஒரு வ்யாக்யாநத்தைக் காணமுடியாது. ஸ்ரீ தேசிகன் ''காவிரி யுள்ளம் உகந்த பிரான் இடைப்பிள்ளையாகி உரைத்ததுரைக் கும் யதிவரனார்'' என்றும் ''யதிபரிப்ருட: யத்கீதாநாமதர் சயதஞ்ஜஸா நிகம பரிஷந்நே தியாம் ஸம் நிராமயமாசயம்'' என்றும் பாஷ்யத்தின் மேன்மையை விளக்கியருளினார்.

ஸ்ரீபாஷ்யகாரர், கீதார்த்தஸங்க்ரஹம் என்கிற க்ரந்தத்தை இயற்றி அதன் மூலமாக தாம் பாஷ்யம் ஸாதிப்பதற்கு பரமோபகாரம் பண்ணினவராயும் ப்ராசார்யராயும் ஏகலவ்யனுக்கு த்ரோணாசார்யர் போலே தனக்கு ஆசார்யராயுமுள்ள யாமுநாசார்யரை "பகவத் வந்தநம் ஸ்வாத்யம் குருவந்தந பூர்வகம்" என்கிற க்ரமத்தில் முதலில் ஆச்ரயித்து பாஷ்யத்தை உபக்ரமித்தருளிகிறார்.

எம்பெருமானார் த்ருதராஷ்டிரனை ''ஸர்வாத்மநா அந்த:'' என்கிறார். தாயார் செய்த தவறினால் புறக்கண் குருடானாற் போலே அயோக்யர்களான புத்ரர்களிடத்திலுள்ள அபிமானத்தாலே அகக் கண்ணும் குருடாய் விட்டது என்று கருத்து.

துர்யோதனன் ஜயிக்கவேணுமென்கிற எண்ணத்துடன் கேட்டான் என்றருளிச் செய்தது ''மாமகா:'' என்கிற பதத்தின் தாத்பர்யத்தைத் திருவுள்ளத்திற் கொண்டு என்பது அறியத் தக்கது. பாண்டவர்களும் தன்னைச் சேர்ந்தவர்களாக இருக்க, துர்யோதனாதிகளைத் தன்னைச் சேர்ந்தவர்களென்று பிரித்துச் சொன்னதாலேயே அவர்களிடத்திலுள்ள விசேஷாபிமானம் ஸ்பஷ்டமாகிறது. இக் கேள்வியின் கருத்தை உணர்ந்த ஸஞ்சயன் இதற்கு ஸாக்ஷாத்தான பதிலை ''யத்ரயோகேச்வர:'' என்ற ச்லோகத்தால் அருளிச் செய்தான்.

யுத்த பூமியில் திரண்டுள்ள பந்துக்களையும் ஆசார்யர்களையும் பார்த்து இவர்களைக் கொன்றால் மஹத்தான பாபம் வரும்; ஆகையால் யுத்தம் செய்ய முடியாது. பிக்ஷை எடுத்து தேஹயாத்ரையை நடத்துகிறேன். க்ஷத்ரியன் பிச்சை எடுக்கக் கூடாதே, என்றால் ஆசார்யாதிகளைக் கொல்லுவதால் வரக்கூடிய பாபத்தைக் காட்டிலும் பிச்சை எடுப்பதால் வரக் கூடிய பாவம் ஸ்வல்பமாகத்தான் இருக்கும், என்றான் அர்ஜுனன். ஸர்வேச்வரன், "அர்ஜுனா, இது பாபம். இது புண்யம் என்பதை மஹான்களே தெளிவாக உணர முடியாது. அவ்விதமிருக்க, நீ ஏதோ தர்மசாஸ்த்ரம் பேச ஆரம்பித்து விட்டாயே" என்ன, "ஸர்வேச்வர, அடியேன் சிஷ்யன், சரணாகதன். தர்ம நிர்ணயமில்லாதவன், எதைச் செய்தால் எனக்குப் பரம புருஷார்த்தம் கிட்டுமோ அவ்விதமான உபாயத்தை உபதேசித்தருள வேணும்" என்று ப்ரார்த்தித்தான்.

கார்ப்பண்யமாவது ப்ரஹ்மஜ்ஞாநாபாவம். யோவாகார்கி "ஏததக்ஷரம் விதித்வா அஸ்மாத் லோகாத் ப்ரைதி ஸக்ருபண:" என்று உபநிஷத்தானது பரமாத்ம ஜ்ஞாநமில்லாத

வனே க்ருபணன் என்கிறது. ஆகையால் ப்ரஹ்ம ஜ்ஞான மில்லாத அடியேனுக்கு ப்ருஹ்ம ஸ்வரூபாதிகளை உபதேசிக்க வேண்டும் என்று ப்ரார்த்தித்தான் என்பதே ரஹஸ்யார்த்தம்.

பகவான், உடலமழிந்திடும் உள்ளுயிரொன்றழியாது எனைப் போல் என்கிற விஷயத்தை ''நத்வேவாஹம் ஜாதுநாஸம்'' என்றுரம்பித்து பல ச்லோகங்களிலும் தெளிவாக்கிறான். ''நசைவ நபவிஷ்யாம: ஸர்வேவயமத: பரம்'' என்றருளிச் செய்திருப்பதால் இப்பொழுது மாதிரியே மேலும் ஜீவபேதமும் ஜீவேச்வர பேதமும் ஸ்வாபாவிகமாய் நிலையானது என்ற அர்த்தம் தெளிவாகிறது. இதனால் அத்வைதிகள் சொல்லும் வாதம் நிராகரிக்கப்பட்டதாகிறது. தேஹம் வேறு ஆத்மா வேறு என்ற விவேகம் ஏற்பட்டவன் தன்னைப் பாமாத்மசேஷ பூதனாக உணர்ந்தால் அவன் செய்கிற கர்மங்களில் ஒரேவித மான புத்திதான். அதாவது நிஷித்த கர்மம் தவிர எதைச் செய்தாலும் இது பகவதாராதனம், அவனுக்குச் சேஷமான இந்தக் கர்மாவை அவனே அவனைச் சேர்ந்த என்னைக்கொண்டு அவனைச் சேர்ந்த உபகரணங்களால் அவன் ப்ரீதிக்காகவே செய்து கொள்கிறான் என்கிற எண்ணம் இருக்கும். பகவான் கர்மயோகம், ஜ்ஞான யோகம், பக்தி யோகம், ப்ரபத்தி யோகம் என்கிற நான்கு உபாயங்களை உபதேசித்தருளுகிறான்.

கர்மயோகமாவது சாஸ்திரத்தினால் ஜீவன் வேறு ஈச்வரன் வேறு, ஜீவன் பரமாத்ம சேஷபூதன் என்ற ஜ்ஞானம் பிறந்தால் தனக்கு சக்யங்களாய் கர்த்ருத்வத்யாக, மமதாத்யாக, பலத்யாகத்தோடு செய்யப்படும் காம்ய கர்மங்களோடும், நித்ய நைமித்திக கர்மங்களோடும் கூட, ஸநியமமாக ஏற்றுக் கொள்ளப்படும் கர்ம விசேஷம். இதில் உட்பிரிவுகள் ''தைவ மேவாபரே யஜ்ஞம்'' என்று துடங்கிச் சொல்லப்பட்ட தேவார்ச்சன, தபஸ், தீர்த்த, தான, யஜ்ஞாதிகள். ஸ்ரீ ஆள வந்தார் ''கர்மயோக: தப ஸ்தீர்த்த தான யஜ்ஞாதிஸேவநம்'' என்று கர்ம யோகத்தின் அவாந்தரபேதங்களுடன் ஸ்வரூபத்தை நிர்ணயித்தருளினார். இக் கர்மயோகம் ஜ்ஞான யோகத்தை இடையிட்டும் இடையிடாதேயும் ஸபரிகரமான யோகத்தைக் கொண்டு ஆத்மாவலோகந ஸாதன மாகும்.

கர்மயோகம் சித்தசுத்தியை உண்டுபண்ணுகிறது. அதனால் மனோஜயம் ஏற்படுகிறது. பிறகு ஜ்ஞான யோகம். அதனால் யோக மூலமாக ஆத்மஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறது என்கிற க்ரமம் இரண்டாவது அத்யாயத்தில் அருளிச் செய்யப்பட்டுள்ளது. கர்மயோகம் ஜ்ஞானயோக த்வாரா ஆத்ம

ஸாக்ஷாத்காரத்திற்கு ஸாதனமாகிறது என்பதே இரண்டாவது அத்யாயத்தின் தாத்பர்யம். 3, 4, 5 அத்யாயங்கள் கர்ம யோகம், ஜ்ஞாநயோகத்தை இடைவிடாமல், ஸாக்ஷாத்தாகவே யோகமுகத்தாலே ஆத்மஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமாகும் ப்ரகாரம் மிகத் தெளிவாக அருளிச் செய்யப்பட்டுள்ளது. கர்மயோகம் ஸுலபம், அநவதாநத்திற்கு ப்ரஸக்தியில்லாதது. சீக்கிரம் பயனளிக்கக் கூடியது. சிஷ்டஜநவ்யபதேச்யனாய் இருப்பவன் ஜ்ஞாந யோகத்திற்கு அதிகாரியாக இருந்தாலும் லோக ஸங்க்ரஹத்திற்காகக் கர்ம யோகத்தையே செய்ய வேண்டும் என்கிற விஷயங்களை பாஷ்யாதிகளை ஸேவித்துத் தெளிய வேண்டும்.

ஜ்ஞாநயோகமாவது தேஹாதி விலக்ஷணமாய் ஜ்ஞாநஸ்வரூபமுமாய் ஜ்ஞாந குணகனுமாய் அணுவாயுமுள்ள தன் ஸ்வரூபத்தை நிரந்தர சிந்தனம் பண்ணுகை. ஆளவந்தார். ''ஜ்ஞாந யோகோ ஜீதஸ்வாந்தை: பரிசுத்தாத்மநி ஸ்திதி:'' என்று ஜ்ஞாந யோகத்தின் ஸ்வரூபத்தை அருளிச் செய்தார்.

உள்ளிருக்கிற ரத்நம் காண்கைக்குக் கிழிச் சீரை (ரத்நத்தை முடித்துவைத்திருக்கும் பட்டு வஸ்த்ரம்) கண்டாற் போல் கர்மயோகாதிகளால் ஏற்படும் ஆத்மஸாக்ஷாக்காரம் பக்தியோகத்திற்கு அதிகார ஸம்பத்தை உண்டாக்குகிறது. ''அத்யாத்ம யோகாதிகமே தேவம் மத்வா'' என்ற உபநிஷதர்த்தம் இரண்டு ஷட்கங்களாலும் தெளிவாக்கப்படுகிறது. ''அத்யாத்ம யோகாதிகமேந'' என்றதின் அர்த்தம் முதல் ஷட்கத்தாலும் ''தேவம் மத்வா'' என்றதின் அர்த்தம் இரண்டாவது ஷட்கத்தாலும் விசதமாக்கப்படுகிறது. வஸ்த்ரத்தோடு ரத்நத்தை இழந்தவன் மேல் இருக்கிற வஸ்த்ரத்தைக் காணுமல் உள்ளிருக்கிற ரத்நத்தை எவ்விதம் காணமுடியாதோ அவ்விதமே தன்னைக் காணுதவன் அந்தர்யாமியான ரத்நத்தைக் காண்பதற்குத் தகுதியுள்ளவனுகமாட்டான்.

வஸ்த்ரத்தைக் கண்டால் மாத்திரம் ரத்நத்தைக் காணமுடியாது. முடிச்சை அவிழ்த்தால்தான் அதைக் காணமுடியும். அவ்விதமே தன்னைக் கண்டவன் தனக்கந்தர்யாமியான பரமாத்மாவை த்யாநம் செய்ய வேண்டிய முறையில் த்யாநம் செய்தால்தான் பரமனைக் காண முடியும். அங்கு முடிச்சை அவிழ்ப்பது போல் இங்கு பக்தியோகம் பரமாத்ம ஸாக்ஷாத்கார ப்ரதிபந்தகமான பாபங்களைப் போக்கடித்து அவனைக் காண்பதற்குக் காரணமாகிறது. பக்தியோகமாவது மற்றோர் ஆதாரமும், நியந்தாவும், சேஷியு மற்றவனை பகவானுடைய

ஸ்வரூபாதிகளை நிரதிசய ப்ரீதியோடு தைலதாரை போல் அநவரதம் த்யாநிப்பது. மோக்ஷஸாதனங்களான வித்யைகள் முப்பத்திரண்டு. ஏதாவது ஒரு வித்யையை அனுஷ்டிக்க வேண்டும். யாவருக்கும் மோக்ஷமாகிற பலம் துல்யம். உபாஸ்ய குணபேதங்களை ஸ்ரீபாஷ்யாதிகளை ஸேவித்துத் தெளிய வேண்டும்.

''மந்மனுபவமத்பக்: மத்யாஜீமாம் நமஸ்குரு'' என்கிற ச்லோகத்திலுல் பகவான் ஸபரிகரமான பக்தியோகத்தை உபதேசித்தருளினன். ஸ்ரீ ஆளவந்தார் ''பக்தியோக பரைகாந்த ப்ரீத்யா த்யானதிஷ்ண ஸ்திதி:'' என்று பக்தி யோகஸ்வரூபத்தை அருளிச் செய்தார்.

கீதாஸாரம் பக்தியோகம் தான் என்பதை ஆளவந்தார் ''சாஸ்த்ர ஸாரார்த்த உச்யதே'' என்கிற 18-வது அத்யாயத்தின் ஸாரார்த்தங்களை ஸங்க்ரஹிக்கக்கூடிய ச்லோகத்தில் அருளிச் செய்தார். எம்பெருமானரும் ''க்ருத்ஸ்நஸ்ய கீதாசாஸ்த்ரஸ்ய ஸாரார்த்த: பக்தியோக:'' என்று அருளினர். பகவான் அர்ஜுனனுக்கு ஸர்வகுஹ்யதமமாயும் மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் ஸாதநமுமான பக்தியோகத்தை உபதேசித்த வளவில் அவனுடைய முகத்தில் சோகம் இரட்டித்துத் தாண்டவமாடுவதைக் கடாக்ஷித்து ''ஸர்வதர்மாந் பரித்யஜ்ய'' என்று சரம ச்லோகத்தை உபதேசித்தார்.

பக்தியோக ப்ரதிபந்தகங்களான பலபல பாபங்கள் இருக்க, நமக்கு பக்தியோகம் எவ்விதம் ஸம்பவிக்கும்? இந்தப் பாபங்களை, அனுபவித்தாலோ, ப்ராயச் சித்தங்களாலோ தீர்க்க முடியாதே ஜந்மாந்தரஸஹ ஸ்ரேஷ்ண தபோத்யாநஸமாதிபி: நராணம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே பக்தி: ப்ரஜாயதே'' என்றன்றோ சாஸ்திரம் பேசுகிறது. நாம் என் செய்யப் போகிறோம்? என்று சோகாவிஷ்டனான அர்ஜுனன். அவன் சோகம் தவிர்க்கும் ச்ருதிப் பொருளை பகவான் உபதேசித்தான். அர்ஜுந! நீ எவ்விதமான ப்ராய்ச்சித்தமும் பண்ண வேண்டாம். அவைகளைச் செய்யாமற் போனல் பக்தியோக விரோதியான பாபம் எவ்விதம் நாசமடையும்? என்று கவலைப்பட வேண்டாம். என்னை யொருவனையே சரணமாகப்பற்று. அதாவது ''ப்ராயச் சித்தங்களை செய்வதற்கு அடியேன் சக்தியற்றவன். அந்த ப்ராயச்சித்தங்களைச்செய்தால் தேவரீருக்கு எவ்விதமான க்ருபை வருமோ, அதை அகிஞ்சனனான என் விஷயத்தில் இந்த ப்ரார்த்தனையினாலேயே செய்து பக்தியோகம் அடியேனுக்கு ஸம்பவிக்கும்படி செய்ய வேண்டும்,

என்று பரத்தை என்னிடத்தில் ஸமர்ப்பணம் செய். நான் உன்னை பக்தியோக விரோதிகளான எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன். நீ கவலைப்பட வேண்டாம்'' என்பதே சரம ச்லோகார்த்தம், ஸாத்விகத்யாக பரமாகவும் எம்பெருமானார் வ்யாக்யானம் செய்திருக்கிறார். சரமச்லோகம் என்றால் உபதேசத்தின் முடிவைச் சொல்லுகிறது என்று பொருள். உபாயோபதேசத்தில் சேஷமில்லை என்றபடி சரமோபாயமான சரணாகதியைச் சொல்லுவதால் சரமச்லோகம் என்றதும் ஸங்கதமாகும். மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் ஸாதனமான சரணாகதியின் வைபவத்தை கத்யத்திலே அருளிச் செய்தார். கீதாபாஷ்யத்தில் அங்கப்ரபத்தி பரமாகவும் கத்யத்தில் ஸ்வதந்த்ரப்ரபத்தி பரமாகவும் எம்பெருமானாரே வ்யாக்யானம் செய்திருக்கிறபடியால் இரண்டும் அவர் திருவுள்ளம் என்பது ஸ்பஷ்டம். சரணாகதி ஸகல பல ஸாதனமாகையாலே பக்தியைப் போலே மோக்ஷத்தையும் கொடுக்கும் என்பதில் துளியும் ஸந்தேகமில்லை.

சரம ச்லோகத்தில் ஸ்வதந்த்ரப்ரபத்தி ப்ரதிபாதிக்கப்படும் ப்ரகாரத்தை ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம், தாத்பர்ய சந்த்ரிகை, நிக்ஷேபரக்ஷை முதலிய க்ரந்தங்களை ஆசார்யர்களிடத்தில் ஸேவித்துத் தெளிய வேண்டும். வால்மீகிக்கு சோகம் ச்லோகமாகவாயிற்று. இங்கு அர்ஜுனனுடைய சோகம் சரம ச்லோகோபதேசத்திற்குக் காரணமாயிற்று. இதனால் அவன் சோகம் மாத்திரம் அல்ல, ஸகல ஜனங்களுடைய சோகமும் போக்கடிக்கப்பட்டது. இதையே ஸ்வாமி தேசிகன் ''த்ருஷ்டித ஜநதா சோக: ச்லோக: ஸ்வயம் ஸம்ஜாயத'' என்றருளினார்.

ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி ஸகல பிருதாலங்க்ருதரான ஸ்ரீமதாண்டவனின் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்தில் அடியேனுக்கு இவ்விதமான கைங்கர்யத்தை அளித்த கமிட்டியாருக்கு பரிபூர்ணமான க்ருதஜ்ஞதையைத் தெரியப்படுத்துகிறேன்.

ஸ்ரீமதாண்டவனுடைய ஜ்ஞாநானுஷ்டாந வைராக்யங்களை உலகமறியும். பூர்வாச்ரமத்தில் இம் மஹான் நமது ஸம்ப்ரதாயத்திற்குச் செய்த உபகாரங்கள் பலபல. வடகலை ஸம்ப்ரதாயஸ்தர்களும் பகவத் விஷயமறிந்தவர்கள் என்ற நிலை ஸ்வாமியினாலேயே ப்ரகாசப் படுத்தப்பட்டது. ஸ்வாமியினுடைய திருவாக்கே மிகவும் மதுரமானது. உபன்யாஸம் செய்யும் விதம் அநிதர ஸாதாரணமானது. அழகான நேர்மையான த்ருஷ்டாந்தங்களாலே மிகக் கஷ்டமான விஷயத்தையும் எளி

தில் அறிவிக்கக் கூடிய நிலையைப் பல ஸமயங்களில் அடியேன் அனுபவித்திருக்கிறேன். மடம், முநித்ரயம் என்கிற ஸம்ப்ர தாய பேதம் லேசதோபி கிடையாது (இதற்குத் தன் ஸம்ப்ர தாயத்திற் கேற்பட்ட அனுஷ்டாநங்களை விடுபவர் என்று பொருளல்ல. இதர ஸம்ப்ரதாயத்தில் த்வேஷமில்லை என்ற படி). திருநீர் மலையில் எழுந்தருளியிருக்கும் பொழுது அடி யேன் சென்று தண்டம் ஸமர்பித்தேன். அப்பொழுது ஸ்ரீம தாண்டவன் சென்னையில் என்னை ஸ்ரீஸன்னிதி சிஷ்யர்கள் தான் மிகவும் ஆதரித்தார்கள் என்று ஒரு பெரிய கூட்டத்தின் நடு வில் ஸாதித்தாயிற்று. அதற்குக் காரணம் ஸ்வாமியின் திருக் கல்யாண குணங்கள்தான் என்று அடியேன் விண்ணப்பித் தேன். அடியேனுக்கு முதன் முதலில் உபன்யாஸத்தில் ருசியை உண்டுபண்ணினதே ஸ்வாமிதான். ஸ்ரீமதாண்டவன் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து நமது ஸம்ப்ர தாயத்தைத் தழைத்து ஓங்கச் செய்யவேண்டுமென்று அநவர தம் ஸ்ரீரங்கநாத திவ்ய மணிபாதுகைகளைப் ப்ரார்த்திக் கின்றேன்.

ஸ்ரீ:

பழுதற்ற வாழ்வு

(ஸ்ரீகார்யம் சித்ரகூடம்
ஸ்ரீ உப. வே. விஜயராகவாசார்ய ஸ்வாமி)

மனிதன் மனிதனுவது வாழ்வினுலே; வாழ்வு வாழ்வாவது பழுதில்லாமலிருப்பதனுலே. மனிதத் தன்மைக்கு வாழ்வும் பழுதின்மையும் மிக முக்கியமாக ஆயின. தன்னுலே வாழப் பெறுதவன் பிறராலேயே வாழ்ந்தாக வேண்டும். அப் பிறர் களும் பழுதின்றி வாழத் தெரிந்தவர்களாக இருந்தால்தான் இவனையும் வாழ்விக்க முடியும். ஆக இவ்விடம் பிறரென்று உரைப்பது தெய்வத்தையும் அதை உள்ளபடி அறிந்த பெரி யோர்களே ஆவர். அப் பெரியோர்கள் தங்கள் வாழ்வில் இவனுக்கு ஸமயம் வந்தபொழுதெல்லாம் கைதூக்கி, நிலை நிறுத்தி, புற வாழ்விலும், அக வாழ்விலும் நூலாசிரியர் களாகிலும், உரையாசிரியர்களாகிலும், போதகாசிரியர்களா கிலும், ஞானசிரியர்களாகிலும் இருப்பர்கள். அவர்கள் தாங் கள் கண்ட தெய்வத்தை அன்புருவாய், இன்பக் கடலாய், ''எனக்குத் தேனே பாலே கன்னலே அமுதே'' யென்று நினைந்து நைந்து, கரைந்து உருகி நிற்பார்கள். கண்ட இன்ப வெள்ளத்திற்கு வழியான வேதம், இதிஹாஸம், புராணம், ஆன்றோர் வாக்கு முதலியவைகளைக் கொண்டு, தன்னை அடைந் தவர்களுக்கும் பெரியார்க் காட்பக்கால் பெறுத பயனென்ற பயனையும் பருவிப்பர்கள். இந்த நிலையை நாம் கண்டோமே யானுல் இதற்கு உறுதுணையாயிருப்பது ஆன்றோர் வாக்கென் கிற திருவாய்மொழியே. அதில் பழுதற்ற தன்மையும் வாழ்வையும் தெள்ளத் தெளியக் காணலாம். அதாவது, சரணுகதியே வாழ்வு, அவ்வாழ்வே பழுதற்றது. இனி இவ் வாழ்வாருடைய முதல் பிரபந்தமிருந்து கடைசியான திரு வாய்மொழியளவும் பழுதற்றவாழ்வையே சொல்லி முடித்த தாம். முதல் பிரபந்தமான திருவிருத்தத்தில் வாழ்வில் பழு தற்ற தன்மையையும் இரண்டாவது பிரபந்தமான திருவாசி ரியத்தில் ஆழ்வார் வாழ்வின் பரிபூரணத் தன்மையை அடைந் ததையும் மூன்றும் பிரபந்தமான பெரிய திருவந்தாதியில் ஏனத் துருவானவனுடைய சரம சுலோக தாத்பர்யத்தையும்

நான்காம் பிரபந்தமான திருவாய் மொழியில் வாழ்வையும் வாழ்வுக்கு விரோதியான ஊழ்வினையையும் அதற்கு முன்புள்ள தடை நிலைகளையும் களைந்தெறிந்து முன்கூறிய வாழ்வின் தன்மையைப் பரிபூரணமாக அடைந்தார். ஆக மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துரை மார்பினன்றுள் மலர்சூடிய தொல் லருள்மாறன் துணையடிக்கீழான ஸ்ரீ ஆளவந்தாரால் தொகுக்கப் பெற்ற ஸ்தோத்ரரத்நம், சதுச்லோகீ, இவைகளால் திருமாலின் பெருமையும், திருவின் பெருமையையும் தூய துயத்தினுடைய அர்த்தத்தின் சீர்மையையும் சீர்மையான வாழ்வையும் அவ்வாழ்வில் பழுதற்றமையையும் காணலாம்.

அத்துணையடிக் கீழ் வாழ்வையுகக்கும் இராமாநுசனே வென்னில் பூமன்னுமாது பொருந்திய மார்பன் புகழையும் அவனையே எப்பொழுதும் தெளிவுற்ற சிந்தையினாலே திருமந்திரத்வய சரம ச்லோகத்தின் தாத்பர்யத்தைக் காண்பித்தனர். அத் தாத்பர்யமாவது சரணகதியினால் வாழ்வும் பழுதற்ற சரணகதியிலேயாம்.

இவைகளை உள்ளடக்கிய ஸ்தோத்ரங்கள் சரணகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீ வைகுண்ட கத்யங்கள். இனி இதை இயற்றியவர்களான பகவான் ராமாநுஜர், தொல்லுலகில் மன்பல் உயிர்கட்கிறைவன், மாயனென மொழிந்த அன்பன், அனகன் என்று பழுதற்ற தன்மையுள்ளவரென்று போற்றப் பட்டவர். இவ்விடத்தில் அனகன் என்ற சொல் பழுதற்ற நிலையைக் காட்டுகிறது. இந்த அனகன் என்ற சொல் அயோத்தியா காண்டத்தின் துடக்கப் பாசுரத்தில் சத்ருக்னழ்வானுக்கு விசேஷணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பகவான் பாஷ்யகாரருடைய திருவடி நிலைகள் போன்ற ஆழ்வான், பட்டர், இவர்களால் இதே வாழ்வின் உண்மை நல்ல தெளிவான முறையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இரண்டொரு சான்றுகள். ஸ்ரீமந்தெள ஹரிசரணெள ஸமாச்ரயேஹம் ஸ்ரீராமா வரஜ முனீந்த்ரலப்தபோத: என்று பழுதற்ற ஆசார்யனைத்தான் அடைந்ததைக் குறிப்பிட்டது. மற்றொன்று: ராமாநுஜ பதச்சாயா கோவிந்தாஹ்வானபாயிநீ ததாயத்த ஸ்வரூபாஸா ஜீயாந் மத்விச்ரம ஸ்தலீ என்று ஆசார்யனால் வாழ்வின் பரிபூரணதசை காட்டப்பட்டது. இவர்களையே அடியொற்றின மற்றுள்ள ஆசார்யர்களும் ஸ்ரீ பராசரபட்டார்யசா சரணெள ஸம்ச்ரயேமயீ, என்று முன்சொன்னதான அர்த்தத்தையே தெளிவித்தார்கள். குருபரம்பரையினுடைய முடிவில் நிகழ்ந்தவர்களான ஆரண தேசிகனும் தன்னுடைய தென்மொழி, வடமொழி நூல்களில்

இவ் வர்த்தையும் பன் முறை ஏனேயோர்களுடைய நெஞ்சில் நிலை நிறுத்த அருளிச் செய்துள்ளார்கள். அவைகளில் சில வகையானவைகள்.

முதலில், ஆசார்யனுடைய பழுதின்மை சொல்லப்படுகிறது.

யஸ்மாத் அஸ்மாபி: ஏதத்யதிபதி
கதித ப்ராக்தன ப்ரக்ரியோத்வது கர்ம ப்ரஹ்மா
வமர்சப்ரசம பகுபலம் ஸார்த்தம் அக்ராஹி சாஸ்த்ரம் |
தம் விஷ்வக் பேத வித்யாஸ்திதிபத
விஷய ஸ்தேயபூதம் ப்ரபூதம் வந்தேய
ஆத்ரேய ராமாநுஜ குரும்வாதி ஹம்ஸாம் புவாஹம் ||

என்று பழுதின்மை சொல்லப்பட்டது. இதையே மறுமுறையும் ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே ஸ்திரதியமநகம் என்றும், தனக்கு அவ்வாசார்யனால் உபதேசிக்கப்பட்ட மந்திரத்திலும் பழுதின்மையைக் காட்ட, அங்கேஷு ஆனந்த முக்யச்ருதிசிகரமிளத்தண்டகம் கண்ட பூர்வம் ப்ராகேவாப்யஸ்ய ஷட்ஸு ப்ரதிதிசமநகம், என்றும் அந்த மந்திரத்தின் தேவதையை ஆவிர்பூயாத நகமஹிமா, என்றும் அநகஸ்மித சீதளோரஸௌமாம் என்றும் அந்த தேவதையினுடைய அடியார்களில் நடுநாயகமான எம்பெருமானுருடைய அடியார்களே ''அபிகம்ய ஸம்யக் அநகாஸ்ஸுமேதஸ: யதிசக்ரவர்த்தி பதபத்ம பத்தநம் ஹரிபக்த தாஸ்யரஸிகா: பரஸ்பரம் க்ரயவிக்ரயார்ஹ தசயாஸமிந்ததே'' என்று பழுதின்மையையும் வாழ்ச்சியின் பரிபூர்ண தசையையும், இவையே காலமெல்லாம் நடக்கும்படியையும், பிரார்த்தித்தார்கள். இனி வடமொழி வல்லுநர் முறையிலிருந்து இனிய மொழி முறையில் பார்த்தாலும் பெரியாழ்வார், ''ஆதியான் அடியாரையும் அடிமையின்றித் திரிவாரையும், சொல்லிப் பேசின பாசுரங்களில் குற்றமின்றிக் குணம் பெருக்கி, குருக்களநுகூலராய், என்று முன்சொன்ன நிறைவு ஏற்பட்டது.

ஆண்டாள் : பழுதின்றிப் பார்க்கடல், வண்ணனுக்கேப் பணி செய்து வாழப் பெறுவிடில் என்றும், அறிவொன்றுமிலாத ஆய்க் குலத்து உந்தன்னைப் பிறவி பெறுந்தன்னைப் புண்ணியம் யாமுடையோம் என்றதும் தன் ஆசார்ய ஸம்பந்தத்தாலே என்பதை செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த, மெய்ம்மைப் பெருவார்த்தை, விட்டுசித்தர் கேட்டிருப்பரென்றும் பழுதின்மையையும், வாழ்ச்சியின் நிறைவையும் உணர்த்தினர்கள்.

குலசேகராழ்வார் : வன்பெருவானகமுய்ய, மண்ணுய்ய, மண்ணுலகில் மனுசருய்ய, துன்ப மிகுதுயரகல, அயர் வொன்றுமில்லாச் சுகம் வளர அகமகிழும் தொண்டர் வாழ, பழுதின்மையையும், வாழ்ச்சியின் முதிர்ச்சியும் அநுபவிக் கப்பட்டன.

திருமழிசைபிரான் : இனி அறிந்தேன், ஈசற்கும், நான்முகற் கும் தெய்வம் இனி அறிந்தேன். எம்பெருமானுன்னே யென் றும், அற்ற பத்தர் சுற்றி வாழும் என்ற வாழ்ச்சியின் நிலை நின்ற நிலமை சொல்லப்பட்டன.

தொண்டரப்பொடி ஆழ்வார் : ''மேம் பொருள் போகவிட்டு மெய்மையை மிகவுணர்ந்து'' உன் கடைத்தலையிருந்து வாழும் சோம்பரை உகத்திபோலும் என்று த்வயாநு ஸந்தானத்திலேயே வாழ்வின் பலமும், முதிர்ச்சியும் அநு பவிக்கப்பட்டன.

திருப்பாணழ்வார் : காட்டவே கண்டபாதம் பாட்டிலில் கண்டு வாழும் பாணர்தாள் பரவினமே, என்று அரங்கத் தின்னமுத வெள்ளத்தை நேர் நின்று அநுபவித்து அந்த அமுதிலேயே அடங்கியவர் சொல் வாழ்வின் பயனின் முழுமை.

திருமங்கையாழ்வார் :...ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளை உணர்விலில் தெரிந்து, தெரிவித்து பாசுரங்கள் பல கால் பாடி கடைசியில் தொல்லைப் பழவினையை முதலரிய வல்லார்தாமே. பழுதின்மையினுடைய முழுமையையும், வாழ்ச்சியின் வளர்ச்சியின் வளத்தையும் சொன்னர். முதலாழ்வார்களும் மூன்று திருவந்தாதிகளிலும் முதல், கடைப் பாட்டுகளாலே இவ் வர்த்தத்தையே உறுதியாக்கினர்கள்.

மதுரகவிகள் : இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும் பேற்றில் இகழாத பல்லுறவில் அருமறைகள் தமிழ் செய் தான் தாளே கொண்டு. துன்பற்ற மதுரகவி என்று தலைப்பில் கூறிய ராமாயண மஹாபுருஷன் சத்ருக்னழ்வானுடைய நிலை யிலேலே பழுதின்மையும் வாழ்ச்சியின் உயர்வும் தெரிவிக்கப் பட்டது.

அவரைப் பின்பற்றிய அடுதனர் : 'பூமன்னுமாது சரணரவிந்தம் நாம் மன்னிவாழ' என்கிற பாசுரத்திலில் வாழ்ச்சியின் சிகரமான அநுபவம் ஆசார்ய குண கைங்கர்ய நிஷ்டர்களுக்கென்று நிர்ணயிக்கப்பட்டது.

மறைமுடித் தேசிகன் : குருவுடன் வந்த செழுமடிபோல் என்று இவ்வாத்மா மருக்கழற்றின கௌஸ்துபம் போலே, ஸ்ரீவத்ஸ மருவிலே பெருமாள் இதயத்திலே வாழவேண்டிய வாழ்வையும் குணுபவமென்று நாலாயிரமும் அடியோங்கள் வாழ்வே வாழ்வென்றும் அவ்வாழ்வு மறுமையிலும் பல்லாண்டும் பல்லாண்டென்று பாடுவோமே என்று பரமபதஸோபான மாக அமைந்தது.

குமாரதேசிகன் : மாமலர் மல்லிய என்று ஆரம்பித்த இது பூ மன்னுமாது பொருந்திய மாயனைக் காட்டிலும் தொண்டருக்கும் துணையடி வாழி யென்று தொல்லருள்மாறன் வாழ்வையுகக்கும் ராமாநுச முனி வெண்மை போற்றும் சீர்மையன் எங்கள் தூப்பில் பிள்ளைபாதமதான ஸ்ரீவைஷ்ணவர்கள் திறத்திலே அடிமை செய்து வாழ்வதே வாழ்வென்று பழுதின்றி நின்றநிலை.

இனி ஸம்ப்ரதாயப் பிரவர்த்தகர்களான திருக்குடந்தை தேசிகன் அகில புவன ரக்ஷா ஸாதனுயாவதீர்ணை, என்கிற ச்லோகத்திலுலே சுத்த ஸம்ப்ரதாயத்தில் பழுதின்றி நம்மை வைக்கிறவர்கள், வைப்பதற்கும் பாடுபவர்கள் என்பதை, ''குமதி கலிவிலாஸ த்வாந்த திக்மாம் சு ஜாலே'' என்கிற பாதத்திலுலே முன்னிருந்த ஆசார்யர்களிலுலே ஒருவாறு குமதிகளுடைய தாற்பர்யங்கள் நிலைக்காமல் துறத்தியடிக்கப் பட்டபோதிலும் கலிவிலாஸமான, அதாவது ஸம்ப்ரதாய விருத்தங்களான அர்த்தங்களைச் சொல்லுபவர்களாகிற இருட்டைப் போக்கடிக்கிறவர் எப்படி எம்பெருமானாரோ அப்படியே இவரும். ''புண்யாம்போ ஜவிகாஸாய ப்ராபத்வாந்த க்ஷயாயச'' என்கிறது. கலிவிலாஸத்வாந்ததிக்மாம் சுஜால''மாக நின்றது என்று உரைக்கப்படுகிறது.

இனி, திருக்குடந்தை தேசிகனுடைய நேர் வழியான ஆசார்யர்களில் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் (பெரியாண்டவன்) ஆச்ரயித்த ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகனும் பழுதின்றி நிறை நிலையும் வாழ்ச்சியின் சிகரத்தைக் காண்பித்தவர்களாவார்கள். முறையே ஸ்ரீமத் கோபாலஸூரே: ஸ்ரீமச் ஸ்ரீவாஸராமாநுஜ முனிமநகம் தம்பஜே தேசிகேந்த்ரம்' என பதில் வாழ்ச்சியில் பழுதற்றமையையும் ஸ்ரீரங்கேசபதே ஸமர்ப்பிதபரம் ஸ்ரீ ஸ்ரீவாஸமுனீந்த்ர தேசிக மணிம்ச்ரேயோ நிதிம் ஸம்ச்ரேயோ'' என்கிற பாதத்தில் ச்ரேயோநிதிம் என்பதனால் வாழ்ச்சியின் பரிபூர்ண நிலைமை காட்டப் பட்டது.

இனி மூன்று ஆசார்யர்கள்: ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் (ஆக்கூர் ஆண்டவன்) ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ யதிந்ருபதே: வந்தே ஸ்ரீவாஸ யோகீச்வர குருமநகம் வத்ஸலம் பவ்ய சீலம். இதில் அநகம், வத்ஸலம், பவ்ய சீலம் என்கிற மூன்று பதங்களிலேலே பழுதற்றவர்கள் ஆசார்யர்கள் என்பதும், பழுதுள்ளவர்களான இவ்வாத்மாக்களை வாழவைப்பவர்கள் என்பதையும் அம் மூன்று பதங்களிலேலே காட்டப்பட்டது.

இனி, ரங்கநாத மஹா தேசிகன்: தென்பரை ஆண்டவன். ஸ்ரீமத் வேதவதம்ஸ லக்ஷ்மணமுனே: வந்தே சாந்தி விரக்த பூர்ணமநகம் ஸ்ரீரங்கநாதம் குரும்'' இதில் சாந்தி, விரக்தி பூர்ணம், அநகம், குரும் என்கிற மூன்று பதங்களிலேலும் முறையே பழுதின்மையும், வாழ்ச்சியை யடைய உபாயமும், வாழ்ச்சியின் பரிபூர்ண நிலையும் உணரப்பட்டது.

இனி வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்: திருக்குடந்தை ஆண்டவன். ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ முனிகருணை

ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ முனிம பரம் ஸம்ச்ரயே தேசிகேந்த்ரம் இதில் ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜமுநிம் அபரம் தேசிகேந்த்ரம் என்கிற மூன்று பதங்களிலேல் முறையே ஸாக்ஷாத் ஸ்வாமியினுடைய வாக் வைபவமும், முனித்ரயத்தின் முதல்வரான வழுத்தூர் ஆண்டவனுடைய ஸம்ப்ரதாய ஸ்தாபகதையும் பரமலோகோஜ்ஜீவகர்களான தேரழுந்தூர் ஆண்டவனுடைய மனமும் சொல்லும், செயலும் தனித் தனியே விளங்கி, பழுதின்மையான வாழ்ச்சியின் சிகரத்தை அடைய வேண்டிய நிலை உணரப்பட்டது.

ஸ்ரீ:

கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே

(ஸ்ரீ உப. வே. கோமடம் S. S. ஐயங்கரர் ஸ்வாமி)

இது ஸ்வாமி தேசிகன் விஷயமாய் அவருடைய திருக்குமாரரான தூப்புல் நைனராசார்யர் அருளிச் செய்த வாழித் திருநாமத்தில் நாலாவது அடியாயிருக்கும். எட்டடியான பாட்டின் நடு மத்தியாகையால் இப் பாட்டின் நடுநாயகமாய் இருக்கும் இந்த அடி ப்ரபந்தங்களின் நடுமத்தியில் அதன் ஸாரமான அம்சத்தை நிரூபிப்பது என்பது ஒரு மரபு. கீதையில் 18 அத்யாயங்கள் உள. அவற்றில் அத்யாயத்தின் இறுதியில் 'மந்மநாமத்பக்தோ' என்று கீதையின் ஸாரமான அர்த்தமும், 30 பாட்டுக்கள் அடங்கிய திருப்பாவையில் 15-ம் பாட்டில் பாகவதர்களின் ப்ரபாவமும், 32 அதிகாரங்கள் கொண்ட ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் 16 அதிகாரத்தில் புருஷார்த்தகாஷ்டையும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆழ்வார் தாமும் தம்முடைய திருவாய் மொழியின் நடுமத்தியான 5ம் பத்து 10ம் திருவாய் மொழியில்

''நாகணைமிசை நம்பிரான் சரணே சரண்நமக்கு
என்று நாள்தொறும் ஏகசிந்தையனாய்''

என்று ப்ரபத்தியின் ப்ரபாவத்தை வெளியிட்டிருக்கிறார். இவற்றைப் போல் இந்த நாலாம் அடியும் இப் பாட்டின் ஸாரமான அம்சத்தைக் கூறுநிற்கும்.

இப் பாட்டிற்கு வ்யாக்யானமிட்ட ஸ்ரீவாத்ஸ்யாஹோபிலாசார்யர் இந்த அடிக்கு 'கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன்' என்றது கலியன் உரையான நம் சப்தார்த்தமான திருமொழி சரணாகதி ப்ரதிபாதகமாகையினால் அத்திருமொழி ப்ரதிபாத்யமான ந்யாஸவித்தையில் குடிகொண்ட நெஞ்சினரானவர் என்றபடி'' என்று அருளிச் செய்திருக்கிறார். 'ப்ரபதநகலா ஜந்மஜலதி:' என்று இவர் பெருமை பேசப்

பட்டதிறே. இந்த அடியின் விசேஷார்த்தங்கள் மேலே நிரூபிக்கப் படுகின்றன.

கலியன் திருமங்கையாழ்வார், கலியை த்வம்ஸம் செய்த படியினால் அவருக்கு இத் திருநாமம். உரை: உக்திகள், அதாவது அவர் ப்ரத்யக்ஷீகரித்து வெளியிட்டவைகளான பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் எனப்படும் ஆறு ப்ரபந்தங்கள். குடிகொண்ட இவைகள்: எப் பொழுதும் தம்முடைய மனத்தில் ஸ்திர ப்ரதிஷ்டிதமாயிருக் கப் பெற்ற கருத்துடையோன்: திருவுள்ளத்தை யுடையவ ரான தேசிகன், வாழியே: இன்னும் ஒரு நூற்றாண்டிரும் என்று பதார்த்தமாகும். 'கலியன் உரை கருத்து குடிகொண்டோன்' என்றும், அந்வயிக்கலாம். திருமங்கை யாழ்வாருடைய ஸ்ரீ ஸூக்திகளின் தாத்பர்யார்த்தங்களை ஸ்திரமாக இருக்கப் பெற்றவர் என்ற தாயிற்று. கலியனுடைய ஸ்ரீ ஸூக்திகளி லுள்ள உரை என்று ஏதாவது ஒரு பங்கியை மட்டும் விசேஷித்து, அதைக் குடிகொண்டவன் என்று பொருள் கூற லாம். அறிவு தரும் பெரிய திருமொழியிலுள்ள பாட்டுக்கள் பலவற்றை எடுத்து அவை ஒவ்வொன்றின் அர்த்தத்திலும் குடிகொண்டவர் என்று கூறினாலும் மிகையாகாது. இப்படி நிரூபிக்கப்புக்கால் 'பன்னியுரைக்கில் பாரதமாம்' என்கிற நிலை உண்டாகும். ஆனாலும் ஸ்வாமி தேசிகன் பரதேவதா பாரமார்த்யாதிகாரத்தில் முதல் சுலோகத்தில் 'மநுவ்யாஸ முக்யோக்திபிச்ச' என்று அநுஸந்தித்திருப்பதற்கு நம் பூர்வர்கள் மநுவ்யாஸர் முதலிய ப்ரமுகர்களின் உக்தி களினாலும் என்றும், அவர்கள் முக்கியமான உக்திகளினாலும் என்று இரண்டு விதமாக அர்த்தம் கொண்டாப் போலே இங்கும் கலியனுரை என்பதற்கு திருமங்கை யாழ்வாருடைய உக்திகளில் ப்ரதானமானது என்று பொருள் கொள்ளுவது உசிதம்.

ஆழ்வார்கள் பன்னிருவர்களுடைய ப்ரபந்தங்கள் எல்லாம் நமக்கு உத்தேசியமானாலும் அவர்களில் பராங்குச பரகாலர் களை ஸ்வாமி தேசிகன் விசேஷித்துப் பஹுமானித்துக் கூறி யிருக்கிறார். 'பராங்குச பரகால ப்ரபந்தங்களிலே' என் றிறே ஸ்வாமியின் அநுஸந்தானம். ப்ரபந்தஸாரத்தில் நிரூ பிக்கும் பொழுதும் இவர்கள் இருவரை மட்டும் இவர்க ளுடைய ஸ்ரீஸூக்திகளை முன்னிட்டுக் கொண்டு ஸ்தோத்தரித் திருக்கிறார்.

'ஐயன் அருட்கலியன்' என்றும், 'வையமெலாம் மறை விளங்கவான் வேல் ஏந்தும் மங்கையர்கோன்' என்றும் 'அறிவு தரும் பெரிய திருமொழி' என்றும் கலியனுடைய ப்ரபாவத் தைப் போற்றியிருக்கிறார்.

அறிவுதரும் என்றதினால் மோக்ஷத்திற்கு உபயுக்தமான அர்த்தத்தை வெளியிடுகிற நம: சப்தத்தின் அர்த்த விவரண மாகையினால் திருமொழி அறிவு: ஞானத்தைக் கொடுக்கும் ப்ரபந்தமாயிற்று என்பது ஸ்வாமியின் திருவுள்ளம். அவருடைய உரையில் மிகவும் ஸாரமான ஒரு பாட்டின் அர்த்தத்தில் குடிகொண்டவர் என்று இங்கு நிரூபிக்கப்படப் போகிறது.

திருமங்கை யாழ்வாரின் ப்ரபாவத்தைப் பேசும்பொழுது ஸ்வாமி தேசிகன் அவர் விஷயமாய் 'ஸர்வேசுவரன் பக்கலிலே ஸர்வார்த்தக்ரஹணம்பண்ணின ஆழ்வார்' என்றும் 'இம்மந்தி ரத்தை திருமங்கையாழ்வாருக்கு ஸர்வேசுவரன் தானே உப தேசித்தான்' என்றும், 'இம்மந்திரத்திற்குத் த்ரஷ்டாவுமாய் தேவதையுமான வன்பக்கலிலே இத்தை ஸார்த்தமாகப் பெற்ற திருமங்கையாழ்வார்' என்றும் அநுஸந்தித்துள்ளார்.

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த கலியனுடைய உரை யில் ப்ரதானமானது எது என்று ஸ்வாமி திருவுள்ளம் பற்றி யது என்னில்?

மற்றுமோர் தெய்வமுளதென்று இருப்பாரோடு
உற்றிலேன்' உற்றதும் உன்னடியார்க்கடிமை'
மற்றெல்லாம் பேசிலும் நின்திருவெட்டெழுத்தும்
கற்று நான்' கணபுரத்துறை யம்மானே

என்பது.

இதில் ஆழ்வார் ஸ்பஷ்டமாக உன்திருவெட்டெழுத்தும் நான் கற்று அறிந்து கொண்டதின் ஸாராம்சம் எது என்னில்:

வேறு ஒரு தெய்வம் இருக்கிறது என்று நினைப்பாருடன் கூட நான் ஒருவித ஸம்பந்தமும் வைத்துக்கொள்ள மாட்டேன். நான் ஸம்பந்தம் வைத்துக்கொண்டதும் பகவானுடைய தாஸர்களுக்குத் தொண்டு பூண்டுதல் என்று பகவானிடமே விண்ணப்பம் செய்தார். இதுதான் அவருடைய உரை. இதில் கருத்துடையவர் தேசிகன். அதாவது தம்முடைய

ஸ்ரீ ஸூக்திகளி லெல்லாம் இந்த அம்சத்தையே ப்ரதாநமாக நிரூபித்துக் காட்டியிருக்கிறார். பரதேவதாபாரமார்த்யாதி காரத்தில். 'இந்தப் பரதேவதா பாரமார்த்யத்தைத் திருமந்திரத்திலே கண்டு ததீயபர்யந்தமாகப் பகவச் சேஷத்வம் ப்ரதிஷ்டிதமானபடியை' 'மற்றுமோர் தெய்வமுளது என்றிருப்பாரோடு உற்றிலேன் உற்றதும் உன்னடியார்க்கடிமை' என்கிற பாட்டிலே ஸர்வேசுவரன் பக்கலிலே ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணின ஆழ்வார் அருளிச் செய்தார்' என்று கூட அருளிச் செய்திருக்கிறார். இந்தப் பாட்டைத் தம்முடைய ரஹஸ்யங்களில் பல இடங்களில் உதாஹரித்திருக்கிறபடியினால் இந்த உரையே ஸ்வாமியின் திருவுள்ளத்தில் ஸுப்ரதிஷ்டிதமாயிருந்தது என்று ஏற்படுகிறது. ததீய பர்யந்த தேவதாந்தர பரித்யாகமும், ததீயபர்யந்த பகவத்பக்தஸம்சிலேஷமுமே நாம் ப்ரதானமாய் அநுஷ்டிக்க வேண்டிய அம்சம் என்று ஆழ்வார் திருவுள்ளம். இந்த உரையின் கருத்தைக் குடிகொண்டவராகையினால் தம்முடைய சரமப்ரந்தமான ஸ்ரீ விரோத பரிஹாரத்தில் 38ம் வாக்யத்தில் தேவதாந்தரத்தைக் குறித்துத் தண்டுல ப்ரதாநம் பண்ணினாலும், சக்யமாயிருக்க பகவத் விஷயத்தில் தண்டுல ப்ரதாநாதிகளையும் கூடத்தவிரிலும் ஆசார்யன் அத்யந்தப் பரித்யாஜ்யன் என்கிற இவ்வர்த்தம் அதிவாத மாமித்தனை யன்றே' என்று ஆக்ஷேபித்துக்கொண்டு இது அதிவாதமில்லை, இதுவே ஸர்வ சாஸ்த்ரார்த்த ஸாரம் என்று உபபாதித்தருளி இருக்கிறார்.

ப்ரபந்நர்களுக்கு ஓர் ஸைலக்ய ரஸாயனத்தை விதித்தருளும் இடத்திலும் கீழ்க்கூறிய கலியன் உரையைத்தான் ஸங்க்ரஹித்துள்ளார்.

உபயுக்தேஷு வைசத்யம் த்ரிவர்க்கநிரபேக்ஷதா
கரணத்ரய ஸாரூப்யம் இதிஸைலக்ய ரஸாயனம்'

உபயுக்தேஷு வைசத்யம் : மற்றுமோர் தெய்வமுளது என்றிருப்பாரோடு உற்றிலேன் என்கிற தீர்ந்த ஜ்ஞாநம்.

த்ரிவர்க்கநிரபேக்ஷதா : உற்றது உன்னடியார்க் கடிமை.

கரணத்ரயஸாரூப்யம் : மற்றெல்லாம் பேசிலும் இத்யாதி

ஆகையினால் மற்ற எந்தவிதமான குறைகள் நமக்கு இருந்தபோதிலும் அவை அவ்வளவு பாதகமானவையல்ல. இங்கு

கூறப்பட்ட இரண்டு அம்சத்தையும் நாம் எல்லா அவஸ்தை யிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஸ்வாமி உபதேசித்துப் போந்திருப்பதை நாம் அவசியம் நம்முடைய அனுஷ்டானத் தில் கொண்டுவர வேண்டும். இதை நிறைவேற்றி வைக்கும் படி அத்தூப்பில் மாபூருடனேயே ப்ரார்த்திக்கும்.

தூப்புல் வள்ளல் தொண்டர் தொண்டன்

ஸ்ரீ:

ஸிம் ஹீ ஸ் தங் யம்

(சாஸ்திரரத்னகர, ஸ்ரீகோழியாலம்
ஸ்ரீ உப. வே. சடகோபாசாரியர் ஸ்வாமி, திருப்பதி)

''ஸாரம் ஸாரஸ்வதாணும் சடரிபு பணிதி:'' என்று ஸ்ரீதேசிகனுடைய ஸித்தாந்தம். அதாவது ஸாரஸ்வதம் என்று சொல்லக்கூடிய எல்லா வாங்க்மயங்களுக்குள்ளேயும் ஸ்ரீநம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்தி மிகவும் ஸாரதமமானது என்பதேயாம்.

ப்ரமாணங்களில் ச்ரேஷ்டமான வேதாந்தமெனப்படும் உபநிஷத்துக்களின் பொருளும், அவைகளிலும் உத்க்ருஷ்டமான ரஹஸ்யத்ரயத்தின் பொருளும், அபரிமிதமான பகவதனுபவமும், உலக முய்யுமாறமைந்த பல உபதேசரத்தினங்களும், இன்னும் வாசாம கோசரமான பல விசேஷங்களும் இந்த நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தியிலன்றே பொதிந்துகிடப்பது. இப்படி அர்த்தத்தில் மாத்திரமின்றி சப்தவிஷயத்திலும் ''பாட்டே கேயேச மதுரம்'' என்கிற கணக்கிலே செவிக்கினிய செஞ்சொற்களால் அது அமைந்திருப்பது பொற்றூமரை வாஸனையுடன் அமைந்ததற்கொப்பன்றே.

ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும், தன்னால் பிறருக்கு மனோவாக்காயங்களால் யாதொரு தொந்தரவுமுண்டாகாமல் சுகமாய் இஹலோகத்தில் வாழ்ந்து, இச் சரீரம் கழிந்த பின்பும் ஆத்மா உள்ளவளவும் பரமானந்தம் அனுபவிப்பதற்கு வகை செய்து கொடுப்பது நம் ஸம்ப்ரதாயமே. ப்ரபஞ்சத்திலுள்ள எல்லா சேதனசேதன வஸ்துக்களிலும் பரமாத்மா என்கிற ஸ்ரீமந் நாராயணன் அந்தராத்மாவாக இருந்து அச்சேதன சேதனங்களுடைய செயல்களை அததனுடைய கர்மானுகுணமாய்ச் செய்து வைக்கிறன். இதில் அச்சேதன சேதனங்கள் ஸ்வதந்திரரல்லர் என்கிற ஸித்தாந்தத்திற்கு அடிப்படையான ப்ரபஞ்சத்திற்கும் அப்பரமாத்மாவுக்குமுள்ள சரீராத்மபாவஸம்பந்தம் (உடலுமுயிருமாயிருக்கை) ஒவ்வொருவருடைய மனதிலும் தன் செயல் வரையில் வருமளவு நன்றாகப்

பதிந்துவிட்டால், பிறரிடத்தில் க்ரோதாதிகள் ஏற்படுவதற்கு அவகாசமே இல்லையாதலால் அவன் வாழ்நாள் முழுவதும் சாந்தனுகவே வாழலாம். இப்படி மனது காமக்ரோதாதிகளுக்கு ஆஸ்பதமாகாத போது பகவத்தியானம் அம் மனதில் நன்முக வேரூன்றி அதுவழியாய்ப் பரம புருஷார்த்தமான மோக்ஷத்தை அடையலாம் என்கிற ஸித்தாந்தம் ''ஸர்வம் கல்விதம்ப்ரஹ்ம சாந்த உபாஸீத'' என்றிது முதலான உபநிஷத் வாக்யங்களால் ஸ்பஷ்டமாக ப்ரதிபாதிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சரீராத்மபாவ ஸம்பந்தமே தத்வ விஷயத்தில் நாம் அறிய வேண்டியவைகளில் ப்ரதானமானது.

இப்படியே பரம புருஷார்த்தம் எனப்படும் மோக்ஷத்தைப் பெறுவதற்கு உபாயமான ஹிதமெனப்படும் விஷயத்திலும், பக்தியோகமெனப்படும் உபாயத்தை அநுஷ்டிப்பதற்கு சக்தியில்லாத நம்போன்றவர்கள் அநுஷ்டிப்பதற்குத் தகுந்தது 'ப்ரபத்தி' என்கிற உபாயமே. இவ்வுபாயம், பக்தி யோகம் போலன்றிக்கே அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைத்துலகமும் அனுஷ்டித்துப் பேறுபெறத் தகுந்ததாயமைந்துள்ளது என்பதும் நாம் முக்கியமாய்த் தெரிந்து கொள்ள வேண்டியது.

இப்படியே, புருஷார்த்தம் எனப்படும் (பரம புருஷார்த்தம்) மோக்ஷ விஷயத்திலும், மோக்ஷமாவது வைகுண்டம் எனப்படும் அப்ராகிருதமான லோகத்தில் ஸர்வதா ஸர்வகல்யாண குணவிபூத்யாதி விசிஷ்டனுனபகவானை (ஸ்ரீமந்நாராயணனை) அநுபவிப்பதும் அதன் பரிவாஹரூபமாய் அந்த பகவானுக்கும் அவனடியார்களுக்கும் தொண்டு செய்வதே என்பதும் நாம் முக்கியமாய் அறியத்தக்கதாகும்.

கீழ்க் கூறியபடி பகவானிடத்தில் மோக்ஷத்திற்காக ப்ரபத்தி பண்ணினவன் இந்த லோகத்தில் உள்ள வரையில், அவ்வோ திவ்யதேசங்களில் ஸேவை ஸாதிக்கும் பகவத்திவ்யமங்கள விக்ரஹங்களை (அர்ச்சா மூர்த்திகளை) ஸேவிப்பதும் பகவானுடைய பெருமைகளைப் பேசும் பூர்வாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளை (அதிகாரமுண்டாகில்) பிறர்களுக்கு உபதேசிப்பதும் வியாக்யானிப்பதும் இப்படிப்பட்ட தனக்கும் பிறருக்கும் க்ஷேமத்தை வழங்கக் கூடிய நற்செயல்களால் நற்பொழுது போக்குவதே செய்யவேண்டிய முக்கியமான க்ருத்யம்.

ஆக இப்படிப்பட்ட மிக உயர்ந்த ஸித்தாந்தார்த்தங்களே நம் நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளிலும் அநுஷ்டானத்திலும் நிறைந்துள்ளன.

இவ்விதமாக தத்வஹித புருஷார்த்தங்களில் நாம் அறிய வேண்டிய ஸாரதமமான அர்த்தங்கள் ஸிம்ஹீஸ்தந்யம் போன்றவை என்று ஸ்ரீதேசிகன் ஸாதித்துள்ளார். அதாவது ஸிம்ஹஸ்திரீயினுடைய ஸ்தந்யத்தின் ருசி அந்த ஸிம்ஹக்குட்டிக்கல்லாது விஜாதீயமான மற்றொரு ஜந்துவிற்குத் தெரியாததும் தெரிந்துக் கொள்ள முடியாததுமன்றே. அதுபோல்—

''ஸர்வதேச தசாகாலே ஷ்வ்யாஹருத பராக்ரமா
ராமானுஜார்ய திவ்யாக்ஞா வர்ததாம் அபிவர்த்ததாம்
ராமானுஜார்ய திவ்யாக்ஞா ப்ரதிவாஸரமுஜ்வலா
திகந்த வ்யாபினி பூயாத் ஸாஹிலோக ஹிதைஷிணி,''

என்று பெரியோர்கள் கொண்டாடும்படி ஸர்வதேசஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வலோகத்திலுள்ளவர்களுக்கும் ஹிதத்தையே விளைவிக்கவல்ல ஸ்ரீராமானுஜார்யதிவ்யாஜ்ஞை எனப்படும் ஸ்ரீநம்மாழ்வார் மூலமாய் ப்ரவிருத்தமான ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸம்ப்ரதாயத்தின் ரஸம், ப்ரபன்ன ஸந்தான கூடஸ்தர் என்றும் ஆத்யகுலபதி என்றும் கொண்டாடப்படும் அவ்வாழ்வாருடைய ஸம்ப்ரதாயத்தில் அந்வயம் ஏற்பட அநுகூலமான மஹாபாக்யம் பண்ணினவர்களுக்கே தெரியும். இவ்வளவால் தீர்ந்த விஷயமாவது— அநுபவத்திற்கு மிகமிக முக்கியமானது ப்ரமாணச்ரேஷ்டமான ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள். ப்ரமேயத்தில் முக்கியமானது அர்ச்சாவதாரங்கள் என்பதே யாம். இவை ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் நிர்விவாதமாய் இசைந்தவைகள். நிற்க—

தத்காலம் ஸ்ரீரங்கம் பெரியாண்டவன் ஆச்ரமத்தில் ஆசார்ய பீடத்தில் மூர்த்தா பிஷிக்த்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யேத்யாதி பிருதாலங்கிருதராயும் ''ஸ்ரீ திருக் குடந்தை ஆண்டவன்'' என்று ஜகத்விக்யாதராயும் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவேதாந்த ராமானுஜ யதீந்திர மஹாதேசிகனுடைய ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவ ஸமயத்திலே प्रत्यक्षे गुरवे स्तुत्या: '' என்கிற ரீதியில், இந்த யதீந்திரரிடத்தில் பிறரால் பின்பற்றத் தகுந்த பல திருக்கல்யாண குணங்கள் இருந்தபோதிலும் அவை எல்லாவற்றையும் விஜ்ஞாபிக்க அடியேனுக்குச் சக்தியும் அவகாசமுமில்லாததால் மிக முக்கியமான ஒன்றிரண்டு திருக்கல்யாண குணங்களை மாத்திரம் விஞ்ஞாபித்து க்ருதார்தத்தனைக் கருதுகிறேன். அதாவது இம் மஹாதேசிகனுக்குத் தர்க்க வேதாந்தாதி சாஸ்திரங்களில் விசேஷ பாண்டித்யம் அமைந்திருப்பது மாத்திரமல்லாமல் ''பர்யாயபராங்குசன்'' என்று ஏக கண்ட

மாய் எல்லோரும் புகழும்படி ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளிலும் தத்வ்யாக்யானங்களிலும் அத்விதீயமான பாண்டித்யம் அமைந்திருப்பது மிகவும் கொண்டாடத்தக்கது. இப்படிப் பட்ட ஞானம், ஸ்வானுபவ மாத்திரத்திற்கு மாத்திரமல்லா மல் உலகத்தோரனைவருக்கும் அந்த ப்ரஹ்மானந்தம் ஏற் படும் வகையில் உபதேசிப்பதற்கும் அநுகூலமாயமைந்திருப் பது எல்லோருக்கும் ஏற்படக்கூடியதன்று. ஸ்வாமியினுடைய காலக்ஷேபகோஷ்டியை அடியேன் பலதடவை நேரில் அநுப பவித்திருக்கிறேன். ஆயிரக்கணக்கான ச்ரோதாக்கள் இருந்த போதிலும் ஊசி கீழே விழுந்தாலும் ஓசை கேழ்க்கும்படி அவ் வளவு நிச்சப்தமாயிருக்கும் கோஷ்டி. எல்லோரும் மெய்ம் மறந்து ஸ்வாமியின் திருமுகமண்டலத்தையே ஸேவித்துக் கொண்டு கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக உடல் மயிர்க் கூச்சு அடைய ஸ்வாமி திருவாக்கிலிருந்து பெருகும் அம்ருத ரஸத்தை ஆஸ்வாதனம் பண்ணி 'ஆஹா என்ன ஆச்சரியம், என்ன வாக்சாதுர்யம் உபமான உபமேயங்களுடைய நிரூ பணம் தாம் என்னே! என்றிப்படிப் பலவாறு பண்டித பாமர பேதமற எல்லோரும் புகழ்ந்து செல்வதை அத்யுக்திலேசமு மின்றி அடியேன் கண்டவகையில் இங்கு விஜ்ஞாபித்தபடி இது. பகவானுடையவும் ஸ்ரீ ஆழ்வாருடையவும் அநுக்ரஹமும் அதி விலக்ஷணமாய் இம்மஹானிடத்தில் ஏற்பட்டிருக்கிறது போலும் என்று பல பெரியோர்கள் புகழக் கேட்டிருக்கிறேன். இக்காலத்தில் ஸ்ரீ ஆழ்வார் ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீதேசிகள் என்றிப்படிப்பட்ட மஹநீயர்களால் ப்ரவர்த்திக்கப்பட்ட ஸத் ஸம்ப்ரதாயம் உலகெல்லாம் பரவி எல்லோரும் உய்வதற்கு அநுகூலமாய் இப்படிப்பட்ட சில மஹான்கள் அவதரித்திருப் பது நம் ஸம்ப்ரதாயம் செய்த பாக்யமேயாம்.

இப்படியே இம் மஹாதேசிகன் இன்னுமொரு நூற்றாண்டு எழுந்தருளியிருந்து திருமேனியில் எவ்விதமான அஸௌகர்ய மும் ஏற்படாமல் பாத யாத்திரையாகவே மிகுந்துள்ள திவ் யாத்திரையைப் பல தடவையும் செய்து ஆங்காங்குள்ள சேத னர்களை உஜ்ஜீவிக்கச் செய்து இப்போது போல் எப்போதும் பகவன்முகோல்லாஸகராய் எழுந்தருளி யிருக்கும்படி அநுக் ரஹிக்கும்படி ஸ்ரீ அலர்மேல் மங்கையுறை மார்பனை திரு வேங்கடத்தானை தலையால் வணங்கி ப்ரார்திக்கிறோம்.

ஸ்ரீ:

புருஷார்த்தத்தின் எல்லை

(ஸ்ரீ உப. வே. புரிசை நடாதூர் கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி)

அநாதிகாலம் ஸம்ஸரித்துப் போந்த ஜீவாத்மாக்களுடைய உஜ்ஜீவ நார்த்தமாக அத்யாத்ம சாஸ்த்ரங்கள் தத்வஹித புருஷார்த்தங்களை ப்ரதிபாதிக்கும். தத்வம் ஸ்ரீமந்நாராயணன். மோக்ஷத்திற்கு ஸாதகமான பக்தி, ப்ரபத்தி இரண்டும் ஹிதம். பக்தியில் அதிகார மற்றவர்களுக்கு ப்ரபத்தியே ஹிதமாகும். புருஷார்த்தம் ஸ்ரீமந்நாராயணனுக்கு கைங்கர்யம் செய்வதேயாம். பகவத் கைங்கர்யத்திற்கு எல்லை நிலம் பாகவத கைங்கர்யமாகும். கரணத்ரயத்தாலும் பாகவத கைங்கர்யத்தைச் செய்திடவேணும். ஏதாவது ஒரு கரணத்தால் செய்தால் புருஷார்த்தம் பரிச்சிந்நமாகும். (குறைந்து விடும்.) பகவத் கைங்கர்யத்தை பாகவத கைங்கர்ய பர்யந்தம் செய்ய வேண்டியது ஏன்? லோகத்தில் பகவான் தானே எல்லோரையும் காத்து ரக்ஷிக்கின்றான். நாம் ஒருவரை பாகவதராக (ப்ரம்மவித்தாக) எண்ணினால் அவரும் பகவானை வணங்குகிறார். ஆகையால் எல்லோரும் வணங்கி வழிபடும் பகவானை வணங்கி அவனுக்கு கைங்கர்யம் செய்வதுதானே உயர்ந்த புருஷார்த்தமாகும்? என்று ஸந்தேஹிக்கலாம். அவ்விதம் எண்ணுவது தவறு. பாகவத கைங்கர்ய பர்யந்தமான பகவத் கைங்கர்யமே புருஷார்த்த ஸாகரமாகையால், பகவத் கைங்கர்யத்தில் விசேஷ்யமான (ப்ரதானமான) பாகவத கைங்கர்யம் செய்யாவிடில் பகவத் கைங்கர்யம் பாகவத கைங்கர்யம் இரண்டும் செய்யவில்லை என்றேயாம். இதனால் புருஷார்த்தஸாகரம் வற்றிப்போம். ஆகையால் செய்யவேண்டியவைகளில் பகவத் கைங்கர்யத்தின் எல்லை நிலமான ஆசார்யாதி பாகவத கைங்கர்யம் ப்ரதானம்.

சேதனன் பகவானுக்குச் சேஷபூதன். இவன் சேஷிக்கு ஒரு உத்கர்ஷத்தைப் பண்ணவேண்டுமென்கிற ஆசையால் அங்கீகரிக்கத் தக்கதாயிருக்கையே சேஷத்வம். இவ்விதமிருக்கை சேதநாசேதநங்கள் இரண்டிற்கும் ஒத்ததாயிருக்கும். சேதனனுடைய சேஷத்வம் சைதந்ய முகத்தாலே (ஜ்ஞாநத்

தாலே) வேறுபட்டதாயிருக்கும். நம்முடைய அறிவைக் கொண்டு பார்க்கும் போது நல்ல கார்யங்களைச் செய்தால் பகவானுக்கு உகப்பாயிருக்கும், கெட்ட கார்யங்களைச் செய்தால் நிக்ரஹத்திற்கு அவைகள் காரணமாயிருக்கும். பகவானுடைய திருவுள்ளத்தை நேரில் கண்டு நித்யர்களும் முக்தர்களும் பகவானுக்கு உகந்த—ஸந்தோஷத்தை அளிக்கக்கூடிய—கைங்கர்யத்தையே செய்து வருகின்றனர். பத்தர்களான நாம் அவனது திருவுள்ளக் குறிப்பை நேரில் கண்டறிய முடியாதாகையால் சாஸ்த்ரத்தாலே அதை அறிகிறோம். சாஸ்த்ரங்களில் பகவானுடைய அபிப்ராயத்தை அறிந்தபோது பாகவத கைங்கர்யமே அவனுடைய திருவுள்ளத்திற்கு உகப்பாகத் தெரிகிறது.

பாகவதாராதந வ்யதிரிக்தமான ஆராதநங்களுக்குள் விஷ்ணுவிற்குச் செய்யும் ஆராதனம் உயர்ந்தது. அதுதன்னிலும் உயர்ந்ததான பாகவதாராதனம் மற்ற ஆராதனங்களைக் காட்டிலும் மிக உயர்ந்தது என்று பாகவத கைங்கர்யத்தை உயர்ந்ததாக பாத்மோத்தரத்தில் கூறப்பட்டுள்ளது.

பாகவத கைங்கர்யத்தை விசேஷமாகப் பண்ண வேணுமென்கிறார், பகவான்:

"என்னை ஆராதிப்பவனிடம் ப்ரீதி உண்டு. என் பக்தனிடம் அதிக ப்ரீதியும், என் பக்தனிடம் பக்தியுள்ளவனிடம் அளவு கடந்த ப்ரீதியும் எனக்கு இருக்கும். ஆகையால் எனக்கு அத்யந்த ப்ரீதிவிஷயர்களான என்னுடைய பக்த பக்தர்களை விசேஷமாக பூஜிக்க வேண்டும்." ஆதலால் பகவானுக்கு அதிக ஸந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியது பாகவதாராதனமேயாம். மேலும் பல ப்ரமாணங்களை ஆராய்ந்தால் ராஜாவுக்கு ராஜகுமார உபலாளனம்போல் பாகவத கைங்கர்யம் பகவானுக்கு அபிமதமாயிருக்கையாலே சேஷபூதனை இவன் செய்யும் கிஞ்சித்காரங்களில் பாகவத கைங்கர்யம் ப்ரதாநமாயிற்று. சேஷபூதனை அந்தர்யாமியினுடைய அபிப்ராயத்தை நோக்கினால், ஸர்வாந்தர்யாமியான பகவானுக்கு உண்மையாக ஒரு அந்தர்யாமி இல்லாவிட்டாலும் அந்தர்யாமிபோலே ப்ரீதிவிஷயனை பாகவதாராதனத்தை த்வாரமாக உடைய ஆராதனம் ஸாக்ஷாத் தன்னுடைய ஆராதனத்தைக் காட்டிலும் பகவானுக்கு அத்யந்த ப்ரீதிகரம் என்று நிச்சயிக்கப் படுகிறது.

இந்த பாகவத சேஷத்வம் 'மற்றுமோர் தெய்வமுள தென்றிருப்பாரோடொத்திலேன் உற்றது முன்னடியார்க் கடிமை'

என்றபடி பகவச் சேஷத்வம் பாகவத சேஷத்வ பர்யந்த மாயிற்று. இது ஸ்வரூப ப்ரயுக்தம். குணக்ருதமாகவும் ஸ்வேச்சையாலேயும் பாகவத சேஷத்வம் வந்திடும். பெருமாள் ஸமக்ஷத்தில் இளைய பெருமாளைப் பார்த்து நீர் யார் என்று ஹநுமார் கேட்டார். அதற்கு இளைய பெருமாள் 'பெருமாள் என்னை ஒருபடி நினைத்திருப்பார் நான் ஒருபடி நினைத்திருப்பேன்' என்றார். அதாவது அவருடைய புத்யா நான் அவருக்குபின் பிறந்த ப்ராதா என்று. என்னுடைய புத்தியினால் அவர் மிகவும் குணட்யர் என்றும், அவருடைய குணத்தாலே நான் அவருக்கு தாஸபூத னென்றும் நினைத் திருப்பேன்' என்று சொன்னார். இந்த ச்லோக ந்யாயத்தை பராமரிசித்துப் பார்த்தால் பாகவதர்களுடைய குணங்களில் ஈடுபட்டு ஸ்வேச்சையாலே வரும் பாகவத சேஷத்வமும் ஒன்று உண்டு என்று ஏற்படுகிறது. ஆக, இவைகளால், பகவானுக்குச் செய்யும் கைங்கர்யம்போல் பாகவதர்களுக்கும் கைங்கர்யம் செய்திட வேண்டுமென்றும், அதுவே பகவானுக்கு உகப்பானது, பாகவத கைங்கர்ய மில்லையேல் பகவத் கைங்கர்யம் செய்ததாகாது, பகவானுக்கு அந்தர்யாமி போன்ற வர்கள் பாகவதர்கள், அவர்களுக்கு ஸ்வரூபத்தாலும், ஸ்வேச்சையாலும் நாம் தாஸர்களாகிறோம் என்று சொல்லப்பட்டது. இனி பாகவதர்களின் லக்ஷணத்தை கூறுகிறோம்.

பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் சொல்லியபடி வைஷ்ணவ அஸாதாரண சிந்நங்களை தரித்துக்கொண்டு அதில் சொல்லிய விசேஷ அநுஷ்டாநமுள்ளவர்கள் பாகவதர்கள். அவர்களுக்கு வெளிச் சிந்நம்போல் ஆப்யந்தர சிந்நமும் உண்டு. வெளிச் சிந்நம் தீயாற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச் சக்கரத்தை கோயிற் பொறியாலே ஒற்றுண்டிருப்பது சேதனனுக்கு ஸர்வேச்வரனுடைய ஸம்பந்தத்தை அறிவிப்பதாகும்.

அக்நிக் கொப்பானது நேமி. நேமி என்றால் ஸுதர்சனம். ஸுதர்சநத்தால் தப்தம் பண்ணப்படாத சரீரத்தை உடையவன் ப்ரம்மத்தின் ஸ்தானத்தை (ஸ்ரீவைகுண்டத்தை) அடையமாட்டான் என்றது ச்ருதி. ஆதலால் பாஹ்ய சிந்நம் ஆவச்யம் வேண்டியது.

கழுத்தில் துளஸிமணிமாலை முதலியவைகளையும், புஜங்களில் தப்தமான சங்க சக்ரங்களையும், நெற்றியில் ஊர்த்வ

புண்ட்ரத்தையும் தரிக்குமவர்கள் வைஷ்ணவர்கள். அவர் கள் லோகத்தை பரிசுத்தமாக்கு கின்றனர். கேவலபாஹ்ய சிந்தமுடையவர்களே ஸர்வோத்க்ருஷ்டர்களாய் லோகபாவ னர்களாய் இருக்கின்ரூர்கள் என்று ஏற்படுகின்றது.

அபிஜன விரத்யை தனம் இவைகளால் வரும் கர்வமாகிற முக்குறும்பை விட்டொழிக்கவேணும். மனே வாக்காயங்கள் ஒத்திருக்கவேணும், பர வஞ்சனை கூடாது. இவ்விதம் பரிபக்வ மான ஹ்ருதயத்தை உடைய பாகவதர்களிடத்தில் ஸர்வேச் வரன், அனேக திவ்ய தேசங்களில் பண்ணும் விருப்பத்தை பண்ணுகிரூன். இவ்விதம் புரச்சின்னமும் உள்சின்னமு முள்ளவர்களே பாகவதர்கள். அவர்களுக்கு நாம் கைங்கர் யம் பண்ணவேண்டும். ஜ்ஞாநாதிகர்களான பாகவத ச்ரேஷ் டர்களிடத்தில் போல் பாகவதநாம ப்ரதாநர்களானவர்களி டத்திலும் பக்தி பண்ணவேண்டும். பாகவத அபசாரப் படக் கூடாது. ப்ரக்ருதிஸம் பந்தத்தால் அபசாரப்பட்டு விட்டால் அவர்களிடமே அபசாரத்தைப் பொறுத்து அருளும்படி ப்ரார்த்திக்க வேண்டும்.

"என்னுடைய பக்தன் அதி நீசநாயிருந்தாலும் அவனை நிந் தித்துவிட்டு நூறுகோடி தாமரஸ புஷ்பங்களால் என்னை ஆராதித்தாலும் நான் அவனை கூமிக்க மாட்டேன்" என்று பூமிப் பிராட்டியிடம் பகவான் சொல்லுகிரூர். இதனால் பாகவதபசாரம் மிகக் கொடியது என்றதாயிற்று.

சாஸ்த்ரங்களை பராமரிசித்துப் பார்த்தால் பாகவத அப சாரம் கலசாத பாகவத கைங்கர்யத்தோடுகூடிய பகவத் கைங் கர்யமே புருஷார்த்தத்தின் காஷ்டை—எல்லை நிலம்—என்று நிச்சயிக்கப் படுகிறது.

ஸ்ரீமத் பரமஹம்ஸைத்யாதியாய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமத் ஆண்டவன் 'பூதமைந்தொடு . . . பாததூளி படுத லால் இவ்வுலகம் பாக்யம் செய்ததே' என்றபடி தமது ஸஞ்சா ரத்தால் இவ்வுலகை பாக்யம் பெறச் செய்தமையாலும், ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்தில் ஆயிரக்கணக்கில் பாக வதோத்தமர்கள் சேர்ந்திடுவராகையாலும், பாதுகாஸஹஸ் ரத்தில் 'ஸந்த:' என்று ஆரம்பித்து 'ஸந்த:' என்று பாகவதர் களின் பெருமையையே பேசி முடித்திருப்பதாலும், பாதுகாச்ர

மத்தில் நடைபெறப்போகும் ஸத்ஸங்கத்தை கணிசித்தும், புருஷார்த்தத்தின் எல்லையைப் பேசி ஸ்ரீமதாண்டவனின் ஷஷ்ட்யப்த பூர்த்தி மலரில் அடியேனுடைய கைங்கர்யத்தைச் செய்து ஸபலனாகின்றேன்.

ஜயதி யதிராஜ ஸூக்தி:
ஜயதிமுகுந்தஸ்ய பாதுகா யுகளீ |
தது பயதநா: த்ரிவேதீம்
அவந்த்ய யந்தோ ஜயந்தி புவிஸந்த:



பூர்வாசார்யர் பாதுகைகளை சிரஸில் தரித்துக்கொள்ளல்

ஸ்ரீ:

ஸ்ரீ பாதுகை

(ஸ்ரீ உ.ப. வே. கௌஸல்யா நந்தஞ்சார்யர் ஸ்வாமி)

நம்மாண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹாதேசினின் திருவடி த்வாரத்தில் அடியேன் குருகுலவாஸம் செய்யப் புகுந்த ஸமயத்தில் ஸ்ரீமதாண்டவன் அடியேனைப் பார்த்து:

''என் அம்மா! உனக்கு நான் சாதம் போடுகிறேன். அதற்கு நீ எனக்கு என்ன கொடுக்கப் போகிறாய்?'' என்று கேட்டாயிற்று. அப்போது அடியேன் 8 வயதே ஆன சிறு பையன். ஸ்ரீமதாண்டவனின் இக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் முழியாய் முழித்தேன். அடியேன் முழிப்பதைக் கண்டதும் ஸ்ரீமதாண்டவனின் திருக் கண்களில் கருணை வெள்ளமிட்டது. ஸ்ரீஸ்வாமிக்கே உரித்தான அவ்வழகிய கண்ணைக்கால் அடியேனைக் குளிர கடாக்ஷித்து—

''என் அம்மா! நீ வேறு ஒன்றும் எனக்குத் தர வேண்டாம். ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தில் தினம் 10 ச்லோகம் மனப்பாடம் செய்து என்னிடம் ஒப்பிவித்து விடவேண்டும்; அதுவும் அர்த்தத்துடன்!'' என்று அருள்கனியப் பணித்தாயிற்று. அவ்வளவு ஈடுபாடு நம்மாண்டவனுக்கு ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தில். ஸர்வவேத வேதாந்தார்த்தங்களையும் ஸ்ரீ பாதுகாஸஹஸ்ர ச்லோகங்களைக் கொண்டே ஸ்ரீமதாண்டவன் மிக லலிதமாக அதி மதுரமாக எடுத்துப்போதித்தாகும். ஸ்ரீமதாண்டவன் திருவாக்கு ஒவ்வொன்றிலும் மாமறையின் மஹத்தான அர்த்த விசேஷங்கள் மறைந்தும் திகழும்; தெரிந்தும் விளங்கும்.

''உனக்கு நான் சாதம் போடுகிறேன். அதற்கு நீ எனக்கு என்ன கொடுக்கப்போகிறாய்?''

என்று ஸ்ரீமதாண்டவன் அடியேனை ஸர்வ சாதாரணமாகக் கேட்ட இவ்வார்த்தையே எவ்வளவு பெரிய அர்த்த விசேஷங்களைத் தன்னுள் கொண்டிருக்கிறது என்பதை அடியேன் பின்னர் புரிந்து கொண்டபோது, பீதாம்பரத்துக்கு பதிலாகக் காவியுடையை அணிந்திருக்கையில் த்ருதண்டமேந்தி எம்பெரு

மானே நம்மாண்டவன் திருவுருவில் உலகை உய்விக்க உலவி வந்ததாக மெய் சிலிர்க்க எண்ணி எண்ணிப் பூரிப்பேன்.

அன்னத்தைத்தானே நமது பேச்சு முறையில் சாதம் என்கிறோம். அவ்வன்னம் இருவகைப்படும், த்ரிகுணம் என்றும் ஷட்குணம் என்றும். ஸம்ஸாரிகளுக்கு போக்யமாக இருப்பது த்ரிகுணம் என்னும் அன்னம். பரமை காந்திகளான மஹாஞானிகளுக்கு பரம போக்யமாக இருப்பது ஷட்குணம் என்னும் அன்னம். உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணன் என்றே பேரின்பமுற்ற இருப்பர் பரமைகாந்திகளான மஹாஞானியர். ஞானம் சக்தி பலம் ஐச்வர்யம் வீர்யம் தேஜஸ் என்னும் ஆறு மாபெரும் கல்யாண குணங்களால் பரம போக்யமாகத் திகழ்வது திருவுக்கும் திருவாகிய பரப்ரம்மம். அதன் பரிபூர்ண அநுபவத்தில் ஆழ்ந்துள்ள பரமை காந்திகளுக்கும் பாமரர்கள் அநுபவிக்கும் ஸாத்விக ராஜஸ தாமஸத் தன்மைகளால் ஆக்கப்பட்ட இவ்வுலக போக யோக்யங்களுக்கும், ஒரே இடத்தில் இருட்டுக்கும் வெளிச்சத்துக்கும் போல், சேர்க்கை என்பதே இருக்க இயலாது.

எனவே தைவத் திருவுருவான நம்மாண்டவன் ''உனக்கு சாதம் போடுகிறேன். அதற்கு நீ எனக்கு என்ன கொடுக்கப் போகிறாய்?'' என்ற கேள்வியில் ''என் அம்மா! நான் உனக்கு ஷாட்குண்யாட்யமான திருவுக்கும் திருவாகிய திவ்யான்னத்தைத் தருகிறேன்! அதற்கு நீ என்ன எனக்குத் தரப் போகிறாய்? என்பதைத்தான் அடியேன் புரிந்துகொண்டது. அம்மாபெரும் ஞாஞ்ஞபதேச ரூபமான பேருதவிக்கு அடியேன் எதைச் செய்தால் தீரும்? என்னைத் தெரியாமல் அடியேன் முழித்ததும் சரிதானே! யாஜ்ஞவல்க்யர் என்னும் மஹாஞானி ஜனக மஹாராஜனுக்கு தத்வோபதேசம் செய்து வந்தபோது, அவ்வரசன் தன் ராஜ்யத்தில் பகுதி பகுதியாக நன்றிப் பெருக்குடன் ஆசார்ய காணிக்கையாக அர்ப்பித்து வந்து முடிவில் தன் பொருள் அனைத்துடன் தன்னையே ஆசார்ய காணிக்கையாக அடிமைப் படுத்திவிட்டார். ஷாட்குண்யாட்யமான திருவுக்கும் திருவாகிய திவ்யான்னத்தைத் தானும் பரமானந்தத்துடன் புஜித்து உலகுக்கும் எடுத்துக் கொடுத்தருளிய நம்மாழ்வாரிடம் ஏற்பட்ட நன்றிப் பெருக்கில் ''தேவு மற்றறியேன் தென் குருகூர் நம்பி'' என்று மெய்யும் மறந்து பேசினார் மதுர கவிகள். ''என்னப்பனில், நண்ணித் தென் குருகூர் நிம்பியென்றக்கால், அண்ணிக்கு மமுதூறு மென்னுவக்கே'' என்று முன்னதாக மொழிந்து மகிழ்ந்தார் அவர்.

எம்பெருமானால் 'நம்மாழ்வார்' என்று பெருமையும் இனிமையும் அருமையும் பொங்க மதிக்கப் பெற்றவர் திருக்குருகை ஸ்ரீ சடகோபன். ஸ்ரீ வைஷ்ணவ மதத்தின் குலபதி அவர். அவருடைய ஈடு இணையற்ற பெருமையை ஸ்ரீவியாஸர், சுகர் முதலானவர்களும் எடுத்துப் பரக்கப் பேசியிருக்கிறார்கள்.

ஷாட்குண்யாட்யனை திருவுக்கும் திருவாகிய செல்வனின் திருவடியைத் தாங்கி அலங்கரித்துத் திகழும் ஸ்ரீபாதுகையை சடகோபனென்றேதான் வழங்குவது. ஸ்ரீபாதுகைக்கும் ஸ்ரீ சடகோபனுக்கும் பேதம் ஏதும் இல்லை. பெருமாளைப் பற்றியும் தாயாரைப் பற்றியும் ஆண்டாளைப் பற்றியும் ஸ்ரீபாஷ்யகாரரைப் பற்றியும் பெருமிதத்துடன் துதித்து மகிழ்ந்த ஸ்ரீஸ்வாமி தேசிகனை எம்பெருமான் ஒரு வியாஜத்தை இட்டு, தன் பாதுகையான நம்மாழ்வாரைத் துதித்துப் பரிபூரண இன்பத்தைப் பெறும்படி நியமித்தாயிற்று. தன் விஷயமான ஸ்ரீமத்ராமாயணத்தை ஈடு இணையற்ற தமிழ் பாக்களால் இன்சுவையுடன் தன் முன்பு கம்பன் பாட, அதில் திரு உள்ளம் பரவசமாகாமல் அக்கம்பனை நோக்கி, நம் சடகோபனைப் பாடினையோ வென்று விஞ்சிய ஆதரத்தால் மேட்டழகிங்கரூபியான எம்பெருமான் கேட்க, கம்பரும் சடகோபரந்தாதி பாடி தன் நிறைவு பெற்றுயிற்று. அதுபோல் ஸ்வாமி தேசிகனும் வேதங்களிலுலும் வேதார்த்தங்களை நன்கு பிரகாசிப்பிக்கவந்த ஸ்ரீவால்மீகி பகவனுலும் ஸ்ரீவ்யாஸபகவானுலும் எடுத்து மிக ப்ரதானமாகக் காட்டப்பட்ட ஸ்ரீபாதுகையின் ஒப்புயர்வற்ற பெருமையை அது ஸ்ரீ சடகோபனின் பெருமை—அது நம்மாழ்வாரின் பெருமை என்று மனம் பூரித்துப் பூரித்து 1,000 ச்லோகங்களால் துதித்தாயிற்று; அதலுல் தன் நிறைவும் பெற்றுயிற்று. வேதங்களில் மஹாரகஸ்யமாக மறைந்து கிடக்கும் எம்பெருமானின் ஸ்ரீபாதுகையின் ஈடு இணையற்ற பெருமையை முதன் முதலாக உலகுக்கு எடுத்துக் காட்டியவர் ஸ்ரீ வால்மீகி பகவான். ஆயினும், பலர் அதைச் சரியாக கவனிக்கவில்லை. பின்பு ஸ்ரீ வியாஸபகவான் அப்பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டியும் அப்பெருமை வெகுகாலம் வரை நன்கு உணரப்படாமலேயே இருந்தது. பிறகு ஸ்ரீஸ்வாமி தேசிகன் அப்பெருமையை அபாரமாக உலகுக்கு எடுத்துக் காட்டியாயிற்று. அப்படியும் அப் பெருமை நம் மாண்டவன் காலம் வரையில் தேவானும் குஹ்யம் என்பது போலவே இருந்து வந்தது. நம்

மாண்டவனுக்கு எம்பெருமானே ஒருவன் சரியாக அறிய அவனுடைய ஸ்ரீபாதுகையைச் சரியாக அறிவது கடமை என்றே திருவுள்ளம். அதனால்தான் ''உனக்கு நான் சாதம் போடுகிறேன். அதற்கு நீ எனக்கு தினம் ஸ்ரீ பாதுகாஸ ஸ்ஹஸ்ரத்தில் பத்து ச்லோகம் அர்த்தாநுஸந்தானத்துடன் ஒப்புவிக்க வேண்டும் என்று நியமித்தாயிற்று. ஸ்ரீ பாதுகையினிடம் அவ்வளவு ஈடுபாடு நம்மாண்டவனுக்கு. ஸ்ரீ சடகோபனிடம் அவ்வளவு ஈடுபாடு நம்மாண்டவனுக்கு. ஸ்ரீ தேசிகனிடம் அவ்வளவு ஈடுபாடு நம்மாண்டவனுக்கு. அவ்வளவு ஆசார்ய பக்தி நம்மாண்டவனுக்கு.

ஸ்ரீ:

ஸதாசார்ய ஸமாச்ரயணம்

(ஸ்ரீ உப. வே நாகபட்டிணம் காடந்தேத்தி
ராகவாசார்யர் ஸ்வாமி)

புருஷார்த்தோப யோகியான மநுஷ்யசரீரம் துர்லபம். இப்படிப்பட்ட துர்லபமான சரீரத்தைப் பெற்றாலும் மோக்ஷேச்சை பிறப்பதரிது. அவ்வித மோக்ஷேச்சை பிறப் பதற்கு ஸாதனம் ஆசார்ய கடாக்ஷமே. ஆசார்ய வான் புரு ஷோவேத, என்ற சுருதி வாக்யமும் ஆசார்யனை அடைந்த புருஷன் தான் பகவானை உள்ளபடி அறிவான் என்று கூறு கிறது. எவ்வளவு புண்ணியம் செய்தவனுக்கும் ஆசாரிய கடாக்ஷமில்லாவிடில் மோக்ஷம் கிட்டாது, என்றும், எவ்வ ளவு பாபியாக இருந்தாலும் ஆசார்யாநுக்ரஹம் கிட்டிவிட் டால் அப் பாபங்கள் மோக்ஷப்ராப்திக்கு தடங்கல் ஆகாது. என்னுமிடம், க்ஷத்ரபந்து, புண்டரீகன் இவர்கள் சரித்திரம் சான்றாகும். புண்டரீகன் சிறந்த தர்மிஷ்டனாக இருந்தும் முடிவில் நாரத முனிவரின் அருளால் தான் மோக்ஷமடைந் தான். க்ஷத்ரபந்து என்பவன் மிகக் கொடூரமான பாபங் களைச் செய்தவன். அவனும் நாரத முனிவரின் கிருபையால் மோக்ஷம் அடைந்தான். இச் சரித்திரங்களின் மூலமாக நாம் அறிவது—ஆசார்ய ஸமாச்ரயணமே மோக்ஷஹேதுவாகுமென் பது. இப்பொருளைத்தான் கீழ்க்கொடுத்த சுலோகம் விளக்கு கிறது.

பாபிஷ்ட: க்ஷத்ரபந்துச்ச புண்டரீகச்சபுண்யகிருத்,
ஆசார்யவத்தயாமுக்தள தஸ்மாதாசார்யவான்பவேத்.‖

ஆசாரியன் கிருபாகடாக்ஷ வீக்ஷண்யத்தால் ஏற்படும் ச்ரேய ஸானது த்ரிமூர்த்திகளின் கடாக்ஷங்களாலும் ஏற்படாது. ரஜஸ்தமோ பூயிஷ்டர்களான பிரம்மருத்ராதிகளின் தர்சனம் சேதனனுக்கு மோக்ஷப்ரதமாகாது. அவர்கள் கொடுக்கும் பலமும் பரிமிதமானவை.

ப்ரம்மாணம் சிதிகண்டம் ச யாச்சான்யா: தேவதா: ஸ்மி
ருதா: |
ப்ரதிபுத்தா: நஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்.
(பாரதம்-சாந்திபர்வம்: 350 - 36)

ஸ்ரீமந்நாராயணனின் கடாக்ஷமும் ஒன்றல்ல ஆயிரம் கண்களிலுல் வரும் நன்மையும் ஆசாரியன் கடாக்ஷத்திற்கு ஸமமாகாது. ஏனெனில் ஸர்வேச்வரன் சேதனர்களைத் திருத்தி ஆட்கொள்ளக் கருதிச் சேதனர்களிடம் தன் நோக்கைச் செலுத்திக்கிட்டே அணுகி அப்பா சேதனனே, நீ என்னைச் சேர்ந்தவன். என் தாஸன். என் சேஷபூதன் என்று கூறினுல், த்வமமே—நீ என்னைச் சேர்ந்தவன் என்று சொல்ல, உனக்கு என்ன உரிமை, அஹம்மே—நான் என்னைச் சேர்ந்தவனே. நான் ஸ்வதந்திரன். நானே ஸ்வாமி என்று ஜீவாத்மா கூறுகிறான். இதைக் கண்ட ஸர்வேச்வரன் தன் வேஷத்தைக் கொஞ்சம் மாற்றிச் சேதனனுக்கு ஆசார்யகிருத்யம் செய்து உலகை நல்வழிக்குக் கொண்டு வர எண்ணி முதலில் அர்ஜுனனுக்கு ஆசார்யனாக அமைந்து அது பலித்தால் மற்றுள்ளார் அனைவருக்கும் ஆசார்யனின் கார்யத்தைச் செய்யலாமென்று கனக்கப்பாரித்து ஊரும் நாடுமறியத் தன்னை ஆசார்யனாகவும் அர்ஜுனனை சிஷ்யனாகவும் அமைத்துக் கொண்டார்.

ஸஏவ பகவான் புருஷோத்தம: ஸர்வேஸ்வரேச்வர:
ஜகது
பகிரிதிமர்த்ய: ஆச்ரிதவாத்ஸல்யவிவச: பார்த்தம் ரதினம்
ஆத்மானம் ஸாரதிம்ச ஸர்வலோகஸாக்ஷிகம் சகார
(கீதா பாஷ்யம்)

ஸர்வேச்வரன் தன்னைத் தாழவிட்டு அர்ஜுனனை மேலே நிறுத்திவைத்து உபதேசித்து, உபதேசம் அர்ஜுனனிடம் பலியாமை கண்டு பிறருக்காவது பயன்படுமா என்று ஏங்கினான். இதற்குச் சான்று கீதாத்யான சுலோகமே,

ஸர்வோப நிஷதோகாவ: தோக்தா கோபாலநந்தன:
பார்த்தோவத்ஸ: ஸுதீ: போக்தா துக்தம் கீதாம்ருதம்
மஹத்

கண்ணன் ஸர்வ உபநிஷத்தாகிற பசுக்களைக் கறப்பதற்கு அர்ச்சுனனைக் கன்றாக அமைத்தார். வரும் கீதாமிருதத்தை ஞானிகள் அனுபவித்தார்கள் என்று இந்தச் செய்யுளின் கருத்து. இதனுல் கன்று ஸ்தானீயனான அர்ச்சுனனை பால் சுரப்பதற்குக் கன்று பயன்படுவது மாதிரி கீதை உபதேசத்திற்கு வ்யாஜமாக்கினார். ஆனால் கீதாமிருதத்தின் பலனைப் பெரியோர்கள் அனுபவித்தார்கள். அர்ஜுனனிடம் தன் ஆசார்யகிருத்யம் செய்தது பலியாமை கண்டு வருந்தினான்.

அவஜானந்தி மாம்மூடா: மானுஷீம்தநுமாச்ரிதம்
பரம்பாவமஜானந்தோ மமபூதமஹேச்வரம்

(ப. கீதா—9, 11)

இனி இந்த விபவா வதாரங்களிலுல் பயனில்லை என்று திருவுள்ளம் கொண்டு தானே பராங்குச பரகாலாதிரூபமாக ஓர் அபிநவ தசாவதாரம் எடுக்க வேண்டிவந்தது. இத்தால் நாம் அறிந்து கொள்வது ஆசார்ய கடாக்ஷமே சேதனனுக்கு மிகச் சிறந்ததாகும் என்பது. இக்கருத்தை தெரிவிக்கும் சுலோகம் கீழ்வருமாறு:

ஏகயைவகுரோ: த்ருஷ்ட்யா த்வாப்யாம்வாபிலபேதயத்—
ந தத் திஸ்ருபிரஷ்டாபி: ஸஹஸ்ரேணபிகஸ்யசித்॥

எவனுக்குப் பகவானிடத்தில் உயர்ந்த பக்தியிருக்கிறதோ அதேபோல ஆசார்யனிடத்திலும் பக்தியிருக்கிறதோ அவனுக்கு ஆசார்யன் உபதேசித்த ஸகல ரகஸ்யார்த்தங்களும் வ்யக்தமாக விளங்கும். மேலும் ஆசார்யன் உபதேசியாத பாகங்களும் ஆசார்ய பக்தியால் தானே உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும் என்று ச்வேதாச்வதரோப நிஷத்தின் முடிவு கூறுகிறது. அதாவது

யஸ்யதேவே பராபக்தி: யதா தேவே ததாகுரௌ
தஸ்யைதே கதிதாஹ்யர்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மன:

இச் சுருதியின் பொருளை உலகிற்குக் காட்டவேண்டுமென்று மநுஷ்யாவதாரம் செய்த பகவான் விச்வாமித்ரரை ஆசார்யனாக அடைந்து, அவர் அநுக்ரஹத்தால் அஸ்த்ர தேவதைகள் எல்லாம் சக்ரவர்த்தித் திருமகன் முன்பே தோன்றி, நாங்கள் உனக்கு வசம் ஆனோம். இமேஸ்ம: பரமோதாரா: கிங்கரா: ஸமுபஸ்திதா: என்று கூறியதாக ஆசார்ய உபதேசத்திற்கு மேன்மையை வால்மீகி பகவானும் கூறினர். கிருஷ்ணனும் தன் நண்பரான ஸுதாமாவுடன் பேசும்பொழுது ஆசார்ய ஸமாச்ரயணத்தின் பெருமையைக் கூறி ஆசாரியன் அருளால் எல்லாக் கலைகளும் நமக்கு செவ்வனே விளங்கியது என்றும், நாம் அறியும் பொருளை குருகுலவாஸம் செய்து ஆசார்யன் மூலமாகத்தான் அறிய வேண்டுமென்று விளக்குகிறார்.

கச்சித் குருகுலே வாஸம் ப்ரம்மன்ஸ்மரஸிநள யத:
த்விஜோவிஞ்ஞாய விஞ்ஞேயம்தமஸ: பாரமச்னுதே

(பாகவதம்: 10-80-31)

அவ்வித ஆசார்யச்ரேஷ்டர்களின் லக்ஷணங்களை ஸ்வாமி தேசிகன் ந்யாஸ விம்சதியில் பின்வருமாறு ஸாதிக்கிறார்:

ஸித்தம்ஸத்ஸம் ப்ரதாயே ஸ்திரதியமநகம் ச்ரோத்ரியம் பிரம்மநிஷ்டம்,
ஸத்வஸ்தம் ஸத்யவாசம் ஸமயநியதயா ஸாது வ்ருத்யா ஸமேதம்
டம்பாஸூயாதிமுக்தம் ஜிதவிஷயகணம் தீர்க்கபந்தும் தயாளும்
ஸ்காலித்யே சாஸிதாரம் ஸ்வபர ஹிதபரம் தேசிகம் பூஷ்ணுரீப்ஸேத்॥

இச் சுலோகத்தின் கருத்து. ஸத்ஸம்ப்ரதாயத்தில் தோன்றியவரும், போதமரும் திருமாதுடன் நின்ற புராணனையே பரதேவதையாக நிச்சயித்த ஞானமுள்ளவரும், ஞானத்தை வ்யர்த்தமாக்காமல் அநுஷ்டாந பர்யந்தமாக ஆக்கியவரும் ஸத்வகுணமுள்ளவரும், மதுஸூதன ஜாயமான கடாக்ஷம் பெற்ற ஸாத்விகரும், அந்யோன் யவைர ஜனனீவிஜ்ஞாத்வஸூயா என்று தேசிகன் வாக்குப்படி அஸூயை என்ற கெட்ட குணத்தை விட்டவர்களும், இந்திரியமாகிற மதயானைகளை அடக்கியவர்களும் சிஷ்யர்களிடம் பிரியத்தைக் காட்டுபவர்களும் சிஷ்யர்களுக்கு பிழை நேரிடும்பொழுது தடுத்து நிறுத்தும் குணமுள்ளவர்களும் பரமாசாரியர்கள் அவர்களை அண்டி ஸகுருமேவா பிகச்சேத் ஸமித்பாணிம். ச்ரோத்ரியம் பிரம்மநிஷ்டம் என்ற வாக்கின்படி அஞ்சலி செய்து சிஷ்யன் ஆசார்யனிடம் சாஸ்த்ரார்த்தங்கள் க்ரஹிக்க வேண்டும் என்பது.

அவ்விதமான ஆசார்யபரம்பரை எம்பெருமான் தொடங்கி இன்றுள்ள ஆசார்யர்கள் வரையில் தொடர்ந்து இடைவிடாமல் விளங்கி வருகிறது. அந்த ஆசார்ய பரம்பரையை நாம் அறிந்து வழிபடவேண்டுமென்று 'ஆசார்யவம்சோ ஜ்ஞேய: பவதி ஆசார்யாணும் அஸாவஸாவித்யாபகவத்த:' என்று பிரமாணங்கள் கூறுகின்றன. கூரத்தாழ்வானும்,

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுனமத்யமாம்।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம் பராம்॥

ஸ்ரீயப்பதி தொடக்கமாக, நாதமுனிகளையும், யாமுனமுனிகளையும் (ஆளவந்தார்) நடுவில் உள்ளதான அஸ்மதாசார்ய பர்யந்தமான குருபரம்பரையை ஸேவிக்கிறேன், என்கிறார்.

எம்பெருமான் துடங்கி இன்று வரையில் உள்ள ஆசாரியர் கள் அளவாக ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்கள் இடைவிடா மல் வந்து சேதனர்களை உஜ்ஜீவனம் செய்கிறது பற்றி இங்கு ரஸகனமான ஒரு சுலோகம் அநுஸந்திக்கத்தக்கது.

லக்ஷ்மீநாதாக்ய ஸிந்தௌ சடரிபு ஜலத: ப்ராப்ய
காருண்ய நீரம்
நாதாத்ராவப்யஷிம்சத் ததநு ரகுவராம்போஜ சக்ஷுர்
ஜராப்யாம்
கத்வா தாம் யாமுனக்யாம் ஸரிதமத யதீந்ராக்ய பத்மாக
ரேந்திரம்
ஸம்பூர்ய ப்ராணி ஸஸ்யே ப்ரவஹதி ஸததம் தேசிகேந்த்
ர ப்ரவௌக:

நம்மாழ்வார் என்ற காளமேகம் ஸ்ரீநிவாஸன் என்ற கடலில் புக்கு கருணை என்னும் நீரை எடுத்துக்கொண்டு ஸ்ரீமந்நாத முனிகளாகிற மலையுச்சியில் வர்ஷிக்க அம்மழைநீர் உய்யக் கொண்டார், மணக்கால் நம்பிகள் ஆகிற இரண்டு அருவி களாகப் பெருகி ஆளவந்தார் (யாமுனமுனி) என்ற ஆற்றிலே தங்கி அங்கிருந்து எம்பெருமானாராகிற ஏரியில் பாய்ந்து எழு பத்திநான்கு ஸிம்மாஸனாதிபதிகளாகிற மதகுகள் வழியாக ஸம்ஸாரி சேதனர்பக்கல் இடைவிடாது பெருகிக் கொண்டிருக் கிறது என்று அந்த சுலோகத்தின் பொருள்.

ஆக பகவான் துடங்கி வரும் ஆசார்யர்களின் பரம்பரை கள் அவ்யாஜ பாவனமானவைகள்.

இந்த ஸத்ஸம்ப்ராயங்களில் முனித்ரய ஸம்ப்ரதாயம் என் பது முதலில் பொய்கைமுனி, பூதத்தார், பேயாழ்வார் என்ற முதல்வர்களான மூவாழ்வார்கள் அயோநிஜர்களாகப் பகவா னைத் தேடித் திரிந்து ஞானபக்திவைராக்ய நிஷ்டர்களாக அன்னபானாதிகளை ஒழித்து பகவத்யானமே தாரகமாக ''உண்டியேயுடையே உகந்தோடும் இம்மண்டலத்தாரோடு'' கலவாமல் ஒருநாளிருந்த இடத்தில் மற்றொருநாள் இராமல் திரிந்து பகவத் கடாக்ஷத்திற்கு பரிபூரண பாத்திரர்கள் ஆகி திருவந்தாதிகளைப் பாடி இந்த ஸித்தாந்த ப்ரவர்தகர்களானார் கள். க்ரமேண ஸ்ரீமந்நாதமுனிவர் ஸ்ரீமத் யாமுனமுனிவர், ஸ்ரீமத் ராமாநுஜ முனிவர் ஆகிய மூன்று முனிவர்களால் செவ்வனே திருடகரிக்கப்பட்ட ஸம்ப்ரதாயமாகும். இந்த ஸம்ப்ரதாய பரம்பரையில் ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயம் ஞானநுஷ்டான வைராக்யாக்ரேஸரர்களான மஹநீயர்களால் அலங்கரிக்கப்பட்டு செவ்வனே திகழ்ந்து விளங்குகிறது.

நாதோபஜ்ஞும் ப்ரவிருத்தம் பஹுபிருபசிதம் யாமுனேய ப்ரபந்தை:

த்ராதம் ஸம்யக் யதீந்த்ரை: இத மகிலதம கர்சனம்: தர்சனம் ந:

என்று ஸ்வாமி தேசிகன் தத்வமுக்தா கலாபத்தில் ஸாதித்த படி, ஸம்ப்ரதாயார்த்தங்கள் செவ்வனே ப்ரசாரம் செய்யப் பட்டு சேதனர்களின் அஞ்நாநாந்தகாரங்களை நீக்கி ஞாலுய தேசத்தைச் செய்துகொண்டு ஸதாசார்யர்களாக ப்ரகாசிக்கி ரூர்கள்.

இந்த ஸம்பிரதாயஸ்தர்களான மஹினீய ஆசார்யர்களுக்கு ஆண்டவன் என்ற அடைமொழி ஏற்படக் காரணம் யாது என்பது பற்றி ப்ரகிருதம் ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜ காசார் யேதி பிருதாலங்கிருத ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் பூர்வாச்ரமத்தில் 5, 6 வருஷங்களுக்கு முன் ஸாதித்ததை அடியொத்தி எழுதுவது. வழுத்தூர் ஆண்டவன் வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன், திருக்குடந்தை தேசிகன், கோபா லார்ய மஹாதேசிகனை ஆச்ரயிக்கச் சென்று, அன்னவரை ''தீராவினைகள் தீர என்னையாண்டாய் திருக்குடந்தையூரா'' என்று நம்மாழ்வார் அமுதனைப் பற்றியருளிய பாசுரத்தை அநுஸந்தித்துக்கொண்டு அன்னவர் திருவடிகளில் ஆச்ரயிக்க லானார். இவ்விதம் கோபாலார்ய மஹாதேசிகன் திருவடி களில் வழுத்தூர் வேதாந்த ராமாநு மஹாதேசிகன் என்னை யாண்டாய் என்று பிரார்த்தித்தது துடங்கி அந்த ஸ்வாமி முதல் இன்னுள் எழுந்தருளியிருக்கும் ஆசார்யவர்யர்களுக்கும் ஆண் டவன் என்றும் அவர்கள் அநுக்ரஹித்து வரும் இச்சம்ப்ரதா யத்திற்கும் ஆண்டவன் ஸம்ப்ரதாயம் என்று திருநாமம் வழங்கலாயிற்று.

இவ்விதம் மிகச் சிறந்த இந்த ஸத்ஸம்ப்ரதாயத்தில், ஆசார்ய ஸ்தானத்தை அலங்கரித்துக்கொண்டு எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி பிருதாலங்கிருத, ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன், ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ மஹாதேசிக ஆசார்ய ஸார்வபௌமரிடம் ஸமஸ்தாசார்ய லக்ஷ ணங்களும் ஒருங்கே கூடியிருப்பதுடன் அநந்த சமதமாதி கல் யாண குணங்களும் பரிபூர்ணமாக நிறைந்தபடி.

ஸ்ரீமதாண்டவன், முன்பு எழுந்தருளியிருந்த ஆசார்யவர் யர்களின் அபராவதார மென்றே மஹநீயர்கள் திருவுள்ளம். நம் ஸம்ப்ரதாயம் சிறப்புற்று மேன்மையுடன் விளங்குவதற்கு

நம் ஆண்டவன் தேரழுந்தூர் ஸ்வாமியென்று ப்ரஸித்தமான ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன் முக்ய காரணமாக எழுந்தருளியிருந்தபடி அந்த ஆண்டவனுக்கு துரீயாச்ரம ப்ரதானம் செய்வித்தும் ஏழுகோடி ஸங்க்யாகமான திருவஷ்டாக்ஷர மந்த்ர ஜபபலத்தையும் தத்தம் செய்து ஆசார்யகம் செய்யும்படி அநுக்ரஹித்த காடந்தேத்தி ஆண்டவன் கிருபாகடாக்ஷத்தால் தேரழுந்தூர் நம்மாண்டவன் ஆச்ர்யவர்யன், ஜகத்விக்யாதமாக, எழுந்தருளியிருந்தபடி ப்ரகிருதம் நம் திருக்குடந்தை ஆண்டவனும் தேரழுந்தூர் நம்மாண்டவன் திருவடிகளில் பகவத் விஷயம் ரகஸ்யகிரந்தங்கள் அதிகரித்து அந்த ஆசார்யப்ராசார்ய பரிபூர்ண கிருபா கடாக்ஷம் பெற்று தீபாதுதிபன்ன ப்ரதீபம் போல ப்ரகாசிக்கிறபடி. மேலும் ஆக்கூர் ஆண்டவன் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் திருவடிவாரத்தில் பாஷ்யாதி கிரந்தங்கள் அதிகரிக்கப்பட்டன. ஞானநுஷ்டான வைராக்ய சேவதியான தெம்பரை ஆண்டவன் ஸதாசார்ய ஸம்ப்ரதாயம் வளர்ச்சியடைய கிருபை கூர்ந்து துரியாச்ரம ப்ரதானம் செய்து நம்மாண்டவன் போலவே ஆசார்யகம் செய்யவேண்டுமென்று அநுக்ரஹித்து அந்த ஆண்டவன் திருநாமத்தையே சூட்டியபடி. கோயில், திருமலை, பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கனுதன், திருவேங்கடமுடையான், தேவப்பெருமாள் மூவர்களுமே மூன்று ஆசார்யகளாக எழுந்தருளி ஸம்ப்ரதாய ரக்ஷணத்திற்கு இந்த மஹநீய ஆசார்யவர்யரை நியமித்தார்களோ என்றும் மஹான்கள் கூறுகிறார்கள். இவ்வபிப்ராயத்திற்குச் சான்று பிரகிருதம் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமதாண்டவன் தனியனே. அத்தனியன் கீழ்வருமாறு:

ஸ்ரீமத்வேதாந்த ராமாநுஜ முனி கருணைலப்த வேதாந்த யுக்மம்

ஸ்ரீமத் ஸ்ரீவாஸயோகீச்வர குருபதயோ: அர்ப்பித ஸ்வாத்மபாரம்

ஸ்ரீமத் ஸ்ரீரங்கநாதா ஹ்வய முனிகிருபயா ப்ராப்த மோக்ஷா ச்ரமம்தம்,

ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ முனிமபரம் ஸம்ச்ரயே தேசிகேந்த்ரம்

இவ்வித குணபூர்த்தியுடன் ஸ்ரீமதாண்டவன் ஸத்ஸம்ப்ரதாயத்தை நடத்தி வரும் மேன்மை வாசாமகோசரமானது. ஸ்ரீமதாண்டவன் காலக்ஷேப வைகரி மிகச் சிறந்தது. ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்கள் காலக்ஷேபம் ஸாதிக்

கும்பொழுதும் புராணங்கள் ப்ரவசனம் செய்யும்பொழுதும் அப்ரவசனங்கள் இதப்பூர்வம் ஒருவராலும் கையாள முடியாத அலாதி பாணியாகவே அமைந்து விளங்கும். பகவத் விஷயம் காலக்ஷேபம் ஸாதிப்பது இந்த ஆண்டவனிடம் மட்டும் ஒரு தனி ரீதியாக அமையும். கேட்போர் உள்ளம் பரவசமாகும் படி.

அஹோ கீதஸ்ய மாதுர்யம் ச்லோகாஞ்ம் சவிசேஷத:
சிர நிர்விர்த்தமப்யேதத் ப்ரத்யக்ஷமிவ தர்சிதம்

(ராமாயணம்: பால-ஸ-4-17)

என்னும் கணக்கிலே எம்பெருமானே அப்பொழுதே நேரில் கண்கூடாக அனுபவித்துக்கொண்டு இருப்பதுபோல தோன் றும்படியாக ஸாதிக்கக் கூடிய வாக்விசேஷம். ஸாமான்யமாக பாசுரம் ஸாதித்து அதற்கு வியாக்யானம் செய்வது என்று இல்லாமல் பாசுரங்களும் பாசுரார்த்தங்களுக்கு உபப்ரம்மண மாக பாசுரக் கூட்டங்களும் ஸ்வாமியின் திருமுகத்தில் நர்த் தனம் செய்யும். அதிகமாகச் சொன்னால் எவ்வளவுவேண்டு மானாலும் சொல்லலாம். ஆகிலும் அடியேன் ஸ்ரீமதாண்டவன் திருநீர்மலையில் எழுந்தருளி யிருந்தபொழுது ஒரு ஸமயம் பகவத் விஷயத்தைக் கேட்டு அநுபவித்த மேன்மையை மட் டும் இங்கு ப்ரஸ்தாபித்துக் கொள்ளுகிறேன்.

எப்பொழுதுமே பகவத் விஷயத்தில் ஒவ்வொரு சமயமும் பகவத் குணத்தை ஸ்ரீமதாண்டவன் சாதிப்பது வழக்கம். திருநீர்மலையில் தோயாத்ரி நாதனே மங்களாசாஸனம் செய்து விட்டு எழுந்தருளும் ஸமயம். எப்பொழும் திருவாய்மொழி யில் 2 பத்து 5 வது திருவாய்மொழி அந்தாமத்தன்பு என்ற தலைப்பின் கீழ் ஒரு பாசுரமாவது ஸாதிக்காமல் இருப்பது கிடையாது. ப்ராயேண அந்தபதிகம் பாசுரம் முழுதுமோ சிலவைகளோ அவச்யம் ஸாதிக்கக் கூடியதாகவே இருக்கும். அன்று சாதித்தபடி ஆழ்வார் பகவானின் கல்யாண குணங் களை விட அவன் திருமேனி அழகிலும் அவன் திவ்யரூபத்தி லும் ஈடுபட்டார். அவனுக்கு ஒரு திவ்யரூபம் இருப்பதாக வும் வெளியிடுகிறார். செந்தாமரைத் தடங்கண் செங்கனி வாய் செங்கமலம். செந்தாமரையடிகள் செம்பொன் திரு வடம்பே, என்றும் திருவடம்புவான் சுடர் செந்தாமரைக் கண் கமலம் என்றும் எப்பொருளும் தானுய் மரகதக் குன்ற மொக்கும் என்றும், மின்னும் சுடர் மலிக்குக் கண்பாதம், கை கமலம், என்றும் பலபலவே ஆபரணம் பேரும் பலபலவே என்றும், அப்பொழுதைக் கப்பொழுது என்னுராவமுதமே

என்றும் இவைகளை நேரிலே அநுபவிப்பதாகவே ஆழ்வார் அநுபவம் என்று ஸாதிக்கும் ஸமயம் ஸ்ரீமதாண்டவன் இந்த ஆழ்வார் அனுபவம் எம்பெருமான் திருக்கண்களிலும், திருக் கைகளிலும் திருவடிகளிலும் செல்வதால் இம் மூன்றும் தான் சேதனர்களுக்கு தஞ்சமாகிய பொருள்கள் என்று ஸாதித்து திருவாய்மொழி ஸாமவேத கானமென்று ஸாமவேதத்தின் உப நிஷத்தான சாந்தோக்ய உபநிஷத்தின் ஸாரமே எம்பெரு மான் திருமேனியின் சோபையையும் திருக் கண்களின் சோபையை கூறுவதாக அமைந்ததென்று ஸாதித்து ஸ்ரீபாஷ் யத்திலிருந்து அந்த ரதிகரண விஷயவாக்கியங்களை வ்யக்தமா விவரித்தபடி. அந்த வாக்யம் கீழே தரப்படுகிறது.

யஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோத்ருச்யதே
ஸிரண்யச்ம

ச்ரு: ஹிரண்யகேசா: ஆப்ரணகாத் ஸர்வ ஏவஸுவர்ண:
தஸ்ய யதா

கப்யாஸம்புண்டரீகம் எவமக்ஷிணீ

என்று விஷய வாக்யத்தை ஸாதித்து உடனே த்ரமிடோப நிஷத்ஸாராவலியிலிருந்து சுலோகத்தை எடுத்துக்காட்டி

ஸ்ப்ராப்த்யா ஸித்த காந்திம்ஸுகடித தயிதம் விஸ்புரத்
துங்கமூர்த்திம்

ப்ரித் யுன்மேஷாதிபோக்யம் நவகனஸரஸம் நைகபூஷா
தி த்ருச்யம்

ப்ரக்யாதப்ரீதிலீலம் துரபிலப ரஸம்ஸத்குணமோத
ஹ்ருத்யம்

விச்வ வ்யாவிருத்தி சித்ரம் வ்ரஜயுவதி கணக்யாத
நீத்யாந்வ புங்த||

அந்தாமத்தன்பு செய்து என்கிற தசகத்தில் ஆழ்வார் தம் மோடு வந்து கலக்கையாலே புதுக் கணித்த திவ்யாயுத திவ்யா பரணங்களை உடையவனுய் அந்த ப்ரீதியோடே கோபகுலத் தில் பிறந்து தங்களோடு கலக்கையாலே நிறம் பெற்ற குண விக்ரஹாதிகளைப் பெற்ற கிருஷ்ணனே கோபிமார் அநுபவித்த படி ஆழ்வார் அநுபவித்தார் என்று ஸாதித்து, ஸாராவளியும் ரத்னவளியுமாக பகவத் விஷயத்தை அலங்கரித்து மனமுருக ஸாதித்தபடி. அத்துடன் உத் என்கிற திருநாமம் பகவன் நாமமென்று கூறிய சாந்தோக்ய உபநிஷத்தை அநுஸரித்து திருவாய்மொழியால் முதல் பாட்டான உயர்வர உயர்நலம்

என்ற பாட்டின் முதல் எழுத்தில் உள்ள உ என்ற எழுத்தை யும் பத்தாம் பத்துக் கடைசியில் உயந்தே என்று முடிவான த் எழுத்தையும் சேர்த்து உத் என்பது எம்பெருமான் திருநாம மென்பதை ஸாமவேதஸாரமாகிய திருவாய்மொழியில் நம் மாழ்வார் அநுஸந்தித்ததாக ஸ்ரீமதாண்டவன் கேட்பவர்கள் ஆநந்திக்குபடி ஸாதித்தப்ரகாரம்.

இவ்வித மேன்மையையும் ப்ரம்ம வித்தையை உபதேசிக்கக் கூடிய ஆசார்யர்களுக்கு என்ன கைம்மாறு செய்யமுடியும். ருக்மிணீபிராட்டியும் ஆசார்யரூபனை பிராமணன் கிருஷ்ண னிடமிருந்து தன் மநோபீஷ்டத்துடன் திரும்பி வந்ததும் அவனுக்கு வேறு கைமாறு செய்யமுடியாமல் தன் நமஸ்காரத் தையே கைமாறுகக் கருதினள். சக்ரவர்த்தித் திருமகனும் ஸீதாப்பிராட்டியிடம் சென்று சந்தோஷ ஸமாசாரத்துடன் திரும்பி வந்த அநுமானை ஏஷஸர்வஸ்வ பூதோமே பரிஷ் வங்கோ ஹநுமத: ஹநுமாருக்கு நான் செய்யக்கூடியது இந்த ஆலிங்கனம்தான் என்று கட்டிக்கொண்டார். ஆகையால் ஆசாரியர்களுக்கு நாம் ஒரு கைமாறு செய்யமுடியாது.

ஏற்றி மனத்தெழின் ஞான விளக்கை இருளினைத்தும் மாற் றினவர்க்கொருகைமாறு மாயனும் காணகில்லான். போற்றி யுகப்பதும் புந்தியில் கொள்வதும் பொங்கி புகழ் சாற்றி வளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே, என்று ஸ்வாமி தேசிகன் சாதித்படி ஆசாரியர்கள் நமக்கு செய்யும் உபகாரத்தைக் கருதி நாம் அவர்களைப் புகழ்வதும் மகிழ் வதும், ஆசார்யன் கீர்த்தியை பரைசாற்றுவதுதான் நம்மால் செய்யக்கூடியவைகள்.

ஆகையால் ஸ்ரீமதாண்டவன் பல ஸம்ஸாரி சேதனர்களைத் திருத்தி பணிக்கொண்டு எழுந்தருளியிருந்து சிஷ்யஜநோஜ் ஜீவனம் செய்து கொண்டு பல்லாண்டு பல்லாண்டுகள் எழுந் தருளியிருக்கவேண்டு மென்று சரண்ய திவ்யதம்பதிகளை ப்ரார்த்தித்துக்கொண்டு, ஸ்ரீமதாண்டவன் ஷஷ்டியப் பூர்த்தி நன்னாளில் ஸ்ரீமதாண்டவன் திருவடிகளில் அநந்தப்ரணம புரஸ்ஸரமாக இந்தச் சிறிய லேகனத்தையும் ஸமர்ப்பிக்கி றேன்.

ஸ்ரீ:

தன்னிலை உணர்வோன் தன்மை

(ஸ்ரீ உப. வே. மீமாம்ஸகேஸரி
K. ஸ்ரீநிவாஸாசார்யர், அண்ணமலைநகர்)

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரனுக்கும், சேதன அசேதனங்களாலாகிய இப்பிரபஞ்சத்திற்கும் உள்ள ஸம்பந்தத்தை உள்ளபடி அறிந்தவனே தன் நிலையை உணர்ந்து சுகமாய் வாழ முடியும். அவன் எப்படி இருப்பான் என்பதை இங்குச் சற்று ஆராய்வோம்.

விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தில் ஸர்வேச்வரனுக்கும் இப்பிரபஞ்சத்திற்கும் உள்ள சம்பந்தம் நமது ஆத்மாவிற்கும் உடலுக்கும் உள்ள சம்பந்தம் போன்றதே யாகும். இந்த சம்பந்தம் சரீர சரீரீ பாவ மென்றும் ஆதார ஆதேய பாவ மென்றும் நியாம்ய நியாமக பாவ மென்றும், சேஷ சேஷீ பாவ மென்றும் பல படியாகப் பேசப்படுவதுண்டு. இவ்விதமான ஒரு சம்பந்தம் ஏனைய ஸித்தாந்திகளால் ஏற்கப்படாமல் விசிஷ்டாத் வைதிகளால் மட்டும் அங்கீகரிக்கப்படுவதால் இது பிரதான பிரதி தந்திரம் எனக் கருதப்படுகிறது. இதுதான் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் அடிப்படையாகும். இந்த அடிப்படையைக் கருத்தில் கொண்டால் பிரம்மத்தையும் பிரபஞ்சத்தையும் ஒன்றுகவும் வெவ்வேறுகவும் கூறும் உபநிஷத் வாக்கியங்களுக்குப் பரஸ்பர முரண்பாடு இல்லாத வகையில் ஸமரஸப்படுத்திப் பொருள் கூறலா மென்பதை ஸ்ரீ பாஷ்யகாரர் வெகு அழகாகத் தமது கிரந்தங்களில் பரக்கப் பேசியுள்ளார்.

இவ்வுண்மையை அறிந்தவனே கம்பீரமான வேதத்தின் உட்கருத்தை உள்ளபடி அறிந்தவனாகிறான் என்று ஸ்வாமி தேசிகனும் ரஹஸ்யத்ரயஸாரத்தில் அறுதியிட்டுள்ளார். ஸர்வேச்வரன் ஸூக்ஷ்ம தசையிலும் ஸ்தூல தசையிலும் இப் பிரபஞ்சத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதால் ஆதாரமாயும், சேதன அசேதனங்களைத் தம் தம் காரியங்களில் இயங்கும்படி செய்வதால் நியந்தாவாயும், அப்படி இயங்கும்படிச் செய்வதும்

அவன் தனக்கே யாதலின் சேஷியாகவுமாகின்றன. அவ்வாறே இப் பிரபஞ்சம் ஸர்வாவஸ்தையிலும் ஸர்வேச்வரனால் தாங்கப்படுவதால் ஆதேயமாயும், அவனால் நியமிக்கப்படுவதால் நியாம்யம் அல்லது விதேயமாயும் அவனுக்காகவே ஏற்பட்டிருப்பதால் சேஷமாயும் கூறப்படுகிறது.

சரீரத்தைக் குறிக்கும் சொற்கள் சரீரத்திலுள்ள ஆத்மாவையும் குறிப்பிடுவதுண்டு. தேவதத்தன் புத்திமான் என்று கூறப்படும்போது தேவதத்தசரீரம் புத்தியுடையதாகக் கருதப்படுதலில்லை யன்றே? மண்ணைப் பிசைந்து குடம், சட்டி, சால் முதலிய பல பொருள்கள் செய்யப்படுகின்றன. ஒரு வகையில் அவைகள் தனித் தனிப் பொருள்களாய் இருப்பது பற்றித் தனித்தனிப் பெயர்களால் வழங்கப்படுகின்றன. எனினும் அவைகள் எல்லாம் மண்ணால் ஆயிருப்பது பற்றி எல்லாம் மண் என்றும் பேசப்படுவதுண்டு. அதுபோல் பிரபஞ்சம் பலவித நாம ரூபங்களை உடையது பற்றிப் பலவாகவும், எல்லாப் பொருள்களிலும் பகவான் ஒருவனே அந்தர்யாமியாக நின்று நியாமகனையும், ஆதாரமாயும் இருப்பது பற்றி எல்லாம் பிரம்மமே என்று உபநிஷதங்களில் பேசப்படுகின்றது.

இப்படி ஆதார ஆதேய பாவத்தை நன்குணர்ந்த பெரியோர்கள் ''நான் உன்னையன்றி இலேன் கண்டாய் நாரணனே. நீ என்னை யன்றி இலை'' (நான்முகன் திருவந்தாதி. பாட்டு 7). என்று கூறியிருப்பது நோக்கத்தக்கது. அப்படியே ஸீதாப் பிராட்டியும், எனக்கும் ராகவனுக்கும் உள்ள சம்பந்தம் ஒளிக்கும் சூரியனுக்கும் உள்ள சம்பந்தம் போன்றதே என்று பேசியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

நமது ஆத்மா தேக இந்திரியாதிகளைக் காட்டிலும் வேறுபட்டது என்று உணர்வோன் பிறர் தன்னைத் திட்டும்போது அது தன் ஆத்மாவைச் சேராதது கண்டு கலங்காதிருப்பான்.

எல்லாப் பிராணி ராசிகளும் சர்வேச்வரனுக்குப் பரதந்த்ரமாய் அவனிட்ட வழக்காயிருப்பதைத் தெளிந்து நம்மைத் திட்டுபவரிடம் ''இவர்கள் மூலம் ஸர்வேச்வரன் இட்ட சிட்சை'' என்று கருதுவர். இந்நிலை ஏற்படின் ஸ்வரூபநிஷ்டை தனக்குண்டென அறியலாம்.

அத்தகையவன் எதற்கும் பயப்படுவதில்லை. அப்படியே ஸந்தோஷத்தைக் கொடுக்கும் வஸ்துக்களைப் பார்த்தாலும்

அவற்றில் அவனுக்குக் கண்ணோட்டமிராது. தனக்குத் தஞ்சம் ஸர்வேச்வரன் ஒருவனே யொழிய வேறு கிடையாது என்ற உறுதிப்பாட்டுடன் இருப்பான். தன் இஷ்டப் பிராப்திக்கும், அநிஷ்ட்ட நிவர்த்திக்கும் அவன் கையையே பார்த்துக் கொண்டிருப்பான். இந்நிலை கைகூடுமாகில் தனக்கு உபாய நிஷ்டை உண்டெனக் கருதலாம். இந்நிலையை அசோக வனத்தில் அரக்கிகளால் துன்புறுத்தப்பட்ட ஸீதா தேவியிடம் நாம் பார்க்கலாம். இவ்வுத்தமி அசோக வனத்தில் தன்னைப் பலவாறு துன்புறுத்திய பயங்கரமான தோற்றமுடைய அரக்கிகளையும் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. இயற்கை வளம் நிரம்பியதும் பலவித புஷ்பங்கள் பழங்கள் முதலியவற்றால் மனதைக் கவருவதுமான அசோகவனத்தையும் நோக்கவில்லை. எப்போதும் இராமனையே மனதில் நோக்கிக்கொண்டிருந்தாள்.

நமது கர்மாதீனமாக நடக்கும் தேக யாத்திரையில் கொஞ்சமேனும் கவலைப்படாமல் அவன் ஸங்கல்பப் படியேதான் எல்லாம் நடக்கும் என்ற நம்பிக்கையுடன் இருப்பதும், நம் முயற்சி யின்றியே தானாக வரும் தகுதியான போகங்களை மட்டும் நசையில்லாமல் அனுபவிப்பதும், தான் விரும்பும் பலன் கிட்டினாலும் கிட்டாவிட்டாலும் அதில் ஸந்தோஷமோ துக்கமோ இல்லாமல் இருப்பதும் எப்பொழுது அவனைக்கிட்டி சாச்வதமான கைங்கரிய ஸாம்ராஜ்யத்தைப் பெறப் போகிறோமென்ற ஆவலுடனிருப்பதும் புருஷார்த்த நிஷ்டை தனக்குள தென்பதற்கு அடையாளமாகும். இம் மூன்று நிஷ்டைகளை உடையவர்களே பூலோகத்திலுள்ள நித்ய ஸூரிகள் என ஸ்வாமி தேசிகன் இவர்களைப் புகழ்ந்து பேசியிருப்பதையும் மனத்திற் கொண்டு நாமும் அந் நிஷ்டைகளைப் பெற முயலுவது ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரின் கடமையாகும். இப்பரமைகாந்திகள் பகவதனுபமில்லாத நாட்களைப் பட்டினி நாளாய்க் கருதுவார்கள். ''உண்ணு நாள் பசியாவ தொன்றில்லை ஓவாதே நமோ நாரண வென்று எண்ணு நாளும் இருக்கைச் சாம வேத நாண்மலர் கொண்டுன் பாதம் நண்ணுநாள் அவை தத்துறுமாகில் அன்றெனக்கவை பட்டினிநாளே'' என்கிறார் பெரியாழ்வார்.

நம்மாழ்வாரும் பெரிய திருவந்தாதியில் ''மறப்பெல்லாம் ஏதமே என்றல்லா லெண்ணுவனே, மண்ணளந்தான் பாதமே யேத்தாப் பகல்'' என்ற பாட்டில் எம்பெருமானை மறப்பதைப் பெரிய துக்கமாகக் கூறுகின்றார். குலசேகரரும் எவ்வளவு ஜன்மமெடுத்தாலும் இறைவனை மறவாமை வேண்டுமென்று

பிரார்த்திக்கின்றார். இந் நிஷ்டையை உடையவர்கள் தமக்கு ஏற்படும் கஷ்டங்களிலும் பரமாத்மாவைக் குறை கூறமாட்டார்கள். தம்மையே குறை கூறிக் கொள்ளுவார்கள்.

ஸ்ரீ பரதாழ்வான் ''ஸ்ரீ இராமன் வனம் எழுந்தருளியதற்குக் காரணம் மந்தரை இல்லை, கைகேயி இல்லை, தசரதனில்லை, ஸ்ரீ ராகவனுமில்லை என் பாபமே தான்'' எனக் கூறுவது அவருடைய நிஷ்டையை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. அசோக வனத்தில் ஸீதா பிராட்டியும் இராமனின் பிரிவுக்குத் தன் பாவமொன்றே காரணமென்பதை ''மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹதஸ்தி ந ஸம்சய:'' என்ற அடியில் சொல்லுகிறார். இது அவரது நிஷ்டையை நமக்குத் தெளிவாய்க் காட்டுகிறது. பட்டாபிஷேகத்திற்குப் பிறகு இலேய பெருமாளால் காட்டிற்குக் கொண்டு விடப்பட்ட ஸீதா பிராட்டி ராமனிடம் குறை கூறுமல் தன் பாவமே பொறுத்தற்கரிய இக் கஷ்டத்திற்குக் காரண மென்று கூறியிருப்பது கவனித்தற்குரியது. இந் நிஷ்டையை உடையவர்கள் சேஷத்வமும் பாரதந்திரியமும் தமக்கு ஸ்வரூப பிராப்தம் என்று கருத வேண்டும்.

அவனுக்காகவே நாமுள்ளோம் என்ற சேஷத்வம் நமக்கு ஸ்வரூப ப்ராப்தம். சிற்சில சமயங்களில் இறைவனுடைய கல்யாண குணங்களிலும் திவ்ய மங்கள விக்ரஹ சௌந்தர்யத்திலும் தோற்று அவன்பால் ஈடுபாடு ஏற்படுவதுண்டு. இவ்வாறு ஸர்வேச்வரன் கல்யாண குணங்கள் நிறைந்தவனாய் இல்லாவிடினும் அல்லது தீய குணங்கள் நிறைந்தவனாய் இருப்பினும் அவனிடம் நாம் சேஷ விருத்தியைக் கைப்பிடிப்பது ஸ்வரூப பிராப்தம். ஸீதா பிராட்டி அனஸூயா தேவியிடம் பேசும்பொழுது'', ''என் நாதன் துர்நடத்தையுள்ளவனாய் இருந்தாலும் அவனைப் பேணவேண்டியது என் கடமை. அப்படி இருக்க எல்லாக் கல்யாண குணங்கள் நிரம்பிய என் நாதனை உபசரிக்காமல் இருப்பது எப்படி? கரும்பு தின்னக் கூலி கேட்பாருண்டோ?'' என்று கூறுகின்றாள்.

அனஸூயா தேவியும், 'மைதிலியே! நீ சொல்வது மிகப் பொருத்தமாயும் அழகாயும் உள்ளது' என்று ஸீதா பிராட்டி கூறியதை ஆமோதித்திருப்பது நோக்கற்பாலது.

ஸுந்தர காண்டத்திலும் ஸீதாதேவி ''ஏழையாயினும் அரக்க இழந்தவனையினும் என்னுடைய நாதன் போற்றுதற்கு உரியவன்'' என்கிறாள். இவ்வளவால் அவன் எவ்விதமிருப்பினும் சேஷத்வம் ஸ்வரூப பிராப்த மென்பது தெளிவாகிறது.

அப்படியிருக்க, எல்லா குணங்களும் நிரம்பிய இறைவனிடம் சேஷத்வத்தை ஏற்று இன்புறத் தடை என்ன? இதை அடி ஒற்றியே திருமங்கை மன்னனும் எம்பெருமானே ''எமக்கென்றும் இனியானே'' யென்றும், ''கடல் மல்லைக் கிடந்த கனியே'' என்றும், ''வந்து வந்து என் மனத்திருந்த தேனே'' என்றும், ''கடிகைத் தடம் குன்றின் மிசை இருந்த அக்காரக் கனியே'' என்றும் பல படியாய் அவனது இனிமையைக் கரும்பென்றும், கனியென்றும், தேனென்றும், அக்காரக்கனியென்றும் பேசிவிட்டு இப்படி இவன் கரும்பாய் தேனைக் கனியாய் இல்லாமல் கசக்கும் வேம்பாயிருந்தாலும் எனக்குப் புகலிடம் வேறில்லை என்று தமது போக்கிடம் இல்லாமையை ''வேம்பின் புழு வேம்பன்றி உண்ணாது. அடியேன் நான் பின்னும் உன் சேவடியன்றி நயவேன்'' என்ற பாசுரத்தில் மனங் கரையும் வண்ணம் வெகு உருக்கமாய்ப் பேசியுள்ளார். இப்படி அவனுடைய சேஷத்வம் நமக்கு ஸ்வரூப பிராப்தமானாலும் அவனுடைய திருவுள்ளமறிந்து கைங்கர்யம் செய்வதே அழகு. இவ் விஷயத்தில் பரதாழ்வான் இளைய பெருமாளை விஞ்சிவிட்டான். சேஷத்வகாஷ்டையையும் பாரதந்த்ரிய காஷ்டையையும் காண்கிறோம்.

இங்ஙனம் தன்னிலை உணர்வோன் ஸீதாப்பிராட்டி இளையாழ்வார் ஸ்ரீ பரதாழ்வான் முதலியோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பான்.

வைணவத்தின் தொன்மை

(ஸ்ரீ உப. வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
ஆசிரியர், ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்)

சமீப காலத்தில் வைதிகமதமானது 'ஹிந்து மதம்' என்னும் பெயரைப் பெற்றிருக்கிறது. மேலெழப் பார்க்கும் போது 'ஹிந்து மதம்' என்பது ஒரே மதமாகத் தோன்றினபோதிலும், வைஷ்ணவம், சைவம் முதலான பல மதங்களின் ஸமூஹமே 'ஹிந்து மதம்' என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்படுகிறது. இம்மதங்களிடையே ஒற்றுமை யம்சங்கள் சில இருந்தபோதிலும், வேற்றுமையம்சங்களும் பல இருப்பது மறுக்க வொண்ணாதது. வேதத்தை ப்ரமாணமாக ஒப்புக் கொள்ளும் மதங்கள், வைதிகமதங்கள் என்று அழைக்கப்படுவதற்கு பதிலாக 'ஹிந்து மதம்' என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்படுவதாகக் கொள்ள வேண்டும்.

சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் நம் நாட்டில் இந்நிலை இல்லை என்பதையும் வைணவம் ஒன்றே வைதிகர்கள் ஏற்கும் மதமாயிருந்தது என்பதையும் ஆதாரங்காட்டி நிரூபிப்பதே இக்கட்டுரையின் நோக்கம். வடமொழி நூல்களில், வேதவேதாந்தங்களும். தென்மொழி நூல்களில் சங்க இலக்கியங்களும் மிகத்தொன்மையானவை என்பது அனைவரும் இசைந்தது. அவற்றை ஆராய்ந்தால் இவ்வுண்மை கையிற் கனியெனவும், வெள்ளிடை மலையாகவும் விளங்கும். நூற்றெட்டு உபனிஷத்துக்கள் என வழங்கப்படுவனவற்றுள் சுமார் எண்பதுக்கு மேற்பட்டவை ஐந்நூறு வருடங்கட்கு முற்பட்ட எந்தச் சான்றோராலும் கையாளப்படாதனவாகையாலும், மற்றும் பல காரணங்களாலும் நவீன காலத்திற் கற்பிக்கப்பட்டவையென்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். இவ்விஷயத்தை ''உபனிஷத்துக்கள் நூற்றெட்டா'' முதலான கட்டுரைகளில் நிலைநாட்டியுமிருக்கிறோம். ஆகையால் ஐந்நூறு வருடங்களுக்கு முற்பட்ட பண்டைச் சான்றோர்களால் கையாளப்பட்ட உபனிஷத்துக்களே ப்ரமாணமாகக் கொள்ளத்தக்கவை என்பது இங்கு முக்கியமாகக் கூறிக்கொள்ளத்தக்கது. நிற்க, வேதவேதாந்த வாக்கியங்களையும், சங்க இலக்கியங்களையும் காண்போம் இனி. வாக்கியங்களைக் கொடுத்து,

அவற்றின் பொருளையும் கொடுத்தால் கட்டுரை விரியுமாகையாலே வாக்கியங்களின் பொருளையும் ஆகரத்தையுமே காட்டுவோம்.

1 ரிக் வேதம். (இம்மந்திரங்களிற் பல யஜுஸ்ஸாம வேதங்களிலும் உள்ளன). (1) அஷ்டகம் 1-2-7-தர்மங்களை நிலைநிறுத்துவதற்காக விஷ்ணு (உலகளந்ததையும்) மூவடிகளாலே அளந்தான் . . . பேரறிவாளர்கள் விஷ்ணுவின் பரமபதத்தை எப்போதும் காண்கிறார்கள். (2) அஷ்டகம் 2-2-24-பகவான் விஷ்ணுவே பூவுலகையும் தேவருலகையும் மற்ற எல்லாவுலகையும் ஒருவனுகவே தரித்து நின்றான் . . . விஷ்ணுவே (உயிர்கட்கு) இயற்கையான உறவினனன்றே. விஷ்ணுவின் மேலான பதத்திலிருந்து மதுவின் வெள்ளம் பெருக்கெடுக்கிறது . . . மிகத் துதிக்கப்படுபவனும், (விருப்பங்களை) வர்ஷிப்பவனுமான பரமபுருஷனுடைய மிகப் பிரஸித்தமான பரமபதம் மிகப் பெரியதாகப் பெருமைபெற்று விளங்குகிறது . . . விஷ்ணுவிடையே இரண்டு அடிவைப்புக்களையே மனிதன் நன்கறிந்து பஜிக்கிறான். இவனுடைய மூன்றுவது அடிவைப்பை எவரும் எப்போதும் அறியவல்லவரல்லர். துதிப்பவர்களே! அநாதிஸித்தனை அந்த விஷ்ணுவையே அறிந்தவரையில் இயல்பாகத் துதியுங்கள். இந்த விஷ்ணுவின் திருநாமத்தை அறிபவர்களே! எங்கும் அந்நாமத்தை ஸங்கீர்த்தனம் செய்யுங்கள். தேவனை விஷ்ணுவே! பெரியோனை உன்னைப் பற்றிய நல்ல அறிவான பக்தியை அடையக்கடவோம். தேவகணங்களைப் படைத்தவனை இந்த விஷ்ணுவினுடைய ரக்ஷகச் செயலை, பிரகாசிப்பவனை வருணனும் (தேவவைத்தியர்களான) அச்வினிகளும் அடைகின்றனர். விஷ்ணுவே மோக்ஷத்தையளிக்கும் வல்லமையை உடையவன். (3) அஷ்டகம 5-6-24-மிகப் பெரிய திருமேனியோடு வளர்ந்தருளிய தேவனை விஷ்ணுவே! நீ மிகப்பெரியவன். உன்னுடைய பெருமையை அனுபவித்தார் யாருமில்லை. பூமியிலிருந்து தொடங்கிய உன்னுடைய இரண்டு அடிவைப்புக்களை நாம் அறிகிறோம். அதற்கு மேற்பட்ட மூன்றுவது அடிவைப்பை நீயே அறிகிறாய். தேவனை விஷ்ணுவே! பிறக்கின்றவனும் பிறந்தவனுமான எவனுமே உன் பெருமையின் மேல் எல்லையை அறியவில்லை . . . விஷ்ணுவின் திருநாமத்தை ஸங்கீர்த்தனம் செய்யும் ஜனங்கள் நிலையாயிருக்கின்றனர் . . . மிகவும் முதியவனாய், இந்த ப்ரக்ருதி மண்டலத்திற்கு அப்பால் எழுந்தருளியுள்ள விஷ்ணுவாகிற உன்னை அதிபாலனை யான் ஸங்கீர்த்தனம் செய்கிறேன்.

2. யஜுர்வேதம். (1) புருஷஸூக்தம்:—தலைகளாயிரம், கண்களாயிரம், கால்களாயிரமுடைய புருஷன் பூமி முழுவதையும் அதற்குமேலும் வியாபித்தான். அவனே எல்லாக் காலத்திலுமுள்ள எல்லாப் பொருள்களாகவும், மோக்ஷத்திற்கு ஸ்வாமியாகவு மிருக்கிறான் . . . அவனே தமஸ்ஸுக்கு மேற்பட்டவன் . . . ஸ்ரீபூமி தேவிகள் அவனுக்குப் பத்னிகள்''. (2) யஜுராரண்யகம் எட்டாம்ப்ரச்னம். பூவுலகும், தேவருலகும் தரிக்கப்படுவது யாராலே? விஷ்ணுவினால் இவ்வுலகங்கள் தரிக்கப்படுகின்றன என்பது வத்ஸர் என்னும் மஹர்ஷியின் ஸாக்ஷாத்காரமாகும் . . . தேவரான விஷ்ணு ஒருவராகவே உலகங்கள் இரண்டையும் தரித்து நிற்கிறாரானால் அதற்குறுப்பான அவருடைய பலம் எவ்வளவு? ஒளி எவ்வளவு? மேலான இருப்பிடம் எது? காற்றைக் காட்டிலும் அதிகமானதாக விஷ்ணுவின் பலத்தைக் கூறுகின்றனர். அக்கினியைக் காட்டிலும் மேலானதாக அவருடைய ஒளி உணர்த்தப்படுகிறது. மிகச்சிறந்த ஏகபாத விபூதியாகிற இவ்வுலகையும் இதிலுள்ள அக்கினிகளையும் வாயுக்களையும் த்ரிபாத் விபூதியிலிருந்துகொண்டு விஷ்ணு தரித்து நிற்கிறார். இந்த த்ரிபாத் விபூதியே அவருக்கு மேலான இருப்பிடமாகும். (3) யஜுஸ்ஸம்ஹிதை-5-5. தேவர்களுள் அக்னியானவன் மிகத்தாழ்ந்தவன். விஷ்ணு மிக உயர்ந்தவன். (4) சதபத ப்ராஹ்மணம் 9-1 (சதருத்ரீயம்) ப்ரஜாபதியிடமிருந்து நூறு தலைகளையுடைய உருத்திரன் உண்டானான். (5) சதபதம் 6-1-3. ப்ரஜாபதி உஷஸ் என்னும் பத்தினியோடு புணர்ச்சியுற்றான். ஒரு வருடம் கழிந்து பிறந்த குமாரன் அழுதான். தன் பாவம் போவதற்குப் பெயரை அளிக்கும்படி அக்குழந்தை கேட்டது. பிரஜாபதியானவன் ருத்ரன், சர்வன், பசுபதி, உக்ரன், கபன், மஹாதேவன், ஈசானன் என்னும் பெயர்களை அக்குழந்தைக்கு இட்டான். (6) யஜுஸ்ஸம்ஹிதை 6-2. மூன்று அஸுரர்கள் முறையே இரும்பு வெள்ளி பொன் நகரங்களில் வாழ்ந்து வந்தனர். திரிபுரங்களில் வசித்து வந்த அவ்வஸுரர்களை தேவர்கள் வெல்லமுடியவில்லை. விஷ்ணுவை முன்னாகக்கொண்ட அம்பு ஒன்றை அவர்கள் செய்தனர். இவ்வம்பை எய்வது யார் என்று கேட்டுக் கொண்டனர். 'ருத்ரன் கொடியவனுகையாலே அவனே இதை எய்ய வேண்டும்' என்று பதிலுரைத்தனர். 'நான் பசுபதியாக வேண்டுமென்று வரம் வேண்டுகிறேன்' என்று உருத்திரன் உரைத்தான். அவ்வரத்தை தேவர்கள் அளித்தமையாலே உருத்திரன் பசுபதி யானான். (7) யஜுஸ்ஸம்ஹிதை 6-5-20. தேவர்கள் யாகத்தில் உருத்திரனுக்கு

ஹவிர்ப்பாகம் கொடுக்க மறுத்தனர். உருத்திரன் தேவர்களைத் துரத்தினன். அவர்கள் அச்வினி தேவர்களைச் சரணடைந்தனர். அச்வினிகள் தேவர்களைக் காப்பாற்றினர். (8) சதபத 13-6-1. புருஷன் எனப்படும் நாராயணன் நான் எல்லாப் பொருள்களையும் வியாபித்து எல்லாமாகக் கடவேன் என்று கூறினன்.

3. உபநிஷத்துக்கள்—(1) தைத்திரீய நாராயணவல்லி. பூமி விஷ்ணுவினால் அளக்கப்பட்டது. வராஹத்தால் தூக்கியெடுக்கப்பட்டது. நாராயணனே பரப்ரஹ்மம்; நாராயணனே பரதத்துவம்; நாராயணனே பரஞ்சோதி; நாராயணனே பரமாத்மா. உலகில் காண்பனவும் கேட்பனவுமான எல்லாப் பொருள்களின் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான், நாராயணன். பல வேதவாக்கியங்களில் ஆயிரம் தலையுடையவன், தேவன், எங்கும் கண்ணுடையவன், அனைவர்க்கும் நன்மையளிப்பவன், எல்லாமாயிருப்பவன், அழியாதவன், மேலான பிரபு, மற்ற பொருள்களைக் காட்டிலும் மேலானவன், எப்போதுமிருப்பவன், ஹரி (அனைத்தையும் ஸம்ஹரிப்பவன்) அனைத்துக்கும் தலைவன், தனக்குத்தானே தலைவன், எப்போதும் பரிசுத்தமாயிருப்பவன், அடியவரை நழுவவிடாத அச்யுதனாயிருப்பவன், அறியும் பொருள்களில் சிறந்தவன், உலகனைத்துக்கும் ஆத்மாவாயிருப்பவன், மேலான ப்ராப்யமாயிருப்பவன். (மூவகை அளவற்றி) அளந்தனையிருப்பவன், அழிவில்லாதவன் என்று நாராயணனே கூறப்படுகிறான். (2) நாராயணோபனிஷத்—நாராயணனிடமிருந்து பிரமன் பிறந்தான்: நாராயணனிடமிருந்து உருத்திரன் உண்டானான். (3) மஹோபநிஷத்: ஆதியில் நாராயணனால் படைக்கப்பட்ட அண்டத்தில் சதுர்முகனை பிரமன் பிறந்தான். அவனுடைய முகத்திலிருந்து சூலமேந்திய புருஷனை முக்கண்ணன் தோன்றினன். (4) ஸுபாலோபனிஷத்—பிரமனின் கோபத்தினால், அவனுடைய முகத்தினின்றும் உருத்திரன் உண்டானான். நாராயணன் ஒருவனே உலகைப் படைத்தளித்து அழிப்பவனாகவும், உயிர்களுக்குத் தாய் தந்தை முதலான எல்லா உறவுமாகவும், ப்ராப்ய ப்ராபகமாகவுமிருக்கிறான். பாபமற்றவனாய், எல்லா பூதங்களுக்கும் அந்தராத்மாவாய்ப் பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவன் நாராயணன் ஒருவனே. (5) முண்டகோபனிஷத்—பிரமனே தேவர்களில் முதலில் பிறந்தவனாவான். (6) ப்ருஹதாரண்யகம்—பரம்பொருளிடமிருந்து பிறந்த இந்திரன், வருணன், ஸோமன், உருத்திரன் முதலானோர் தேவர்களில் க்ஷத்ரிய ஜாதியை

சேர்ந்தவர்கள். (7) கடோபனிஷத் — மோக்ஷ மடைபவன் விஷ்ணுவின் பரமபதத்தை அடைகிறான். புருஷனுக்கு மேற் பட்டது ஒன்றுமில்லை. அவனே மேலான ப்ராப்யப்ராபக மாவான். (8) ப்ரச்நோபனிஷத்—உலகனைத்தையும் உட லாகக் கொண்டவன் ஹரி.

4 சங்கவிலக்கியங்கள். (1) (பரிபாடல் 1) கருடக் கொடியோனே! நாவன்மையுடைய அந்தணர் ஓதும் அரிய மறையாகிற பொருள் எல்லா உலகும் உன்னுடைய ஏவ லுக்குப் பணிந்து நிற்கின்றது என்று கூறும் . . . (பிரமன் உருத்திரன் ஆகிய) இருவர்க்கும் தந்தையே! விளங்கா நிற்கும் ஆபரணங்களை உடைய திருமாலே! பரமபதத்திலிருந்து இவ் வுலகில் நீ பிறப்பதைத் தெளிவாக அறிவது மயக்கமற்ற அறிவையுடைய முனிவர்களுக்கும் அரியதாகும். அப்படிப் பட்ட பெருமைகளை உடைய பெரியோனே! உன்னை இப் படிப்பட்டவன் என்று உரைப்பது எங்களுக்கு எப்படி எளி தாகும்? பிரமன், சிவன் முதலிய அனைவரும், ஸ்ருஷ்டி ஸம் ஹாரங்கள் முதலிய அவர்களுடைய தொழில்களும் திருமா லின் அதீனமே . . . இப்படி ஸர்வாத்மாயிருப்பதால், ''இன் னுரை ஒத்திருக்கிறாய்; இப்படிப்பட்டவனை யிருக்கிறாய்'' என்று சொல்லத்தக்க மற்றொருவரை நாம் காணமையால், நிலை நின்ற முதல்வனை யிருக்கிறாய் நீ. ஆகையால் உனக்கு நீயே ஒப்பாம் (2) (பரிபாடல் 2) வராஹவுருவுடன் திகழ்ந்த சிறந்த கோலத்தோடு, அதையிட்டு சுவேதவராஹகற்பம் எனப்படும் இக்கற்பத்திலே செய்த ஒரு அருஞ்செயலை மாத் திரம் உணர்த்துவதால் உன் முதுமையின் எல்லையைப் பல்லூழி காலத்தில் எவருமே அறியமாட்டார்கள்; சக்கரத்தை தரித்த முதல்வனே! உன்னைத் தொழுது உனக்குக் கைங்கரியம் செய் வோம்; அழியாத வேதத்தில் அந்தர்யாமியாக ஓதப்படுவபன் நீயே . . . கூரிய வெளுத்த தந்தத்தையுடைய வராஹம் பூமியைத் தூக்கியெடுத்து மணம் புரிந்தபோது, புள்ளிபோல் தோன்றிய பூதேவி சிறிதும் துன்புற்றாளில்லை. . . . கருடக் கொடியோனே! நாவன்மையுடைய அந்தணர் ஓதும் அரிய வேதங்கள் உன் பெருமையைக் கூறும். உனக்கு உபமான மாக ஒரு சில பொருள்களை எடுத்தால் போதாது. எத்தனை உபமான மிட்டாலும் குறிப்பால் உணரத்தக்கவனாகவே இரு பவன் நீ. எல்லாப் பொருள்களுக்கும் அந்தர்யாமியா யிரு பவன் நீயே. (3) (பரிபாடல் 3) மாயோனாகிய திருமாலின் திருவடி மறுபிறப்பை அறுக்கும்: பிரமன் முதலிய எல்லாத் தேவரும் எல்லாப் பொருள்களும் திருமாலிடம் இருந்து

தோன்றியவை. இவ்விஷயத்தைச் சொல்லுவது அந்தணர் ஒதும் வேதமாகும். உலகையெல்லாம் அளந்த திருமாலின் திருவடியைத் தொழாதார் எவருமில்லை. . . . பிரளய ஜலத்திலே தந்தத்தால் பூமியைப் பெயர்த்து எடுத்துதவிய வராஹமே! என்றும், ஊழிகால மழையைத் தன் சிறகால் வற்றச் செய்த ஹம்ஸாவதாரம் எடுத்தவனே! என்றும் பூஸுரரும், வானுலகிலுள்ள எல்லா தேவர்களும் உன்னை விரும்பிப் பாடுவார்கள். . . . கணக்கற்ற திருமேனிகளையும் திருக் கைகளையும் உடைய வேத முதல்வன் திருமால் . . . வேதத்தில் முதல்வனாகச் சொல்லப் படுபவனே! உன் பெருமையை உன்னலன்றி எவராலும் அறியமுடியாது . . . தேவர்கள் அனைவர்க்கும் காரணமாயிருப்பவன் நீ . . . ஸாமவேதம் உன்னைக் காலத்திற்கும் முதல்வனாகக் கூறுகையால் இவ்விஷயத்தை நாங்கள் அறிந்தோம் . . . சிறந்த பொருளின் சிறப்பெல்லாம் உன் அமிசம். எல்லாப் பொருள்களுள்ளும் நீ யிருக்கையாலே எல்லாம் நீயாகிறாய் . . . முதலும், இடையும், கடையுமாகிய முறைமையினையுடைய படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் செய்வதற்காக நீ பிறவாத பிறப்பில்லை; (ஆனால், நின் இச்சையால் நீயாகப் பிறக்கிறாயே யல்லாது) நின்னைப் பிறப்பித்தவர் ஒருவரும் இல்லை . . . உலகதனைத்தையும் ஒரு குடை நிழலின் கீழ் ஆள்பவன் நீ; ஊழி முதல்வன் நீ . . . எவரும் காணாப் பெருமையோனே! நீங்காத நினைவையுடையோனே! என்றும் நிலைத்திருப்போனே! உலகாளும் நாதனே! அநாதி வேதத்தில் புலப்படுமவனே! (வராஹாவதாரத்தில்) தோல்வி கண்டறியாத தந்தத்தை உடையவனே! திருவின் நாதனே! . . . மஹாப்ரளய காலத்திலே எதுவுமே இல்லாமலிருந்தபோது ப்ரளய ஜலத்தின் நடுவிலே பிரமனைப் படைத்த உந்தித் தாமரையை உடைய உன் ஸுதர்சனமே உலகுக்குக் காப்பு. (4) (பரிபாடல் 4) பிரகலாதனைத் துன்புறுத்திய தந்தையான இரணியனை நரசிங்கமாகி நகத்தால் கிழித்தெறிந்தவன் நீ. . . . பூர்வ காலத்தின் வராஹ உருக்கொண்டு கழுத்தால் இவ் உலகைத் தாங்கி நிறுத்திய செயலும், திரிவிக்கிரமனாய் உலகளந்த செயலும், மேரு மலைபோல் உயர்ந்தவை . . . உலகில் பல பொருள்களில் காணப்படும் சிறப்புகள் எல்லாம் உன்னுடையவை. எல்லாப் பொருளும் உன்னிலும் வேறுபட்டவையாய் (உன் சரீரமாக) உன்னோடு சேர்ந்துள்ளன. . . . இறைவனை உன் ஸ்வரூபத்தைக் காட்டிலும் சிறந்தவை நின் திருவடிகள்; நின்னிடத்தில் சிறந்ததும் நிறைந்ததுமான கடவுள் தன்மை உள்ளது; உன் பெருமைகள்

மற்றும் பலவும் உள. தேவிற் சிறந்த உன்னைப்போலே, சாஸ்திரங்களிற் சிறந்த அந்தணர் அருமறையிலே அப்பெருமை களைக் காணலாம். (5) (பரிபாடல் 13) ஸ்ரீதேவியின் வாஸஸ் தானமான உன் மலைபோன்ற திருமார்பைத் தொழுகின்றவர் களுக்கு சேதனர் அனைவரும் உரிமையுடன் அமரவேண்டிய மோக்ஷலோகம் மிகவும் உரிமையுடையதாய் விளங்குகிறது. . . . போரில் பகைவர்களை அழிக்கும் பெருமானே! பஞ்ச பூதங்களும், அவற்றின் ஐந்து குணங்களும், அவற்றை அறி யும் பஞ்சேந்திரயங்களும் உன்னதினமே. ஆகையால், எல் லாப் பொருள்களும் உன்னிடத்தில் தோன்றி வாழ்ந்து மறை பவையே . . . ஒளிபொருந்திய தந்தத்தையுடைய வராஹ மூர்த்தியாகவும் ஆகி, மூன்று வியூகமும் ஆகித் தலைமை பெற்ற உன்னை எவராலும் இயற்றப்படாததாய், அநாதியா யுள்ள வேதம் ஓதும் . . . உன்னைத் துதிப்பவர்கள் இரு வினைகளும் நீங்கப் பெறுவர்; ரக்ஷணமாகிற ஒரு செயலிலே ஊன்றி நிற்கும் திருவுள்ளத்தை உடையவன் நீ. (6) (பரி பாடல் 15) மணம்மிக்க கொத்துக்களை உடைய துழாய் மாலையை அணிந்த திருமால் கொடுத்தாலல்லது சிறந்த மோக்ஷமான பரம்பதத்திற்கு ஏற முடியுமோ? அரிதில் பெறும் மோக்ஷ லோகத்தை மாலிருங் குன்றத்தில் வாழ்வதா லேயே எளிதில் பெற்றுவிடலாம் . . . எல்லாவுலகிலும் தோன்றி மக்களுக்குப் பிறவித் துன்பத்தைப் போக்குகிறவன் அன்பே உருவெடுத்த மாலிருங் குன்றத்திருமால் . . . அனை வர்க்கும் நலத்தை விரும்பி அழகிய சிறப்பையும் புகழையும் உடைய வேதம் இப்பெருமைகளைத் திருமாலுக்குக் கூறுகை யால், (7) (பரிபாடல் திரட்டு) (தன்னைவிடப் பெரியவர் களுக்கும்) பணியாதிருக்கும் பெருமையை உடைய ரிஷப வாஹனனான சிவன் திரிபுரம் அழித்தபோது இமயமாகிய வில்லின் நாணியிருந்து, அவனுக்கு அப்புகழை விளைத்தவன் ஆதிசேஷனே. (8) (தொல்காப்பியம்) அழியாத பெரும் சிறப்பை உடைய ஸ்தானத்தையும், அழியாத சீர்மைமிக்க புகழையும் உடைய திருமால். (9) (முல்லைக்கலி 3) அழி யாத சிறந்த புகழையுடைய முல்லைத் தெய்வமான திருமால். (விரிவிற்கஞ்சி சில இடங்களே காட்டப்பட்டன).

இதுவரையில் எடுக்கப்பட்ட வேத வேதாந்த வாக்கியங் களிலிருந்தும், சங்ககாலப் பாடல்களிலிருந்தும் விஷ்ணுவே முழுமுதல்வன் என்னும் கொள்கையை உடைய வைணவ மதமே பண்டைக் காலத்தில் வைதிகமதமாக விளங்கிவந்தது என்று நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். தற்காலத்திற்

போல சிவன், சக்தி, குமரன், கணபதி முதலான தெய்வங்களைப் பரம்பொருள்களாகக் கொண்ட மதங்கள் அக்காலத்தில் வழக்கிலேயே இல்லை என்றும் விளங்கும். அநாதியான வேதங்களை விளக்கவந்த மிகத் தொன்மையானவையான மநு, விஷ்ணு, ஹாரீதர் முதலான ஸ்ம்ருதிகளையும், ஸ்ரீராமாயணம் மஹாபாரதம் என்னும் இதிஹாஸங்களையும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலான ஸாத்விக புராணங்களையும் ஆராய்ந்தாலும் இந்நிலையே காணப்படுகிறது. இந்தத் தொன்மையான மதத்தையே ஆழ்வார்களும், நாதயாமுனயதிவரர் முதலிய ஆசார்யர்களும் அரும்பாடுபட்டுப் பேணிப் பாதுகாத்தனர். ஆதிசங்கரரின் நூல்களென்று ஆராய்ச்சியாளர் அனைவருமிசைந்த உபநிஷத் ப்ரஹ்மஸூத்ர கீதா ஸஹஸ்ரநாம பாஷ்யங்களைப் பார்த்தாலும் விஷ்ணுவே ஸகுணப்ரஹ்மம் என்னும் கொள்கையுடையவரே அவர் என்று தெளிவாகப் புலப்படுகிறது. மத்வரும் விஷ்ணு பரத்துவத்தில் மிக்க உறுதி கொண்டவர் என்பது அனைவரும் இசைந்தது.

இவ்வண்ணமாக அநாதியான வேதம் தொடக்கமாக, வைதிகர்களான த்ரிமதாசார்யர்களீறுக அனைவராலும் ஆதரிக்கப்பட்டுவரும் வைஷ்ணவ மதத்தை இக்காலத்திலும் நிலைநாட்டிவரும் விஜயஸ்தம்பம் போலே எழுந்தருளியிருப்பவராய், அதனாலேயே ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய உபவேதாந்தாசார்யர் என்னும் விருதுக்கு முக்கிய லக்ஷ்யமாயிருப்பவராய், ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீவேதாந்த ராமாநுஜ மஹாதேசிக ஸ்வாமியுடைய ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம் வைஷ்ணவர்கள் அனைவராலும் கொண்டாடத் தக்கது. ஸ்வாமி சதாபிஷேகம் முதலான பல வைபவங்களையும் கண்டருளி இந்நிலவுலகுய்யும்படியாக நீண்டகாலம் எழுந்தருளியிருக்க வேண்டும் என்று ஸ்ரீமந் நாராயணனைப் பிரார்த்திப்போமாக.

ஸ்ரீ:

ஸத்ஸம்ப்ரதாயம்

(மன்னர்குடி வித்வான் ஸ்ரீ உப. வே.
ஸ்ரீநிவாஸ ராமானுஜாசாரியார் ஸ்வாமி)

அஸ்மத் குருபரம குரூந்யதிவர பூர்ணௌ
ஸயாமுநம் ராமம் |
பத்மாக்ஷநாத சடஜித் ஸேநேச ரமா ரமா
பதீந் வந்தே ||

ஸத்ஸம்ப்ரதாயம் என்பது மிக உயர்ந்த ஆசார்ய பரம்பரை என்றும், மிக உயர்ந்த ஆசார்ய பரம்பரையின் அனுஷ்டானம் என்றும் கூறலாம். ஆசார்ய பரம்பரையில் ச்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணன் ப்ரதம ஆசார்யனாக இருக்கிறார். பெருமாள் முதல் நம்மாசார்யர் ஈறாக உள்ள பரம்பரையைத் தான் ஆசார்ய பரம்பரை என்று சிறப்பித்து நிர்வஹிப்பர். பெருமாள் முதல் எம்பெருமானார் வரையிலுள்ள ஆசார்ய பரம்பரை எல்லா ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயங்களுக்கும் பொதுவாக உள்ள ஆசார்ய பரம்பரையாகும். ஸ்ரீ பாஷ்யகாரர் முதல் பல ஆசார்ய பரம்பரைகள் ஏற்பட்டு நம் பரத கண்டத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் மிகச் சிறந்த முறையில் விளங்கி வருகிறது.

எல்லா ஆசாரிய பரம்பரைகளிலும் பொதுவான அம்சங்கள் பல இருந்தாலும் சில சிறப்பான அம்சங்கள் மெருகூட்டப்பட்டு அந்தந்த ஸம்ப்ரதாயங்களுக்கு சிறப்பைக் கொடுக்கின்றன. அந்தந்த ஸம்ப்ரதாயங்களிலுள்ள மஹநீயர்கள் தங்கள் ஸம்ப்ரதாயத்திலுள்ள சிறப்பான அம்சங்களை அந்த ஸம்ப்ரதாயத்திலுள்ளவர்களுக்கு எடுத்துக்காட்டி அதில் இன்னும் விசேஷ ப்ரதிபத்தி ஏற்படும்படி செய்யவேண்டியது மிக அவசியம்.

பகவதாராதனம், பஞ்சஸம்ஸ்காரம், மந்த்ரோபதேசம், சரணாகதி முதலியன செய்தல் எல்லா ஸம்ப்ரதாயங்களுக்கும் பொதுவான அம்சங்கள்.

நம் ஆண்டவன் ஸம்ப்ரதாயத்தில் ப்ரதி தினம் பாதுகாராதனம் செய்தல், பாதுகை ஸாதித்தல் முதலான அம்சங்கள் மிகச் சிறப்பான அம்சங்கள். இவ் விஷயத்தைப் பற்றி பின்பு கொஞ்சம் விரிவாக ஆராய்ந்து விண்ணப்பிக்கலாம் என்பது அடியேன் அபிலாஷை.

முதலில் பெருமாள் முதலாக உள்ள ஆசார்ய பரம்பரையைக் கொஞ்சம் தெளிவு படுத்த விரும்புகிறேன். பெருமாள் முதல் எம்பெருமானார் வரையிலுள்ள பரம்பரை: பெருமாள், பிராட்டி, ஸேனை முதலியார்—நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, எம்பெருமானார்.

அவாப்த ஸமஸ்தகாமனுய் நிகில ஹேயப்ரத்யனீகனுய், ஸமஸ்த கல்யாண குணைபேதனுய் விளங்குகின்ற ஸ்ரீய: பதியான ஸ்ரீமந் நாராயணன் இவ் வுலகில் கர்மாதீனமாய் உழல்கின்ற ஜீவராசிகளை உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளம் கொண்டு பரம காருணிகனுனபடியாலே சாஸ்திரம் முதலானதுகளை ''காருண்யாத் சாஸ்த்ரபாணிநா'' என்ற முறையிலே கொடுத்தும் திருந்தாமல் தாங்கள் சென்ற வழியிலேயே சென்று கொண்டிருக்கும் ஜீவன்களைப் பார்த்து வருத்தமடைந்து தன் பர ஸ்வரூபத்தையும் விட்டு ராமகிருஷ்ணாதி விபவாவதாரங்களை எடுத்து மக்களைச் சிக்ஷித்து தானும் நடந்துகாட்டி சிக்ஷித்தார். தான் ஆசாரியனாக இருக்கத் திருவுள்ளம் கொண்டு கீதாசார்யனாக ஆகி பார்த்தனுக்கு உபதேசம் செய்யும் வியாஜமாக உலக மக்களுக்கு கீதையை உபதேசித்தார். இதைப்பற்றி ஸ்ரீ பாஷ்யகாரர் கீதா பாஷ்யத்தில் ''பாண்டு தனய யுத்த ப்ரோத்ஸாஹன வ்யாஜேன பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷ ஸாதனதயா வேதாந்தோதிதம் ஸ்வவிஷயம் ஞான கர்மானுக்ர ஹீதம் பக்தியோகம் அவதாரயாமாஸ''

இவ்வாறு உபதேசம் முதலியதைப் பெற்று சிலர் திருந்தினாலும் அதிகமானவர்கள் திருந்தாமலே பகவானை அடையும் உபாயத்தை மேற்கொள்ளாமலே இருந்தார்கள். இதைக் கண்டு பகவான் வருத்தமடைந்து இச் சேதனர்களை எவ்வாறு உஜ்ஜிவிப்பிக்கலாம் என்று எண்ணி தன் அம்சாவதாரர்களான ஆழ்வாராதிகளை அவதரிப்பித்தருளினார். இவர்களில் ஸேனை சாம்சரான நம்மாழ்வார் தோன்றினார்.

நம்மாழ்வார் காரிக்கும் உடையார் நங்கைக்கும் புத்ரராக திருக்குருகை என்னும் திவ்ய க்ஷேத்ரத்தில் அவதரித்தார்.

இவர் ப்ராகிருத சிசுபோல் ஸ்தன்யபானம் செய்யாமலேயே அபிவிருத்தராயிருந்து பகவத் பக்தியில் ஈடுபட்டு திருப்புளி யாழ்வார் (புளியமரம்) அடியிலேயே பகவத்தியானத்தி லிருந் தார். இவருக்கு மாதாபிதாக்கள் இட்ட பெயர் மாறன் என்பதாகும். இவர் உலக மக்களுக்கு ஹமை, குருடர், போலவும் இருந்தார். இவர் பிறந்த உடனே சடன் என் னும் வாயுவை நிராகரித்து திவ்ய ஞானத்துடனிருந்த படி யால் இவருக்கு சடகோபன் என்ற திரு நாமமும் ஏற்பட்டது. பகவத் பக்தியில் ஆழங்கால்பட்டு ஆழ்ந்திருந்தபடியால் ஆழ் வார் என்றும் சேதனர்களின் அபிமானத்திற்கு பாத்ர பூதரா யிருந்தபடியால் நம்மாழ்வார் என்றும் அழைக்கப்பட்டார்.

பகவந்நியமனத்தை யனுசரித்து ஸேனை முதலியாரும் நம் ஆழ்வாருக்கு பஞ்சஸம்ஸ்காரம் செய்வித்து ஸகல ரஹஸ் யார்த்தங்களையும் உபதேசித்துப் போந்தார். இக் காரணத்தி னல் இவர் ஞானம் அபிவிருத்த மடைந்து தான் இருந்த திருப்புளியாழ்வாரடியி லிருந்தபடியே எல்லா திவ்ய தேசத் தெம்பெருமான்களை ஸேவிக்க விழைந்தார். திவ்ய தேசத் தெம்பெருமான்களும் நான் முந்தி நான் முந்தி என்று போட்டி போட்டுக்கொண்டு ஆழ்வாருக்கு ஸேவை ஸாதித்து ''ஆழ் வாரே! என்னைப் பாடும், என்னைப்பாடும்' என்று எம்பெரு மான்கள் வேண்டியதாகவும் கூறுவர். வைகாசி விசாகத்திரு நக்ஷத்திர உத்ஸவத்தில் இவ் வைபவத்தை ஆழ்வார் திரு நகரியில் கண்டு கொள்ளலாம். ஆழ்வாரின் பக்தி ப்ரவாஹ த்தால் பெருக்கெடுத்ததுதான் திருவாய் மொழி பிரபந் தம். இவர் திருநக்ஷத்திரம் வைகாசி மாதம் விசாகம். இவ் விஷயங்களைக் கீழ்க்கண்ட ச்லோகத்தின் மூலம் அனுஸந்திக்க லாம்.

ஸேநேசஸ் ஸ்வயமாகம்ய ப்ரீத்யா ஸ்ரீநகரீம் சுபாம் |
சடகோபாயமுனயே திந்த்ருணீ மூல வாஸிநே |
தாபாதிபூர்வகம் மந்த்ரம் த்வயம் ச்லோகாதிகம்
க்ரமாத் ||

நம்மாழ்வாருக்குப் பின் நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத் தில் ஸ்ரீமந் நாதமுனிகள் ஆசார்யராவார்.

ஸ்ரீமந் நாதமுனிகள் விரநாராயணபுரம் என்று வழங்கும் காட்டுமன்னர் குடியில் அவதரித்தார். மிகப் பிரஸித்தமான ஷடமர்ஷணகோத்ரத்தில் தோன்றிய ஈச்வர முனிகளின் திருக்குமாரர். இவர் சிறந்த யோக நிஷ்டர். இவர் யாத்ரா

மார்க்கமாக திருக்குடந்தை எழுந்தருளிய சமயத்தில் ஸ்ரீ ஆராவமுதன் ஸந்நிதியில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ''ஆராவ முதே'' என்ற பதிகத்தை அனுஸந்திக்கக் கேட்டு இத் திரு வாய் மொழியின் மீதிப் பாசுரங்கள் எங்கே என்று அவர் களிடம் கேழ்க்க இப் பத்துப் பாசுரங்களைத் தவிர மற்றவை கள் தெரியாது என்று கூறினர்கள். மற்ற பாசுரங்களையும் அறிந்துகொள்ள உத்வேகங்கொண்டு ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளினர். அங்குள்ளவர்கள் ''கண்ணி நுண் சிறுத் தாம்பு'' என்னும் ஆழ்வார் விஷயமான ப்ரபந்தத்தை அப்ய ஸித்து இதைப் பன்னீராயிரம் ஆவ்ருத்தி செய்தால் ஆழ்வார் அனுக்ரஹம் கிட்டும் என்று விண்ணப்பித்தார்கள். அவ் வாறே ஆவ்ருத்தி செய்து யோக தசையில் ஆழ்வாரை ஸாக்ஷாத்கரித்து அவர் அனுக்கிரஹத்தினல் திருவாய்மொழி முதலான நாலாயிர திவ்ய பிரபந்தங்களையும் பெற்றார். நாத முனிகள் மூலமாகத்தான் திருவத்யயனோத்ஸவம்—திவ்ய ப்ர பந்தங்கள் ஸேவிப்பது முதலான க்ரமங்கள் ஏற்பட்டு நம் ஸித்தாந்தம் தழைத்தோங்கத் தலைப்பட்டது. இதைக் கரு தியே வேதாந்த தேசிகனும் ''நாதோபக்ஞம் ப்ரவ்ருத்தம்'' என்று ஸாதித்தருளினர்.

நாதமுனிகள் சிஷ்யர் உய்யக்கொண்டார். இவருடைய ஸம்ஸ்கிருதப் பெயர் புண்டரீகாக்ஷர் என்பது. இவர் சிஷ்ய குண பூர்த்தியுடையவர். உய்யக்கொண்டார் என்பது இவருடைய சிஷ்ய குணபூர்த்தியைக் காட்டக்கூடிய காரணப் பெயராகும்.

ஒரு சமயம் உய்யக் கொண்டார் ஆசார்யனின் நியமனப்படி அவர் பத்னியை மாத்ருகிருஹம் அழைத்துச் செல்ல அங்கே இவருக்கு நாதமுனிகள் பத்னி பழைய அன்னத்தைக்கொடுக்க அதையும் ஆசார்ய ப்ரஸாதம் என்று சிரஸா மேற்கொண்டு புஜித்தார். பிறகு திரும்பி வந்த உய்யக் கொண்டார் மூல மாக விருத்தாந்தம் அறிந்த நாதமுனிகள் சிஷ்யகுண பூர்த் தியை வெளிப்படுத்தி எம்மை உய்யக் கொண்டீரே என்று ஆலிங்கனம் செய்தருளினர். இதனல்தான் இவருக்கு உய் யக் கொண்டார் என்ற திருநாமம் ஏற்பட்டது.

இவர் சிறுயர் மணக்கால் நம்பி. நாதமுனிகளின் பேர ரான ஆளவந்தாரைத் திருத்தி பெரிய ராஜ போகத்திலிருந்த அவரை ஸந்யாஸாச்ரமத்தை மேற்கொள்ளச் செய்து ஸம்ப்ர தாயப் பிரவர்த்தகராகச் செய்த பெருமை இவரையே சாரும். ஸ்ரீ ஆளவந்தாரை ஸித்தாந்தப் ரவசனத்தில் ஈடுபடுத்த ஆறு

மாதகாலம் தூதுவளைக் கீரைக் கொண்டு கொடுத்து அமுது செய்வித்தார் என்றும் பிறகு ஆளவந்தார் மணக்கால் நம்பியை ஆச்ரயித்து ஸித்தாந்த ப்ரவர்த்தகராஞர் என்றும் கூறுவர். இதன் மூலம் ஸச்சிஷ்யர்களை ஸித்தாந்தத்தில் சேர்ப்பதற்காக ஆசார்யர்களும் சிஷ்யர்களுக்கு சுச்ரூஷை செய்தார்கள் என்று தெரிகிறது.

இவர் சிஷ்யர் ஸ்ரீ ஆளவந்தார். இவர் நாதமுனிகளின் குமாரரான ஈச்வர முனிகளின் குமாரர். இவருக்குப் பிதா வைத்த திருநாமம் யமுனைத்துறைவர் என்பது.

இவர் ராஜாவின் ஆஸ்தான பண்டிதரான ஆக்கியாழ்வானை வென்று ராஜாவுக்கும் ராஜமஹிஷிக்கும் ஏற்பட்ட பணயத்தின்படி பாதி ராஜ்யம் பெற்ருர். ராஜ மஹிஷி யமுனைத்துறைவர்தான் ஜயிப்பார் என்று கூறினள். ராஜாவோ ஆக்கியாழ்வான் ஜயிப்பார் என்று கூறினர். ராஜ மஹிஷி சொன்னபடி இவர் ஜயித்துவிட்டபடியால் ஜயித்த இவரை ''என்னை ஆளவந்தீரோ'' என்று கூறிக்கொண்டாடினள். ஆகையால் தான் இவருக்கு ஆளவந்தார் என்ற திருநாமம் ஏற்பட்டது.

இவர் சிஷ்யர் பெரிய நம்பி. இவர் எம்பெருமானரின் ஆசார்யன் என்ற பெருமையை உடையவர். சோழ அரசனின் கோபத்துக்கு இலக்காகி உயிர்துறந்த உத்தமர்.

இவருடைய சிஷ்யர் எம்பெருமானர். இவருக்குப் பல திருநாமங்கள் உள்ளன. இராமானுஜர், உடையவர், பாஷ்யக்காரர், யதிராசர், இளையாழ்வார், எம்பெருமானர் முதலியன.

எம்பெருமானர் ஸ்ரீ பெரும்பூதூரில் கேசவஸோமயாஜி என்பவருக்குப் புத்ரராக அவதரித்தார். இவர் காஞ்சீபுரத்தில் யாதவ ப்ரகாசரிடத்தில் பூர்வ பக்ஷ கிரந்தம் ஸேவித்துக் கொண்டிருக்கையில் உபநிஷத்திலுள்ள ஓர்வாக்யத்துக்கு பாஷ்யகாரர் பொருத்தமான அர்த்தம் சொல்ல அதைக்கேட்டு வியந்த யாதவப்ரகாசர் இவரிடத்திலேயே சிஷ்யவ்ருத்தி செய்யத் துடங்கிவிட்டார். பிறகு ஸ்ரீ ஆளவந்தார் நியமனத்தின் பேரில் பெரிய நம்பி பாஷ்யகாரரை திருக்கோயிலுக்கு (ஸ்ரீரங்கம்) அழைத்துச் செல்ல அதற்குள் ஆளவந்தார் திருநாட்டுக்கு எழுந்தருள அவர் அபிப்ராயங்களை அறிந்து பூர்த்தி செய்து திக் விஜயம் செய்து ஸித்தாந்த ப்ரவசனம் செய்து வந்தார்.

இவர் வைபவத்தை முழுதும் எழுத ஆதிசேஷனாலும் முடியாது.

எம்பெருமானார் அளவாகவே ஆசார்ய பரம்பரையை நிறுத்திக் கொள்கிறேன். அதற்குப் பின்னுள்ள ஆசார்ய பரம்பரையை அவரவர்கள் ஸம்பிரதாயப்படி அறிந்துகொள்ளவும். ஸ்ரீ வேதாந்த தேசிகரும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார கிரந்தத்தின் ஆரம்பத்தில் குரு பரம்பரையை வர்ணித்து எம்பெருமானார் பர்யந்தம் சொல்லிப் பிறகு ''எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலாச்ரயித்த முதலிகளைத் தந்தாம் ஸம்ப்ரதாயப்படிகளிலே அறிந்து கொள்வது'' என்றருளிச் செய்தார்.

இனி முனித்ரய ஸம்ப்ரதாயத்தைப் பற்றி சிறிது கூறுகிறேன். முனித்ரய ஸம்ப்ரதாயத்துக்கு ப்ரதான ஆசார்யன் திருக்குடந்தை தேசிகன் என்கிற கோபால மஹா தேசிகன் ஆவார். முனித்ரயம் என்பது நாதமுனி, யாமுனமுனி, ராமானுசமுனி என்ற மூன்று முனிகளின் பரம்பரை என்றும், திருக்குடந்தை தேசிகனிடத்தில் ஆச்ரயித்து ஸன்யாஸாச்ரமத்தை மேற்கொண்ட ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் ரங்கநாத மஹா தேசிகன், வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் என்ற மூன்று முனிகளின் பரம்பரை என்றும் கூறுவர்.

இவர்களில் வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் தான் ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயத்துக்கு மூலமாவார். ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாய பரம்பரை தற்பொழுதுள்ள ஸ்வாமி வரை:

ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன், ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன், ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன், ஸ்ரீபாதுகாஸேவக ராமானுஜ மஹா தேசிகன்(ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன்), ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன், ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன், ஸ்ரீ ரங்கநாத மஹா தேசிகன், ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்: இவர் யாஷ்யகாரர் அம்சமென்று கூறப்படுவார். இவர் தஞ்சை ஜில்லா வழுத்தூரில் ஸ்ரீநிவாஸாசாரியருக்கு குமாரராய் அவதரித்தார். திருக்குடந்தை தேசிகனிடத்தில் ஸகலார்த்தங்களையும் க்ரஹித்தார்.

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன்: இவர் ராஜமன்னர்குடிக்கு அடுத்துள்ள விளக்குடியில் ஈயுண்ணி பாரத்வாஜ

கோத்ரத்தில் அவதரித்தார். இவரைத் திருத்துறைப்பூண்டி ஆண்டவன் என்பர். ஸ்ரீரங்கம் வேதாந்த ராமானுஜ மஹா தேசிகனை ஆச்ரயித்தார்.

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன்: இவர் பெருமாள் கோவிலில் (காஞ்சிபுரம்) ஸாமசாகையில் கிருஷ்ணமாசாரியருக்குத் திருக்குமாரராய் அவதரித்தார். பால்யம் முதல் விரக்தாக்ரேஸராயிருந்ததால் இவர் வத்தல் ஸ்வாமி என்றும் அழைக்கப்பட்டார். இவர் திருநாமமே பெரியாண்டவன் என்பது.

ஸ்ரீ பாதுகாஸேவக ராமானுஜ மஹா தேசிகன்: இவர் காஞ்சிபுரத்துக்கடுத்த வேளியநல்லூர் என்னும் ஸ்ரீக்ராமத்தில் ஷண்மார்ஷண கோத்ரத்தில் ஸ்ரீ விஜயராகவாசாரியருக்குத் திருக்குமாரராய் அவதரித்தார். இவர் சின்னண்டவன் என்று பிரசித்தி பெற்றவர். ஜயந்திநிர்ணயம், ஆஹ்நிக வ்யாக்யானம் முதலிய கிரந்தங்கள் செய்தருளி இருக்கிறார்.

ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்: இவர் தஞ்சை ஜில்லா தேரழுந்தூரில் அவதரித்தவர். இவர் பல திவ்ய தேசங்களுக்குப் பாதயாத்ரை செய்து தன் மதுரமான பேச்சாலும், அனுஷ்டானத்தாலும் ஜனங்களை வசீகரித்து தன்னிடத்தில் அசையா அன்புகொள்ளச் செய்த மஹான். ஆகையால் தான் இவரை அபிமானத்தால் ஜனங்கள் நம்மாண்டவன் என்று அழைக்கிறார்கள்.

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன்: இவர் ஆக்கூரில் அவதரித்த படியால் ஆக்கூர் ஆண்டவன் என்று அழைக்கப்படுகிறார். ஜனங்களின் அன்பு காரணமாக எங்களாண்டவன் என்றும் கூறுவர். பல திவ்ய தேச யாத்ரை செய்து ஆச்ரமத்தில் நித்யாராதனம் நிர்விக்னமாய் நடக்க உதவிய மஹானுபாவர்.

ஸ்ரீ ரங்கநாத மஹா தேசிகன்: ராஜமன்னார்குடிக்கு அருகிலுள்ள தென்பரையில் அவதரித்ததால் தென்பரை ஆண்டவன் என்று அழைக்கப்படுகிறார். யதிகளின் கிரியைகளில் கொஞ்சமும் வழுவாமல் கடைப்பிடித்த ஆசாரசீலர். "ஸம்ப்ரதாயலோஷ்டாச்ம காஞ்சன:" என்பது முற்றிலும் இவருக்குப் பொருந்தும்.

ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் (வர்த்தமான ஆண்டவன்): இவர் திருக்குடந்தையில் அவதரித்தபடியால் திருக்குடந்தை ஆண்டவன் என்றும் அழைக்கப்படுகிறார். அநேகருக்குப் பலகாலம் அத்யாபகராக கைங்கர்யம் செய்து பல

பூர்வாசார்யர்களின் அனுக்ரஹத்துக்கு பூர்ணபாத்ரமானவர். பூர்வாச்ரமத்திலும் வாக்மாதுர்யத்தினால் பல ஜனங்களைத் தன் வசப்படுத்தினர். தற்பொழுது ஸன்யாஸாச்ரமத்திலும் பல ஆயிரக்கணக்கான மைல்களை பாதயாத்ரையாகவே சென்று திவ்ய தேச எம்பெருமான்களை மங்களா சாஸனம் செய்து, ஆங்காங்குள்ள மக்களை மதுரமான உபன்யாஸத்தாலும், தன் அனுஷ்டானத்தாலும் வசீகரித்து திக்விஜயம் செய்து வரும் உத்தமர். இவர் ஷஷ்டியப்த பூர்த்தி உத்ஸவம் தான் தற் சமயம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டவன் ஸம்ப்ரதாயத்தில் தினம் பாதுகாராதனம் செய்தல், பாதுகை ஸாதித்தல் சிறப்பான அம்சம் என்று முன்பே கூறப்பட்டது.

இந்த பாதுகாராதனத்திற்கு வழி வகுத்தவர் ஸ்ரீ பரதாழ்வார் ''யதுபக்ஞ மசேஷத: ப்ருதிவ்யாம் ப்ரதிதோ ராகவ பாது காப்ரபாவ:'' என்று தேசிகன் அருளிச் செய்கிறார். தினம் பாதுகாராதனம் செய்தல் ப்ரதானம், பாதுகையை சிரஸில் தினமும் தரிக்கவேண்டியது அவசியம் என்றும் நிர்வஹித் துள்ளார். பாதுகை என்றால் ஆசார்யர்கள் என்பது அர்த் தம். பாதுகாராதனம் என்பது ஆசார்யாராதனம் என்பது சொல்லாமலே விளங்கும்.

பாதுகாராதனத்தை பரதன், முனிவர்கள் முதலானோர் தின மும் செய்து வந்தார்கள் என்பது பாதுகாஸஹஸ்ரத்தின் மூல மாக நன்கு விளங்குகிறது.

ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரத்தில் ''பரதாராதிதாம் தாராம் வந்தே ராகவபாதுகாம்'' என்றும் ''அனுதினம் ரிஷயஸ் த்வாம் அர்ச் சயந்த்யக்ன காரே'' என்றும் ''ஸக்ருதபி வினியுக்தம் த்வத் ஸபர்யாதிகாரே'' என்றும் ''த்வதுபாஸன ஸம்ப்ரதாயவித்பி: ஸமயே ஸாத்வத ஸேவிதே நியுக்தா:[பரதவ்ரதி நோபவாம்பு ராசிம் கதிசித் காஞ்சன பாதுகே தரந்தி)'' என்றும் ''பரத ஸமய ஸித்தாம்பாதுகே பாவயன் த்வாம்))'' என்றும் விவரித் திருப்பதானது பாதுகாராதனம் தினம் செய்ய வேண்டுமென் றும் அவ்வாறு செய்வதனால் சிறந்த ச்ரேயஸ் ஏற்படுகிறதென் றும் தெரிகிறது.

பாதுகைகளை தினமும் சிரஸ்ஸில் தரித்துக் கொள்வதும் மிகச் சிறந்தது என்றும் கூறப்படுகிறது. ''பூர்ண ப்ரபத்தே: பலம் நிச்சின்வந்தி விபச்சித: சமதனு: நித்யம் யதுத்தம ஸனம்'' என்றும் ''உத்தம்ஸ ஸயந்தி கிருதின: க்ஷண முத்த

மாங்கை:'' என்றும் ''அத ஏவதேவி ததன்யத நா: சிரஸா வஹந்தி பவதீம் க்ருதிந:'' என்றும் ''மூர்த்நா பஜந்த்யனு தினம் முனிதர்மதீரா:'' என்றும் கூறியிருப்பதால் பால் தினமும் பாதுகைகளை சிரஸாவஹிக்க வேண்டும் என்பது நன்கு தெரிகிறது.

இந்த ப்ரமாணங்களை யறிந்து தான் ஸ்ரீமதாண்டவன் ஸம் பரதாயத்தில் வந்துள்ள ஆசார்யர்கள் ப்ரதிதினம் பாதுகா ராதனம் செய்வதையும் பாதுகை ஸாதிப்பதையும் தங்கள் நித்ய கர்மாவாகக் கொண்டு செய்து வருகிறார்கள்.

இவ் விஷயங்களை யறிந்தும் பிறருக்கு எடுத்துச் சொல்லி யும் நாம் கிருதார்த்தர்களாவோம்.

ஸ்ரீ:

மஹாகவி ஸ்ரீவேங்கடாத்வரீ ஸேவித்த திருக்குடந்தை

(ஸ்ரீ உப. வே. நாச்சியார்கோயில் நடாதூர் ராகாவாசார்யர் ஸ்வாமி)

சீரார் செந்நெல் கவரிவீசும் செழுநீர்த் திருக்குடந்தையின் பெருமையும், அத்திவ்ய தேசத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீமத் அபர்யாப்தாம்ருதனின் வைபவமும், த்ரிகரணங்களுக்கும், விஷயமாகாதவையே. ஆயினும் புராணங்களின் மூலமாகவும், ஆழ்வாராசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் வாயிலாகவும் ஒருவாறு அச் சிறப்புக்களை யாவருமறிந்து இன்புற முடிகின்றது.

ஒரு ஸமயம் திருக்குடந்தைக்கு எழுந்தருளி ஸ்ரீ ஆராவமுதாழ்வானை மங்களா சாஸனம் செய்ய நேர்ந்ததின் பாக்யாதிசயத்தாலன்றே, 'தமிழ்மறை தந்த வள்ளல்' என்று ஸ்ரீமந் நாதமுனிகள் போற்றப்படுகின்றார். இத் திருக்குடந்தையையும் 'திவ்ய ப்ரபந்தம் விளைந்த திருப்பதி' என்று நம் முன்னோர்களான மஹான்கள் அழைக்கலாயினர் என்பதையும் கற்றறிந்தோரனைவருமறிவர். பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசைப்பிரான், திருமங்கை மன்னன், நம்மாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் முதலியவர்களின் பாசுரங்கள் மூலமாகவும், கவிச்சக்ரவர்த்தியான கம்பநாட்டாழ்வார், திவ்ய கவி பிள்ளைப் பெருமாளையங்கார் முதலியோர்களின் சிறந்த பாடல்கள் மூலமாகவும், பல்வேறு தமிழ் நூல்கள், பற்பல ஸம்ஸ்க்ருத கிரந்தங்கள் வாயிலாகவும் திருக்குடந்தையின் பெருமையை மேலும் அறியலாகும். ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் 'ஆராவமுதே' என்ற பதிகத்தின் ஆழ் பொருளை விளக்கியருளியுள்ளார். அவ்வப்போது தோன்றி மறைந்த பற்பல வித்வான்களும் கவிகளும், திருக்குடந்தையைப் பற்றிப் போற்றி வாழ்ந்து வந்துள்ளார்கள். அவர்களுள், மஹா கவியாக விளங்கிப் பற்பல தேசங்களில் பல்லோராலும் போற்றப்பட்ட அரசாணிப்பாலை ஸ்ரீ வேங்கடாத்வரீ என்பவரும்

ஒருவர் ஆவர். அம்மகா கவி ஸம்ஸ்க்ருத ஸாஹித்யத்திற்குச் செய்துள்ள பேருபகாரம் மிகச் சிறந்தது. அக்கவி இப் பாரத தேசத்தில் ஆங்காங்கு தான் வாழ்ந்திருந்த காலத்திற் கண்ட காட்சிகளை மிகமிக அழகாக விளக்கியுள்ளார். அதில் கும்ப கோணம் ஸ்ரீ சார்ங்கபாணி வர்ணனம்—இரண்டே சுலோகங் களில் அமைந்துள்ளதாயினும்—மிகவும் அர்த்த புஷ்டியுடன் கூடியவை. ஆழ்வார் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளை யனு ஸந்தானம் செய்து வந்ததின் பயனாகவே ஸ்ரீ வேங்கடநாத்வரீ, தோஷலேசமுமின்றி அழகுற அச் சுலோகங்களில் வர்ணித் துள்ளார். அவற்றுள் முதல் சுலோகத்தில் ''மல்லிகை மலர்க் குவியலான படுக்கை போலத் தோன்றும், பணிமணி மண்ட லத்துடன் பிரகாசிக்கின்ற ஆதிசேஷதல்பத்தில் சயனித்துக் கொண்டு யோக நித்திரை புரிந்தருளும், தஹராகாச குஹாந் தர் வர்த்தியான தேவதா ஸார்வபௌமன் (ஸ்ரீசார்ங்கபாணி) ஸர்வபாபஹரமான கும்பகோண க்ஷேத்ரத்தில் பக்த ஜனங் களால் ஸேவிக்கப்படுகிறார் என விவரிக்கிறார். சுலோகம் வருமாறு:

''மணிமயபணிதல்பே மல்லிகா புச்சகல்பே
சமித ஜகதபத்ராம் ஸம்ச்ரயன்யோக நித்ராம்
தஹர குஹரவர்த்தீ தேவதா சக்ரவர்த்தி
தலித துரித பாணே த்ருச்யதே கும்பகோணே''

(விச்வ. 459)

இந்த ச்லோகத்தில் ஸ்ரீவேங்கடநாத்வரியின், பதப்ரயோகங் கள் திருமழிசை யாழ்வாரின் வரலாற்றிற் காணப்படும் தியான யோகஸமாதியில் ஆழ்வார் ஆழ்ந்திருந்த நிலை, சைவ மதத்திலிருந்து திரும்பி, ஸகல பாபநிவ்ருத்தியையும் பெற்ற நிலை, பேயாழ்வாரால்—தேவாதி தேவன் என்று உபதேசிக்கப் பெற்ற நிலை ஆழ்வார் தன் ஹ்ருதய கமலத்தில் நித்யவாஸம் செய்யும் எம்பெருமானைக் காட்டியநிலை, 'நடந்த கால்கள் நொந்தவோ' என்றுள்ள பாசுரத்தில் 'கிடந்தவாறு எழுந் திருந்து பேசு' என்ற பிரார்த்தனைக் கிணங்கி, அர்ச்சாவதார எல்லையைக் கடந்து, விபவாவதாரத் தன்மை பெற்று 'உத் தான சாயியாக' எழுந்து பேசப்புகுந்த ஆராவமுதாழ்வானின் நிலை முதலியனவும், ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு ஸேவைஸாதித்த தன் பயனைக் கிடைத்த யோகநிலை முதலியனவும், ஸூசிபிக் கப்படுகின்றன.

ஸ்ரீ வேங்கடநாத்வரீ, ஸ்ரீமதபர்யாப்தாம்ருதஸ்தவ நேரில் ஸேவிக்கும்போது சாந்தோக்யத்திலுள்ள 'அதயதி தமஸ்மின்

ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் எனும் தஹர வித்யா ஸ்ரீ பாஷ்ய தஹராதிகரண-காமாத்யதிகரண ஸ்ரீஸூக்திகளும், ஸ்ரீமத் வேதாந்த தேசிகனின்-த்ரமிடோப நிஷத்தாத்பர்ய ரத்னவளி ஸ்ரீஸூக்தியிலுள்ள நாயபுத்வாத் ஸ்ராணும் ஸர்வ ச்ரெளஷ்ட்யாதியோகாத் என்ற வாக்ய பங்திகளும் நெஞ்சி லோடவே—அதனையனுஸரித்து தஹர குஹரவர்த்தி தேவதா சக்ரவர்த்தீ' என்று ஸஹ்ருதய ஹ்ருதயாவர்ஜக ரீதியில் துதித்தருளியுள்ளார் போலும்.

இதனைத் தொடர்ந்துள்ள இரண்டாவது சுலோகத்தின் கருத்தாவது—''இத்தகைய சிரும் சிறப்பும் பெற்றுள்ள திருக் குடந்தையில் வாழும் சிறந்த பல த்விஜாதியினர் திருக்காவிரி யில் தீர்த்தமாடித் தூய்மை பெற்று, ஜபதபாதிகளையும் யாகம் அக்நிஹோத்ராதிகளையு மநவரதமநுஷ்டித்துக்கொண்டு உபயவேத பாராயண நிரதர்களாய்ப் பிறவிப் பிணியைத் தீர்த்திடும் ஸ்ரீ சார்ங்கபாணிப் பெருமாளைப் பக்தியுடன் அடிபணிந்தும், துதித்தும் காலங்கழித்து வருகின்றார்கள்''. அச்சுலோகமும் வருமாறு:

ஸ்னத்வா ஸஹ்யஸுதாஜலே சுசிதமாபூத்வா ஜபாதிக் ரமை:
ஹுத்வாக்னௌ சஹவி: க்ருதேதர கிராம் க்ருத்வாச பாராயணம்)
நத்வா சார்ங்கதரம் பவாமயஹரம் ஸ்துத்வாசதம் பக்தித:
ச்ரேஷ்டா: காலமமீ கூபிபந்தி பஹவ: ஸ்ரீகும்பகோணேத் விஜா:

(460 சுலோகம்)

"நலத்தான்மிக்கார் குடந்தைக் கிடந்தாய்'

"பொன்னுர் சார்ங்கமுடைய வடிகளே'

"தண்குடந்தைக்கிடந்தமாலே நெடியானே யடிநாயேன் நினைந்திட்டேனே'

"விலங்குநூலர் வேதநாவர் நீதியான கேள்வியார் வலங்கொளக் குடந்தையுள் கிடந்த மாலுமல்லையே'

"சூழ்புனற் குடந்தையே தொழுமின் நற்பொருள் காண்மின் பாடி நீருய்மின்'

"வாழ் தொல்புகழார் குடந்தைக் கிடந்தாய் வானோர் கோமானே'

'கிடந்த நம்பி குடந்தை மேவி'

'பொன்னி மணிகொழிக்கும் பூங்குடந்தைப் போர் விடையை'

''செல்வம்மல்கு தென்திருக்குடந்தை—அந்தணர்
மந்திரமொழியுடன் வணங்க—ஆடரவமளியி
லறிதுயிலமர்ந்த பரம—நின்னடியிணை பணிவன்

வருமிடரகல மாற்றே வினையே'' என்றுமுள்ள பற்பல ஆழ்வார்களின் பாசுரப்பகுதிகளையும் மற்ற கவிகளின் உயர்ந்த கருத்துக்களையும் இவ்விரு சுலோகங்களில் காணப்படும் பதங்கள் குறிப்பாயுணர்த்துகின்றன என்று கூறுவது மிகையாகாது. இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த இத் திருக்குடந்தையில் எத்தனை யெத்தனையோ மஹான்களும், ஆசார்ய ஸார்வபௌமர்களும், வித்வான்களும், கவிகளும் அவ்வப்போது தோன்றிக் கீர்த்தி மூர்த்திகளாகத் திகழ்ந்துள்ளனர் என்பதை நூல்களின் வாயிலாகவும், பெரியோர்களின் மூலமாகவும் அறியலாம். நிற்க. தற்சமயம் ஸ்ரீமன் முனித்ரயஸ்தாபக சார்யராக எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன், இத் திருக்குடந்தையின் பன்னெடுங்காலப் பெருமைகளுக்கேற்ப 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வசனத்தை யொட்டி, உயர்ந்ததொரு மஹத்ஸந்ததியில் அவதரித்தவர். இளமையிலேயே நன்கு கற்றுணர்ந்து தேறியவர்.

ஆராவமுதாழ்வானிடம் ஆழ்ந்த பக்தியுடன் பல்லாண்டுகள் அத்யாபகஸேவா துரந்தரராய் எழுந்தருளியிருந்தவர். சுருங்கக் கூறின் ஸகல கல்யாண குணநிதி என்பதில் மிகையிலை. இளமைப் பருவத்தில் அடியேன் திருக்குடந்தை—ஸன்னிதித் தெருவில் இந்த ஸ்வாமியுடன் நெருங்கிப் பழகநேரும் பாக்யம் பெற்றவன். ஸ்ரீ ஸ்வாமியும் அடியேனும், ஸ்ரீ சக்கரத்தாழ்வான் ஸந்நிதிக்கு, வடக்குப் பகுதியில் உள்ள –ராஜா–வேத சாஸ்திர பாடசாலையிற் சேர்ந்து, அங்கு அச்சமயம் எழுந்தருளி யிருந்த வித்வான்களிடம் இரண்டொரு ஸம்வத்ஸரகாலம், காவ்ய சாஸ்த்ரங்களைப் பயில நேர்ந்தது பற்றி ஸஹபாடிகளாகி நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றிருந்தோம். பிறகு அடியேன் திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜில் சேர்ந்து வித்யார்த்தியான காரணத்தால்—ஸ்ரீ ஸ்வாமியைப் பிரிய நேர்ந்ததாயினும், அடிக்கடி பரஸ்பரம் ஸந்திக்கும் வாய்ப்புப் பெற்றிருந்தோம். ஸந்திக்க நேர்ந்த

போதெல்லாம் ஸ்ரீ ஸ்வாமி ஸஹஜமான மித்ரபாவத்தை யொட்டிக் குசலப்ரச்னதிகள் செய்தருளும்படியா யிருக்கும். சுமார் 45 வருஷங்களுக்கு முன்பு நிகழ்ந்த இந்த நிகழ்ச்சிகளைப் பரஸ்பரம் எண்ணுந்தோறும் களிப்படையவே நேர்ந்திடும். அவைகளை எழுத்தில் வடிக்க முடிந்திடாது. அவை நிற்க.

ப்ரக்ருதம்—அடியேன் சென்ற பங்குனி பத்தாம் தேதிக் காலையில் (24-3-67) ஸ்ரீ கண்ணன் ஸ்வாமி யென்ற பூர்வாச்ர மத்திருநாமத்தால் அன்புடன் அனைவராலும் போற்றப்படும் ஸ்ரீமத் திருக்குடந்தை யாண்டவனை மதுரையில் நேரில் ஸேவிக்கும் பேறு பெற்றேன். அப்போது வழக்கத்தை யனுஸரித்துப் பரமக்ருபையோடு க்ஷேமாதிகளை விசாரித்தருளியா யிற்று. அச்சமயம் அவ்விடத்திற் குழுமியிருந்த வித்வான் களிடம் 'अयं आत्मसमः सखा' என்று ஹார்த்தமான ப்ரேமாதி சயத்தை வெளியிட்டு அடியேனைச் சுட்டிக்காட்டி அறிமுகப் படுத்தருளியாயிற்று. அவ்வமுத வாக்யத்தைச் செவிமடுத்த அடியேன் — ஸவிநயம் — 'ஸத்யம் தன்யோஸ்மி' என்று விண்ணப்பித்து விடை கொண்டேன்.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவம்

(ஸ்ரீ உப. வே. P. S. ராமானுஜாசார்யர் ஸ்வாமி,
அண்ணாமலைநகர்)

தற்போதைய சூழல்கள் பல நன்னெறிகளை நாம் மேற் கொள்ள முடியாத நிலையில் நம்மைத் துயர்ப்படுத்து கின்றன. நம்முன்னோர் தவப் பயனாகவோ, நம் பூர்வஜன்ம பயனாகவோ ஸதாசார்ய கடாக்ஷ மேற்பட்டு 'ப்ரபன்னர்ப்பணம்' என்னும் மஹோன்னதமான கார்யம் நிறைவேறிய பின்பாவது, திவ்ய சரண்ய தம்பதிகளின் திருவுள்ளமுகக்கும் சிற்சில கார்யங்களை யாவது தனந்தினகமாக நாம் மேற்கொள்ள வில்லையானால், நமது உத்தர கிருத்யம் மிகவும் தாஸ்ய நிலையை எய்துவ தாகும். விருத்தி கர்மிதர்களாக, உத்யோகத்தை மேற் கொள்வது, அதையடி யொற்றி, நடையுடை வேஷமுதலிய வற்றைத் திருத்திக் கொள்வது இன்றியமையாததா யிருப் பின், வேறு கதியில்லை என்ற நிலையில் அதை மேற்கொண் டாலும், மற்ற அம்சங்களில், ஸ்நானம், ஸந்த்யை, பாரா யணம், பகவதாராதனம், பாகவதாசார்யாதி ப்ரதிபத்தி முதலிய சிறந்த தர்மங்களைச் சிறிதும் உபேக்ஷிக்க ப்ரஸக்தி யில்லை.

பெரும்பான்மையோரான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குத் தேவ தாந்தரப்பற்று ஒரு சிறிதும் குற்றமெனப் படுகிறதில்லை. காரணம், அறிவின்மையா? அல்லது பிடிவாதமா என்பது விளங்கவில்லை. பகவானுடைய ஸ்வரூபம் நம்முடைய ஸ்வ ரூபம் முதலியவற்றை யுள்ளவாறு அறிந்தால், பகவானொரு வனே புருஷன்; ஏனைய ஜீவர்கள் மகளிர் போன்றவர் என்பது பெறப்படுகிறது:—அதாவது பகவான் தடையற்ற சுதந்தர புருஷன்; அவனையிட்டு நாம் பராதீனர்களான படியால் மக ளிர் போன்றவர்களெனப் பட்டது. எனவே, ஒரு ஸ்த்ரீ, தன் பர்த்தாவைப் போற்றிவரும் முறையில் நாம் எம்பெரு மானைப் போற்ற வேண்டியவர்களாதலின், அவனைத் தவிர மற்ற தேவர்களைப் பற்றுதல் சாஸ்த்ர விரோதமாகும். எனவே, 'தேவ மற்றறியேன்' என்ற நிலையில் 'ஏகாந்தி' என்ற வ்யபதேசத்தைப் பெறுதற்குத் தேவதாந்தர

ஸங்கத்தைக் கைவிடுதல் வேண்டும். இதனால் இதர தேவதா நிந்தையைச் செய்ய வேண்டும் என்பது கருத்தல்ல. நடுநிலை புத்தியை அடைய வேண்டும் என்பதே கருத்து. எனவே, 'ஏகாந்தி' என்போர், தமக்கு வேண்டிய பயன் எல்லாவற்றையும் பகவானொருவனிடமே வேண்டிப் பெறுமியல் புடையராவர்.

நமக்கு இவை அநுகூலமானவை, இவை மாறுபட்டவை என்று அறிந்து துணியும் அறிவாற்றலை யடையே மல்லேம் நம் சிற்றறிவிற்கு ஒரு சமயம் அநுகூலமானதாகப் புலப்பட்டதே காலாந்தரத்தில் நேர் மாறுபட்டதாகத் தோன்றுதலும் கூடும். எனவே, நாம் எதையும் பகவானிடம் ப்ரார்த்தித்துக் கேட்க வொண்ணாது; அவனுடைய திருவருளொன்றையே நாம் அவனிடம் ப்ரார்த்திக்க வேண்டும். நமக்குரிய நன்மை தீமைகளை நாடித் தெரிந்து கொள்ளக் கூடிய ஸர்வக்ஞனை அவன் நம்பால் அருள் புரிந்து அவ்வப்போது நமக்கு வேண்டியவற்றை அளிப்பான் என்ற உறுதியோடிருப்பவர் 'பரமைகாந்திகள்' என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றனர். பரமனுடைய திருவடிவாரங்களை எய்தி மகிழ்தற்குரிய திருவருளைப் பெறுதல் என்ற ஒரே பயன்தான் நம்மால் வேண்டற்பாலது. அந்த அருள் மறுமையில் நமக்கு அழிவிலாப் பெருஞ் செல்வமான முக்தி யின்பத்தைப் பயப்பதோடு, இம்மையில் நமக்கு வேண்டிய ஆயுள் ஆரோக்கியம் செல்வம் முதலிய பல்வகைப் பிரயோஜனங்களையும் அளித்துப் புரக்கும் என்பர் சான்றோர்.

எனவே, பகவானுடைய ஆக்ஞாரூபங்களான வேதம், தர்ம சாஸ்திரம் முதலியவற்றிலிருந்தும் அவற்றைத் தெளிந்தொழுகும் சிஷ்டர்களாகிய முன்னோருடைய நடை முறைகளிலிருந்தும் நம் கடமைகளைத் தெரிந்து கொண்டு, அவற்றைக் கையாளுதற்குரிய உறுதியைப் பெற்றுவிட்டால், சிறிது சிறிதாகக் கடமைகளை மேன்மேலும் சிறப்புறச் செயலாற்றுதற்குரிய வாய்ப்பைப் பகவான் ஸங்கல்பித்து அனுக்ரஹிப்பான்.

ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஒவ்வொரு கர்மாவின் தொடக்கத்திலும் இறுதியிலும் சிறப்பான இடம் பெற்றுள்ள ஸாத்விகத்யாகமே, அவன்பால் நாம் கொண்டுள்ள பெரு மதிப்பை எடுத்துக் காட்டும். மந்திர பூர்வகமானவற்றில் மட்டுமேயன்றி, நாம் செய்யும் எல்லாச் செயல்களையும், எம்பெருமான் செய்துவைக்கிறான், எனவும், செய்து முடித்துத் தலைக்கட்டினான் எனவும் அநுஸந்தானம் செய்யும் வகையில் நாம் பழகி

விட்டால், அதுவே ஒரு பேரின்பமாகக் காட்சியளிக்கும் பொறுப்பாளியாக இருந்து பணியாற்றுவது கடினம்; பிறர் ஏவல் வழி நின்று செயலாற்றுவது எளிது; குற்றத்திற்கு இடமில்லாததும்கூட என்பது யாவரும் அறிந்த உண்மை யாதலால், பொறுப்பாளியாகப் பகவானே ஏற்பது சிறப்புப் பெற்றதாகிறது. இம்மாதிரியான மனோபாவம் முதிர முதிர, உலகனைத்திலுமுள்ள ஸ்தாவர ஜங்கமங்கள் பூராவும் எம் பெருமானைச் சேர்ந்த உடைமைகள் என்ற பரிபாகமுள்ள அறிவு கிட்டும். அதுபோது, பிறரிடமிருந்து நாம் எந்தத் தீமையை அடைந்தாலும், அவர்களிடம் நமக்குக் கோபம் வெறுப்பு முதலியன உண்டாகாது. எல்லோரும் பகவானு டைய அதீனமாக இருந்துகொண்டு செயல் புரிகிறார்கள் என் பது உண்மையாதலின், பரதந்திரர்களிடமும் நாம் பகை மையை மேற் கொள்ளுதல் அறியாமை யாகும்.

இராவண வதம் முடிந்த பிறகு, அந் நற் செய்தியை அசோகவனத்தில் பிராட்டிக்குத் தெரிவித்து வருமாறு இராம பிரான் அநுமனை அனுப்ப, அவனும் அவ்வாறே பிராட்டி யிடம் தெரிவித்து நிற்கும் நிலையில், அவள் ஆனந்த பாஷ்பத் தால் கண்களும் கண்டமும் ஸ்தம்பித்து இன்னது செய்வது என்பதை அறியாது, திகைத்து மகிழ்ந்திருக்கும் போது, அநு மன், 'உங்களைப் பலபடியாகத் துன்புறுத்திய இவ்வரக்கியரை இப்போது என் விருப்பத்திற் கேற்பப் புடைத்தல் முதலிய வற்றால் பழிதீர்த்துக் கொள்ளுமாறு அநுமதி தரவேண்டும்' எனக் கேட்டுக் கொண்டான். அப்போது, 'இராவணனால் ஏவப்பெற்ற இவர்கள் அவன் கட்டளையைத் தலைமேற் கொண்டு, தம் கடமையைச் சரிவர நிறைவேற்றினர்; இப் போது நம்மைக் கண்டு, என்ன நிகழுமோ என்று நடு நடுங்கிப் பதுங்கி யிருக்கின்றனர். இவர்களிடம் யாதுளது குற்றம்? இவர்களைப் பொறுத்துக் காப்பது நம் கடமை' என்று பிராட்டி அறிவுறுத்தினமை இவ்வுண்மையை விளக்குவ தாகும். ஆகவே, இயற்கையாகவோ, பிறர் மூலமாகவோ, நமக் குக் கஷ்டங்கள் நேர்ந்துழி, நாம் செய்த தீவினைகளின் பயனாக நமக்கு இத் தொல்லைகள் உண்டாயிருக்கின்றன என்று நாம் தேறித் துணிய வேண்டியது கடமையாகும். இராமனைப் பிரிந்து பொறுக் கொணாத் துயரிலாழ்ந்த பிராட்டி "மமைவ துஷ்க்ருதம் கிஞ்சித் மஹதஸ்தி நஸம்சய:" (என்னுடைய பாவங்களில் சிலவற்றால் இத்துன்பம் ஏற்பட்டுள்ளது; இது போன்ற துன்பம் பலவற்றைத் தரக் கூடிய பெரும் பாவங்கள் என்னிடமிருப்பது உறுதி) என்று கூறிக் கொள்ளும் பகுதியை

நாம் எக்காலத்தும் மனத்தே நிலையாகப் பதிய வைத்துக் கொள்ளல் வேண்டும்.

பகவானுடைய அனுக்ரஹத்தைப் பெறுவதையே குறிக் கோளாகக் கொண்டு, எல்லாக் காரியங்களையும் அவனுடைய ஆராதன ரூபமாகப் பாவித்துச் செய்ய வேண்டியது. பெரி யோர்களிடம் பகவானிடப் பன் மடங்கு பெரு மதிப்பைச் செய்தல் வேண்டும். அவர்களைப் பெருமைப் படுத்துவது, பகவானுக்குத் தன்னைப் பெருமைப் படுத்துவதைவிடச் சிறந்த தாகத் தோன்றும். தவிர, பகவானிடம் ஏதேனும் நாம் அபசாரப் பட்டாலும், பாகவதர்களுடைய அநுக்ரஹ மிருந் தால், அதனால் அதைப் பரிஹரித்துக் கொள்ளலாம். பாக வதர்களிடம் அபசாரம் நேர்ந்தால், எவ்வளவுதான் பகவா னுடைய அநுக்ரஹத்திற்குரிய செயல்களைச் செய்தாலும் அத னால் அதைப் பரிஹரித்துக் கொள்ள இயலாது. எனவே, பாகவதபசாரம் சிறிதளவும் நேராவண்ணம் கண்ணுங் கருத் துமாக ஜாக்ரதையாக இருக்க வேண்டியது அடிப்படை தர்ம மாகும்.

பகவதாராதனமின்றி ஒரு நாளையேனும் கடத்தலாகாது. பகவானுக்கு நிவேதனமாகாததை உட்கொள்ளுதல் 'யே பசந்த்யாத்மகாரணத்' என்ற ரீதியில் தனக்கெனப் பதார்த் தத்தைத் தயாரித்துக் கொண்டு புசிப்பது என்ற நிலையில் அமைவதால், பாவத்தையே புசிக்கிற பாவிகள்' என்று நிந்திக் கப்படுகின்றனர். பிரஹ்லாதனைக் கொல்லத் தந்தையால் கொடுக்கப்பட்ட 'கடும் நஞ்சு' பகவானிடம் பிரஹ்லாதனால் கண்டருளப் பண்ணப்பட்ட பின் அருந்தப் பட்டது அமிருத மயமாகி விட்டது என்பதைக் கருதுதல் வேண்டும். புசிக்கத் தகாத உணவு வகைகளைப் புசித்தால் அறிவு கெடும் 'தர்ம சிந்தை பாழ்படும். 'நை தே தர்மம் விஜாநந்தி ராக்ஷஸா: பிசிதாசன:' (மதுமாம்ஸம் முதலியவற்றைப் புசிக்கும் இவ் அரக்கர்கள் அறத்தினை அறியமாட்டார்) என்பது பிராட்டி யின் வார்த்தை. இங்கு ''பிசிதாசன:'' என்ற அடைமொழி ஸாபிப்ராயமென்க. அமிர்தம்போல் இனிய சுவையுடன் கூடிய பொருளாயினும் பகவானுக்குக் கண்டருளப் படாத போது விஷத்துக்குச் சமானமாகக் கருதப்படும். பகவத் கடாக்ஷம் ஏற்படாததே காரணம்.

பொறிகளுள் நாக்கையடக்குதல் மிகவும் வேண்டற் பால தொன்று. 'நாவடக்கம்' என்பதில் இரு பயன் அடங்கி யுள்ளது:—(1) சொல்லடக்கம், (2) ஆஹார நியமம்

இவ்விரண்டும் அடங்கிய, நாவடக்கம் ஏனைப் பொறிகளின் அடக்கத்தை விடச் சாலச் சிறந்தது. 'யா காவா ராயினும் நாகாக்க' ஏனைப் பொறிகளைக் காவாமற் போயினும், 'நா'வை அவச்யம் காக்க என்றார் திருவள்ளுவர். பரம ஆப்தர்களையும் ஒரே ஒரு கடுஞ் சொல்லால் பகைவராக்கி விடலாம். பரம விரோதிகளையும் இன் சொல்லால் வயப் படுத்தி விடலாம். எனவே, மிகவும் எளிதில் பெரும் புண்ணியத்தையும் (பகவன் நாமஸங்கீர்த்தனம் முதலியவற்றால்) மாபாவத்தையும் (இன்ன வார்த்தைகளால்) பெறுதற்கு நாக்கு உறுதுணையாகிறது.

ஆகவே, ஸ்ரீமந் நாராயணனைப் பரதேவதையாகக் கொண்ட ஸ்ரீவைஷ்ணவமதத்தைப் பெறலரும் மாநிதியாகப் போற்றி உரிய கடமைகளை ஏற்றல், நித்ய நைமித்தகங்களான கர்மாக்களை விடாது புரிதல், தேவதாந்தர ஸங்கத்தைத் தவிர்த்துப் பரமை காந்தியாய் நிற்றல், எல்லா ப்ராணிகளையும் நட்புரிமையோடு காண்டல், சொல்லடக்கம், ஆஹார வரையறை முதலியவற்றைக் கடைப் பிடித் தொழுகுமாறு நம்மனோர்க்குத் திருமகள் கேள்வன் திருவருள் தழைத் தோங்கும் வண்ணம் அவன் செந்தாமரைத் திருவடியிணையினை இறைஞ்சிப் போற்றுவாம்!

ஸ்ரீ

ஜங்கம பாரிஜாத!

(ஆண்டவன் திருவடி)

'தண்டகா தபோவன ஜங்கம பாரிஜாத!' என்று ஸ்ரீ ரகு வீரனே ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகனென்னுமாசார்ய ஸார்வ பௌமன் 'ஸ்ரீ ரகுவீரகத்யம்' என்கிற க்ரந்தத்தில் ஸம்போதனம் பண்ணுகிறார்.

பாரிஜாத மென்கிற வ்ருக்ஷம் தேவலோகத்திலுள்ளது. அதை அடுத்தவர்கள் எதை எதை விரும்புகின்றனரோ அவ் வஸ்துக்களைக் கொடுக்கவல்லது அம் மரம். கேட்டதைக் கொடுக்கும்பொழுது, தான் கொடுக்கும் பொருளால் கேட் பவனுக்கு நன்மையா? அல்லது தீமையா? என்பதை அம் மரம் யோசிக்காது கொடுத்தே தீறும். கேட்பவன் லாபலோபங் களை அடைந்தே தீறுவன். அம் மரமும் தேவலோகத்தி லிருப்பது. அங்கே சென்றவர்களுக்குத் தான் அதனிடமிருந்து பலனை அநுபவிக்க முடியும். அம் மரத்திற்கு கற்பகவ்ருக்ஷ மென்றும் பெயருண்டு.

ஸ்ரீ ராகவனை அப்பாரிஜாத வ்ருக்ஷத்திற்கு ஸ்வாமி உவமை யாக்குவதில் ஸ்வாரஸ்யமுண்டு. ஆனால் தேவலோக வ்ருக்ஷம் போல் ராகவனுகிற பாரிஜாதம் மேலான பலனை மோக்ஷானந் தத்தைக் கொடுப்பவன். மோக்ஷம் வேண்டாம் இதர புரு ஷார்த்தங்கள் தான் தேவையென்று அவனை யாசித்தாலும், அவைகளையுங் கொடுத்து, அவைகளில் நிராசை ஏற்படச் செய்து, கடைசியில் மோக்ஷத்தையும் அருள்வன். அப்படிப் பட்டவன் எந்த ஊரிலிருக்கிறான்? அங்கு நாம் போக முடி யுமா? என்றால், அவன் எங்குமிருக்கிறான்; நாமும் அவனை அடையலாம்; அவனும் நம்மைத் தேடி வருவன்.

ஆமாம், ராகவன் பாரிஜாத வ்ருக்ஷமென்றால் ஒரே இடத்தி லிருக்க வேண்டாமா? பேசலாமா? இடம் பெயரலாமா? என் றால்; 'நிவாஸவ்ருக்ஷ: ஸாதூனும்', 'வாஸுதேவ தருச்சாயாம்' 'கற்பகக்காவன, நற்பலதோளற்கு', என்று பூர்வாசார்யர்கள் எம்பெருமானை வ்ருக்ஷமாகப் பார்த்தனர். ஆனால் இம்மரம்

தேவலோக மரத்தைப் போல் ஞானமற்றதல்ல. ஞானைந்த கல்யாண குணக்கடலான ராகவனுகிற பாரிஜாத வ்ருக்ஷம் கேட்டதைக் கொடுப்பதில் தேவலோக வ்ருக்ஷத்திற்கு உபமானமாக்கினர். இப் பாரிஜாத வ்ருக்ஷமெங்கும் நிறைந்துள்ளதாகும். தேச, கால அவஸ்தைகள் கிடையா. இவ்வ்ருக்ஷத்தை நாமும் நாடிச் செல்லலாம். நமக்குப் பூர்வ புண்யமிருந்தால் அவ்வ்ருக்ஷம் நம்மையும் நாடி வரும். ஆகையால் இதை ஓர் விலக்ஷண நடமாடும் பாரிஜாத வ்ருக்ஷமென்று பூர்வர்கள் நிர்வஹிக்கின்றனர். ஸ்வாமியும் இதையே திருவுள்ளம் பற்றி ராகவனுய் அவதரித்த சரண்யனை 'ஜங்கம பாரிஜாத' என்று விளித்து அழைக்கின்ருர்.

ஒரு த்ரேதா யுகத்திலே சரண்யன் ராகவனுய் அவதரித்தான். தண்டகாவனத்து தாபஸிகள் ராகவனைக் காண பெரு விடாய்ப்பட்டனர். அவர்களைக் காண ராகவன் ஸீதா, லக்ஷ்மண ஸமேதனுய் தண்டகை விழைகின்ருன். தண்டகை தாபஸிகள் ஸ்ரீ ராகவர்களைக் கண்டு களிப்பெய்தி, விடாய் தீர அநுபவித்து, ஸகல துன்பங்களையுங் கழியப்பெற்று அக மகிழ்கின்றனர். இவ்விருத்தாந்தத்தையே ஸ்வாமி தேசிகன் 'தண்டகாதபோவன ஜங்கம பாரிஜாத!' என்று ஸ்ரீ மஹா வீர வைபவத்தில் பொறிக்கின்ருர்.

ஸ்ரீ ராகவ ஜங்கம பாரிஜாதம் ஸாதுக்களை வாழ்வித்தது மட்டுமின்றி அஸாதுக்களை கொன்றுங்குவித்தது. இவையே அவன் ஸங்கல்பம்: 'பரித்ராணாய ஸாதூனும் விநாசாய ச துஷ்க்ருதாம்'.

ஸ்ரீ ராகவ பாரிஜாதம் கருமூண பாரிஜாதமாக அவதரித்தும் இக் கட்டளையையே மேற்கொண்டான். ஆனல் 'எனக்கு பிரியமானவர், த்வேஷிகள் என்ற பாகுபாடு கிடையாது' என்றும் பறை சாற்றுவன். அவன் ஸர்வநியந்தாவானதால் அவனைக் கேட்பாரில்லை யல்லவா! ஸ்வதந்த்ரனுயிற்றே!

அவனுக்கும் ஓர் அந்தர்யாமி யுண்டாம். அவர்கள் தான் ஞானிகளென்று கொண்டாடத் தகுந்தவர்கள். அவர்களே நம் பூர்வாசார்யர்களாவர்.

நம் பூர்வாசார்யர்கள் எம்பெருமானைவிட நம்மிடம் மிகவும் கருணை பூண்டவர்கள். இவர்களுக்குத் தண்டனை என்பதே தெரியாது. நம்மைக் கடைத்தேற்றுவதிலேயே நோக்கு. இவர்கள் லோக மாதாவான பிராட்டியின் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். இவர்களும் மேற்கூறிய நடமாடும் பாரிஜாத

வ்ருக்ஷம் போன்றவர்களே! இவர்களுக்கே அப் பெயர் பொருத்தமான தாகும். எம்பெருமானால் முடியப்பெறுத காரியமான சேதனாஜ்ஜீவன க்ருத்யம் ஆசார்யர்களாலேயே முடியும்? அதனாலேயே எம்பெருமானும் 'தத்வித்தி ப்ரணி பாதேன' என்று விதிக்கின்றான். இவர்களே தத்வத்தைப் பார்த்தவர்கள். பரதத்வமான எம்பெருமான் தன்னையே பற்றிக் கூறிக்கொள்ள முடியாமலும், அப்படிக் கூறினாலும் கேட்பவன் ஆத்மஸ்தோத்திர மென்று சலித்துக் கொள்வதைப் பார்த்தனிடமிருந்து ஸ்ரீ கண்ணன் புரிந்துகொண்டு வெறுத் துப்போய் 'அவஜானந்தி மாம்மூடா: மாநுஷீம் தனுமாச்ரி தும்' என்று கூறினான். அடங்காதாரைக் கொன்றுங் குவித்தான்.

நம் பூர்வாசார்யர்களோ தமது உபதேச மொழிகளால் ஸக லரையும் வளைத்துக் கட்டி நல்வழிப்படுத்துவர். ஸகல புரு ஷார்த்தங்களையும் வாரி வழங்குவர். இதில் இரண்டு விதம். ஒன்று தம்மை அண்டினோரைக் காப்பது; மற்றொன்று தானே அவர்களிருப்பிடஞ் சென்று அவர்களைக் காப்பது. இரண் டாம் வழியைப் பின்பற்றும் ஓர் உத்தமாசார்யரான பிர கிருதம் ஸ்ரீமதாண்டவனை நோக்குவோம்.

ஸ்வாமியின் ப்ரபாவம் குன்றின் மேலிட்ட விளக்காய் ப்ர காசிக்க வேண்டுமென்று ஸ்ரீமத் எங்களாண்டவன் திருவுள்ளம் பற்றி ஸ்வாமியை சென்னை செல்லும் படியும், ஸம்ப்ரதாய ப்ரவசனம் பண்ணும்படியும் நியமித்தாயிற்று. ஸ்ரீ உப. வே. கண்ணன் ஸ்வாமியாகிய ஜங்கம பாரிஜாத வ்ருக்ஷம் திருக் குடந்தையில் முளைத்து, வளர்ந்து, சென்னை முதலிய ப்ராந்தி யங்களுக்குள் நடமாடவாரம்பித்தது.

தம்மை யண்டி எந்தெந்த க்ரந்தங்களை காலக்ஷேப, உபந் யாஸங்களைப் பண்ணச் சொல்கிறார்களோ அவர்கள் உள்ளங் குளிரும் வகையில் உபதேசித்தாகும். ஸ்வாமியின் வாக் சாதுர்ய, மாதுர்யாதிகள் பேசித் தலைக்கட்டமுடியாது. ஆயி ரக் கணக்கானவர்கள் கூட்டங்களில் தாம் எடுத்துக் கொண்ட விஷயத்தை, காலத்திற்குள், விஷயத்திற்கு புறம்பாகச் செல் லாமலும், பிறர் மனது புண்படாமலும், இடை இடையே ஹாஸ்யங்களைக் கூறும்பொழுது சாஸ்த்ர வரம்பு மீறாமலும், பிறர் சிரிக்கும்பொழுது தாம் சிறிதுஞ் சிரிக்காமலும், மெல் லிய குரலோடும், கேட்போர்களும் வெகு சுலபமாகப் புரிந்து கொள்ளும் வகையில் வடமொழிச் சொற்கள், அவைகளுக்குத் தக்க தமிழ் சொற்கள், ஆங்கிலச் சொற்கள் இவைகளை

இழைத்து இழைத்துக் காலம் போவது தெரியாமல் உபந்யஸித் தாகும். குறித்த அவகாசத்தில் முடிப்பது, குறிப்பிட்ட நேரத்திற்குள் ஆரம்பிப்ப தென்கிற லௌகிக வ்யவகாரம் ஸ்வாமியிடம் அலாதி. காலக்ஷேபம் ஸாதிக்கும்பொழுதும் தனியன் கட்டுப்பாடு முதலியவை ஏற்படுத்தாமல் ஸகல ஸம்ப்ரதாயஸ்தருங் கூடி ரஸிப்பதென்பது ஸ்வாமி கால க்ஷேபங்களில் காணலாம்.

ஸ்வாமியின் வாக்ப்ரபாவம் வடக்கே டில்லி முதல் தெற்கே குமரிமுனை வரை ஒலிக்கவாரம்பித்தது. முதலில் கார்களில் உபந்யாஸத்திற்கு எழுந்தருளியிருந்த ஸ்வாமி வான ஊர்தி களிலும் சென்று உபந்யாஸ, காலக்ஷேபங்கள் ஸாதித்தா யிற்று. இப்படிப் பன்முறை எழுந்தருளியுள்ளபடி.

ஸ்ரீ உப. வே. கண்ணன் ஸ்வாமி யாகிய ஜங்கம பாரிஜாதம் க்ரஹஸ்த ஆச்ரமத்தில் புரிந்த உபகாரங்களில் பயன்பெற் றோர் அநேகர். ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாய மென்ற ஓர் விலக்ஷணமான முனித்ரய ஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீமத் எங்க ளாண்டவனுக்குப் பிறகே ஸ்வாமியை ஆசார்யராக்க முயன்ற முயற்சி ஈடேறவில்லை.

எனினும் ஸ்ரீமத் தென்பிறை ஆண்டவன் ஸ்ரீரங்கநாத மஹா தேசிகன் திருமேனி அசக்தத்தால் அடிக்கடி நோவு சாற்றிக்கொள்ள நேர்ந்தது. அம் மஹான் நம் ஸ்வாமியை ஆசார்ய பீடத்தில் அமர்த்தத் திருவுள்ளங் கொண்டாயிற்று.

நம் ஸ்வாமியோ ஸ்ரீமதாண்டவன் ஸம்ப்ரதாயத்தில் மூர்த் தா பிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஆசார்யர்களுடையவும், ஸ்ரீமத் தென்பிறை ஆண்டவனுடையவும் ஞான, அநுஷ்டான வைராக்யாதிசயங்களை உன்னிப் பார்த்து தாம் அவ்வளவு பெரிய ஸ்தானத்திற்கு அர்ஹதை யற்றவராக எண்ணி ஸம்ம திக்கக் கூசியாயிற்று. ஸ்ரீமத் தென்பிறை ஆண்டவனே நம் ஸ்வாமியையே திருவுள்ளப்பட்டாயிற்று.

ஆஸ்ரம ஸ்வீகாரமான பிறகு நம் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவனுகிய ஜங்கம பாரி ஜாதம் தாமாகவே சஞ்சாரம் கொள்ள திருவுள்ளப்பட்டா யிற்று. வான ஊர்திகளிலும், கார்களிலுமே எழுந்தருளிக் கொண்டிருந்த பூர்வாச்ரம ஆசையை முற்றிலும் வெறுத்து தமது சஞ்சாரத்தை பாத

யாத்திரையாகவே ஸங்கல்பித்தாயிற்று. இன்னும் சஞ்சாரத்திலேயே எழுந்தருளி யிருக்கிறபடி.

பாத யாத்திரை யென்றால் ஒரு கிராமம், இரண்டு கிராமங்களா? பட்டணங்களா? வடக்கே மைசூர் பிராந்தியம், வடவேங்கடம், தெற்கே திருவனை, மேற்கே மலையாள தேசம் பூராவும், கிழக்கே சென்னை, இடையே யுள்ள தமிழ்நாடு பூராவும் ஒரு சிறு கிராமங்கள்கூட விடாமல் யாத்திரை. இச் சஞ்சாரத்தால் உய்ந்தோர் பலர். உபதேச மொழிகள், ஸமாச்ரயண, சரணாகதிகளைப் பண்ணி உய்யப் பெற்றோர் அனேகர். தமக்கோர் பலனை எண்ணாது பிறருக்கே என்று, ஏன், ஸ்ரீமதாண்டவன் தமது திருமேனியைச் சிரமப்படுத்திக் கொள்ளவேண்டும்? இதுதான் இந்த ஜங்கம பாரிஜாதத்தின் மேன்மையாகும். அவ்வளவு பெருங் கருணை கொண்டவர் நம் ஆசார்ய வள்ளல். சேதனர்களை உஜ்ஜீவிப்பிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கம். அந் நோக்கம் நிறைவேறிற்றா? ஏன் நிறைவேறாது?

ஸ்ரீமதாண்டவன் உபதேசங்களால் உள்ளத்தூய்மை ஏற்பட்டுவிட்டதால் இனி பயமில்லை யென்று யாவரும் கொண்டு போற்றுவது ஸ்ரீபாஷ்யகாரரை ஸ்ரீ அமுதனார் போற்றுவதைப் போன்றதாகும்.

ஸ்ரீமதாண்டவனாகிற ஜங்கம பாரிஜாதத்தை அண்டியவர்களுக்கு ஸகல ஸம்பத்தும் உண்டாவதால் யாவரும் அவருடைய புகழ்களையே சிந்திப்பது ஸ்ரீ அமுதனார் ஸ்ரீ ராமானுசன் விஷயத்தில் ஈடுபட்டோபாதி யாகும்.

> 'தவம்தரும் செல்வம் தகவும்தரும் சலியாப் பிறவிப்
> பவம் தரும் தீவினைப்பாற்றித்தரும் பரந்தாமமென்னும்
> திவம்தரும் தீதிலிராமானுசன் தன்னைச் சார்ந்தவர்கட்கு
> உவந்தருந்தேன் அவன் சீரன்றியான் ஒன்றும் உள்
> மகிழ்ந்தே. —94

ஸ்ரீமதாண்டவன் திருமேனிபாங்குடன் பல்லாண்டு பல்லாண்டுகளாக எழுந்தருளி யிருந்து நமக்கு ஆசார்யகைங்கர்யம் செய்தருள சரண்ய தம்பதிகள் ஸங்கல்பிக்க வேண்டுமென்று அவர்கள் திருவடிகளில் பன்முறை ப்ரணமங்கள் பூர்வமாகயாசிக்கின்றேன்.

'போற்றரும் சீலத்து இராமானுச!
நின்புகழ் தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வு அதுதீரில்
உன்சீர்தனக்கு ஓர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலும்
என்மனம் ஏத்தியன்றி
ஆற்றகில்லாது இதற்கு என்னினே
வாயென்றிட்டு அஞ்சுவனே.'

என்ற ஸ்ரீ அமுதனார் ஸ்ரீபகவத் ராமாநுசன் திறத்துக் கொண்டது அடியேனுக்கு ஜங்கம பாரிஜாதரான ஸ்ரீமதாண்டவன் திருவடிகளிலாகக் கடவது.

ஸ்ரீ:

பயாபயங்கள்

(ஸ்ரீ உபவே K. வரதாசார்யர் ஸ்வாமி)

ஸ்ரீவைஷ்ணவ ஸம் ப்ரதாயத்தில் பகவான் உபயலிங்க யுக்தன், என்று அறுதியிடப்பட்டுள்ளான். உபயலிங்க மாவது—ராஜாவுக்குச் சத்ரசாமரங்கள் போலே பகவானுக்கு இரண்டு அடையாளங்கள். அவையாவன அகிலஹேய ப்ரத் யனீகத்வமும் கல்யாணகுணைகதானத்வமும். இதிறே பகவத் சப்தார்த்தமாக ''ஞானசக்திபலைச்வர்ய வீர்யதேஜாம்ஸ அசேஷத: பகவத் சப்தவாச்யாநி விநா ஹேயை: குணதிபி:'' என்று ஸ்ரீபராசரமஹர்ஷி புராண ரத்தினத்தில் நிஷ்கர் ஷித்தது. அபௌருஷேயத்வ நித்யத்வங்களாலே வேதம் ஸ்வேதர ஸகல ப்ரமாணவிலக்ஷணம் ஆனால்போலே பகவான் அகில ஹேய ப்ரத்யநீகத்வ கல்யாணகுணைக தானத்வங் களாலே ஸ்வேதரஸகலப்ரமேய விலக்ஷணன் என்பர், பெரி யோர். நஸ்தானதோபி பரஸ்ய உபயலிங்கம் ஸர்வத்ரஹி'' என்ற ப்ரஹ்மஸூத்ரமும் காண்க. தோஷகந்தமற்றவன், கல்யாண குணங்கள் உற்றவன் என்று முடிந்த பொருள்.

''யதாரத்நநி ஜலதே: அஸங்க்யேயாநி புத்ரக |
ததா குணஹ் யநந்தஸ்ய அஸங்க்யேயா மஹாத்மன: ||

என்றும் ''ஈறிலவண் புகழ்'' என்றும் ''அஸங்க்யேய கல்யாண குணகணைக மஹார்ணவ'' என்றும் இத்யாதி ப்ரமாண வசனத்தின்படி பகவத் குணங்கள் அனந்தங்கள். எண்ணற்ற வையாகையால் கணக்கிடமுடியாது என வறியலாம். ஸ்ரீ சார்ங்கபாணியின் தோஷங்களையும் கணக்கிட முடியாது. ஏன்? இல்லாமையால் எனவறியலாம். ஆக பகவானுடைய குணதோஷங்கள் கணக்கிட முடியாதவை என்று முதற் கூறிய ச்லோகத்தின் திரண்ட பொருள்.

இந்தப் பெருமை பகவானுக்கு மட்டுமில்லை. ஸம்ஸாரிக் கும் உண்டு. இவன் குண தோஷங்களையும் எண்ணமுடியாது. குணலேசம் இல்லாமையாலும் தோஷங்கள் அனந்தங்கள் ஆகையாலும் எனவறிகிறோம். இதனை ஸ்ரீபராசரபட்டர்

''ஸ்ரீரங்கேச த்வத் குணநாம் இவ அஸ்மத்தோஷாணும் க: பார த்ருச்வா'' என்று அறுஸந்தித் தருளினர். நம்முடைய மான தம்ப ஹிம்ஸாத்யனந்த தோஷங்களை நினைக்குங்கால் ''இதடியாக இன்னும் ஸம்ஸாரம் நமக்குத் தொடருமோ'' என்று பயம் விளையும். பகவானுடைய தயாக்ஷாந்த்யாதி அனந்த கல்யாண குணங்களை நினைக்குங்கால் ''இந்தக் குற்றங்களைப் பார்த்து நம்மை உபேக்ஷியாமல் அங்கிகரித்து, இவற்றைப் பொறுத்து இவ்வாத்மாவைத் தன் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளும்'' என்று பய நிவ்ருத்தியும் ஏற்படும். இது பயாபயஸ்தான விவேகம் எனப்படும். இது தன்னை லோகதேசிகன் ஸ்ரீவசன பூஷணத்தில் ''ஸ்வதோஷானுஸந்தானம் பயஹேது. பகவத் குணானு ஸந்தானம் அபயஹேது'' என்று அருளிச் செய்தார். இவர் இப்படி அருளிச் செய்கைக்கு அடி பரமாசார்யரான ஆளவந்தார் திருவாக்கு என்பதனை விசத வாக்சிகாமணியான மணவாள மாமுனிகள் ''துரந்தஸ்ய . . . கதபீ:'' என்றக் கடவதிறே'' என்று அருளிச் செய்தார்.

துரந்தஸ்யானுதே: அபரிஹரணீயஸ்ய மஹத:
நிஹீன சாரோஹம் ந்ருபசுரசுபஸ்யாஸ்பதமபி
தயாளிந்தோ பந்தோ நிரவதிக வாத்ஸல்யஜலதே
தவஸ் மாரம் ஸ்மாரம் குணகணம் இதீச்சாமி கதபீ:

என்பது ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்ன ச்லோகம். இந்த ச்லோகத்தில் ''கதபீ:'' என்று பயநிவ்ருத்தி சொல்லப்பட்டுள்ளது. அதற்கு அடியான பகவத் குணானுஸந்தானத்தை ''தயாளிந்தோ . . . தவ ஸ்மாரம்ஸ்மாரம் குணகணம்'' என்று அருளிச் செய்தார். ''கதபீ:'' என்று சொல்லப்பட்ட பயநிவ்ருத்திக்குப் ப்ரதியோகி பயம். அதற்கு அடி ஸ்வதோஷானுஸந்தானம் என்பதனை'' துரந்தஸ்ய அனுதே . . . அசுபஸ்ய ஆஸ்பதம்'' என்று பூர்வார்த்தம் தெளிவாகத் தெரிவிக்கிறது.

''அசுபஸ்யாஸ்பதம்'' என்று அக்ருத்யகரணம் முதலாக அஸஹ்யாபசாரம் ஈறுகவுள்ள அசுபங்களுக்கு இருப்பிடமாகத் தன்னை ஆளவந்தார் அனுஸந்திக்கிறார். ''தேவரீர் குணநாம் ஆகரம் ஆறுப்போலே அடியேன் அசுபாகரம் என்கை'' என்ற பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யானமும் ''அஹம் அசுபஸ்ய ஆஸ்பதம் த்வம் து குணநாம் ஆகரோ மஹாந்து'' இதிஹ்ருதயம் என்ற தேசிகன் பாஷ்யமும் காணத் தக்கது. ''தயாளிந்தோ'' என்று அவன் குணப் பெருமையை

வர்ணிக்கிறார். இவ்விடத்தில் இரு மஹாசார்யர்களும் வ்யாக்யானித்திருக்கும் அழகு அனுபவிக்கத்தக்கது.

''கீழ்ச்சொன்ன அசுப ஸாகரம் எல்லாம் தேவரீருடைய குணர்ணவத்திலே குளப்படி யன்றே'' என்று பெரிய வாச்சான் பிள்ளையும், ''தயா வாத்ஸல்ய ஸிந்துத்வ ரூபணேன அதிதுங்காமபி ஸ்வாபராதானும் தத்ர நிமஜ்ஜனம் ஸஹ்யதே'' என்று தேசிகனும் வ்யாக்யானித்துள்ளார்கள். ஆக ''ஸ்வதோஷபகவத் குணானுஸந்தானங்கள் பயாபயஹேதுக்கள்'' என்பதனை லோகதேசிகன் ஸூத்ரத்தைக் கொண்டும் ஆளவந்தார் திருவாக்கைக் கொண்டும் அனுபவித்தோம்.

இனி ஆழ்வார் திவ்ய ஸூக்தியைக் கொண்டு பயாபயங்களை மற்றொருவகையிலே யனுபவிப்போம். திருவாய் மொழியில் 8-ம் பத்தில் ''அங்கும் இங்கும்'' ''வார்கடாவருவி'' என இருபதிகங்கள் அமைந்துள்ளன. ஆழ்வார் பயமும் தத்காரணமும் ஆழ்வார் பயநிவ்ருத்தியும் தத்காரணமும் இவ்விரண்டு பதிகங்களில் நாம் காணலாம். ஆளவந்தார் ஸ்தோத்ரத்தில் அறிவிக்கப்பட்ட பயாபய தத் காரணங்கள் வேறு—ஆழ்வார் திருவாக்கில் தெரிவிக்கப்பட்ட பயாபய தத் காரணங்கள் வேறு என்று குறிக்கொள்ள வேண்டும். ஆளவந்தாருக்கு பயம் தன்னைப் பற்றியது. தத்காரணம் ஸ்வதோஷானுஸந்தானம். பயநிவ்ருத்தியும் தன்னைப் பற்றிய பயத்துக்கு நிவ்ருத்தி. தத்காரணம் பகவத் குணானுஸந்தானம் ஆகும். ஆனால் ஆழ்வாருக்கோ பயம் அவனை (பகவானை)ப் பற்றியது. பயநிவ்ருத்தியும் அவனைப்பற்றி ஏற்பட்ட பயத்துக்கு நிவ்ருத்தி. இரண்டுக்கும் காரணம் பகவத் குணானுஸந்தானமே. இதனைச் சற்று விவரிக்கிறேன். ''அங்கும் இங்கும்'' (8-3) என்ற பதிகத்தில் ஆழ்வாருடைய பயம் ''நமக்கு ஸம்ஸாரம் தொடருமோ''' என்றல்ல—அவனுக்கு யாரால் என்ன தீங்கு நேரிடுமோ' என்று அவனைப் பற்றியது—இதற்கு ஹேது ஸ்வதோஷானுஸந்தானம் அல்ல—பகவத் குணானுஸந்தானம். அவன் திருமேனிக் குண்டான ஸௌகுமார்ய ஸௌந்தர்யாதிகளைக் கண்டவாறே ''இந்த ஸுகுமாரமான திருமேனிக்கு என்வருமோ'' என்று பயம் ப்ரேமப்ரவசரான ஆழ்வாருக்கு ஏற்படுகிறது. இது ''அங்கும்'' திருவாய் மொழியின் ப்ரமேயம்.

அனந்தரம் ஆழ்வாருக்கு ஏற்பட்ட பயநிவ்ருத்தி ''இன்னம் ஸம்ஸாரம் தொடருமோ'' என்ற பயத்துக்கு நிவ்ருத்தியல்ல. ''அவனுக்கு என்வருமோ'' என்ற பயத்துக்கு நிவ்ருத்தி

யாகும். இதற்கும் மூலம் பகவத் குணானுஸந் தானமே. பகவானுடைய சௌர்யவீர்யாதிகளே யநுஸந்தித்தவாறே ''இந்த அஸஹாயசூரனுக்கு யாராலும் எந்தத் தீங்கும் நேரிடாது'' என்று அச்சம் கெட்டு அமரும் நிலை ஏற்படுகிறது. இவ்விடத்தில் ''ச்ரமமனம் சூழும் ஸௌகுமார்யப்ரகாசம் ஆய்ச்சேரியிலே'' ''மஹாமதிகள் அச்சம் கெட்டு அமரும் சௌர்யாதிகள் சிற்றுற்றிலே கொழிக்கும்'' என்ற ஆசார்ய ஹிருதய ஸ்ரீசூக்திகள் அனுஸந்தேயங்கள்.

அவனுடைய ஸௌகுமார்ய குணானுஸந்தானத்தாலே விளைந்த அஸ்தானே பயசங்கையானது. குவலயாபீட முஷ்டிக சாணூர கம்ஸாதி நிரஸன ப்ரகடித சௌர்யாதி குணானுஸந்தானத்தாலே நிவ்ருத்தமாயிற்று என்று மேலே கூறிய இரண்டு திருவாய் மொழிகளின் திரண்ட பொருள்.

இதனைச் சற்று அனுபவிப்போம்:

அங்கும் இங்கும்—

இத்திருவாய்மொழியின் ப்ரமேயத்தை மணவாள மாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில்

''அங்கமரர்பேண அவர் நடுவேவாழ் திருமாற்கு
இங்கோர் பரிவர் இலை என்றஞ்ச''

என்று அருளிச் செய்துள்ளார்.

உலகத்திலே எல்லோரும் பகவானிடத்தில் உள்ள புருஷகார ஸான்னித்யத்தையும் திவ்யாயுதச் சேர்த்தியையும் தங்கள் இஷ்டப்ராப்திக் குறுப்பாக நினைக்கிறார்கள். அத்தனை போக்கி அவனுடைய ஸௌகுமார்யத்தைப் பார்த்துப்பரிந்து நோக்குவார் யாரும் இல்லையே என ஆழ்வார் வயிறு பிடிக்கிறார். இது முதற் பாசுரத்தின் கருத்து. ''எங்கும் கிணையை என்று உன்னையறியகிலாது'' என்ற பாகத்திற்கு நம்பிள்ளை ''நிரதிசய ஸௌகுமார்ய யுக்தன் என்று உன்னை யறியாதே'' என்று வ்யாக்யானம் அருளிச் செய்திருப்பதைக் காணலாம்.

நித்யஸூரிகள் பகவதனுபவத்திலே அன்யபரர். ஸம்ஸாரிகள் விஷயானுபவத்திலே அன்யபரர். பகவானுடைய திருமேனி மென்மையைப் பார்த்துப் பரிந்து நோக்க உபயவிபூதியிலும் ஆள் இல்லையே என்று வருந்துகிறார். இது ''ஆளும் ஆளார்'' என்றவிடத்திலே வ்யக்தம். இப்படி அஞ்சின ஆழ்வாரைப் பகவான் ''ப்ரளயாபத்தின் நின்றும் ஜகத்தை

யெடுத்து வயிற்றிலே வைத்து ரக்ஷித்தோம் நாம். ஸர்வ ரக்ஷகனை நமக்கோர் குறையில்லை'' என்று தன் ரக்ஷகத்தைக் காட்டிப் பயம் தெளிவிக்கப் பார்த்தான். ஆழ்வார் அதற்கும் சேர வஞ்சிஞர். ரக்ஷ்யனுக்கு ஆபத்து வந்தால் ரக்ஷகனைப்பற்றி ஆபத்தை நீக்கிக் கொள்ளலாம். ரக்ஷகனுக்கு ஆபத்து நேர்ந்தால் ஸர்வரக்ஷகனைப்பற்றி ஆபத்தை நீக்கிக் கொள்ளலாம். ஸர்வரக்ஷகனை பகவானுக்கே யன்றே இவ் வாபத்து நேர்ந்தது. ஓர் குழவி சிறிய ஆலம் தளிரிலே சிறிய திருமேனியிலே சிறிய திருவயிற்றிலே எல்லாவுலகங் களையும் வைத்துக் கிடக்கிறதே. இக்குழந்தை தவறி விழுந் தால் கடலிலே விழுமே. இதனை நோக்குவார் ஆரும் இல்லையே, என்று வயிறு பிடிக்கிறார். இவ்விஷயம் ''ஆலம் பேரிலையன்னவசம் செய்யும் அம்மானே'' என்றவிடத்தில் வ்யக்தம். ''அம்மானே—ஸர்வரக்ஷகனே. ஒரு காபுருஷ னுக்கு வந்ததொன்றன்றிக்கே ஸர்வரக்ஷகனைவனுக்கு வந்தது என்று இதுவும் பயஸ்தானம் ஆகிறது இவர்க்கு'' என்று நம்பிள்ளை வ்யாக்யானித்துள்ளார்.

கடற்கிடந்த பரமன் திருக்கோளூர், திருப்புளிங்குடி முதலிய திவ்ய தேசங்களில் சயனித்திருக்கிற ப்ரகாரத்தைக் காட்டி ஆழ்வார் பயந்தெளிவிக்க முயன்றான். அதற்குமாக பயப் படுகிறார் இவர். சத்ருக்கள் இவன் கிடக்கிற இடம் அறிந்து நலியும்படி கொடி கட்டிக்கொண்டு கிடக்கவேணுமோ எனவஞ்சுகிறார். கொடிக்கு (பெண்ணுக்கு—த்வஜத்துக்கு)ப் பயப்படவல்லார் இவரைப்போல் இல்லை. இவ்விஷயம் ''கொடியார் மாடக்கோளூரகத்தும் புளிங்குடியும்'' என்ற விடத்தில் ஸ்பஷ்டம். அந்த ஸுகுமாரமான திருவுடம் போடே ஸம்ஸாரிகள் இடுக்கண் தீர ஸம்ஸாரத்திலே அவ தரித்து உலாவுகிறானே—இதனை நினைத்து என் மனம் சுழலு கிறது. இங்கே வரவேண்டிஞல் உடம்போடே வரவேணுமோ'' என்று அவன் ஸௌகுமார்யத்தை நினைத்துப் பயப்படுகிறார். இவ்விஷயம் ''திருநீலமணியார் மேனியோடு என் மனம் சூழ வருவாரே'' என்றவிடத்தில் வ்யக்தம். நான்முகன் சிவன் என்றுப் போலேயுள்ள பெருப்பெருத்த தெய்வங்களுக்கும் அவன் மென்மையறியப் போகாது என அஞ்சுகிறார். இவ் விஷயம் ''திருமால்! நான்முகன் செஞ்சடையான் . . . தன் மையையாரறிகிற்பார்'' என்ற விடத்தில் ஸ்புடம்.

இப்படி ஆழ்வார் அவன் ஸௌகுமார்யாநுஸந்தானத் தாலே போரபயப் பட்டார் என்ற ''அங்கும் இங்கும்'' திருவாய் மொழியின் ப்ரமேயத்தை யனுபவித்தோம்.

வார்கடாவருவி:—இத்திருவாய் மொழியின் ப்ரமேயத்தை மணவாளமாமுனிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில் ''வாராமல் அச்சம் இனிமால் தன் வலியினையும் சீரார்பரி வருடன் சேர்த்தியையும் பாரும் எனத் தானுகந்த மாறன்'' எனவருளிச் செய்துள்ளார். ஸ்ரீவிபீஷணழ்வான் பெருமாள் திருவடிகளில் சரணம் புக்கவாறே பெருமாள் பக்கல் ப்ரேமத் தாலே கலங்கிய ஸ்ரீசுக்ரீவ மஹாராஜர் ''விபீஷணன் ராவண ப்ராதா. ராக்ஷஸ ஜாதி. இவன் புகுரக் கடவன் அல்லன்'' என்று நிர்பந்திக்கப் பெருமாள் ''பிசாசான் தானவான் . . . அங்குல்யக்ரேண தான் ஹந்யாம்'' என்று தன் சௌர்யாதி களைக் காட்டித் தெளிவித்தாப்போலே இங்கும் பயந்த ஆழ் வார்க்கு தன் தோள்வலிமையைக் காட்டித் தெளிவித்தான் என்பது இத்திருவாய் மொழியின் கருத்து. குவலயாபீட முஷ்டிகாதி நிரஸனத்தாலே ப்ரகாசிதம் சௌர்யம். அதனை யநுஸந்தித்து பயம் தெளிந்தார். இது முதற் பாசுரத்திலே வ்யக்தம். ''திருச்செங்குன் றூரில் திருச்சிற்ருறு எங்கள் செல்சார்வே'' என்று திருச்செங்குன்றூர் திருச்சிற்ருறு (மலையாளதிவ்யதேசம்) செல்சார்வு—அபயஸ்தானம் என்று பயந்தெளிந்தார். ''ஆரமும் படையும் திகழ என் சிந்தை யுளானே'' ''திகழ என் சிந்தையுள் இருந்தானே'' என்று தன் ஹிருதயத்திலே அவன் இருக்கையாலே ஓர் அரணுக்குள்ளே இருக்கிறுப்போலே இருப்பதாக நினைத்து பயம் தெளிந்தார். ஒரோர் பாசுரத்திலும் ஓர் ஓர் அபயஹேது காட்டுகிறார் ஆழ்வார். இது ஈட்டிலே வ்யக்தம். ஆழ்வார் பயங்கெட்டு அமர்ந்தார் என்பதனை ''மாயோனை முக்கண் அம்மானை நான்முகனை யமர்ந்தேனே'' என்ற விடத்திலே காணலாம்.

ஆக அங்கும் இங்கும் ''வார்கடாவருவி'' என இரண்டு பதிகங்களிலும் ஆழ்வார் அவன் ஸௌகுமார்யத்தைப் பார்த்துப் பயந்தவர் அவன் சௌர்யாதிகளை நினைத்து பயந் தெளிந்தார் என்று ஆழ்வார் பயாபயங்களையும் தந்நிதானங் களையும் அனுபவித்தோம்.

ஆக அடியேனுடைய பயாபயங்களையும் தத்காரணங் களையும் ஆளவந்தார் பயாபயங்களையும் தத்காரணங்களையும் ஆழ்வார் பயாபயங்களையும் தத்காரணங்களையும் சிறிது விவரித்தேன்.

ஸ்ரீமத் ஆண்டவனுடைய திருமேனி ஸௌகுமார்யத்தைக் கண்டு அடியார்கள் பயப்படவும் ப்ராப்தம். அன்னார் பிடித்த முக்கோல் பெருமையையும் முக்கோலுக்கும் அந்த

ராத்மாவான ஸ்ரீமந் நாராயணன் மூவிரண்டு குணப் பெருமை யையும் நினைத்து பயந்தெளியும் ப்ராப்தம்.

த்ரியுகநாதனை ஸ்ரீவாஸுதேவன் ஸ்ரீமத் ஆண்டவனே இந்த விபூதியில் பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளி யிருக்கச் செய்து முக்கோல் பிடித்த முனி ஸம்ப்ரதாயம் தழைத்தோங் கச் செய்யவேண்டும் என அடியேன் அழுக்குடம்பு எச்சில் வாயால் இறைஞ்சிப் பிரார்த்தித்து நிற்கிறேன்.

ப்ரமாணஞ்ச ப்ரமேயஞ்ச ப்ரமாதாரச்ச ஸாத்விகா: ||
ஜயந்து க்ஷபிதாரிஷ்டம் ஸஹ ஸர்வத்ர ஸர்வதா ||

ஸ்ரீ:

உத்தம பாகவத லக்ஷணம்

(ஸ்ரீ உப. வே. ஸ. மா. கிருஷ்ணமாசார்யர்
ஸ்வாமி, பெங்களூர்

ஆதியந்தமனந்த மற்புதமான
வானவர் தம்பிரான்
பாதமாமலர்சூடும் பத்தியிலாத
பாவிகளுய்ந்திட
தீதில் நன்னெறிகாட்டி எங்கும்
திரிந்தரங்கனெம் மானுக்கே,
காதல் செய்தொண்டர்க்கெப்பிறப்பிலும்
காதல்செய்யும் என்நெஞ்சமே.

பகத்விஷய பிரவணரான ஸ்ரீகுலசேகரப் பெருமாள் பகவத் பக்தியின் எல்லை நிலமான பாகவத பக்தியில் ஈடுபட்டுப் பாடும் பாசுரங்களில் ஒன்றுனது இது. ''பாகவத விஷயமும் உத் தேச்யமாகிறதும் பகவத்திஷயத்திலே அவகாஹித்தா ரென்று மதிறே'' என்பது ஆச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்தி.

பிரம்ம ஜிஞாஸையைப் பண்ணவாரம்பித்த ஸ்ரீவேதவியாஸ பகவான் ''ஜந்மாத்யஸ்யயத:'' என்கிற சூத்திரத்திலுல் பிரம் மத்தின் லக்ஷணத்தை நிரூபித்தார். சேஞசேதனத்மக பிர பஞ்சத்தின் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களும் அந்த: பிரவிச்ய நியமனமும் மோக்ஷ ப்ரதத்வமும் பிரம்மலக்ஷணம் என்பது ஸித்தாந்தம். இதற்கு மூலமான ''யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே'' இத்யாதி சுருதி வாக்கியங்களே பிரத்யபிஞாபக மாக்குகின்றது, ''ஆதியந்த மநந்தமற்புதமான வானவர் தம் பிரான்'', என்கிற பாதம். கைங்கரிய பிரதி ஸம்பந்தி இன் னர் என்கிறது. (ஆதி) ஜகத்காரணபூதனுய், (அந்தம்) பிர ளய காலத்திலும் அழிவில்லாதவன்—இதனுல் சிருஷ்டி ஸம் ஹாரங்களும், உபலக்ஷணமான் ஸ்திதியும் சொல்லப்பட்டது. (அநந்தம்) எல்லா அவஸ்தைகளிலும் எங்கும் வியாபரிக்கும வனுய்—இது அந்த: பிரவிச்ய நியமனத்தைக் குறிக்கும். (அத்புதன்) ஆச்சரிய குணசேஷ்டிதன்—நிர்குண பிரம்மத்தை கழிக்கிறது. (வானவர் தம்பிரான்) நித்யஸூரிகளுக்கு நிர் வாஹகன்—மோக்ஷபிரதத்வம் குறிக்கப்படுகிறது.

நமக்கு ஸஜாதீயரான சில ஜீவர்கள் அவனைப் பரமபதத்தில் அநுபவியாநிற்க, நாம் அனுபவியாதிருப்பதே. ஸமஸ்த கல்யாண குணத்மகனை அவ்வெம்பெருமானை அனுபவிக்க நித்ய ஸூரிகளோடொக்க நமக்கும் உரிமை யுண்டென்பதையும் இதற்கு பிரதிபந்தகம் நம்முடைய அனாதிகாலமாய்ப் பண்ணின பாபராசிகள் என்பதையும் குறிக்கிறார்—''பாதமாமலர் சூடும் பத்திலாத பாவிகள்'' என்கிற பிரபந்தத்தால், பாபமாவது பகவதாநாதி லங்கனமடியாக நமக்குச் சம்பவித்திருக்கும் பகவந்நிக்ரஹம் அதாவது சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும், எம்பெருமான் சொன்ன கட்டளையை அநுஸரித்து நடக்காததிலை, எம்பெருமான் திருவுள்ளத்தில் ஏற்பட்டிருக்கும் சிற்றம் அதனால் அவ் வெம்பெருமான், இச்சேதனன் நம்மை அனுபவிக்கக் கடவனல்லன் என்று ஸங்கற்பித்து, ''அன்று என்னைப் புறம்போகப் புணர்ந்து'' என்கிறபடியே பிராகிருத போகங்களிலேயே ஈடுபடுத்தி, கர்ப்பவாஸ, ஜன்ம, ஜரா மரணாதி க்லேசங்களை யனுபவிப்பித்தும், நரகத்தில் அதி கோரமான க்லேசங்களுக்கு ஈடுபடுத்தியும், வைத்திருக்கிறான். இப்படியான துக்க பரம்பரைகளிலிருந்து வீடு பெற சாதனமாகிறது அவன் திருவடிகளில் சூடும் பக்தி. பிரபத்தியும் பல ரூபமான ஒரு பக்திவிசேஷம்.

இந்த ரீதியில் எம்பெருமான் திருவடிகளில் நம்மை ஈடுபடுத்துகிறார் நம் ஆசாரியர்கள். இவர்கள் ''தீதில் நன்னன்னெறிகாட்டி எங்கும்திரிந்து அறங்கனெம்மானுக்கே காதல் செய்கின்ற தொண்ட''ர்கள். உலகமெல்லாம் கால்நடையால் சஞ்சரித்து, பாவிகளான நம் போன்றவர்களுக்குக் குற்றமில்லாத நல்லமார்க்கங்களை உபதேசித்தும், தாங்கள் அநுஷ்டித்துக்காட்டியும், அவைகளைப் பின்பற்றும்படி செய்கிறார்கள். நித்யநைமித்திக ரூபமான வர்ணாச்ரம தர்மங்களென்ன, பகவானை அடைவதற்குச் சுலபமான பிரபத்திமார்க்கமென்ன, இவைகளை உபதேசிக்கிறார்கள். எம்பெருமான் சேதனரை உஜ்ஜீவிப்பிக்க ''என்நின்றயோனியுமாய் பிறந்தாய் இமையோர் தலைவா'' என்கிறபடியே அநேக அவதாரங்களை எடுத்தும் பூர்த்தி செய்யாத காரியத்தை இவ் வாசார்யர்கள் பூர்த்தி செய்கிறார்கள். இவர்கள் எம்பெருமானிடத்தில் செய்யும் காதல் இதுவே—அவன் குணங்களை நாடெங்கும் பரவச்செய்து எல்லோரையும் அவன் திருவடிகளில் ஈடுபடுத்துவதே

''எனருஞ்சீர் பேராயிரமும் பிதற்றி,

பெருந்தெருவே ஊராரிகழலும், ஊரா தொழியேன் நான்'' என்றன்றே எம்பெருமானிடத்தில் காதல் கொண்டவர்களுடைய பாசுரம்.

பாகவதோத்தமரான ஸ்ரீ பிரஹலாதாழ்வான், தன்னுடன் படித்துவந்த அஸுரபாலகர்களைவிட்டு, தனக்கொருவனுக்கே மோக்ஷத்தை விரும்பினன் இல்லை. தேவர்களும் முனிவர்களும் தாங்கள் மட்டும் மோக்ஷம்பெறவேண்டி ஏகாந்தமான இடங்களில் தவம்புரிந்து வருகிறார்கள். அயலாருடைய க்ஷேமத்தைப்பற்றி விசாரிப்பதில்லை.

ஆனால் பாகவதோத்தமனை ஸ்ரீ பிரஹ்லாதாழ்வான் தன்னுடன் படித்துவந்த அசுர பாலகர்களைவிட்டு தனக்கொருவனுக்கே மோக்ஷத்தை விரும்பினனில்லை. இதுவன்றே உத்தம பாகவதலக்ஷணம்.

இப்படியே ஆசார்யரும் தங்களுக்குப் புகழ்வருவதற்கோ, தனம் கிடைக்குமென்றே தங்களுக்கு இதனால் ஒரு நன்மையுண்டென்றெண்ணியோ, இல்லாமல், எம்பெருமான் திருவுள்ளமுகப்பதற்கெண்ணியே ஸகலலோகமும் உஜ்ஜீவிக்கும்படி பாடுபட்டு வருகிறார்கள். எம்பெருமானுடைய ஸௌந்தரிய ஸௌசீல்யாதி குணங்களையும், ஸர்வபூத ஸுஹ்ருத்வத்தையும் எடுத்துச்சொல்லி, சிஷ்யர்களுக்கு பிரபத்தி சாஸ்திரத்தை உபதேசித்தும் அவர்களுக்காகத் தாங்களே அவர்களை ஸம்ஸார பந்தத்தினின்றும் விடுவிக்கிறார்கள்.

மேலும் ''தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி, திகழ் திருச்சக்கரத்தின் கோயிற் பொறியாலே ஒத்துண்டு நின்று குடிகுடியாட் செய்கின்றேம்'' என்கிறபடியே பகவானுக்கு கைங்கரியம் செய்ய யோக்யதாபாதகமான, பஞ்ச ஸம்ஸ்காரங்களை (ஸமாச்ரயணத்தை)ச் செய்து வைத்தும் சேதனர்களை உஜ்ஜீவிப்பிக்கிறார்கள்.

ஹாரீத ஸ்மிருதியில் சக்ராதிலாஞ்சனங்களைத் தரிக்காதவர் விஷ்ணுபக்தனல்லார், பகவத் கைங்கரியங்களைச் செய்ய யோக்யனல்லன் என்பது முதலாகச் சொல்லியிருக்கிறது.

மாத்ஸ்ய புராணத்தில் பகவத்பக்தன் தோள்களில் சங்க, சக்ராதிலாஞ்சனங்களைத் தரிக்க வேண்டும். அவனுக்கு நரகமில்லை. அவன் இதர தேவதைகளை வணங்கக்கூடாது, என்று முதலாக அவனுடைய நிஷ்டையும், பெருமையும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த கிரமத்திலேயே, ஆசேது ஹிமாசலம் பல தடவை கள் ஸஞ்சரித்துத் தம்முடைய உபந்நியாஸங்களால் ஆங் காங்கே ஆயிரக்கணக்கான சேதனர்களை பகவதனுபவமாகிற அமிருத வெள்ளத்தில் மூழ்கப்பண்ணி, ஸமாச்ரயண பரந்யா ஸங்களால் அவர்களை க்ருதக்ருத்யர்களாகவும், க்ருதார்த்த தர்களாகவும் செய்து எம்பெருமானுக்கு மிகவும் பிரியமான தொண்டு செய்துவரும் ஸ்ரீமத் வேதமார்க்க பிரதிஷ்டாபன சார்ய, பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய, ஸர்வதந்திர ஸ்வதந்த் ரோபய வேதாந்தாசார்ய, பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம, ஸ்ரீவேதாந்த ராமாநுஜ மஹா தேசிகன் திறத்தில் ''எப்பிறப்பிலும் காதல் செய்யும் என் னெஞ்சமே:'' அந்த ஆசார்யோத்தமன் பல்லாண்டு பல்லாண் டாக எழுந்தருளியிருக்கும்படி,

கங்கையின் புனிதமாய, காவிரிநடவுபாட்டு
பொங்குநீர் பறந்துபாயும் பூம்பொழிலறங்க
ந்தன்னுள், பள்ளிகொண்டருளியிருக்கும்

பெரிய பெருமாளும் பெரிய பிராட்டியாரும் அருள்புரிவாராக.

மேலும் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீரங்கத்தில் ஒரு வேத வேதாந்த பிரவசன பாடசாலையை ஆரம்பித்து வைக்கிறார் என்று கேள்வி யுற்றோம். இது கீதாசார்யன் திருவுள்ள முகக்கும்படி யன்றோ. இந்தப் பாடசாலை ஆசந்திரார்க்கம் நடக்கும்படியும், ஆயிரக்கணக்கான ஆத்மாக்கள் வேத வேதாந்தார்த்தங்களை அதிகரித்து உஜ்ஜீவிக்கும்படியும் ஸ்ரீசரண்யன் அநுக்கிரஹிக்க வேண்டும். இதனால் ''வண்டார் தண்ணந்துழாயான் மாத வன் பூதங்கள் மண்மேல், பண்தான்பாடி நின்றுடிப்பரந்து திரிகின்றனவே'' என்கிற ரீதியில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தி யாகிற ''ஸ்ரீரங்க ஸ்ரீ'' அபிவ்ருத்தியடையும் என்பதில் சந் தேகமில்லை. கலியும் கெடும் கண்டுகொண்மின்.

ஸ்ரீ:

தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்

(ஸ்ரீ உப. வே. ஸ்ரீராமஜயம் T. பக்தவத்ஸலன்)

காளம் வலம்புரி யன்னநற் காத லடியவர்க்குத்
தாளம் வழங்கித் தமிழ்மறை யின்னிசை தந்தவள்ளல்
மூளுந் தவநெறி மூட்டிய நாத முனிகழலே
நாளுந் தொழுதெழு வோநமக் கார்நிகர் நானிலத்தே.

—ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன்.

நம்முடைய பைந்தமிழ் இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவினைக் கொண்டு குன்றுப் பெருமையுடன் பன்நெடுங் காலமாக விளங்கிக்கொண்டு வருகிறது. இயல், இசை, நாடகம் ஆகிய முப்பிரிவிலும் இசையை தற்காலத்தில் பொழுது போக்கிற்காகவும், செவிக்கு இன்பம் பயக்கக் கூடியதாகவும் பயன்படுத்துகின்றனர். ஆனால் முற்காலத்தில் அங்ஙனம் கருதப்படவில்லை.

இசையின் வடிவமாக விளங்கக்கூடிய கடவுளை நாதப் பிரம்மமாக நம் பெரியோர்கள் கருதலாயினர். எனவே, இறைவன் திருவருளைக் காணும் பேரின்பத்தை அடைய நாதோபாசனை வழியைக் கடைப்பிடிக்கலாயினர் நம் மூதாதையர். அதற்குச் சான்றாக பாசுரங்கள் பாடிய ஆழ்வார்களுடைய வரலாறுகளும், பதிகங்கள் பாடிய நாயன்மார்களின் வரலாறும், திருப்புகழ் பாடிய அருணகிரியாரின் வரலாறும், திருவருட்பா பாடிய இராமலிங்க அடிகளின் வரலாறும் நமக்கு இன்றும் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. அவ்வன்பர்கள் அனைவரும் பரமனைப் பாமாலை பாடியே அவன் இன்னருளைப் பெற்றனர்.

மேற்கூறிய ஆழ்வார்களும், நாயன்மார்களும், அடியார்களும் தாங்கள் இறைவன் மீது பாடிய பாடல்களை இன்னிசையோடு வழங்கினர். பெரியாழ்வார் உலை வலம் வரும்போது

திருமாலின் திருவருள் பெற்று யானையின் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த மணியைத் தாளமாகக் கொண்டு 'பல்லாண்டு' பாடத் தொடங்கினர். அவ்வாறே திருப்பாணழ்வாரும் தன் கையகத்திருந்த யாழினில் நாதம் எழுப்பி, தம் வாயால் மெய்ம்மறந்து அரங்கனைப் பாடினர். சீர்காழிக் குளக்கரை யில் ஞானப்பாலை அருந்திய திருஞான சம்பந்தரும் சிவபெரு மானின் அருளைப் பெற்று, கைத்தாளமிட்டுப் பதிகங்களைப் பாடினர். இன்னோரன்ன சான்றுகளால் பக்தர்கள் அனை வரும் ராகம், தாளம் கொண்டே தங்கள் தங்கள் பாடல்களைப் பாடி இறை இன்பம் அடைந்து நற்பேறு பெற்றனர்.

இங்ஙனம் பக்தர்களால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்ட தொகுப்புக்கள் பல நம்மிடையே வழக்கில் இருந்து வருகின்றன. அவற்றுள் தமிழ்மறையெனப் பெரியோர்க ளால் பாராட்டப்படும் 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' என்ப தும் ஒன்று. இந்நூல் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் பதின்மராலும், சூடிக் கொடுத்த சுடர்க்கொடி யாராலும் மதுர கவிகளாலும் வெவ்வேறு காலங்களில் இயற்றப்பெற்ற பாக்களைக்கொண்ட தொகுப்பாகும்.

இவ்வாறு வெவ்வேறு காலங்களில் இயற்றப்பெற்ற பாக் களை, இசையமைப்புடன் ஒன்றுகத் தொகுத்து நமக்குப் பய னுறும் முறையில் செயல் புரிந்தவர் ஒரு வைணவப் பெரியா ராவார். அவர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; அவர் கிருதி, பதம், ஜாவளி, இராகம், பண், நாதம் முதலிய இசை வடிவங்களில் சிறந்து விளங்கினர். இசைக்கு நாதம் சிறந்து விளங்குவது போல, இசைப் பயிற்சியில் சிறந்து, நாலா யிர திவ்யப் பிரபந்தப் பாடல்களுக்கு நாதமாக விளங்கக்கூடிய பண்களை அமைத்த காரணத்தினால் இவரிடம் அன்பு பூண்ட அனைவரும் '' நாத முனிகள் '' என்றே இவரை அழைக்கலாயி னர். அங்ஙனம் அன்பினால் அழைக்கப்பட்ட அழுதப்பெயரே அவருக்கு இயற்பெயராக ஆயிற்று.

இங்ஙனம் அன்பர்களுக்கு உறைவிடமாக விளங்கிய ஸ்ரீமந் நாதமுனிகள் மன்னார்குடியில் வாழ்வு நடத்துங்கால், மைசூர் மாநிலத்திலிருந்து வந்த சில வைணவப் பெருந்தகையோர் ''ஆராவமுதே'' எனத் தொடங்கும் திருவாய் மொழியினைப் பாடினர். அங்ஙனம் திருவாய் மொழியினைப் பாடிய வைண வர்கள் இறுதியில் '' குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆயிரத்துள் இப்பத்தும் '' என்னும் அடியினைப் பாட, அதனைக் கேட்ட நாதமுனிகள் மீதிப் பாடல்களை, வந்த வைணவர்கள் மூலம்

அறிய ஆவலுற்றார். ஆனால் அவர்களால் கூற இயலாததை அறிந்து மிக மனம் வருந்திய நாதமுனிகள் நம்மாழ்வார் அவதரித்த ஆழ்வார் திருநகரிக்குச் சென்றார். அங்குச் சென்ற நாதமுனிகள் ஒருமனப்பட்டு நம்மாழ்வாரை நோக்கித் தவம் புரிந்து, பிரபந்தங்கள் அனைத்தையும் தன்னுடைய யோக நிலையிலேயே அறிந்தார். பின்னர் ஸ்ரீமந் நாதமுனிகள் தன்னுடைய மருமக்களான மேலையகத்தாழ்வானையும், கீழையகத் தாழ்வானையும் துணையாகக் கொண்டு, திவ்யப் பிரபந்தப் பாசுரங்களை தேவகானத்தில் அமைத்தருளினார்.

இதனால் வைணவக் குலத்திற்கே யல்லாமல், இசையுலகிற்கும் நாதமுனிகள் தொண்டு புரிந்தவராவர். இந்த இசைப் பெரியாரைப்பற்றி ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் வாயார, மனமாறப் போற்றியுள்ளார்.

உலகம் உய்ய வைணவம் தழைக்க ஸ்ரீமந் நாதமுனிகளை நாளும் எண்ணுவமே!

ஸ்ரீ:

செய்யுள் விகாரமா, சொல் விஹாரமா?

கவிச்சக்கரவர்த்தியும் கவிதார்க்கிக சிங்கமும்

(ஸ்ரீ கி. வேங்கடசாமி ரெட்டியார், வி. பூதூர்)

கவி

கவி என்ற சொல்லுக்குப் 'பாட்டு' என்றும், 'பாடும் புலவன்' என்றும் பொருள் ஆகும். எனினும் கவி என்பதற்குப் புலவர் பெருமக்கள் 'இனியவை காண்பவன்' எனவும், 'ஜீவர்களின் முன்ஜன்மச் செயல்களை அறிபவன்' எனவும் பொருள் கூறுவர்.

இது பற்றியே முற்றறிவினனை எம்பெருமானைக் **'கவி'** எனப் போற்றுவர் பெரியோர்.

ஆயிரநாமத்திலும்,

'வேதோ வேதவிதவ்யங்கோ வேதாங்கோ வேதவித் கவி:'
எனக் கூறப்பட்டுள்ளது.

கம்பநாட்டாழ்வாரும்,

' கவிகளாகுவார் காண்குவார் மெய்ப்பொருள் '
என்று காட்டுகின்றார்.

இரவி காணு இடத்தையும் கவி காண்பான் என்ற பொருள் உள்ள 'ரவியெரு கனி தாவுகவி யெருகுனு' என்று ஒரு தெலுங்குப் பழமொழியும் உண்டு.

இதனால் எல்லாவற்றையும் அறிபவனே கவி எனவும், முற்றறிவினனை எம்பெருமானுக்கே கவி எனும் பொருந்து மென்பதனோடு, அவன் அடியார் அடியே கூடும் அறிஞர் பெருமக்கட்கும் அப் பெயர் பொருந்தும் எனவும் அறியலாம்.

இத்தன்மை வாய்ந்த இரு பெருங் கவிகளே இங்கெடுத்துக் கொண்ட 'கவிச்சக்கரவர்த்தியும் கவிதார்க்கிக சிங்கமும்' ஆவார்கள்.

இவ்விரு பெருங் கவிகளின் இரண்டொரு சொல்லாற்றலை விளக்குவோம்.

கவிச்சக்கரவர்த்தி

கவிச்சக்கரவர்த்தி என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர் கம்பநாட்டாழ்வார் ஆவர்.

அவருடைய கவியிரண்டனை முதலிற் பார்ப்போம்:

'வாரம் என் இனிப்பகர்வது வைகலும் அனையான்
பேரி னல்வரும் இடையுறு பெயர்கின்ற பயத்தால்
வீர நின்குலமைந்தனை வேதியர் முதலோர்
யாரும் யாஞ்செய்த நல்லறப்பயனென இருப்பார்'

(கம்பரா-அயோத்தி-மந்திர-41)

என்ற இப் பாடலுள் இராமபிரான் திருநாமப் பெருமையை வதிட்டமுனிவர் கூற்றுக் கூறுவதை அறிவோம்.

இதனுள் (நமக்கு) வரும் இடையூறுகள் அனையான் பேரினால் பெயரும் என்று தெரிவிக்கும் நிலையில் இங்கு இடையூறு என்ற சொல்லே இடையூறு செய்கின்றது; இடையூறு என்ற சொல் இலக்கண மரபுப்படி காய்ச்சீர் ஆகும்; இங்கு இருக்க வேண்டியது விளஞ்சீர். அதனை விட இயலவில்லை; அதனால் 'இடையூறு' என்ற சொல்லிலுள்ள நெட்டெழுத்துக் குறுக நேர்கின்றது; குறுகியபோது ஓசை நயம்பொருந்தி அழகாக விளங்குகின்றது; அன்றியும் ஒரு பொருள் நயமும் அமைந்து விடுகின்றது; அவன் பேரினால்—இங்கு 'இடையூறு' என்ற சொல் 'இடையுறு' எனக் குறுகிற்றல்லவா! சொல்லும் பொழுதே இடையூறு குறைவதைக் காண்கிறோம். இது அனுபவத்தில் காணும் உண்மைதானே.

'இடையூற்றுக் கிடையூருய் யான்காப்பென்' என முன்னர்ப் பால காண்டத்தில் கையடைப் படலத்தில் தயரதன் கூற்றுக வருதலும், 'மங்கிய வல்வினை நோய்காள் உமக்கும் ஓர் வல்வினைகண்டீர்'

(பெரியாழ்வார் திருமொழி 5-2-4)

என்பவும் நினைவு கூர்தற்குரியது.

கவிச் சக்கரவர்த்தி இங்கு, இடையூற்றுக்கு இடையூருக விளங்கும் திருநாமப் பெருமையைக் கவிக்கேற்ற சொல்லாற்றலால் விளக்குவதைக் குறிப்பாகக் கண்டு மகிழ்கின்றோம்.

இன்னொன்று,

'அச்சொற்கேட்டவன் ஆழியான் என்றனை ஆயின்
கொச்சைத்துன்மதி! எத்தனைப் போரிடைக் குறைந்தான்
இச்சைக்கேற்றன யான்செய்த இத்தனைகாலம்
முச்சற்றுன்கொல் அம் முழுமுத லோனென முனிந்தான்'

(கம்பராமா-உயுத்த-மந்திர-112)

இது இராவணன் வீடணனை நோக்கிச் சொல்வது.

அவன் ஆழியான் என்றனை யாயின் என் விருப்பத்தின் வண்ணம் அரசாண்ட இத்தனைகாலமாக அவன் 'மூச்சு' அற்றிருந்தானோ? என்கிறான் இராவணன். இங்கு எதுகை நோக்கி 'மூச்சு' என்பதன் நெடுமை குறைந்து 'முச்சு' என்றுயிற்று. 'மூச்சு'விடவும் முடியாமல் 'மூச்சு' என்று சொல்லவும் இயலாமல் திணறி முச்சென் சொல்லும் நயம் சிந்தனைக்குரியது.

இம் முச்சு என்பதனையும், முன்சொன்ன 'இடையுறு' என்பதனையும் செய்யுள் விகாரம் என்று சொல்லாமாயினும், இவற்றை நான் சொல் 'விஹாரம்' (விளையாட்டு) என்று கொண்டு இன்புறுவோம்.

கவிதார்க்கிக சிங்கம்

இனிக் கவிதார்க்கிக சிங்கத்திடம் வருவோம்.

அலர்ந்த அம்பு யத்திருந்து தேனருந்தி இன்னகல்
அல்கு லார்அ சைந்த டைந்தநடைகொ ளாததனமெனை?
நலம்தவிர்ந்த தால்அதென்கொல்? நாவின்வீறிழந்ததால்
நாவணங்கு நாதர்தந்த நாவின்வீறி ழந்ததென்?
சலம்தவிர்ந்துவாது செய்துசாடி மூண்ட மிண்டரைச்
சரிவி லேன்ன னக்கனைத்து ரைத்த ஏதிராசர்தம்
வலந்தருங்கை நாயனுர்வ ளைக்கிசைந்த கீர்த்தியால்
வாரிபால தாம்அதென்றும் மாசில்வாழி வாழியே.

(ஸ்ரீ தேசிகப் பிரபந்தம், அமிருதாசுவாதினி 33)

இது எம்பெருமானுருடைய சிறப்பை எடுத்துக் கூறுவதில் தன்னிகர் அற்ற கவியாகும்.

'பூநிலாய ஐந்துமாய் ' என்று தொடங்கும் திருச்சந்த விருத்தம் போன்றது. வடமொழியில் 'யதிராஜ சப்ததி' என்ற ஒரு தனி நூலால் எதிராசரைப் போற்றிய ஸ்வாமி தேசிகன் தென் மொழியில் தமக்கே இயல்பான ஆற்றலால் இத் தனிக் கவியில் அவ்வாசாரியனைப் போற்றி அமைகின்றார். காரண காரியத்தோடு வரும் தருக்க முறையிலும் இது அமைந்துளது. கவியழகும் தருக்க முறையும் பொருளாழமும் அமைந்த இக்கவி நம் கவிதார்க்கிக சிங்கத்தால் அன்றி வேறொருவரால் அமையாதன்றே? இதன் பொருளைச் சிறிது காண்போம்.

புகழ், கீர்த்தி, சிறப்பு இவை ஒரு பொருளை விளக்கும் பல சொற்கள். இச் சொற்கள் ஒருவருடைய பண்பை வெளிப்படுத்துவன ஆகும்.

ஒவ்வொரு பண்பிற்கும் ஒவ்வொரு நிறத்தை ஈடாகக் குறிப்பிடுவர் சான்றோர்.

இங்குப் புகழ்க்கு நிறமாவது வெண்மை.

'வெள்ளைச் சுடர்விடும் உன் பெருமேன்மை' என்பர் அமுதனரும்,

வென்றியிலும் வில்வென்றி, சொல்வென்றி என இரு வகை யுண்டு.

வில்வென்றியிலும் சொல் வென்றியே உயர்ந்தது.

வில்வென்றியால் பிறர் அழிவரே அன்றித்திருந்தார்; சொல் வென்றியால் பிறர் அறிவுடையராதலு மன்றித் திருந்தி உய்வதற்கும் வழியுண்டு. இதனை அருளாளப் பெருமாள் எம் பெருமானார் வரலாற்றால் அறியலாம்.

இச் சொல் வென்றி யார்க்கும் எளிதாக அமைந்துவிடுவதில்லை; எம்பெருமானார்க்கும் நம் கவிதார்க்கிக சிங்கத்துக்குமே அமைந்தது. எம்பெருமானருடைய சொல் வென்றியை,

> தேரார் மறையின் திறமென்று மாயவன் தீயவரைக்
> கூராழிகொண்டு குறைப்பது; கொண்டலனைய வண்மை
> ஏரார் குணத்தெம் இராமானுசன் அவ் எழில்மறையில்
> சேராதவரைச் சிதைப்பதப் போதொரு சிந்தை செய்தே'

என்று சிறப்பித்துக் கூறுவர் அமுதனார்.

எம்பெருமானுர்க்கு 'யாதிராசர்' என்பது அசாதாரணமான திருநாமம். தேசிகன் என்பது பிறர்க்கு எப்படிப் பெயரா காதோ அப்படியே யதிராசர் என்பதும். (யதிராசர்) என் பது தமிழ் மரபுப்படி 'எதிராசர்' எனவரும்.

சொல் வென்றியிற் சிறந்த எதிராசர் கீர்த்தியினுல் அக் கீர்த்தியின் வெண்மை நிறம் எங்கும் பரவியதால் நீர் எல் லாம் பாலாகத் தோன்றவே நீரைப் பிரிக்கும் வீறுடைய அன் னங்கள் அவ்வீறு இழந்தன என்று சொல்வது இக்கவி.

இதனுள் 'எதிராசர்' என்ற சொல்லே அப்படியே சொன் னுல் ஓசைகெடும், நயமும் இராது. இது நோக்கிச் செய்யுள் இன்பம் பயக்கும் வண்ணம் எதிராசர் என்ற சொல் ஏதிராசர் என்றுயினது செய்யுள் விகாரம் என்று உரை சொல்லிவிட லாம். அப்படிச் சொல்வதிலும் உள்ளபடியே ஏதிராசர் என்று கொள்வதில் அரிய உண்மை ஒன்றையும் காண்கின் றேம். அதாவது:

எம்பெருமானுடைய பஞ்சாயுதங்களுமே எம்பெருமானுராக வந்தன என்பதே முன்னோர்களுடைய கொள்கை.

அடையார் கமலத்தலர்மகள் கேள்வன்கை யாழிஎன்னும்
படையோடு நாந்தகமும் படர்தண்டும் ஒண்சார்ங்க
வில்லும்
புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலம் காப்பதற்
கென்(று)

இடையே இராமாநுசமுனியாயின இந்நிலத்தே—என்ற அமுதனுருடைய பாசுரத்தால் இதனே அறியலாம்.

இதனுள் 'ஆழி என்னும் படையோடு' என ஓடு உருபு கொடுத்து உடனிகழ்ச்சிப் பொருளில் தலைமை தோன்றக் கூறிய இதனுல் சிறப்பு திருவாழியாழ்வானுக்கு உண்டாகின் றது.

ஆயுதங்கட்குப் பொதுப்பெயர் 'ஏதி' என்பது. இவைகட் கரசர் 'ஏதிராசர்' என்றுகும் 'ஹேதிராஜ' என்று வடமொழி யில் திருவாழி யாழ்வானைக் குறிப்பிடுவதுண்டு.

எம்பெருமானுடைய ஆயுதங்களே எம்பெருமானுர் என்றுல் அவரைத் தமிழ் மரபுப்படி ஏதிராசர் என்றும் சொல்லலாமே என்பதைக் குறிக்கவே 'ஏதிராசர்' என்ற சொல்லைச் சேர்த் திருக்கலாம் என்பதிலும் தவறில்லையே. எதிராசர் புகழ்

நீண்டு ஏதிராசர் ஆக விளங்குவதில் அரிய கருத்தாழத்தைக் காண்கின்றேம். சொல்வென்றி மிக்க எதிராசர் வில்வென்றியு மிக்கவராய் ஏதிராசராக விளங்குவது பெருமைதானே. இதனால் 'எதிராசர்' என்பது இன்பம் பயக்க 'ஏதிராசர்' என ஆனது பிறர்க்காயின் விகாரம் என்னலாம். எம்பெரு மானுர்க்காயின் விகாரமன்று; இயல்பேயாம், எதிராசர் புகழ் நீண்டது; ஏதிராசர் என நீண்டார்; நாம் நீட்ட வேண்டுவ தில்லை. ஏதிராசர் என்பதனையும் எம்பெருமானுர் திருநாம மாகவே கொள்வதிலும் குறையில்லை.

ஆயுதங்களால் எதிரிகள் வலியடங்குதல் போல் இவரது சொல்லாற்றலாலும் வாதிகள் வாயடங்குவர்; இவ் விருவகை யும் எம்பெருமானுர்க்கு வெளிப்படையாகவும் மறை முகமாக வும் அமைந்திருத்தல் போற்றத்தகுந்த ஒன்றாகும்.

எம்பெருமானுர் 'சலம்' என்ற ஒருவகைக் குற்றமின்றி வாதிட்டுத் தம்மொடு சாடி மூண்ட மிண்டரை நோக்கிச் சரி விலேன் என உரைத்த ஏதிராசர் தம் கீர்த்தி, வென்றி தரும் கையுடைய நாயனுரின் வலை (சங்கம்) போன்றது. அது வெண்ணிற முள்ளது; அது மாறுபடாது என்றும் ஒரு படித் தாய் விளங்கும். 'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' அல் லவா? அவ் 'வெள்ளைச்சுடர்' 'திசையனைத்தும் ஏறிற்று; எங் கும் பரவிற்று; இதனால் 'பாலுண் குருகு' ஆய அன்னம், தன்னடைபோன்றது பருவ மங்கையரது நடை என்பதுபோய், மங்கையரது நடை ஒத்தது இது என்பதற்கு மின்றித் திசை யனைத்தும் ஏறிய அவ் வெள்ளைச் சுடரால் நீர் வேறு பால் வேறுகப் பிரித்துப் பருகுதற்குரிய தன் நாவீறு 'நாவணங்கு நாதர் தந்த நாவின் வீறு இழந்து தளர்ந்து நடையுகு மாழிந்தது.

தனக்குண்டான நாவின் வீறு 'நாவணங்குநாதர் தந்த வீறு; அஃது இன்று இழக்கப் பெற்றேமே; ஆம், முன்னர் இரணி யன் முதலானோர் அந்த நாதனுர் தந்த உடலின் வீறிழந்தாற் போல நாம் நம் நாவின் வீறிழந்தோம் என்று வருந்திற்று.

எம்பெருமான் பக்கலன்றிப் பிறர்பால் பெறும் வீறுகள் இப்படித்தான் இழக்க நேரும் போலும் என்று நினைந்து நலந் தவிர்ந்தன என்று பொருள் காண்பதில் எத்துணை நயங்கள் தோன்றுகின்றன என்பதை அறிய அறிய மெய்ம்மயிர் சிலிர்க் கின்றது.

இப்படிப்பட்ட எம்பெருமானுடைய புகழ் என்றும் வாழி வாழியே என்று பல்லாண்டு பாடி முடிக்கின்றார், ஸ்வாமி தேசிகன்.

இதுவரை கூறியவற்றால் கவிச்சக்ரவர்த்தியின் பாடல்களால் இடையூற்றுக்கு இடையூறுண்டானதையும், எதிரி மூச்சுத் திணறியதையும் கண்டு, கவிதார்க்கிக சிங்கத்தின் பாடலால் எதிராசர் புகழ் திசையனைத்தும் ஏறுவதைக் கண்டுகளித்தோம். இவ்விரு பெருங் கவிகளையும் நாம் வாயார வாழ்த்தி வணங்கி உய்வோம்.

ஸ்ரீ:

திருப்பாவையின் அவதாரம்

(ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி மாதவய்யங்கார்)

ஆயர்பாடியில் கோவிந்தக் கோனுர் வீட்டில் திரள் திரளாய் கோபர்கள் நிறைந்த முற்றம். கவலையே வடிவங்கொண்ட முகங்கள். கண்ணீர் மல்கும் கண்கள். ஒரே சோகக் காக்ஷி. ''பெரிய கோனரே! நாளை மார்கழி மாதப் பிறப்பு. எட்டு மாதகாலமாய் ஒரு சொட்டு மழை கிடையாது. யமுனை நதியின் ஜலம் கஷாயம். எங்கும் வரண்ட ஆறு. குடிக்க ஜலமின்றித் தவிக்கும் கன்றுகள், பசுக்கள். விதைத்த தான்யங்களை பூமியே விழுங்கிவிட்டார் போலும். கண்ணுக் கெட்டிய வரை பயிர் பச்சையே காணோம். பெரும் பஞ்சம் நேர்ந்து விட்டது. ஊருக்குப் பெரியவர் தாங்கள். வெகு காலம் அனுபவம் தெளிந்த புத்திமான். இப்பொழுது என்ன செய்யவேண்டும்? தக்க யோசனை கூறவேண்டும். தாமதித்தால் பசுக்களுக்கே மோசம். இனி அலக்ஷ்யம் செய்வது தகாது,'' என்று அனைவரும் ஏக காலத்தில் முறையிட்டனர். ''மஹா ஜனங்களே! ஏன் இத்தனை பதற்றம், அளவற்ற பயம்? சற்றுப் பொறுங்கள், பயத்தை உண்டாக்கிய தெய்வமே பயத்தை நிவர்த்தி செய்யும். நாம் ஏதோ தெய்வக் குற்றம் செய்திருக்கிறோம். அதற்குத் தக்க தண்டனை அனுபவிக்க வேண்டியது அவசியம், இல்லையேல் நந்தகோபன் மகன் இருக்கும் இந்த ஊரில் இவ்வித க்ஷாமம் நேரிடுமோ? லோகம் க்ஷேமத்தை அடையும் மார்க்கத்தைத் தேடுவோம், சற்று ஆலோசனை செய்து பார்ப்போம்.

இப்போழுது ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. எனக்கு சுமார் பத்து வயது இருக்கலாம். அப்போது இதைக் காட்டிலும் கொடிய பஞ்சம். என் பாட்டனார் ஊரிலுள்ள கன்யாப்பெண்களை எல்லாம் ஒன்று கூட்டி மார்கழி மாதம் முழுவதும் ஒரு நோன்பு நூற்குமாறு செய்வித்தார். ஒரு மாதத்துக்குள் தேசம் சுபிட்சமாகியது. ''தெய்வம் தீறின் கைத்தவம் மாளும்.'' அதன் அருள் கிடைத்தால் மலைபோல் வந்தனவெல்லாம் பனிபோல் நீங்கும். அவ்விரதத்தை நாம்

இப்பொழுது செய்தால் உடனே ஊருக்கு க்ஷேமம். இதை விரைவில் செய்ய ஆயத்தஞ் செய்யுங்கள். மார்கழி முதல் தேதியிலிருந்தே விரதம் ஆரம்பிக்க வேண்டும். பெருமாள் உகந்த மாதம். ''மாஸாநாம் மார்க்கசீர்ஷோஹம்'' என்று அவரே உபதேசித்திருக்கிறார்.''

சபையோர்களின் முகங்கள் சூரியனைக் கண்ட தாமரை போல் மலர்ந்தன. அபரிமித ஆனந்தமும் உற்சாகமும் அவர்கள் முகத்தில் தாண்டவமாடின. ''தாத்தா! மிக்க வந்தனம். உங்கள் அனுபவமும் ஆலோசனையும் எவருக்கு வரும்? அதே நோன்பை இப்பொழுது நமது கன்னிகைகளை நூற்கச் சொல்லுவது அத்யாவச்யம். ஆனால் அப்பெண்கள் இக்குளிரில் எவ்விதம் நீராடுவது? இருட்டில் அவர்களுக்குத் தக்க துணை யார் இருக்கிறார்கள்? மேலும் இந்தக் கடும் பஞ்சத்தில் பழம், புஷ்பம், திருத்துழாய் முதலிய பூஜா த்ரவியங்கள் எவ்விதம் கிட்டும்? சேகரித்துக் கொடுக்கக் கூடிய சாமார்த்தியந்தான் எவருக்கு உண்டு?''

கோவிந்தக் கோனரின் கண்கள் மலர்ந்தன ''மஹா ஜனங்களே! இது என்ன பெரிய யோசனை? நம் பெண்கள் குளிருக்கு அஞ்சார்கள். அவர்களுக்குத் தக்க துணை தேடுவதில் தான் என்ன ச்ரமம்? நமக்கு தெய்வம் அளித்திருக்கும் பாக்கியம் யசோதை இளஞ் சிங்கம் கண்ணன் இருக்குமளவில் நமக்கு என்ன குறை? ஏன் கவலையும் வருத்தமும்? புருஷோத்தமனே அவன். அறைக் குழந்தை பூதனையின் உயிரை மாய்த்தது—காவலுக்கு வைத்த சகடத்தைச் சின்னஞ் சிறு காலால் உதைத்துத் தள்ளியது. இதெல்லாம் இருக்கட்டும். நாவல் பழக்காரியின் கூடையை நாலு நெல்லைப் போட்டு நவரத்னமாக நிறைத்தானே, அவள் பூர்வ ஜன்மத்தில் செய்த சுகிருதம். ஏழு வயது பாலகன் குன்றைக் குடையாய் எடுத்து ஏழுநாள் கல்மாரியில் தவித்த கோக்களையும் கோபர்களையும் காப்பாற்றியதை மறந்தீர்களோ? வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அழுவாரைப்போல் கண்ணன் கையிலிருக்கும்போது கன்னியர்களுக்குக் காவல் வேறு தேடத் தேவையோ?

இதைக் கேட்ட சிலர் சினந்து ''ஓய், பெரிய கோனரே! உமது புத்தி உலக்கைக் கொழுந்துதான். என்ன அழகிய வார்த்தைகள்? எவ்வளவு சிறந்த ஆலோசனை? போதும். போதும். சபைத் தலைவராய் உம்மைத் தேர்ந்தெடுதோமே, எங்கள் புத்தியை நிந்திக்க வேண்டும். அந்த ஜாரசோர

சிகாமணி பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன். ஏற்கனவே நமது கன்னிகைகள் அவன் மாயவலையில் சிக்கினர். அக்கள்வனை இவர்களுக்குத் துணையாக அனுப்பி விட்டால் வேறு வினையே வேண்டாம். எங்கள் மானம், கௌரவம் எல்லாம் கிருஷ்ணர்ப்பணம் தான். அப்பெண்களின் மூடத்தன்மையைக் கண்டு நிலவறையில் அடைத்திருக்கிறோம். அவர்களை வெளியில் விடுவது அஸாத்யம், ஆகாத ஆலோசனை'' என்று இடி முழக்கம்போல் கர்ஜித்தனர். கோவிந்தக் கோனர் முகத்தில் சாந்தமும் அமைதியும் ததும்பியது. ஆனந்த பாஷ்பம் ஆறுபோல் பெருகியது. ''என்ன ஆச்சர்யம்? கோப குமாரிகளின் பாக்கியமே பாக்கியம். யோகிகள் த்யானத்திற்கு எட்டாதவன். வேதங்களாலும் அறியவொண்ணாத ப்ரபு. அவன் ஆயர் சிறுமியருடன் கொஞ்சிக் குலாவுகிறான். கோப குமாரிகள் த்யானத்திற்கு இலக்காகிறான். அவர்களிட்ட ஏவல்களைச் செய்கிறான். அவர்கள் கையாளாகவன்றோ சேவகஞ் செய்கிறான்! அக்கன்னியர்கள் செய்வது மிகவும் ச்லாக்கியம். தந்தியற்ற வீணை ஒலிக்குமா? கண்ணனின்றிக் கன்னிகைகள் வாழ்வது தான் ஸாத்யமோ? உங்கள் மூடச் செய்கைகளினாலேயே இப்பெரும் பஞ்சம் நேரிட்டிருக்கிறது. உடனே சென்று அப்பெண்மணிகளை வெளியில் விடுங்கள். என் சொல்படி விரதத்தை ஆரம்பிக்க ஏற்பாடு செய்யுங்கள்.''

கோனர் இவ்விதம் கூறுமளவில், கண்ணன் தோழர்களுடன் விளையாடிக் கொண்டு ஓடிவந்தான். அவ்வளவுதான். மழைக்கால மேகத்தைக் கண்ட மயில்போல் சபையோர் அனைவரும் ஒருமிக்க எழுந்து ஆடவும் பாடவும் தலைப்பட்டனர். கோனர் ஆனந்தம் கூறத் தரமோ?

''கருணைக்கடல் நம்மைத் தேடி வந்ததே! தேடப்போன அருமருந்து கண்முன் தென்பட்டதே! இதென்ன சகுனம்? இதுதான் பகவத் ஸங்கல்பம் என்று சிரக்கம்பம் செய்தார். அங்கு நடந்த விருத்தாந்தங்களை விவரமாய்த் தெரிவித்தார். க்ருஷ்ணன் செந்தாமரைக் கண்கள் மலர்ந்தன. தன் எண்ணம் ஈடேறியதைப் பற்றிப் பரமானந்தம் கொண்டான். பேசுகிறான், குழந்தை, ஏதுமறியாதவன் போல. ''இதுவே வெகு நேர்த்தி! நானு உங்கள் பெண்களுக்குத் துணைவன்? யார் தான் ஏளனம் செய்யார்? சற்று வேணுகானம் கேட்ட தன் பலன் இருட்டு நில மாளிகை வாசம். 'மாதவா, கோவிந்தா, தாமோதரா' என்று என் பெயரைக் கூவியழைத்ததற்குத் தண்டனை அன்ன பானம் இல்லை. பின்னும் என்

பாதுகாப்பில் விட்டால் என்னென்ன சிறையோ? நினைத்தால் உள்ளம் உருகுகிறது. உடல் நடுங்குகிறது. போதும் உங்கள் சகவாசம். குற்ற மொன்றுமில்லாத அச்சிறுமியர்கள் என்னால் துன்பத்திற்கு ஆளாக வேண்டாம். எடுத்ததற்கெல் லாம் சந்தேகம். ஸதா குற்றமும் கோளும் அடாப்பழி சுமத்துவதும்தான் உங்கள் வேலை. நான் கன்றுகளை அருகில் அழைப்பதன் பொருட்டுக் குழல் ஊதுவதுகூடப் பொறுக்க வொண்ணாத அபராதம். கண்ணன் வேணுகானம் கேட்டுப் பண்ணும் ஊழியங்கள் விட்டு உண்ணவும் மறந்து ஓடி வரு கின்றனர் எங்கள் பெண்கள் என்று எல்லோரும் ஒன்றுகூடி என் அன்னையிடம் வந்து கடல் மடை திறந்தால் போல் அவதூறு கூறுகின்றனர். எங்க அம்மா அதை நிஜமென் றெண்ணி அதட்டி அடித்துக் கண்டிக்கிறாள். தாத்தா! நான் அவர்கள் வழிக்குப் போவதில்லை. எனக்கு அப்பொறுப்பு அடியோடு வேண்டாம்'' என்று கண் கலங்கினான்.

கண்ணன் மாயவலை வீசியதுதான் தாமதம்! பெரியவர் மனம் அனலிட்ட வெண்ணைபோல் கரைந்துருகியது. முன்பு பரம புருஷன் என்று தத்துவம் பேசியவர் இப்பொழுது சாதாரண பாலகன் என்றெண்ணி மோஹமடைந்தார். அவன் புன்முறுவலிலும் மழலைச்சொல்லிலும் மோஹித் தார். கண்கள் விடாய் நீர அவன் அழகைப் பருகினர். அருகில் அழைத்து மடியில் வைத்துக் கட்டியணைத்தார். ஆசை தீரக் கொஞ்சிக் குலவினர். மற்றவர்களை நோக்கி ''இது என்ன அக்ரமம்! எத்தகைய அவிவேகம்! பால் மணம் மாறுப் பாலகன் மேலா பழியைச் சுமத்துவது? பின்னும் ஏதும் அறியாச் சிறுமியர்களைச் சிறையிலடைத்தது மூடத் தன்மை. குழந்தை குழலூதுவது கர்ணம்ருதம். அவன் அழ கைப் பருகுவது தேவாம்ருதம். அவன் பெயர்களை அழைப் பது நாப்படைத்த பயன். இவைகளா குற்றம்? பெண்க ளின் புத்தியை மெச்சுவதை விட்டு தண்டிப்பா? மஹா மேதாவிகள்! அசட்டுத் தனம்! புத்தியைச் சுடவேண்டும். ஐயோ பாவம்! செல்லுங்கள் சீக்கிரம். பெண்களை வெளியில் விடுங்கள். கண்ணா! என் கண்ணே! போனது போகட்டும். அவர்கள் கிடக்கிறார்கள், அசத்துக்கள். நாளை மார்கழித் திங்கள். உன் தோழிமார்கள் நோன்பு நூற்கப் போகிறார் கள். நாடும் நகரமும் மழையின்றித் தவிக்கின்றன. கோப கன்னியர்களுக்கு உற்ற துணை உன்னை யன்றி வேறில்லை. அவர்கள் பூஜைக்கு வேண்டிய உதவி நீ தானப்பா செய்ய வேண்டும்'' என்று அன்பு மழை பொழிந்தார். கண்ணன்

சம்மதத்தைக் கேட்பானேன்? பழம் நழுவிப் பாலில் விழுந்தது.

புன்முறுவல் பூத்த திருமுகம், திருவரையில் பீதாம்பரம், வக்ஷஸ்தலத்தில் விளங்கும் வனமாலை இவைகளுடன் மன்மத னுக்கும் மன்மதனுகிய திருமால் ஆயர் சிறுமியர்கள் முன் தோன்றினர்.

இவையனைத்தையும் ஸ்ரீ ஆண்டாள் ப்ரத்யக்ஷமாய்க் கண் டாள். தன்னையும் கோப குமாரிகள்போல் பாவித்து மார் கழி மாதம் நீராடி நோன்பு நூற்றாள்.

இவ்விருத்தாந்தத்தை எண்ணியே ''மாலே, மணிவண்ணா'' என்ற பாட்டால் ''சிஷ்டாசாரம் அத்யாவசியம். ஆகவே மேலோர் செய்ததை நாங்களும் செய்கிறோம். அவர்கள் காட்டிய வழியில் செல்லுகிறோம்'' என்கிறாள்.

ஸ்ரீ:

கோயில்

(ஸ்ரீ உப. வே. காஞ்சி ஸ்ரீதர தாத்தாச்சார்யர் ஸ்வாமி)

ச்ரியப் பதியான நாராயணனே பரதேவதை. அவனே அனைத்தையும் படைப்பவன்; காப்பவன்; அழிப்பவன். இவ் வர்த்தத்தை ஸ்வாமி தேசிகன் தயா சதகத்தில் ஸாதித்திருக் கிறார். ஸர்வேச்வரன் பக்கலிலே ஸர்வார்த்த கிரஹணம் பண்ணின பரகாலனும் 'முகிலுருவ மெம்மடிகளுருவம்' என்னும் பாசுரத்திலும் ஸாக்ஷாத் ஸ்ரீமந்நாராயணனே பர தேவதை என்னுமர்த்தத்தை நிஷ்கர்ஷித்தார்.

இவனுடைய திருமேனி, பரம், வ்யூஹம், விபவம், அந்தர் யாமி, அர்ச்சை என ஐந்து வகைப்படும். இதை ஆண்டாள் திருப்பாவையில் 'ஏற்ற கலங்கள்' பாசுரத்தில் 'ஊற்ற முடை யாய், பெரியாய், உலகினில் தோற்றமாய், நின்ற, சுடரே என்பதிலும் அனுபவித்தாள். வரதராஜ பஞ்சாசத்திலும் ஸ்வாமி தெளிவாக இவ் வேதாந்த விழுப் பொருள் விவரித் திருக்கிறார்.

ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளியுள்ள பரவாஸுதேவ னுடைய ரூபம் பரம். வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத் யும்நன், அநிருத்தன் எனப்படுவன வ்யூஹ ரூபங்கள். விபவம் மத்ஸ்யம், கூர்மம் முதலிய அவதாரங்கள். எல்லோருடைய ஹ்ருதயத்திலும் ஸூக்ஷ்மமான உருவத்துடன் நிற்கும் நிலை அந்தர்யாமி நிலை. திவ்ய தேசங்களில் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் நிலையும் மற்றும் பக்தர்களின் ப்ரார்த் தனைக் கிணங்க அவரவர் விருப்பத்தின்படி திருமேனிகொண்டு ஸேவை ஸாதிக்கும் நிலையும் அர்ச்சை எனப் பேசப்படுகிறது.

இவ்வைந்து ரூபங்களில் இருள்தரு மாஞாலத்தி லிருக்கும் நமக்கு அர்ச்சா ரூபமே மிகச் சிறந்தது என்பதை ஆழ்வார ஆசார்யர்கள் அறுதியிட்டார்கள்.

திருமாலையில் தொண்டரடிப் பொடி யாழ்வார் 'இச் சுவை தவிர யான் போய் இந்திர லோக மாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே' என்றும், 'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுவே' என்று பாண் பெருமாளும், 'ஏரார் முயல்விட்டுக் காக்கை பின் போவதே' என்று சிறிய திருமடலில் திருமங்கை யாழ்வாரும், அதிமானுஷஸ்தவத்தில் 'தாத்ருக்குணோ நநுப பூவித' என்கிற ச்லோகத்திலுல் கூரத்தாழ்வானும் இவ் வர்த்தத்தை ஸாதித்தருளினர்கள். ஸ்வாமி நிகமாந்த மஹா குருவும் 'ஸ்த்யம் சபே வாரண சைலநாத வைகுண்ட வாஸேபி நமே பிலாஷ:' என்று பணிந்தார்.

அர்ச்சைகளுள் கங்கையிற் புனிதமாய காவிரி நடுவுபாட்டு, திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக் கையாலடி வருட, 'குட திசை முடியை வைத்துக் குண திசை பாதம் நீட்டி, வடதிசை பின்பு காட்டித் தென்திசை யிலங்கை நோக்கி' அரவரசப் பெருஞ்சோதி அனந்த னென்னும் வெள்ளை யணையை மேவிப் பள்ளி கொள்ளும் கோமளமான அரங்கனே முந்தினவர். இவரே பெரிய பெருமாள். பதின்மர்பாடின பெருமாளும் இவரே. பாதுகா ஸஹஸ்ரத்தில் ஸ்வாமி 'பரத சிரஸி லக்ஷ்மம்' என்னும் ச்லோகத்தில் 'தசரத நயஸ்ஸந் ரங்கஸ்ய ஸ்த்வமேவ' என்பதினுல் அரங்கனே ராமனாக அவதரித்தார் என்பதையும், ரங்கராஜ ஸ்தவத்தில் பட்டர். 'ஆகண்ட வாரிபரமந்தா' என்னும் ச்லோகத்தில் தேவகி ரங்கநாதனைப் பிரார்த்தித்தே வாஸுதேவனைப் புத்திரனாகப் பெற்றுள் என்பதையும் ஸாதித்திருக்கிறார்கள். தசாவதார ஸ்தோத்திரத்தில் ஸ்வாமி அரங்கனே தசாவதாரங்களையும் எடுத்தா னென்பதைத் தெளிவுபடுத்தி யிருக்கிறார். இவர் அமரருய்ய ஸத்ய லோகத்தில் முன்னே இருந்து, மனிதருய்ய மண்ணுலகம் புகுந்து, இராமபிரானுல் அரக்கருமுய்ய அளிக்கப் பெற்று விபீஷண ராஜதானியைக் கடாக்ஷித்துக்கொண்டு திருவரங்கத் தரவணையில் பள்ளிகொண்டிருக்கிறா ரென்பதை 'வன்பெருவானக முய்ய' என்னும் பாசுரத்தில் குலசேகரப் பெருமாள் ஸாதித்திருக்கிறார்.

'ஆராதவருளமுதம் பொதிந்த கோயில்
அம்புயத்தான யோத்தி மன்னர்க் களித்த கோயில்
தோலாத தனிவீரன் றொழுத கோயில்.

துணையான வீடணற்குத் துணையாங்கோயில்,
சேராத பயனெல்லாஞ் சேர்க்கும் கோயில்
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்,
தீராத வினையனைத்துந் தீர்க்கும் கோயில்,
திருவரங்க மெனத் திகழுங் கோயில் தானே'—என்று ஸ்வாமி ஸ்தாந விசேஷாதிகாரத்தில் ஸ்வயம் வ்யக்தமாகையாலும், ஸமஸ்த பூர்வாசார்யாபிமதமாகையாலும், ஸர்வோத் கிருஷ்டமாகையாலும் கோயிலே பகவத் க்ஷேத்திரங்களின் ப்ரதானமாக முதல் பாசுரத்தில் ஸாதித்திருக்கிறார். இப் பாசுரத்தில் ஸ்வாமி தேசிகன் 'ஆத்யம் ஸ்தலம் ஸ்வயம் வ்யக்தம் ஸத்யலோக ப்ரதிஷ்டிதம்' என்கிறபடி ரங்கநாதன் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து ஸத்ய லோகத்தில் ஸ்வயம் வ்யக்தமாக அவதரித்தா ரென்றும், அவரை ப்ரம்மா அயோத்யாதிபதிக்குக் கொடுத்தாரென்றும், அவரை இராமன் விபீஷணுழ்வானுக்குக் கொடுத்தாரென்றும், நடு வழியில் தம் விருப்பத்தால் உபய காவேரியின் நடுவில் உபய விபூதிநாதன் அரங்கன் ஸ்திரமாக இருந்துவிட்டாரென்றும் புராணக் கதையை ஸங்கிரகித்துள்ளார். ''கோமளத்தைக் கண்டு கொண்டென் கண்ணினை களென்று கொலோகளிக்கும் நாள்'' என்றும், மணத்தூணே பற்றி நின்றென் வாயார என்று கொலோ வாழ்த்தும் நாள்'' என்றும், ''கோவினை நாவுற வழுத்தி என்தன் கைகள் கொய்மலர் தூய் என்று கொலோ கூப்பும் நாள்'' என்றும், ''மலர்ச் சென்னி என்று கொலோ வணங்கும் நாள்'' என்றும், ''என் உள்ளம் மிகவென்று கொலோ உருகும் நாள்'' என்றும் பலவாறுக ஆழ்வார் பாரித்தார். இதையே வேதாந்தவாரியார் 'ஸாபிப்ராயஸ்மித விகஸிதம்' என்கிற பகவத்தியான ஸோபானத்தின் ச்லோக ரத்தினத்தில் ஸாதித்தார்.

எம்பெருமான் திருவுள்ளத்தை ஆராயும்போது அவனை ஆராதிப்பதற்கு மேலாக அவனடியார்களை ஆராதிக்க வேண்டுமென்பது 'மம மத் பக்த பக்தேஷு ப்ரீதி ரப்யதிகா பவேத்' என்கிற வசனத்திலுல் தேருகிறது. நம் மாழ்வாரும் 'நெடுமாற்கடிமை' திருவாய் மொழியில் பாகவத சேஷத்வமே பரம புருஷார்த்த மென்று அறுதியிடுகிறார். மெய்யடி யார்கள் தம் ஈட்டங் கண்டிடக்கூடு மேதுகாணும் கண்பயனென்றும் தொண்டர் சேவடியேத்தி வாழ்த்துமென்

SRIRANGAM SRIMAD ANDAVAN ASHRAMAM

நெஞ்ச மென்றும் பலபடியாகக் குலசேகரர் பாகவத கோஷ்டியைச் சார்ந்திருக்கப் பேராசைப்படுகிறார்.

ஆகையினாலேயே நாதமுனிகள் முதலான எல்லா ஆசார்ய சிகாமணிகளும் அரங்கத்தில் மண்டிக் கிடந்திருக்கிறார்கள். இத் திவ்ய க்ஷேத்திரத்தில் ப்ரஸித்தமான பெரியாச்ரமத்தில் ப்ரகிருதம் ஸேவை ஸாதிக்கும் ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி அநேக பிருதாலங்கிருத பரமஹம்ஸ பரிவ்ராஜகா சார்ய பாதுகா ஸேவக ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகனுடைய ப்ரபாவம் வாசாமகோசரம். ஸ்ரீமத் ஆண்டவன் பல்லாண்டு பல்லாண்டு அரோக த்ருடகாத்ரராய் எழுந்தருளி யிருந்து ஸத் ஸம்ப்ரதாயப்ரசாரம் செய்யும்படி யாக அனுக்கிரஹிக்க ஸ்ரீ பெருந்தேவி மணாளனை பேரருளா ளன் திருவடித் தாமரைகளில் ப்ரார்த்திக்கின்றனம்.

ஸ்ரீ:

ஸ்ரீ தேசிகனும் ஆண்டாளும்

(ஸ்ரீ உப. வே. S. ராமஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி,
அட்வகேட், மதுரை)

ஸ்ரீ தேசிகன் உலகிற்குச் செய்த நன்மையைத் திரட்டி ஒருவன் எழுதப் புகுந்தால் அது பெரும் ஸாஹஸச் செயலாகும். ஆயினும் கடலே விரும்புவர் ஓரொரு பகுதியைக் கொண்டே இது கடல் என்று சொல்லுமாப் போலே, ஸ்வாமி விளைவித்த நற்பயன்களின் ஒரு பகுதியை எடுத்து அனுபவிக்க முடியும் வரை பார்க்கலாம்.

நமக்கு திவ்யப் பிரபந்தத்தில் அன்பைக் கடமையாகவும் கடைத்தேறு முபாயமாகவும் காட்டி யருளியதுடன், உத்தம வயிரக்கல்லைத் தக்க ஒளியிற் காட்டி அதன் தகவினை உலகிற்கு அறிவிக்கும் சில்பிபோல், ஸ்ரீ ஆண்டாளை அவருடைய ஸகல கல்யாண குணங்களும் சுடர்விட்டு ஒளிறுமாறு காட்டியருளியவர் ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகனே.

ஸ்ரீ ஆண்டாளது மங்களகரமான வாழ்க்கையையும் அவரது இனிய நூல் தொகுதிகளையும் சிறப்பித்துக் காட்டுமாறு ஒரு சிறு துதி நூல் பாடியது இவ்வாச்சார்ய மணியே. ஸ்ரீ ஆண்டாள் விஷயமாக ச்லோகங்களாய் வடமொழியில் துதி பாடியது இவர் ஒருவரே என்றல் மிகை அல்ல. ஆசார்ய மணியின் தோத்திரத்தை திருவுள்ளத்திற் கொண்டு மகிழ்ந்து அன்னை ஆண்டாளும் இத்தோத்திரத்திற் கெனவே வைகாசித் திங்களில் நிறை மதி நன்னாளில் இனிது நிறைவேறும் ஒரு அழகிய திரு விழாக் கண்டருள்கின்றார். ஆசார்யனின் கோதாஸ்துதிக்கு இதைவிட ஒரு சிறப்பு எழுதவும் எண்ணவும் வேண்டுமோ?

அப்படிப் பட்ட கோதாஸ்துதி என்னும் சிறு நூலைச் சிறிது அன்புடன் பரிசீலிப்போம். முதல் ஒரு ச்லோகத்தை எடுத்துக் கொண்டாலே அதில் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தைத் திரட்டி விட்டார். தத்வ ஹித புருஷார்த்தங்களை எடுத்துத்

திரட்டிக் காண்பிக்கின்றார். தெய்வம் பதி பத்னீ ரூபமாகிய ஒரு இரட்டை என்றும், ச்ரீ விசிஷ்டனாகிய ஸ்ரீமந் நாராயணனே நமக்கு உபாஸ்ய னென்றும், ச்ரீயும் ச்ரிய: பதியும், மலரில் மணம் போலவும், ஜலத்தில் சைத்யம் போலவும் பிரியாதவர்கள் என்றும், ஸர்வேச்வரன் தயை காட்டுவது பிராட்டி ஸான்னித்யத்தாலும் மன்னுட்டத்தாலு மென்றும், அத்தகைய பெருமானை ஜீவன் சரணாகதி யடைந்தால் நித்திய மான வாழ்வு பெறலாமென்றும் காட்டப் படுகிறது. கடுகில் கடலை அடைத்துக் காட்டும் இந்திர ஜாலம் இதைவிட உண்டோ?

தேவாதி தேவன் பாபிகளிடம் கருணை காட்டுவதற்கு வெகு அழகான இரண்டு காரணங்கள் காட்டுகிறார். அவையாவன: (1) ஸ்ரீ ஆண்டாள் சூடிக் கொடுத்த மாலையை அணிந்து உள்ளம் மகிழ்தலும், (2) வீணையும் வெட்டுமாறு இனிமை வாய்ந்த செந்தமிழ் பாக்கள் பாடி ஆண்டாள் அச்சுதனை வழி பட்டதாலும் என்கிறார். ஸ்ரீ ஆண்டாளுக்கு ஏதேனும் சுய நலம் உண்டா? தனக்கென வீடா, வாயிலா, உற்றாரா ஒன்றுமில்லை! ஸ்ரீ ஆண்டாளுடைய கனிந்த கருணையே வடிவிட்ட வுள்ளம். ஒரு மனிதன் ஊர், நாடு, மண்டலம், உலகம் எனும் சிற்றெல்லைகளைக் கடந்து தன் பெருமைக்கு இவ்வானும் வையகமும் காணுது நின்று உயிரென்ற வெல்லாமுய்ந்து வாழ விரும்புகிறதாக விளக்குகிறார்.

அன்னை ஆண்டாளின் அன்பின் உயர்வை மற்ற ஆழ்வார்களோடு ஒப்பிட்டுக் காட்டி விளக்குகிறார் ''தேன் கசிந்த திருக்கூந்தற்கோதாய்! உம்மைப் போல உம் கணவனைப் பாட விரும்பிய ஆழ்வார்கள் பிரிவைக் காட்டும் இரங்கத்தக்க பாடல்களாலும், சேர்க்கையை விளக்கும் களிப்புற்ற பாடல்களாலும் எம்மனத்தைப் பரவசப்படுத்துகின்றனர். இங்கு தேசிகன் ''தவப்ரியதம'' என்கிற சொல்லாலும் ''பவதீவ'' என்ற சொல்லாலும் உண்மையில் பெண்ணாகவே பிறந்து வாடிப் பெருமானைப் பிரியாமல் சேர்ந்த ஆண்டாள் அன்பை விட, பெண் போல் நடித்துப் புலம்புவது போல் பாவித்துப் பாடிய ஆழ்வார்களின் அன்பு சற்று 'இடது கண்' என்றே ஆற்றலுடன் காட்டுகிறார்.

ஆண்டாளுடன் சேர்ந்த ஸ்ரீ ரங்கராஜனுடைய திருமேனி, பலவர்ணங்கள் காட்டுவதையும், ஸ்ரீ ஆண்டாள் மாலையில் தேனைப் பருகக் குழுமிய வண்டுகள், ஸ்ரீ ஆண்டாள் மன்னனை

ருடைய திருமண விழாவில் இனிய மங்கல வாத்திய மிசைப் பவரென்றும், ஸ்ரீ ரங்க ராஜன் ஆண்டாளிடத்தில் வைக்கும் நிகரற்ற அன்பினால் அவரிடம் இறைவன் பல ப்ரேம காரியங் களை உலகுக்குச் செய்து காட்ட உலகம் ''உண்மையில் ஸர் வேச்வரன் ச்ரேஷ்டனா? அவனை இந்த விதம் அன்பு செய் விக்கும் ஆண்டாள் தான் பெரியவரா'' என்று ஐயுறுவதாகச் சொல்லுகிறார்.

தாபத்தால் நொந்தவர் சீதளமான ஜலாசயத்தை நாடு வார்கள். கெடுவினையான கொடிய விஷத்தால் துடிப்பவர் கள் அம்ருத வல்லியான ஆண்டாளை அடைந்து அக்கொடிய நோய் தீரப்பெற்று ஸ்ரீ ஆண்டாள் மன்னனுக்கு அகவா வடிமை புரியும் ஆனந்த வுலகில் அழியா வாழ்வு பெறுவர் என்கிறார்.

சில அற்புதமான சிலேடைச் சொற்களால் ஆண்டாள் மன்னனரைத் தேடி மாலை யிட்டதை ஸகிகள் பரிஹஸிப்பது போல் பாடிய சுலோகம் அற்புத மென்னலாம். மன்னனுக் குப் படுக்க பாயில்லையாம்—மேலும் பழுத்த கிழவனும்! இத் தகைய கிழவனை இளங் குமரி மெல்லியாள் கோதை எங்ஙனம் தேடி யடைந்தாள் என்கிறார்.

ஸ்ரீ:

நமது ஸம்பிரதாயத்தின் சீர்மை

(கருடபுரம் ஸ்ரீ உப. வே. தி. ஈ. ஸ்ரீநிவாஸ
ராமானுஜாசார்யர் ஸ்வாமி)

ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில் பிறந்து நமது ஸம்பிரதாயங்களைக் கேட்டு, வாசித்து, வணங்கி, வழிபட்டு, பூஜித்து, பொழுது போக்காமல் மதாந்தரஸ்தர்கள் என்னவென்ன சொல்கிறார்கள் என்று செவி சாய்த்துத் தெளிவு காண முயல்பவர்களைக் காணும் நாம் கோடீச்வர புத்ரனாக பிறந்தவன் தாயக்கிரமமாக வந்துள்ள ஸொத்துக்களைக் கண்ணுறுமல், நிர்த்தனிகனுக்கு வகுத்த அர்த்த ஸம்பாதன முறைகளிலே சிரமப்படுவானுலல் கிருபாளுவான பெரியோர்கள் அவனை சில்வான முறைகளை விட்டு அவனுக்கு ஏற்பட்ட பிதிரார்ஜித ஸொத்துக்களைக் காட்டிக் கொடுப்பது போல நம்மில் பிறந்து இதர மதங்களால் கலக்கப்படுபவர்களுக்கு நமது ஸம்பிரதாயத்தின் பெருமைகளை எடுத்துரைக்க வேண்டியது தர்மமாகிறது.

இஹ, பர நலன்களை அளிக்கவல்ல நான்கு புருஷார்த்தங்கள் ஒரு விவேகி நாடி அடைய வேண்டுவன என்று பெரியோர்கள் பணித்தனர். அவைகளில் அர்த்த, காமங்களை மனிதர்கள் அவரவர்களுக்கு உண்டான கூறுகளை லவலேசமும் விட்டுக் கொடுக்காமல் உலகில் அனுபவித்து வருவதை நாம் காண்கிறோம். இவ்விதமே ஆத்ம க்ஷேமத்திற்காக ஈச்வரன் நமக்குக் கொடுத்துள்ள பிறப்புரிமைகளை நாம் ஆராய்ந்து பார்த்து ஆத்ம ரக்ஷணம் செய்துகொள்வது அவசியமாகிறது.

நமது குலத்தில் பிறந்த ஒவ்வொருவரும் தனிகனுக்குப் புத்ரனாகப் பிறந்தவன். தனக்கு தாயக்கிரமமாக வந்த அபரிமித சொத்தைப் பரிபாலித்துக்கொண்டு அர்த்த ஸம்பாதனத்தில் எப்படிக் கவலையற்றிருப்பனோ அவ்விதமே ஈச்வரன் தன் கிருபையடியாக நமது ஆத்ம க்ஷேமத்திற்காக நம் பிறப்பாலேயே நமக்கு உரிமையுடன் அனுக்கிரஹித்துள்ள வேதங்கள், வேதாந்தங்கள், தர்மங்கள், ஆழ்வார்களின் அருளிச் செயல்கள், எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்தாபித்த விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம். நம் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ரஹஸ்யங்களினாலும், ஸ்தோத்திரங்களினாலும் வகுத்த ஸம்பிர

தாயம் இவைகளை லவலேசமும் நம் கூறுவிடாமல் ஸ்ரீமத் ஆண்டவன் போன்ற ஆசார்யோத்தமர்களிடத்தில் அடி பணிந்து அர்த்த விசேஷங்களை கிரஹித்துக் கொண்டால் ஆத்ம க்ஷேமத்தைக் கொடுப்பதாகக் கூறும் மதாந்தரங்களை மனத்தாலோ, காதாலோ கேட்கக்கூட அவசியம் ஏற்படாது.

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸம் ஸாரத்தை விஷமரத்திற்கு உவமையாகக் காட்டுகிறார். ஸம் ஸாரமானது முதலைக்கு உவமையாகக் காட்டப்பட்டது. ஸ்ரீ பாஷ்யகாரர் ஸம்ஸாரத்தை ஒரு காட்டுத் தீக்கு சமம் என்று அருளிச் செய்தார். ஆழ்வார்களும் ''இருள் தருமாஞாலத் துள் இனிப் பிறவி யான் வேண்டேன்'' ''ஆவாராரா துணை யென்று அலைநீர்க்கடலுள் அழுந்தும் நாவாய் போல்'', ''ஆற் றங்கரை வாழைமரம் போல் அஞ்சிகின்றேன்'', ''பாம்போ டொரு கூரையிலே பயின்முற்போல்'', ''பசி, பிணி மூப்புத் துன்பம், ஆதலால் பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே'', ''இவ்வைந்தன்னிலும் கூடுவதில்லையான்'' என்றும் ஸம் ஸாரத்தை பயாஸ்பதமாகவும் மிகவும் ஹேயமாகவும் பல விடங்களில் அருளிச் செய்தார்கள்.

இந்த ஸம்ஸாரத்தைத் தாண்டுவதற்குச் சேதனர்களுக்கு பகவான் வேதங்களையும் சாஸ்திரங்களையும் கை விளக்காகக் கொடுத்திருந்தாலும் அவைகளால் போதிய க்ருஷீபலம் பெரு மையாலே க்ருஷீவலன் நிலத்திற்கு உயர்ந்த எருக்களைப் போடு வது போல் தெளியாத மறை நிலங்களைத் தெளிவிப்பதற்காக வும், வாசியற எல்லாரும் உஜ்ஜீவிப்பதற்காகவும், தனது திவ்ய மஷிஷீ பூஷாயுத, பரிஜன, பரிச்சதங்களை ஸ்ரீ ஆண் டாள், ஆழ்வார்கள், ஆசார்யர்களாக அவதரிப்பித்து அருளி னான். ஆழ்வார்களும் பகவத் க்ருபையாலே மயர்வற மதி நலம் அருள்பெற்று நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களை லோகோஜ் ஜீவனர்த்தமாக அருளிச் செய்தார்கள்.

ஆழ்வார் உபதேசித்த அருளிச் செயல்கள் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்குச் சிறந்த தனமாய் அமைந்தது. ஆனாலும் வ்யாஸ பகவான் அருளிச் செய்த பிரம்ம சூத்திரங்களுக்கு சங்கரபாஷ்யம் எழுதி அத்வைதம் அதிக பிரசாரம் அடைந் திருந்தமையால் அதைக் கண்டித்து ஆழ்வார்கள் அருளிச் செய்த விசிஷ்டாத்வைத சித்தாந்தத்திற்குச் சேர ப்ரம்மசூத்ர பாஷ்யம் அருளிச் செய்து நாராயண பாரம்யத்தையும் விசிஷ் டாத்வைத ஸித்தாந்தத்தையும் ஸ்தாபித்து எம்பெருமானார் தர்சன ஸ்தாபகராஞர்.

ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் பக்தி ரஸம் ததும்பி யிருந்தாலும் அவர்கள் பக்தியோக நிஷ்டர்கள் அல்லர். பிர பத்தி நிஷ்டர்களே ஆவர். அவர்களது அருளிச் செயல்களில் ததும்பும் பக்தி, பகவத் க்ருபையாலே பல ரூபமாக அவர் களுக்குக் கிடைத்த பக்தியே தவிர, பகவானை அடைய உபாய மாக பக்தியை அவர்கள் பற்றினர்கள் அன்று. ஆழ்வார் ''அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா'' என்று ஆரம்பிக்கும் பாசுரத்தில் ''உன்னடிக் கீழ மர்ந்து புகுந்தேனே'' என்று பகவத் சரணரவிந்தத்தில் பிர பத்தியைச் செய்தார். எனவே தான் நாம் ஆழ்வாரை ''பிர பந்ந ஜனஸந்தான கூடஸ்தர்'' என வழங்குகிறோம். அதற்கு முன் பகவான் தானே வராஹப் பெருமாள் நாயினரின் சுலோக மான ''ஸ்திதேமனஸி ஸுஸ்வஸ்தே'' என்பதாலும் ஸ்ரீ சக்கர வர்த்தித் திருமகனின் அபயப்ரதான பாசுரமான ''ஸக்ரு தேவ ப்ரபன்னய'' என்கிற சுலோகத்தாலும் ஸ்ரீ கிருஷ்ணன் கீதையில் ''மாமேவ யே ப்ரபத்யந்தே மாயா மேதாம் தரந் திதே'' என்றும் நமாம் துஷ்க்ருதினோமூடா: ப்ரபத்யந்தே நரா தமா:''என்றும் ப்ரபத்தியை ஸம்ஸாரத்தைத் தாண்டுவதற்குக் ஸாக்ஷாத் உபாயமாக அருளிச் செய்து மறுபடி கீதையின் முடி வில் ஆதராதிசயத்தாலே பக்தி யோகத்தை இன்னுமொரு முறை உபதேசித்து அதிலிருந்து கைவாங்கும் அர்ஜுனனைக் கண்டு 'ஸர்வ தர்மான் பரித்யஜ்ய' என்கிற சரம சுலோகத்தில் ஸம்ஸாரோல்லங்கந ஹேதுவான பிரபத்தியை அருளிச்செய்து கீதா சாஸ்திரத்தைத் தலைகட்டினர்'' இப்பிரபத்தியை அனுஷ் டித்த ஆழ்வார் பிரபந்ந ஸந்தான கூடஸ்தராவர். எம் பெருமானர் ஸ்ரீ பாஷ்யத்தில் விஸ்தரேண உபாஸனை மார்க்கங் களை ஸாதித்து, பிரபத்தியை அங்கப்ரபத்தியாக வியாக்யானம் செய்திருந்தாலும் சரணகதி கத்யத்தில் சரணகதியை அனுஷ் டித்து ஸ்வதந்திர ப்ரபத்தி நிஷ்டராவர்.

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அவதரித்து பிரபத்தி ஸ்வரூபத்திலும் அனுஷ்டானத்திலும் வரும் கலக்கங்களை சோதித்து ''ரஹஸ் யத்ரயஸாரம்'' முதலிய பல கிரந்தங்களை அருளிச் செய்தார். பிரபத்தியின் பெருமைகளைப் பரக்கப் பேசி அகிஞ்சனர்களான நம் போன்றவர்க்குப் பிரபத்தி தவிர ஈசுவரனை வசீகரிக்க வேறு மார்க்கம் இல்லை என்பதை ஸ்தாபித்தார்.

இவ்விதம் ச்ரிய: பதி முதல் ஆழ்வார், எம்பெருமானர் தேசிகன் போன்ற ஒப்புயர்வற்ற மாணிக்கங்கள் கொண்ட ஹாரம் இன்றளவும் பகவத் க்ருபையாலே தழைத்து வந்

துள்ளது. அதை நாம் ஒவ்வொருவரும் கழுத்தில் அணிந்து கொண்டு பொலிவு பெறவேண்டும். கன்றுக்கிரங்கும் தேனுவைப் போல தாங்கள் சேமித்து வைத்திருக்கும் ஸத் ஸம்பிரதாயார்த்தங்களை ஸத்பாத்திரம் கிடைத்த மாத்திரம் சொரியஸித்தமாய் இருக்கும் ஸ்ரீமத் ஆண்டவன் போன்ற ஆசார்யோத்தமர்களை அணுகி ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் தனது குலத்திற்கேற்ற ஞானம், அனுஷ்டானம், வைராக்யங்களை ஸம்பாதித்தாலுகில், தர்மத்திற்குக் ஜேஷ்டப்ராதா ஸ்தானம் கொடுத்து, அர்த்த காமங்களை அதற்குச் சேர அனுபவித்து, இஹ ஸௌக்யங்களை அடைந்து, ஆத்ம ஸௌக்யமாகிற மோக்ஷானந்தத்தையும் பெறுவன். பெரியாழ்வார் பகவானுக்கு பூச்சூட்டும் ப்ரகரணத்தில் நறுமணங்கமழும் புஷ்பங்களையே பகவானுக்கு விரும்பி ஸமர்ப்பிக்கிறார். அவ்விதமே ஐஹிக புருஷார்த்தத்துடன் ஆமுஷ்மிக புருஷார்தத்தையும் ஸம்பாதிப்பவனே விவேக க்ருத்யஞகவும் நல்ல வண்ணங்களுடன் நறுமணத்துடனும் கூடிய புஷ்பம் போல் பகவானுடைய திருவுள்ளம் உகக்க இவ்வுலக வாழ்வில் நிறம்பெற்று மோக்ஷானந்தத்தையும் பெறுகிறுன்.

மேற்கூறியபடி ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில் பிறந்த ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் ஆசார்யோபஸத்தி செய்தால் ஆழ்வார் ஸாதித்த ப்ரகாரம் ''கண்டோம், கண்டோம், கண்டோம், கண்ணுக்கினியன கண்டோம்'' என்று கூழாட்படுதல் நீங்கி ஸ்ரீ வைஷ்ணவ குலத்தவர் ஸ்வதர்ம நிஷ்டர்களாகவும் ஸதாசார ஸம்பந்நர்களாகவும் விளங்குவர். ஸ்ரீமாதண்டவனின் பரிபூர்ண கிருபைக்கும் பாத்திரங்களாவோம்.

ஸ்ரீ:

ஸ்ரீபாத பரிமளம்

(ஸ்ரீ உப. வே. கடலூர் D. S. ராகவன்)

பத்தடி வேங்கை தாவிப்பறந்து மறைகிறது. சிறிது நேரம். பின்னர் உயர நீண்ட ஓர் வெள்ளைக் காலை மெள்ள மெள்ள பெருமூச்சுடன் தத்தித்தத்தி வந்தடைகிறது. உடலெல்லாம் இரத்தம். நீண்ட கூர்மையான கொம்பு நுனிகளில் மாமிசத் துண்டுகள் தொங்கும் காட்சி. புலியின் மாமிசம்.

மலையடிவாரம் தளர்ந்து ஒரு மூலையில் முகர்ந்து ஒரு பச்சிலையை உண்டு கண்ணை மூடிக் கிடக்கிறது.

சிறிது நேரம்.

காலை எழுந்து நின்று உடலை உலுப்புகிறது. என்ன ஆச்சர்யம்! காயமில்லை, ரத்தமில்லை, புத்துயிர் பெற்றுப் பாய்ந்து பறந்து மறைந்தது.

ஆம்! சிறந்த மூலிகைகள் செறிந்த மருந்துமலை அது— ஔடதாத்ரி எனப் பெயர் பெற்ற சிறுமலை தென்கோடியில் இரு பிளவு கொண்டு, நடுவில் என்றும் வற்று நதியுடன் பிரகாசிக்கும் இக்கோமளகிரி, ப்ரம்மனின் பாதங்களாகச் சித்திரம் வரைகிறது.

மருந்து மலைமட்டு மின்றி மந்திர மலையுங்கூட.

கருத்மான் காட்சி யளித்த கனியமதுக் குன்று, அம்மஹான் உபதேசத்தருளிய ஹயக்ரீவ மந்தரம் தவமுடன் ஆவருத்தி செய்யப்பட்ட தலம், தவம் சித்தி பெற்ற சீர்த்திமலை. ஞான ஸ்வரூபன் ஹயக்ரீவன் அநுக்ரஹித்த ஞான முத்ரை சோபையை ஒளிக்க வைக்கும் வேதவெற்பும் அது!

இவ்வாறு சிந்தனையோ, என்னவோ—

தத்வ ஹித புருஷார்த்த முணர்ந்துய்யும் வேதாந்தவாசினியிட மிருந்து, பாமரர்களும் பரமனடையும் மார்க்கம், இப்ரார்த்தநீ யமான அம்சம்—கிடைக்கப் பெறுகின்றது:

பரிஸ்புரன் நூபுர சித்ரபாநு—
ப்ரகாச நிர்த்தூத தமோனுஷங்காம்,
பதத்வயம் தே பரிசின் மஹேந்த:
ப்ரபோத ராஜீவ விபாத ஸந்த்யாம் |

(பரிஸ்புர - சுற்றிலும் ப்ரகாசிக்கும், நூபுர - மஞ்ஜீரத்தின், சித்ரபாநு - விசித்ர கிரணங்களாகிய சூர்யனுடைய, ப்ரகாச - ப்ரகாசத்தால், நிர்த்தூத - போக்கடிக்கப் பட்ட, தமோனுஷங்காம் - இருள் சுருளுடையவும், ப்ரபோத - சிறந்த ஞானமான, ராஜீவ - தாமரைப் புஷ்பத்திற்கு, விபாத ஸந்த்யாம் - ப்ராதக்கால ஸந்த்யையாயு மிருக்கிற, தே பதத்வயம் - உமது இரு பாதங்களையும், அந்த மனதில், பரிசின் மஹே - இடைவிடாது த்யானிக்கின்றேம்.)

மேலும், பகவத் பாத கமலங்களின் ஆனந்தானுபவம் வெள்ளமெடுத் தோடுகிறது,—இவ்வாறு.

அயிந்தை நகர் தெய்வநாயகன் திருவடிகளின் பெருமை பொங்கி வழிய பதிஞறு சீராசிரியச் சந்த விருத்தம் வடிவாகிறது.

ஒருமதி அன்பர் உளங் கவர்ந்தன; உலகமடங்குமாறு உயர்ந்து அளந்தன; இவை நமக்கு கங்கை தந்தன; காளியன் படங்களை நடன அரங்கு கொண்டன; உயர் உபாயம் இவையே என்று நின்றன; தருமனுக் கிசைந்து தூது சென்றன; சகடரக்கனைச் சிதைத்து வென்றன; கடுவினை கழிய மருந்திவை என்றன; பிராட்டியின் அருள் மழைக் கரங்களுடன் ஒன்றுபட்டுச் சேர்ந்தன; திருத்துழாய் மணம் கமழ்ந்து திகழ்ந்தன; திவ்யரத்ன மணி சிலம்புடன் விளங்கின; அன்றொரு நாள் கல்லாய்ச் சமைந்துவிட்ட செல்வியை (அகல்யை) வருவித்து உய்வித்தன; அருமறை அமர்ந்த சிறப்புடையன; ப்ரம்ம தேவன் தலைமேற் சென்று உயர்ந்து நீண்டன; இம்மேன்மை பொருந்திய மலர்ப் பதங்கள் மனிதனுக்கு அருள்புரிய அயிந்தை விந்து நின்றன!

என்று இன்றும் ஒலிக்கின்றன வன்றே!

* * *

ஏழு வருஷங்கள் பின்னர்.

அயிந்தை விட்டு காஞ்சிக்கு ப்ரயாணம். பேட்டையில் எம்பெருமான் நந்தவன மண்டபம். யாத்திரையில் தடை.

மார்க்கம் செல்லும் பாதுகைகள் ஒரு பக்கமாக விலகுகின்றன. தயாரித்துப் பொரித்துச் செல்ல முயன்றும் மறுபடியும் மறுபடியும் பாதுகை பொருந்தாது விலகுகின்றன! என்ன இது!

அவைகளே மறுபடியும் அணிந்து, ஊர்ப்பக்கம் திரும்பப் பாதுகைகள் பொருந்தியவாறு, விலகாது, பிறழாது பதத்துடன் ஒன்றிச் செய்கின்றன! என்ன ஆச்சர்யம்!

யாத்திரை முன் சென்றுல் பாதுகை விலகுகின்றன; ஊர் திரும்ப அடிவைத்தால் பொருந்தியவாறு ஊர்த்து விரைகின்றன! தெய்வ நாயகன் திரும்பி அழைக்கின்றனே?

ப்ரயாணம் தவிர்த்து அயிந்தையிலேயே தொடர்ந்து எட்டு வருடங்கள் வாசம், பாதுகைகள் சிந்தனே—பரமனது பாதுகைகள்—பாதுகைகளது பிரபாவம் பரவச பரிமளம்! இதன் கந்தம், ''ஸ்ரீ அச்சுத சதகம்'', தெய்வநாயக பஞ்சாசத்'' இவைகளில் கமழ்ந்து, ''ரகுவீரகத்ய''த்தில் ''ஸர்வலோக யோக க்ஷேம'' மாக விகசித்து வாசனே வீசி விளங்குகின்றது.

காலம்—சில வருஷங்கள் பின்

இடம் (வேறு) திருவரங்கம்

அயிந்தை நகர் அநுபவம் அடர்ந்து அமுக்கவே கவிதையாக வெளி வந்துதானே ஆகவேண்டும். சந்தர்ப்பம், காரணம் காத்து நிற்க, இவையும் ஒரு நாள்—ஓர் இரவு—இசைந்து இயங்கின. அவ்வளவுதான்!

ஆயிரக்கால் கொண்டு ப்ரவாகம் பீரிட்டுப் பூரித்துப் பாய்ந்து பரவுகிறது! ''பாதுகா ஸஹஸ்ரம்'' அத்யந்த அற்புத ரமணீயம் பெரிய பெருமாளுடன் அவன் திருப் பாதுகைகளும் வருடம் முழுவதும் உற்சவங்கள் கண்டருள்கின்ற நீர்மை அடியார்களின் அரும்பொரும் ப்ராப்தமே.

* * *

அதே தலம், இப்பிரவாகப் பெருமையாலோ என்னவோ, பரமபதம் ப்ராப்தமாகப் பாதுகைகளே போதும் என ஓர் சாதனம் உதிக்கின்றது.

தனி தர்சனம் தோன்றித் திகழ்கின்றது, இன்று!

ஸ்ரீ:

ஒன்பது படிகள்

(ஸ்ரீ உப. வே, ஏ. ஜி. வேங்கடாச்சார்யர் ஸ்வாமி)

''வையத்து வாழ்வீர்காள்!'' என்று மக்களை விளித்து ஆண்டாள் தனது திருப்பாவையை உபதேசித் தருளினாள். நமது தொன்மையான ஹிந்து சமுதாயத்தினர் நிச்சயமாக வாழப் பிறந்தவர்கள் தாம். அது நல்வாழ்வாக அமையவேண்டும், தானும் வாழ்ந்து பிறரையும் வாழ்விப்பதாக இருக்கவேண்டும் என்பதைப் பற்றியும் சந்தேகமே யில்லை. அவளது அருளுரை ''வேதம் அனைத்துக்கும் வித்து'' என்ற சிறப்புச் சீர்மை கொண்டது. எனவே மறைகளுக்கு இசைவானதும் இந்த ஜீவ யாத்திரையைப் பொருள் படைத்ததாகவும் செய்யக் கூடிய நல்வாழ்வு எது என்பதை ஆண்டாளின் வாயிலாகக் கேட்டறிகிறோம்.

வாழ்க்கைத் தத்துவம்

வாழ்க்கை வாழ்வதற்கே, வெறுத்து ஒதுக்கி ஓடுவதற்கு அல்ல என்பது நமது அடிப்படைக் கோட்பாடு. இதைத் திலகர் பெருமான் தமது கீதா ரகசியத்தில் தெளிவுபடுத்தியுள்ளார். ஆண்டாள் வெகு காலத்துக்கு முன்னர் கூறியதும் அதுவே. நியதிகளுக்கு உட்பட்டு நடந்துகொள்வதில்தான் வாழ்க்கையின் பெருமையே அடங்கியிருக்கிறது. நீங்காத புகழுடைய கிரந்தங்களில் திருப்பாவை முதன்மையானது.

வாழ்க்கையின் தத்துவத்தையே ஒரு நோன்பாக ஆண்டாள் அமைத்துப் பிரகாசப்படுத்தியிருப்பதைக் காண்கிறோம். வெவ்வேறு பலன்களைக் கருதியோ, அல்லது பொதுப்படையாக லோக நன்மைக்காகவோ நடத்திவைக்கும் யக்ஞங்களைப் போன்றது இந்த ஜீவயாத்திரை என்ற யக்ஞம். அதற்கும் பிற யக்ஞங்களைப் போலவே நியதிகள் உண்டு. அவற்றை வாழ்க்கைத் தத்துவத்துடன் ஊடும் பாவுமாக இழைத்துக் காட்டியிருப்பதற்காக ஆண்டாளுக்கு மனித சமூகம் என்றென்றைக்கும் கடமைப்பட்டுள்ளது.

சகல சௌபாக்கியங்களுடன் கூடிய நல்வாழ்க்கை பிராப்த மாக வேண்டும் என்று விரும்பி அதற்கு பகவானது அனுக் ரஹத்தை நாடுவது உலக வழக்கம். அதன்படியே முதலில் ஆண்டாளும் மங்களாசாஸனம் செய்கிறாள். திங்கள் மும் மாரி உலகினில் வாழப்பெய்திடவேண்டும்; பெரு செந்நெல் ஓங்கி வளரவேண்டும், வள்ளற்பெரும் பசுக்கள் நீங்காத செல்வமாக அமையவேண்டும்; அது திருத்தக்க செல்வமாக வும் சிறக்கவேண்டும்; ஆடையாபரணங்கள் பிற போக்கியப் பொருட்கள் ஸம்ருத்தியாகவுள்ள வாழ்க்கை வேண்டும் என்ற இல்லறத் தத்துவம் திருப்பாவையில் பரந்து கிடக்கிறது.

புருஷார்த்தங்கள்

வாழ்க்கையை வளப்படுத்தும் இந்தச் செல்வங்கள் கிடைப் பது எப்படி என்பதைக் காண்கிறோம். ''பறை'' என்ற புரு ஷார்த்தச் சிறப்பின் மூலம் இவை கிடைக்கவேண்டும், இவற் றின் ஆளுகையும் அவ்வழியே அமையவேண்டும் என்ற பேருண் மையை உணருகின்றோம். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் ஒருங் கிணைந்ததுதான் இந்த வாழ்க்கைத் தத்துவம். நாம் எங்கிருந்தோ வந்து, எங்கோ போகின்ற ஒரு கூட்டத்தினர் அல்ல. வாழையடி வாழையான மரபு நமக்கு உண்டு. அந்த மரபு புருஷார்த்தங்களால் போஷிக் கப்பெறுகிறது. அறத்தை வளர்த்தாக வேண்டிய கடமை யுண்டு. தருமம் என்னவென்று தெரிந்தால் போதாது, அதன் வழி நிற்கவும் வேண்டும் என்பதை ஸ்ரீமத் ராமாயணத்தில் பலவிடங்களில் காண்கிறோம். எனவே நல்வாழ்க்கைக்கு அவ சியமான பொருளீட்டலும் இன்பம் நுகர்தலுங்கூட, அற வழிக்கு முற்றிலும் இசைவாகவே அமையவேண்டும் என்ற பேருண்மையை ஆண்டாள் வலியுறுத்துகின்றாள். சமூகத்தி னர் அனைவரையும் வாழவைக்கும் கடமையை ''ஐயமும் பிச் சையும் ஆந்தனையும் கைகாட்டி'' என்ற கடமையின் மூலம் அறிவுறுத்துகின்றாள். ஆனால் பொருளும் இன்பமும் அவசிய மாயினும், அவற்றில் பற்றற்ற நிலை படிப்படியாக வளர்ந்து, தருமத்தின் துணையுடன் நீங்காத செல்வமாகிய பகவானை அடைவதாக மாறவேண்டும். அதுவே பிரதானம் என்ற பேருண்மை திருப்பாவையின் சிறந்த கட்டுக் கோப்புக்கு முத் தாய்ப்பாக அமைந்துள்ளது.

இக பர சுகங்கள்

பகவானது மெய்யுணர்வு பெற்று அவனை முறைப்படி ஆச் ரயித்தால் இக, பர சுகங்கள் ஒருங்கே கைகூடும் என்பதை

நிரூபணம் செய்கின்றது திருப்பாவை. தனது சகபாடி களுக்கு சிறு குழந்தையாக இருந்தபோது பிரஹ்லாதன் விவரித்த வழிபாட்டு முறையைத்தான் முப்பது பாசுரங்களில் விவரித்திருக்கிறாள், கோதை

ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ:
ஸ்மரணம் பாதஸேவனம்|
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம்
ஸக்யம் ஆத்ம நிவேதனம்||

என்ற ஒன்பது படிகளில் நம்மை ஆண்டாள் இட்டுச்சென்று பகவானைக் காண்பிக்க முயல்கிறாள்.

பகவானது புகழைப் பாடக் கேட்பது மனம் பக்குவமடைவதற்கான சாதனங்களில் முதலாவது.

இரண்டாவது படி அவன் புகழைப் பாடுவது. பரமன் அடி, உத்தமன் பேர், கீர்த்தனம் போன்றவைகளை. அவன் மனத்துக்கு இனியான், பங்கயக் கண்ணன், மாயன், முகில் வண்ணன், கேசவன்.

உயிருக்குப் போஷணை போல் 'ஸ்மரணம்' என்ற தியானம் அதற்கு அவசியமாகிறது. அவன் எல்லா இதயங்களிலும் அந்தராத்மாவாக உறைகின்றவன்தான். எனினும் அவனை மனதினுல் சிந்திக்கவேண்டும். உள்ளத்திற்கொண்டு உய்யுமாறு எண்ணவேண்டும் என்கிறாள். அவனுடன் கள்ளம் தவிர்ந்து கலக்க 'ஸ்மரணம்' மிகச் சிறந்த சாதனம்.

பகவானை முறைப்படி வழிபட்டால்தான் மனம் ஒரு நிலையில் நிற்கும்; நற்பணிகளில் ஈடுபட்டு, அறம் வளர்க்க முடியும். பாடி, கேட்டு, சிந்தித்து மனதில் ஒளிரவைத்த பகவானது திருவடித்தாமரைகளை சேவிக்கவேண்டும். அந்த கெம்பொற் கழலடிச் செல்வனை, 'தூயோமாய்' சென்று சேவிக்க வேண்டும் என்று பணிக்கின்றாள், ஆண்டாள். 'பாத ஸேவனம்' பக்தியை ஆழப்படுத்தி அது வேர்விடச் செய்கிறது.

'அர்ச்சனம்' என்பது அடுத்தபடி இயல்பாக அமைகின்ற கட்டம். ஒரு முழுப் பாசுரத்தைக் கொண்டு பகவானைப் போற்றுகின்றாள், ஆண்டாள். 'உன்னை அருத்தித்து வந்தோம்' என்று விண்ணப்பம் செய்துகொண்டு, அவனது 'நாமம் பலவும் நவின்று' புகழ்ந்து, தூமலர் தூவித்தொழுது அர்ச்சிக்கின்றோம் பகவானை.

எண் மலர்

'தூமலர்' என்பது பூசனைக்குரிய மணமலர் மட்டுமல்ல. பெரியாழ்வார் சுட்டிச் சொல்லிய சாமானிய 'எண்மலர்'கள் மட்டுமல்ல. அவை வாழ்வுக்கு மணம் தருகின்றவையும், பகவானுக்குப் பிரீதியை விளைவிப்பவையுமான வாழ்க்கைத் தத்துவ மலர்கள். அஹிம்ஸை, புலனடக்கம், தயை, சாந்தி, பொறுமை, தவம், ஸத்யம், ஞானம் ஆகிய எண் மலர்கள் தாம் இவை இவற்றை வாழ்க்கையில் இடையறாது பின்பற்று வதே பகவானைத் தூமலர் கொண்டு அருச்சிப்பது போல ஆகும். அதுவே சிறந்த பகவத் கைங்கரியமாகவும், பாகவத கைங் கரியமாகவும் ஒரு சேர அமையவல்லது என்பது ஆன்றோர் வாக்கு.

அருச்சனையை அடுத்தது வந்தனம். சங்கம் இருப்பாற் போல் வந்து தலைப்பெய்தோம்.....யாம் வந்த காரியம் ஆராய்ந்து அருள் என்ற விக்ஞாபனங்களின் மூலம் பகவா னுடன் விசேஷ நெருக்கம் ஏற்பட்டுவிடுகிறது. அவனுக்குத் தொண்டு செய்கின்ற 'தாஸ்யமே' மனதை நிரப்பும் அனுப மாகின்றது. அவனது குற்றேவல் நம்மை விட்டு ஒழியாது. ஆற்றுது வந்து அணிபணிந்து, 'உனக்கே நாமாட் செய்வோம்' என்று திருப்பணியில் ஈடுபடுகிறோம். திருப்பணியினால் அதிக நெருக்கம் ஏற்படுகிறது. அது நட்புறவில் (ஸக்யம் என்பதில்) கொண்டுபோய்விடுகிறது. நட்புறவு நிலையில் அவன் 'சுல பன்' என்ற எண்ணம் மனதில் மேலிடுகின்றது. அவனைச் சிறுபேர் அழைக்கவும் துணிகின்றோம். இது சற்று சிரமமான நிலைதான். இந்த நேய நிலைக்கதவம் ஆக்கி, கடைசி உயர் நிலையை சுட்டிச் சொல்கின்றாள், ஆண்டாள். அதுதான் அவ னுடன் ''கூடியிருந்து குளிர்ந்து'' 'உற்றோமே யாவோம்' என்ற ஸங்கற்ப நிலை.

நட்புநிலை நீங்கியதும் கிட்டுவது 'உன் தன்னோடு உற் றோமே யாவோம். உனக்கே நாமாட் செய்வோம்; மற்றை நம் காமங்கள் மாற்று' என்ற சரணாகதி நிலை. ஆத்மநிவேத னம் என்ற இந்தப் பரிபூரண நிலைக்குத்தான் ஒன்பது படியேறி செல்லப் பணித்தான் பிரஹ்லாதன். அதையே வாழ்க்கைத் தத்துவத்துடன் பிணைத்து வழங்கியுள்ளாள், கோதை.

ஸ்ரீ:

திவ்ய ப்ரபந்தம்

(ஸ்ரீ உப. வே. வேங்கடாசார்யர் ஸ்வாமி, மன்னர்குடி)

கம்ப இராமாயண அரங்கேற்றத்தின்போது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியே ஈண்டுக் குறிப்பிடப் பெறுவதாகும். அது ஸ்ரீ வைஷ்ணவர் ஆவார் அனைவரும் அறிந்து இன்புறற் குரிய தாகும்.

கம்பர் தாம் இயற்றிய இராமாயணத்தை ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றச் சென்றார். அப்பொழுது ஸ்ரீ வைஷ்ணவ சமயா சாரியர்களுக்குள்ளே பரமாசாரியராகிய ஸ்ரீமந் நாதமுனிகள் ஆங்கு எழுந்தருளக் கண்ட கம்பர் தமது கருத்தை விண்ணப் பம் செய்தார். நாத முனிகள் கம்பர் பாடிய இராமாயணத் தைக் கடாக்ஷித்தருளினர். அது சொற்சுவை பொருட்சுவை நிறைந்ததாயும், பகவத் விஷயமானதாயும், அற்புதமாயும் இருந்தமையால் ''இவருடைய புலமை மானுஷிகமான தன்று'' என்று அதிசயித்தார்; இந்தக் காவியத்தைப் பிரசித்தப்படுத்து வது அவசியம் என்றும், அதுவே தமது கடமை என்றும் கருதி னர். கம்பரை மண்டப கைங்கர்யம் ஒன்று செய்யச்சொல்லி நியமித்தார். அதனை அவர் செய்து முடித்தவுடன் நம் பெரிய பெருமாளாகிய ஸ்ரீ ரங்கநாதர் அர்ச்சக முகமாக ஆவிர்ப்பவித்து, ''கம்பா! நீ நம் சடகோபனைப் பாடினையோ? பாடினால்தான் நாம் உனது இராமாயணத்தைத் திருவுள்ளம் பற்றுவோம்; இல்லாவிடில் அது நமக்கு அங்கீகாரம் ஆகாது'' என்றார்.

ஸ்ரீ ரங்கநாதர் அருளிச் செய்தது கொண்டு கம்பர் ஆழ் வார் விஷயமாக நூறு கட்டளைக் கலித்துறையில் ''வேதத் தின் முன்செல்க'' என்று தொடங்கி, ''சடகோபரந்தாதி'' என ஓர் அந்தாதி பாடினர்.

''வேதத்தின் முன்செல்க; மெய்யுணர்ந்தோர்
விரிஞ் சன்முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின்முன் செல்க;
குணங்கடந்த

போதக் கடலெங்கள் தென்குரு கூர்ப்புனி
தன்கவியோர்
பாதத்தின் முன்செல்லு மோதொல்லை மூலப்
பரஞ்சுடரே?''

இப் பாடலின் பொருள்: ''புராதனமாயும், ஸர்வத்திற்கும் மூலகாரணமாயும், மேலானதாயும், ஜோதி ஸ்வரூபமாயும் விளங்கும் ஸ்ரீமந் நாராயணன் வேத சாஸ்திரங்களுக் கெல்லாம் அதீதனுகையால் அவன் அவைகளைக் கடந்து சென்றும் செல்லட்டும்; மேலும் உண்மை நிலை கண்ட பிரமன் முதலானவர்களுடைய குற்றமற்ற ஞானத்தைக் கடந்து சென்றும் செல்லட்டும்; ஹேய குணமில்லாத ஞான சமுத்திரமாய்த் தென் திசைக்கண் தாமிரவருணி தீரத்தில் உள்ள திருக்குருகூரில் அவதரித்த தூயவனுகிய எங்கள் சடகோபன் அருளிச் செய்த கவியின் ஒரு பாதத்தைக் கடந்து செல்வானே? செல்லமாட்டான்'' என்பதாம்.

ஸ்ரீமத் நாராயணன் சடகோபனுடைய கவியின் ஒரு பாதத்தைக் கடக்க மாட்டான் என்பது என்னவெனில் கூறுதும். பாண்டிய நாட்டில் உள்ள திருக்குருகூர் என்னும் திவ்ய தேசத்தில் ஆழ்வாருக்கும் கோயிலிலும் வீதிப்புறப்பாட்டிலும் நெடுங்காலமாக, ''வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்'' என்பது முதலாகப் பற்பல விருது கூறித் திருச்சின்னம் ஊதி வருவதையும், பிரமோற்சவம் கண்டருளப் பண்ணுவதையும் பற்றி ஒரு காலத்தில் மதுரைச் சங்கத்தார் ''இந்த ஆழ்வார் பக்தரே அல்லாமல் பகவான் அல்லரே; இவருக்கு விருது கூறித் திருச் சின்னம் ஊதுவதும், உற்சவம் நடத்துவதும் வியர்த்தமே. இஃது 'அணிற் பிள்ளையின் தலைமேல் அம்மிக்கல்லை வைக்கிறது போல்' இருக்கிறது. ''இவர் பாடிய திருவாய் மொழி என்ன சங்கம் ஏறிய செய்யுளா? அதனை 'வேதத் தமிழ்' என்று அவ்வளவாகச் சிலாகிப்பது தகுதியன்றே!'' என்றனர். அத்தருணத்தில் ஆழ்வார் திருநகரியில் இருந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் மனம் சகியாமல் பதைத்தமையால், குருகைப்பிரான் சன்னிதியிற் போய் விழுந்து பணிந்து, ''ஆழ்வாரே! உம்மையும் உமது திருவாய் மொழியையும் அவமதித்த சங்கத்தாருக்குக் கர்வ பங்கமாகும்படி தேவரீர் ஏதாவது பரிஹாரம் செய்வித்தாலொழிய அடியோங்கள் எழுந்திருக்கக் கடவோமல்லோம்'' என்று வைராக்ய சித்தர்களாய் மூன்று நாள் வரையில் ஸ்நானம், அநுஷ்டானம், ஜபம், ஹோமம், வேதபாராயணம், பகவதாராதனம்

முதலானவைகளும் இல்லாமல் கிடந்த கிடையாய் எழுந்திரா திருந்தார்கள்.

அது பற்றி ஆழ்வார் ஒரு முதிர்ந்த வேதியராகி வந்து, ''ஆர்காணும் மூன்று நாளாக இந்தக் கோயிலின் வாயிலில் கிடக்கிறவர்கள்? என்ன நிமித்தத்தால் இப்படிச் செய்வது?'' என்று கேட்க, அவர்கள் நம்மாழ்வாரையும், அவரது திரு வாய் மொழியையும் இகழ்ந்தமையாலே யாதேனும் பரிஹாரம் செய்விக்க வேண்டும் என்பது எங்கள் அபிமதம்'' என்றனர். வேதியர், ''இஃது என்னே பைத்தியம்! இந்தக் காலத்திலும் அப்படி நடக்குமா?'' என, ஸ்ரீ வைஷ்ணவர்கள், ''நடந்தால் எழுந்திருக்கிறோம்; நடவாவிட்டால் இங்ஙனமே அன்னபானாதி கள் இல்லாமல் இருந்து பிராணனே விட்டுவிடுகிறோம்,'' என் றனர். ஆழ்வார் குறுநகை புரிந்து, ''நீங்கள் சடகோபர் அருளிச் செய்த திருவாய் மொழியில் இன்ன பாடலின் இத் தனையாம் பாதத்தை ஒரு சிறு நறுக்கில் எழுதிக் கொண்டு போய்ச் சங்கப் பலகையின் மேல் வையுங்கள்; உங்கள் அபீஷ் டப்படி நடக்கும்'' என்று சொல்லி மறைந்தார். ஸ்ரீ வைஷ் ணவர்கள் திருக்குருகைப் பிரானரே இத் தன்மையராக எழுந் தருளினர் என்று உணர்ந்து அவர் அருளிச் செய்தபடி செய் தார்கள்.

அவர்கள் அந்தத் திருவாய் மொழிச் செய்யுள் அடி எழுதிய ஒரு சிறு முறியைக் கொண்டுபோய் வைத்த அளவில் சங்கப் புலவர்கள் ஏறியிருந்த பலகையானது பொற்றுமரைத் தடத் தில் ஆச்சரியமாய் மூழ்கிவிட்டது. அதில் இருந்த புலவர்கள் எல்லாம் நீரில் திடீரென்று விழுந்து அமிழ்ந்து தத்தித் தடு மாறி எழுந்து மெல்ல நீந்திக் கரை சேர்ந்து எழுந்து பார்த் தனர். அமிழ்ந்த பலகை உடனே குபீரென்று கிளம்பித் தன்னிடத்தில் வைக்கப்பட்ட சிறு முறியை மாத்திரம் ஏந் திக் கொண்டு மிதந்தது. அவர்கள் அதனை எடுத்து அதில் எழுதி இருக்கிற, ஆழ்வார் அருளிச் செய்த ஆயிரப் பிரபந் தத்தின் தொண்ணூற்றைந்தாம் திருவாய் மொழியில்,

''கண்ணன் கழலிணைகள்
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே.''

என்னும் முதற்கவியின் முதற்பாகத்தை வாசித்தறிந்து, உல கெலாம் உள்ளடக்கிய கண்ணன் கழலிணைகளைத் தன்னிடத்

தில் அடக்கிய இச் சிறு முறிக்கு இடம் கொடுத்த இச் சங்கப் பலகை இதனோடு ஸமான ஸ்கந்தமாக நமக்கும் இடம் கொடுக்குமா? கொடாதாதலால் நம்மை அகற்றிவிட்டது என்றும், ஸகல வேத சாஸ்திரங்களையும் பிறராற் கற்பிக்கப்படாமல் தாமே உணர்ந்த ஸாக்ஷாத் பகவதம்சமாகிய ஆழ்வாருடைய தெய்விகமான பாண்டித்தியத்திற்கு நமது பாண்டித்தியம் சதாம்சத்தில் ஏகாம்சமும் காணுதே என்றும் நினைத்துத் துக்கித்தனர். பின்னர் அவர்கள் ஆழ்வார் கூமிக்கும் பொருட்டு அவருடைய மஹிமை தங்கிய பிரபாவத்தைக் குறித்து,

''சேமம் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ-தாமம் நான்கும்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும்
உளவோ பெருமான் உனக்கு''

என்றும் பாடி ஸ்தோத்திரம் செய்தார்கள்.

''ஈயாடுவதோ கருடற்கெதிரே
இரவிக்கெதிர்மின் மினியாடுவதோ
நாயாடுவதோ உறுமிப்புலிமுன்
நரியாடுவதே அரிகேசரிமுன்
பேயாடுவதோ அழகூர்வசிமுன்
பெருமான்வகுளா பரணன் அருள்கூர்ந்து
ஓவாதுரையா யிரமாமறையின்
ஒருசொற்பெறுமோ உலகிற் கவியே''

என்றும் அன்று முதல் விருது கூறல் முதலிய ஸகல விபவங்களும் முன்னிலும் விசேஷமாய் அவ்வாழ்வாருக்கு நடை பெறுவன ஆயின. பின்னர், சடகோபர் அந்தாதி பாடி முடிந்த வுடன் ஸ்ரீ ரங்கநாதர் ஸந்நிதியில் ஆயிரக்கால் மண்டபத்தில் வித்வான்களும், கவிஞர்களும், ராஜாக்களும், பிரபுக்களும் திரண்டிருக்க, ப்ரபத்தி நிஷ்டாபரராகிய ஸ்ரீமந் நாதமுனிகள் திருவோலக்கத்தில் கம்பர் தெய்வ வணக்கம் செய்து அவையடக்கமும் கூறிக் கிரமமாக இராமாயணத்தை அரங்கேற்றினர்.

இத்தகைய ஸ்ரீ வைணவ குலதனமாகிய நாலாயிர திவ்ய ப்ரபந்தஸாராம்சங்களைத் தமது பூர்வாச்ரமத்தில் கேட்போர்

செவிகளும் மனமும் குளிர, ஆஸேது ஹிமாசலம் திக் விஜ யம் செய்து வர்ஷித்துவந்த ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ் டாபனாசார்ய உபய வேதாந்தாசார்யராய் எழுந்தருளி யிருக் கும் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் ஸ்வாமிக்கு ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவம் பூலோக வைகுண்டமாகிய ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ரங்கநாயிகாஸமேத ஸ்ரீ ரங்கநாதரின் திருவடிவாரத்தில் பக்தகோடிகளாலும் சிஷ்யவர்க்கங்களாலும் கொண்டாடப் பெறுவது லோக க்ஷேமார்த்தமே யாகும். எனவே ஷஷ்ட் யப்த பூர்த்தி மஹோத்ஸவமும் மணிவிழா மலரும் இனிது நிறைவேறப் பெரியபிராட்டியாருடன் எழுந்தருளிய பெரிய பெருமாள் அருள்புரிவாராக.

ஸ்ரீ:

அண்ணலோடு ஆராவமுதனைக் கண்ட அருள்மாரி

(வித்வான் ஸ்ரீ உப. வே. E. D. ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமி)

ஸர்வேசுவரன் பக்கலிலே ஸர்வார்த்தக்கிரஹணம் பண்ணிய திருமங்கையாழ்வார் பரம புருஷன் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசங்கள் தோறும் மங்களாசாஸனம் செய்துகொண்டு எழுந்தருளுகிறார். சோழநாட்டிலுளதும் திருநாங்கூர் க்ஷேத்திரத்திலுள்ள திருவெள்ளக்குளத்திற்கு (தற்போது அண்ணன் கோயில் என்று அழைக்கப்படுவது) எழுந்தருளுகிறார். அவர் அப்படி எழுந்தருளும்போது அந்தந்த ஊரிலுள்ள பலரும் அவரை எதிர்கொண்டழைத்து உபசரிக்கின்றனர்.

சோறுடைய சோழவள நாட்டின் நற்பகுதியாகிய திருமங்கை நன்னாட்டின் மன்னர் ஸ்ரீவைஷ்ணவர்களுக் கடிமை பூண்டு ஆராதிப்பதிலேயே நாட்டமுள்ளவர். ஸம்பிரதாயத்திற்காகத் தன் செல்வம், செல்வாக்கு, சுகம், போகம் முதலியவைகளை வெறுத்து, எம்பெருமானையே பாடிப்பாடி யனுபவித்துக்கொண்டு பரமாநந்த பரிதராக எழுந்தருளுகிறார் என்பதை யறிந்த ஆஸ்திக மஹான்கள் ஆங்காங்கே திரள் திரளாக எதிர்கொண்டுவந்து பணிந்து வரவேற்று உபசரித்து அவர் திருவாக்கில் அவதரிக்கும் உபநிஷதப் பொருளாம் சொல்ல முதை அனுபவித்து மகிழ்கிறார்கள்.

அப்படிப்பட்ட அரும் பெரும் பக்தசிகாமணிகளாம் ஸ்ரீவைஷ்ணவர்களின் கூட்டங்கள், கலியனை எதிர்கொண்டு அவர் எங்குள்ளார்? அருள்மாரி எங்குள்ளார்? கண்ணன் பெருமை கனிவுடன் பாடியருளும் கலியனெம்பெருமான் எங்கே? என்று ஆங்காங்கே விசாரித்துக் கொண்டே விரைந்து வருகிறார்கள். அவர்கள் திருவெள்ளக்குளத்தான் கோயிலுக்கு வரும்போது கலியனும் அவ்வண்ணமே மங்களாசாஸனம் செய்ய எழுந்

தருள்கிறார். எம்பெருமான் திருக்கோயில் முன்பு ஆழ்வாரை அவர்கள் காணவும் அவர்கள் மிகமகிழ்ந்து அவரை வணங்கி வரவேற்றுப் பாராட்டிப் புகழ்கிறார்கள்.

அவர்களுடைய விலக்ஷணமான தேஹத்தின் தேஜஸ் அதி ரஸமான வார்த்தை, அதிவினயமான நடையுடை பாவனை கள், முதலியவைகளைக் கண்ட திருமங்கையாழ்வார் அவர்கள் திருக்குடந்தையைச் சேர்ந்த பக்தர்கள் எனக் கண்டுகொள் கிறார். ''வாழ்தொல் புகழார் குடந்தை'' என்றும், ''இலங்கு நூலார் வேதநாவர் நிதியான கேள்வியள் வேதியர்'' என்றும் நம்மாழ்வார் திருமழிசையாழ்வார் ஆகியோர்களால் பாடப் பட்ட பெருமை அவ்வூர் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உண்டு என் பதை யறியாரோ கலியருனம்பிரான்? நித்யஸூரிகளும் விரும் பிப் போற்றும் பெருமை அவர்களுக்குண் டென்பதை யறியாத ஸ்ரீவைஷ்ணவரும் உண்டோ? ஆதலால் குடந்தையெங் கோவ லன் குடியடியாரைக் கண்டகலியனும் உள்ளம் பொங்கும் உற்சாகத்தோடு அவர்களை வணங்கி எழும்போது கோயிலுக் குள்ளிருந்து ''அண்ணன் பெருமான்'' வெளியே புறப்பாட் டுக்காக எழுந்தருளுகிறார். கலியனுடைய உற்சாகம் எல்லை கடந்துவிட்டது. உள்ளம் கரைந்துவிட்டது.

ஏற்கனவே அர்ச்சா விஷயமாகக் கலியன் ஈடுபாடு சொல் லும் தரமன்று. அதிலும் இன்று இத்தனை ஸ்ரீவைஷ்ணவர்க ளோடும் எம்பெருமானை ஸேவிக்கும் பாக்யம் கிடைத்தது மிகவும் உகப்புக்கு ஏதுவாயிற்று. அதிலும் தான் உள்ளே சென்று சேவிக்க வேண்டியிருக்க அவன் தானே தன்னை யருள் புரிய வெளியே எழுந்தருளி வருவது மன நெகிழ்ச்சிக்கு ஏது வாயிற்று. அத்துடன் அங்கே எதிர்கொண்டு வந்த திருக் குடந்தையடியாரில் ஒரு சிலர் பெருமானைக் கண்டதும் ''நடந்த கால்கள் நொந்தவோ நடுங்கு ஞாலம் ஏனமாய் இடந்த மெய் குலுங்கவோ'' என்று அனுஸந்தானம் செய்ய ஆரம்பித்தனர். மேலும், திவ்ய தேசத்திலுள்ள ஸ்ரீவைஷ்ண வர்கள் வேறு எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் எந்தப் பெருமானைப் பார்த்தாலும் உடனே தம்மையும், அடுத்துள்ள சூழ்நிலையையும் மறந்து தம் ஊர்ப் பெருமானையே கூவி யழைத்து அவன் விஷயமான பாடலைப்பாடுவது ஸஹஜமான வழக்கமே யன்றோ? அத்தகைய வழக்கிற்குத் திருக்குடந்தை ஸ்வாமிகள் விலக்கல்லவே. விலக்கல்ல என்று சொன்னால் மட்டும் போதாது; அவ்வுத்தம வழக்கம் அவர்களுக்குச் சிறப் பாக அமைந்தது என்று கூறினாலும் பொருந்தும். வடதேச

யாத்திரை சென்ற திருக்குடந்தை ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர்: ஹரி:, ராமா, கோவிந்தா, நாராயண, விட்டல், ஜெய்பத்ரி நாத் என்றவாறு பலர் பலவிதமாக நாமஸங்கீர்த்தனம் செய்து கொண்டு ஸ்நானம் செய்யும் கங்கா நதியில், ''ஆராவமுதே'' என்று அனுஸந்தானம் செய்துகொண்டே தீர்த்தம் ஆடிய இதிஹாஸம், ஸ்ரீவைஷ்ணவ உலகில் மிகப் பிரஸித்தியன்றே?

மனம் நெகிழ்ந்த கலியனெம்பிரான் ஸ்ரீவைஷ்ணவர்கள் பாடிய பாடலைக் கேட்டதும் எம்பெருமானுடைய ஸௌலப்பிய குணத்தில் மிகவும் ஈடுபட்டு அனுபவிக்கலுற்றார். முதலில் எம்பெருமான் அந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்காகவே எழுந்தருளுவதாக நினைத்தார். ''உற்றதும் உன்னடியார்க்கடிமை'' என்று பாடும் பரம பக்தரல்லவா அவர்? பிறகு பெருமானே ஸேவித்ததும் அவருடைய இணையில்லாத ஸௌந்தர்யமும் காம்பீர்யமும் வெள்ளமிட்டோடவும் அவர் திருக்குடந்தை யுறை ஆராவமுதாழ்வானைப் போலவே ஸேவை ஸாதிக்கவும் கண்டார். பரமன் ஸ்ரீவைஷ்ணவர்களுக்காகவல்ல, ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் துணையாக, தமக்காக தம்மை ஆட்கொண்டு அருளவே, தம் வடிவைக் காட்டிக் களிப்பிக்கவே எழுந்தருளுவதாகக் கண்டார்.

நம்மிடம் இவ்வளவு க்ருபை இந்த எம்பெருமானுக்கு எப்படி வந்தது? நீ முன் கூட்டியே திருவெள்ளக் குளத்திற்கு வா. வந்து எனக்கு ஸேவை ஸாதி என்று நாம் கேட்டோமா? என்று ஓர் கேள்வியும் எழுந்தது கலியனுள்ளத்தில்.

பெருங் கடலில் அமிழ்ந்த வுலகத்தை அண்டபித்தி யினின்றும் பெயர்த் தெடுத்தாலே மஹாவராகமாகி; அப்போது அவ்வண்ணம் உலகத்தைக் காக்குமாறு யார் வேண்டியது? அகிலத்திலுள்ள சராசரங்களை உட்புகுந்து தரிக்கிறானே அப்படிச் செய்து காத்தருள் என்று வேண்டியது யார்? பிரளயத்தில் அகிலத்தையும் வயிற்றில் வைத்து நாராயணனுக்கக் காத்தாலே அதுவும் யாருடைய பிரேரணையினாலாவது நடந்ததா? வராகமதாகி உலகை எடுத்து நிறுத்தியதும், நாராயணனுகி அகிலத்தையும் தரித்தும், வயிற்றுள் வைத்துக் காத்ததும் அவனுடைய இயல்பான ஸௌலப்பிய ஸௌசீல்ய வாத்ஸல்யாதிகளாலல்லவா நடைபெறுவன? அப்படியே இப்போதும் தன்னையனுக்கிரஹிக்கவே பரமன் திருக்குடந்தையி லிருந்து ஸ்ரீவைஷ்ணவர்களோடு எழுந்தருளினானே என்று பாடுகிறார் கலியன்.

''வாராக மதாகி இம்மண்ணையிடந்தானே
நாராயணனே நல்ல வேதியர் நாங்கூர்
சீரார் பொழில் சூழ்திருவெள்ளக் குளத்துள்
ஆரா வமுதே யடியேற் கருளாயே.''

இப் பாட்டு திருக்குடந்தைப் பெருமாள் விஷயமா? அப்படியா பழைய வியாக்கியாதாக்கள் கூறினர்கள்? என்றெல்லாம் வாதத்திலிறங்குவது தகாது.

கலியனிடம் அபரிமிதமான பக்திகொண்ட சில மஹனீயர் களான பகவத் விஷயாதிகாரிகள் இப் பாட்டிற்கு அப்படி பாவம் கூறியனுபவித்து மகிழ்வதுண்டு.

கலியனை எதிர்கொண்டழைக்க எழுந்தருளிய ஸ்ரீவைஷ்ண வர்களுக்கு ஊரில் இடம் பற்றுமல் அண்ணன் கோயிலை யடுத்த தோப்புக்களிலும் நிறைந்தனர் என்றும் அவர்களு டைய திருவாக்கின் நல்லுரைகளால் நிறைந்தொலித்து விளங் கிய அப் பொழில்களைச் சீரார்பொழில் என்று கலியன் பாடுவ தாகவும் கூறுவர். அன்றைக்கு அரசைத் துறந்து ஸ்ரீவைஷ்ண வத்தை வளர்த்தார் கலியன். இன்றைக்குத் தன்னுடைய போகங்களையும் செல்வ முதலாயவற்றையும் துறந்து ஸ்ரீவைஷ் ணவ ஸம்ப்ரதாயத்தை வளர்க்கிறார் ஸ்ரீமதாண்டவன்.

அருமறைப்பொருளை அன்று அருந்தமிழ்ப் பாட்டால் வெளி யிட்டுப் பரமனை மகிழ்வித்தார் கலியன். அவ்வருள் மாரியின் பாயிலைகளையும் அவை தரும் மறைப் பொருளையும் தம் இனிய சொல்லமுதால் வெளியிட்டுப் பரமனையும் பரம வைணவர் களையும் மகிழ்விக்கிறார் ஸ்ரீமத் ஆண்டவன்.

ஆராவமுதாழ்வான் அவ்வாலிநாடனை எதிர்கொண்டதைப் பெரியோர்கள் சொல்லக் கேட்கிறோம். ஆண்டவன் சென்று சேவிக்குமிடங்களி லெல்லாம் ஆராவமுதாழ்வான் சேவை ஸாதிக்கிறானென்பதை அவருடைய அருள்வாக்காலேயே யறி கிறோம்.

கலிய னெம்பிரானை ஸ்ரீவைஷ்ணவர்கள் எதிர்கொண்டிருப் பார்கள் என்று மனமாற நம்புகிறோம். ஸ்ரீமதாண்டவனை ஆஸ்திக உத்தமர்கள் எதிர்கொண்டு உபசரிப்பதைக் கண் ணாலும் காண்கிறோம்.

அந்த மஹா புருஷனுடைய சீர்மையை வெளியிடும் மலரில் அடியேனையும் ஊக்கிப் பங்குபெறச் செய்த பெரியோர்களுக்கு அநந்தப் பிரணமங்கள்.

''சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டொடுவுன்
றினர் அற்ற பற்றர் சுற்றிவாழும் அந்தணீர் அரங்கம்''

என்று திருமழிசைப்பிரானால் மங்களா சாஸனம் பெறும் ஏற்றம் பெற்ற மஹான்களைப் பற்றி அடியேன் பேசவல்லேனே? வாழ்க வண்டமிழ் மாமறை! வளர்க வையவப் பெருநற் சமயம்! வாழ்க வண்புகழ் நாரணன் திண்கழல்! வாழ்க வளரணிமணி பாதுகம்!

ஸ்ரீ:

தமிழ் மறையும் வடமொழி வேதமும்

(ஸ்ரீ உப. வே. மேல்மா நரஸிம்ஹ தாதாசார்ய ஸ்வாமி)

பாரத தேசத்தில் தற்காலம் பிரசாரத்திலுள்ள மதங்கள், அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதமும். இவைகளில் விசிஷ்டாத்வைதிகளான நமக்கு தமிழ் வேதம் என்கிற அருளிச் செயல்களும், ஸம்ஸ்க்ருத வேதாந்தம்போல் ப்ரமாணங்கள். ஆகவே உபய வேதாந்திகள் என்று சொல்லுகிறோம். உபய வேதாந்தங்களை ப்ரமாணமாகக் கொண்ட விசிஷ்டாத்வைத மதம் அநாதியானது. யுகாந்தரங்களிலும் செந்தமிழ் வேதத்திற்கு முதலாழ்வார்களும், திருமழிசைப் பிரானும் ப்ரவர்த்தகர்களாயும், ப்ரதிஷ்டாபகர்களாயும் இருந்தார்கள். அப்படியே ஸம்ஸ்க்ருத வேதாந்தத்திற்கு எம்பெருமான் தொடங்கி பராசரர், வ்யாஸர், சுகர், ஈரூன மகரிஷிகள் ப்ரதிஷ்டாபகர்களாக இருந்தார்கள். பிறகு இக்கலியினுடைய ஆரம்பத்திலே ''ப்ரம்ம நந்தியாதிகளுக்குப் பிறகு நம்மாழ்வார் இந்த தர்சனத்திற்கு ப்ரவர்த்தகரானார்'' என்று ஸம்பிராதாய பரிசுத்தியில் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்தபடியே நம்மாழ்வார் ஆசார்யர் ஆனார்.

அதற்குப் பிறகு நாதமுனிகள் தொடங்கி இன்றைய ஆசார்யர்கள் வரையிலும் ஒருவரே இரண்டு வேதாந்தங்களையும் ப்ரவர்த்தனம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான் உபநிஷத் வ்யாகயானமான ப்ரம்ம சூத்ரத்திற்கு ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்த ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம், ஸ்ரீ மத்ரஹஸ்யத்ரய ஸாரம், பகவத் விஷயம் என்கிற நான்கு க்ரந்தங்களையும் பழைய காலத்து ஸம்பிரதாயப்படி ஆசார்யன் ஸந்நிதியிலேயே கால க்ஷேபம் செய்து வருகிறார்கள். இந் நான்கு க்ரந்தங்களிலும் உபய வேதாந்தங்கள் ஒன்றுக் கொன்று ஆதாரமாக சேர்க்கப்பட்டுள்ளன. கால க்ஷேபம் செய்த ஸ்வாமிகளில் சிலர் ஸ்ரீ பாஷ்யத்திலும், கீதா பாஷ்யத்திலும், செந்தமிழ் வேதார்த்தங்கள் காணப்படுகின்றனவா! என்கிற விஷயத்தில் ஸந்தேகம் கொள்ள

லாம். பகவத் விஷய வ்யாக்யாநங்களை ஸேவிக்கும் பொழுது ப்ரம்ம சூத்ர கீதார்த்தாதிகளை ப்ரமாணமாகக் காட்டு மிடத்தை ஆலோசித்துப் பார்த்தால் தமிழ் வேதத்திற்கும் ஸம்ஸ்க்ருத வேதத்திற்கும் உள்ள ஸம்பந்தம் ப்ரகாசிக்கும்.

தமிழ் வேதம் செம்மையோடு, அதாவது நேர்முகமாக, சாஸ்த்ரார்த்தங்களை எடுத்துக் காட்டுகிறது. ஏனெனில் கலி யுகத்தில் ஜனங்களுடைய சக்தி ஸாமர்த்யங்கள் குறைந்திருக் கிறது. வ்யாஸாதி மகர்ஷிகளைப் போல கஷ்டப்பட்டுக் கர்ம யோக, ஞானயோக பக்தி யோகாதிகளை அனுஷ்டிக்க முடிய வில்லை. இந்நிலைமையைக் கடாக்ஷித்த எம்பெருமானே, தனது ஸஹஜமான க்ருபையாலே ஆழ்வாரை அவதரிப்பித்து அவருக்கு அஜ்ஞான கந்தம் இல்லாதபடி பக்திரூபாபன்ன மான ஞானத்தையும், தத்வஹித புருஷார்த்தங்களையும் தெளி வாக ப்ரகாசிப்பித்துச் சரணாகதி தர்மத்தை நடத்தி வைத்து, உலகத்தை க்ஷேமப் படுத்தத் திருவுள்ளம் பற்றினான். ஸ்ல பமான சரணாகதி தர்மத்தை ப்ரவர்த்தனம் செய்ய வேண்டும் என்ற ஸங்கல்பம் போல் ஸித்தாந்தார்த்தங்களையும், ஞான த்தமிழ், இருந் தமிழ், செந்தமிழ், செய்ய தமிழ், என்றெல்லாம் ஆழ்வார்களும் ஸ்ரீ தேசிகனும் கொண்டாடும்படியான தமிழ் பாஷையிலே விளங்க வைத்தான். இவ்வளவும் எம் பெருமா னாலே என்பதை ப்ரபந்ந ஜந ஸந்தாந கூடஸ்தரான நம் மாழ்வார் ''உயர்வற உயர்நலம் உடையவன்'' என்று ஆநந் தாதி கல்யாண குணபரிபூர்ணமானது தத்வமான பரப்ரம்மம் என்றும் ''மயர்வற மதிநலம் அருளினன்'' என்று அஜ்ஞான கந்தம் இல்லாதபடி பக்தி ரூபாபன்ன ஞானம் என்கிற ஹிதத்தையும் மற்ற இரண்டடிகளாலே மோக்ஷ ப்ரதத்வம், வைகுண்ட ஸ்வாமித்வம், அவனுடைய திருவடிகளில் கைங் கர்யம், புருஷார்த்தம் என்கிற மூன்று அர்த்தங்களையும் தெளி வான முறையிலே அருளிச் செய்தார்.

ஸம்ஸ்க்ருத வேதாந்தியான வ்யாஸர் ப்ரம்ம ஜிஜ்ஞாஸா என்றுரம்பித்தார். ப்ரம்மம் ஸகுணமா, நிர்குணமா என் றெல்லாம் ஸந்தேகம் கிளம்பிவிட்டது மேலே விசாரித்துக் கொண்டே போகிறார். இப்படி விசாரித்ததிலும் விசிஷ்டாத் வைத ஸாரங்களான சில விஷயங்கள் விசாரிக்கப்படவும் இல்லை. மேலும் தர்க்காதி கர்கச சாஸ்த்ரங்களில் பரிச யமில்லாதவர்களுக்கு ஸூத்ரார்த்த ஞான விஷயத்தில் ப்ர வேசமே ஏற்படுகிறதுமில்லை. ஏற்பட்டாலும் தெளிவு பிறப்ப தில்லை.

உதாஹரணம்:—சரணு கதியைப்பற்றி விளக்கமே யில்லை. ச்ருத ப்ரகாசிகாசார்யரும் ஸ்ரீ தேசிகனும் பிற்காலத்தில் ப்ரம்ம சூத்ரத்தில் சரணுகதிக்கே ஸோபகமான பதங்கள் இருப்பதாக எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள். சரணுகதி வ்யாஸருக்குத் திருவுள்ள மிருக்குமேல், ''முகுந்தவை சரண மஹம் ப்ரபத்யே'' என்கிற உபநிஷத் வாக்யத்தை எடுத்துக் கொண்டு இங்கே சொல்லப் படுகிற சரணுகதி ஸித்தோபாய வரணமா? அதிலும் பரகத ஸ்வீகாரமா? ஸ்வகத ஸ்வீ காரமா? ஆனுகூல்ய ஸங்கல்பாதி விசிஷ்டமா? ஆனுகூல்ய ஸங்கல்பாதி ஸம்பாவித ஸ்வபாவமானதா? ஒவ்வொன்றுமே சரணுகதியா? அங்காங்கி பாவம் உண்டா இல்லையா என் றெல்லாம் விசாரித் திருக்க வேண்டாமா? என்று ஒருவர் கேட்டால், கஷ்டப்பட்டு பதில் சொல்ல வேண்டி யிருக்கிறது. பக்தியை உபாயமாக ஸாதித்த விடங்களிலும் பக்தியின் ஸ்வபாவாதிகளை நாரத பக்தி சூத்திரத்தில் சொல்லப்பட்ட படி பதினெரு விதமா? ஸ்வாமி பக்தி ஒன்றேயா? நாயிகா நாயிக பக்தி, வாத்ஸல்ய பக்தி முதலானவைகள் தெளிவாக இல்லை. ''ஸ ஏநாந் ப்ரம்ம கமயதி'' என்ற விடங்களில் முக்தனை ப்ரம்மத்தினிடத்தில் அமானவன் சேர்ப்பிக்கிறான், திரும்பி வருவதில்லை என்றாரே யொழிய வைகுந்தம் புகும் போது என்ன உபசாரம் நடக்கிறது? பக்தி பரீவாஹமான கைங்கர்யம் உண்டா இல்லையா? என்பதைத் தெளிவாக விசா ரிக்க வில்லை. பின் வந்த ஆசார்யர்கள் செந்தமிழ் வேதார்த் தங்களை மனதில் கொண்டு, ஆழ்வார்கள் அநுபவித்த பக்தி ப்ரகாரங்க ளெல்லாமும் ''சூழ்வி சும்பணி முகிலை'' அனு சரித்து முக்தாத்மாவின் அனுபவத்தையும், பகவத் கைங் கர்ய ரூப புருஷார்த்தத்தையும் வ்யாஸருக்கு அபிமதம் என்று ஸாதித்து இருக்கிறார்கள்.

ஆகவே செந்தமிழ் வேதமின்றி வடமொழி வேதம் எல்லா ஸித்தாந்தார்த்தங்களையும் விளக்க வில்லை என்பது தெரிய வருகிறது. தான் அறிந்துகொண்ட ஸித்தாந்தார்த்தம் விசா ரித்தால் நிற்குமா? நிற்காதா என்கிற ஸந்தேஹம் வாராமைக் காகவும், மஹா விச்வாஸம், நிலை நிற்பதற்காகவும் வ்யாஸ ஸூத்ராதி க்ரந்தங்கள் அதிகரிக்க வேண்டியதே தான்.

அதிக, விசாரத்தைச் செய்துகொண்டே காலத்தை வீணுக்கு வதைக் காட்டிலும், பகவதனுபவத்தைப் பெற்று ஸந்தோஷத் தோடு வாழ வேண்டும் என்று நினைப்பவர்களுக்குச் செந்தமிழ் வேதமே தத்வஹித புருஷார்த்தங்களை விசதமாக அறிவித்து

விடுகிற படியால் பகவானை அனுபவித்த ஆழ்வார் திருவாக்கி லிருந்து அவதரித்த திருவாய் மொழியே அதிகரிக்க வேண்டிய தாயிருக்கிறது. அருளிச் செயல்களை அநாதரிப்பவர்களுக்கு ப்ரதமாசார்யனை ஆழ்வாருடைய கடாக்ஷமும் கிடைக்காது. ஆழ்வார் கடாக்ஷத்திலேதான் ஸ்ரீ பாஷ்யகாரரான எம் பெருமானுருக்கும் ஸ்ரீ தேசிகனுக்கும் ஆசார்ய பர்ம் பரையில் அதிகமான கௌரவம். அமுதனரும் எம்பெருமானுருக்கு வந்த ஏற்றமெல்லாம் ''சடகோப னருளினலே'' தான் என் பதை ''பூமன்னு மாது பொருந்திய மார்பன் புகழ் மலிந்த பாமன்னு மாறன் அடிபணிந்து உய்ந்தவன் . . . சரணர விந்தம் நாம் மன்னி வாழ நெஞ்சே சொல்லுவோம் அவன் நாமங்களே'' என்றார். பிள்ளை குமார நயினராச்சாரியரும் ஸ்ரீ தேசிகன் பெருமையை ஆழ்வார் எம்பெருமானுர் கடாக்ஷத் திலல் வந்ததாக ''மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பினள் தாள் தூமலர் சூடிய தொல்லருள் மாறன் துணை யடிக்கீழ் வாழ்வை யுகக்கும் ராமாநுசமுனி வண்மை போற் றும் சீர்மையன் எங்கள் தூப்புல் பிள்ளை . . .'' என்றருளிச் செய்தார்.

மேலும், நம் பூர்வாசார்யர்கள் செந்தமிழ் ஸாம வேத மாகிய திருவாய் மொழிக்கு பகவத் விஷயம் என்று நாம கரணம் செய்திருக்கிறார்கள். வேத வேதாந்த ஸூத்ர புரா ணேதிகளெல்லாம் பகவானைப் பற்றிப் பேசுகிற படியால் அவை களையும் பகவத் விஷயம் என்று சொல்லலாமா யிருக்கச் செய்தேயும், அவைகளை பகவத் விஷய மென்று சொல்லாமல் திருவாய் மொழியை பகவத் விஷயமென்று வ்யவஹரிக்கக் காரணம், யாதென்று ஆராய வேண்டும், பகவாந் என்கிற பதத்திற்கு ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ், என்கிற கல்யாண குணங்களை உடையவன் என்று புராண ரத்ந கர்த்தாவாயும், வேத வ்யாஸருடைய தமப்ப னை பராசரர் அருளிச் செய்திருக்கிற ரீதியை திருவுள்ளத்தில் கொண்டு ப்ரபந்ந ஜநஸந்தான கூடஸ்தரான ஆழ்வார் ''உயர்வற உயர் நலம் உடையவன்'' என்று கல்யாணகுண முடையவனை தொடங்கின படியால் இத்திருவாய் மொழிக்கு பகவத் விஷயமென்ற பெயர் வந்தது என்று பெரியோர் பத்து தோறும், பதங்கள் தோறும், பாசுரங்கள் தோறும் பாதம் தோறும், பதம் தோறும் பகவத் கல்யாண குணங் கள் திகழ்ந்து கிடக்கின்றன வென்பதை உபய சம்பிரதாயத் திலும் வ்யாக்யாதாக்களான மஹான்கள் எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள். திருவாய் மொழியில் திகழ்கின்ற திருக்

கல்யாண குணங்களை செந்தமிழறியாதவர்களும் தெரிந்து அநுபவிக்க வேண்டும் என்னும் கருணைபொங்கிய திருவுள்ளத்தோடு ஸ்ரீ தேசிகன் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி, த்ரமிடோபநிஷத் ஸாரம் என்ற இரண்டு க்ரந்தங்கள் அருளிச் செய்திருக்கிறார். தென்னாசார்ய ஸம்பிரதாயத்திலும் பதிகங்களின் ஸாரார்த்தங்கள் ஸம்ஸ்க்ருத பாஷையில் ''த்ரமிடோ பநிஷத் ஸங்கதி'' என்றருளிச் செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் இச்செந்தமிழ் வேதத்தையும் ஸம்ஸ்க்ருத வேதத்தைப்போல் குருச்சாரண அநுச்சாரண ரூபமாக அத்யயனம் செய்யவேண்டும் என்கிற நியமமுண்டு. எம்பெருமானாரே திருமலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழி யர்த்தம் கேட்டருளினார். ஆளவந்தாராழ்வான் பக்கலிலே திருவாய் மொழி யோதினார் என்று தேசிகனும் அருளிச் செய்ததிலிருந்து தெரியவருகிறது. ''செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய வோதி தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றிலமே'' என்றதை அனுஸந்தித்தால் செய்ய தமிழ் மாலைகளும், வேதங்களைப் போல் ஓதப்பட வேண்டியவை என்பதும், வேத பாகங்களில் விளங்காத விஷயங்களெல்லாம் செந்தமிழில் விளங்குகின்றன என்பதும் நன்றாகத் தெரிய வருகின்றது.

இத்தகைய பகவத் குணானுபவங்களைப் ப்ரம்ம சூத்ராதிகளிலும் உபநிஷத்துக்களிலும் பகவானோடு சேர்த்து அநுபவிக்க வேண்டும். குணானுபவமில்லையேல் பக்தியில்லை. பக்தி யில்லையேல் கைங்கர்ய மில்லை. கைங்கர்ய மில்லையேல், சேஷத்வம் இல்லை. சேஷத்வம் இல்லையேல் ஸ்வரூப மில்லை.

ஆகவே குணானுபவம் அவசியம். குணானுபவம் வெள்ளமிட வேணுமானால் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களில் ஆதரமும் அநுபவமும் வேண்டும். தமிழ் வேத மோதாதவர்களுக்கு இப்பரிசு கிடைப்பது அரிது. அவர்களுக்கும் இது கிடைக்க வேண்டும் என்ற திருவுள்ளத்தோடு ஸ்தாலீபுலாக நியாயத்தாலே ப்ரம்ம சூத்ராதிகளுக்கும் குணானுபவத்திலே தாத்பர்யம் என்பதை ஸ்ரீ தேசிகன் அதிகரண ஸாராவளியின் ஆரம்பத்திலே ''ஸ்ரஷ்டா தேஹி'' என்று துவங்கி 16 பாதங்களிலும் 16 கல்யாண குணங்கள் அநுபவிக்க இருக்கின்றன என்பதை விளக்கி யிருக்கிறார். பக்தி யிருக்குமானால் 156 அதிகரணங்களிலும், 545 சூத்ரங்களிலும் 156, 545 கல்யாண குணங்களை அனுபவிக்கலாம். இந்த குணங்களை எப்படித் தேர்ந்தெடுப்பது என்றால் அதற்குத்தான் செந்தமிழ் வேதார்த்த அனுபவம் வேண்டும்.

ஆகையால் உபய வேதாந்திகளான நாம் செந்தமிழ் வட கலை என்ற பாஷாபிமானத்தை விட்டு வ்யாஸ சடகோபாதி களுடைய ஸ்ரீ ஸூக்திகளில் குணநுபவத்தையே முக்கியமாக கொண்டு குணநுபவம் செய்து பக்தி கரைபுரள ''பரபக்தி, பரஞான, பரம பக்தி க்ருத . . . கிங்கரோபவாநி'' என்ற படியே பகவத் கைங்கர்ய ஸம்பந்தத்தைப் பெற்று ''ஒழிவில் காலமெல்லா முடனுய் மன்னி வழுவிலாவடிமை'' செய்து வாழ வேண்டுமென்று ஆசார்யாறுடைய திரு நக்ஷத்திரத் திருநாளில் திருமாலடியார்களின் திருவோலக் கத்தில் ப்ரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ:

சரணாகதியின் ஆவசியகம்

(ஸ்ரீ உப. வே. ராவ்பஹதூர் R. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி,
புதுக்கோட்டை)

ஸ்ரீ வேங்கடாத்வரி, ராஜமன்னார்குடி என்ற சம்பகாரண்ய க்ஷேத்ரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ கோபாலன் விஷயமாக விசுவ குணதர்ச சம்புவில் எழுதியுள்ள சுலோகம் நம் அனைவருக்கும் பரம உத்தேசியம்.

கோபாடோபதசா விசாலபருஷா
லாபாதிரூபாசுப
வியாபாரக்ல பிதார்த்திலோக ஹ்ருதயை:
பூபாலபாசைரலம்
தாபாவிஷ்டலக்ருத் ப்ரபன்ன ஜனமுக்த்யா
பாதனேதீக்ஷிதம்
பாபாஞ்மபஞ்தஞ்ய குஹஞ
கோபாலமே வாச்ரயே ||

நம்முடைய எளிமையினால் மஹாராஜாக்களையோ, மந்திரிகளையோ, பணக்காரர்களையோ, பிற அதிகாரிகளையோ, பொருளுதவி செய்யவோ, உத்யோகம் கொடுக்கவோ வேறுவிதமான பிரயோஜனத்தை உத்தேசித்தோ பிரார்த்தனை செய்கிறோம். அவர்களுக்கு நம்மைப்போல் அநேகர் கேட்பதினாலோ, வேறு எவ்வித அஸௌகர்யத்தினாலோ கோபம் உண்டாகி, நம்மை அவர்கள் வெறுத்துப் பேசுவது கணக்கில் அடங்காது. அப்படி அவர்களிடம் போய் பிரார்த்திப்பதைவிட, எப்பொழுது வந்து நம்மைச் சரணாகதி செய்யப் போகிறான், நாம் அவனுக்கு மோக்ஷம் கொடுப்போம் என்று காத்துக்கொண்டிருக்கும் இடையன் என்ற பொய் வேஷம்பூண்ட ஸ்ரீ கோபாலனை நம்முடைய பாபத்தைப் போக்கும்படி பிரார்த்திப்பது உசித மாகும். நமக்கு அவ்விதபுத்தி உண்டாவதாக என்பது இதன் பொருள்.

ஸ்ரீ:

கண்டோம், கண்டோம்
கண்ணுக்கினியன கண்டோம்

(ஸ்ரீ உப. வே. A. S. அய்யங்கார் ஸ்வாமி)

இது நம்மாழ்வார் பாசுரம். உடையவர் காலத்தில் நடக்கப்போகும் பாகவதர்களின் நிறைவை உட்கண்ணால் கண்டு மகிழ்ச்சி உள்ளடங்காமல் வெளிவந்த பாசுரம். 'தொண்டீரெல்லீரும் வாரீர், தொழுது தொழுது நின்றூர்த்தும்' என்கிறார் ஆழ்வார். ஆழ்வாரோ உட்கண்ணால் கண்டார். நாமோ வெளிக் கண்ணாலேயே காண்கிறோம். ஆழ்வார் அழைத்துத் தொண்டீர் வந்தார்கள். இப்பொழுதோ தொண்டீர் அழைக்காமலே வரக்காண்கின்றோம். 'மரம் பழுத்தால்' என்கிற மாதிரி.

இராமானுசருக்கு இளையாழ்வார் என்று ஒரு திருநாமம் உண்டு. திருப்பாவை ஜீயர் என்றும் திருநாமம் உண்டு. ஆண்டாள் இராமானுசரை அண்ணனாகக் கருதியதாக ஐதிஹ்யம். நம்முடையாண்டவனும் இளையாழ்வார் மாதிரி எல்லா விடங்களிலும், எப்பொழுதும், எல்லா அவஸரங்களுக்குந் தகுந்த கைங்கர்யங்களைச் செய்து கொண்டு பெருமாளையும் பிராட்டியையும் சரணமடைகிறார். ஆண்டவனுடைய திருப்பாவை உபந்யாஸங்களே பட்டணம், பம்பாய், டில்லி, கல்கத்தா முதலிய தலைநகரங்களையும் ஜயித்துவிட்டன. ஆண்டவன் திருமாலிருஞ்சோலை அழகருக்கு ஆயிரங்கடாரம் அக்காரவடிசில் நிவேதனம் செய்தபடியால் ஆண்டாள் ஆண்டவனைத் தம்பியாகக் கருதுகிறளோ என்னமோ?

நம்முடையாண்டவன் நம்முடையை குறைகளைத் தீர்க்க வந்த ஆண்டவனே என்றுகூடத் தோன்றுகிறது. பல விடங்களிலுள்ள பக்தர்கள் ஸமீப காலத்தில் தம் மூர்க்களுக்கு ஆண்டவன் எழுந்தருளவில்லையே என்று ஏங்கித்தவித்தனர். அந்தக் குறையை ஆண்டவன் தீர்த்தாகிவிட்டது. குருவாயூர் உள்படத் தென்னாட்டுத் திருப்பதிகளிலுள்ள எம்பெருமான்

களை யெல்லாம் நேரில் ஸேவித்துப் பல்லாண்டு பாடியாயிற்று. வடநாட்டுத் திருப்பதிகளுக்கும் இந்த ஆசிரமத்திலும் ஆண்டவனுடைய மங்களா சாஸனம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

திருவஷ்டாக்ஷர மந்த்ரஸித்தி பெற்றுத் 'திருக்குடந்தை ஆண்டவன்' என்று திருநாமம் பெற்ற ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகனுடைய அநுக்ரஹத்தினால் பராபவ வருஷம் பங்குனி மாதம் ஸ்ரீமத் புஷ்ய நக்ஷத்திரத்தில் அவதரித்த தவப் புதல்வர் இப்பொழுது எழுந்தருளி யிருக்கும் ஆண்டவன். பராபவ வருடத்தில் உதித்தாலும் 'நாஸ்திதேஷாம் பராவ:' என்கிற கணக்கிலே பரிபவத்தைக் காணாதவர். பங்குனி மீ பெரிய பிராட்டியாரின் திருவவதாரத்திற்கும், பெரிய பெருமாளும் பெரிய பிராட்டியாரும், சேர்த்தியில் எழுந்தருளி யிருந்து அக்காரவடிசிலுடன் இராமானுசரிடம் அருஞ்சுவை யுள்ள (சரணாகதியை) ஆத்மஹவிஸ்ஸை அக்கறையாக ஏற்றுக் கொண்ட மாஸம். ஸ்ரீமத் புஷ்ய நக்ஷத்திரமோ அறுபது வருஷங்களுக்கு மேல் யதிசக்ரவர்த்தியாக செங்கோல் செலுத்திய பெரிய ஆண்டவனுடைய திருநக்ஷத்திரம். இவைகளுக்குள்ள மஹிமை திருக்குடந்தையில் வாதூல கோத்திரத்தில் ஸ்ரீநிவாஸராகவனைப் பிறந்து, பூர்வாசிரமத்தில் கண்ணன் என்று அழைக்கப்பட்ட இப்பொழுது எழுந்தருளி யிருக்கும் ஆண்டவனுக்கு இல்லாமற் போகுமா?

கண்ணன் குழலூதும் சிறப்பைத்தான் ஒக்கும் ஆண்டவன் காலக்ஷேபம் ஸாதிக்கும் வைகரி. கேட்பவர்கள் மெய்மறந்து போகிறார்கள். ஜீவர்களாகிய மான்களைப் பிடிக்க ஆண்டவனைகிற வேடன் திருவாய்மொழி பாடி மோக்ஷ வலையில் சிக்க வைக்கிறார். வேடனே ஆசார்யனாக இருப்பதும் பந்தகமாகிற வலையே மோக்ஷமாக இருப்பதுந்தான் ஆச்சரியம். அல்லது நம்முடைய விஷய ருசியாகிற விஷப்பல்லைப் பிடுங்கி மகுடி ஊதும் பக்கமெல்லாம் தலையாட்டும் படி செய்யும் பாம்புப் பிடாரனே என்றும் சொல்லலாம். ஆனால் ஹீனோபமைக்காக மன்னிக்கும்படி பிரார்த்தனை.

நமதாண்டவன் என்று பெயர் பெற்ற தேரழுந்தூர் ஆண்டவனிடம் உபதேசம் பெற்று, எங்களாண்டவன் என்று பெயர் பெற்ற ஆக்கூராண்டவனிடம் ஸ்ரீ பாஷ்யம் காலக்ஷேபம் செய்து, என் ஆண்டவன் என்று பெயர்பெற்ற தென்பிறை ஆண்டவனிடம் துறவறம் பெற்ற நம்முடையாண்டவன் உலகெல்லாம் உய்யவேண்டுமென்று வாஞ்சனங்கள் மலிந்த இந்நாளிலும்

கால்நடையாகவே பல்லாயிரம் மைல்கள் எழுந்தருளுவது பெரிய ஆச்சர்யம்.

இதுவரையில் ஆண்டவன் பரம்பரையிலேயே நேராத வித்வத்ஸதஸ்ஸுக்களை நடத்தி வித்வான்களுக்குப் பக்ஷபாதமின்றிப் பக்ஷபாதங்காட்டி புஷ்கலமாக திரவிய ஸம்மானம் செய்வது ஒரு அத்புதம்.

உலகத்திலேயே கஜதானம் செய்யக்கூடியவர்கள் சிலர்தான். அதையும் ஆராமுதாழ்வானுக்கே செய்தது ஆச்சரியமில்லையா? அஷ்டை சுவரியங்களையும் அளவில்லாமல் அள்ளி வழங்கும் கோமளவல்லித் தாயாருக்கு அன்பர்கள் அளித்த வயிர நகைகளை அர்ப்பணம் செய்தது அதைக்காட்டிலும் ஆச்சரியம் இல்லையா?

பூர்வாசிரமத்திலேயே விருந்தோம்பல் என்கிற குணம் ஸ்வாமியினிடம் விசேஷமாக இருந்தது. அது இப்பொழுது அங்கங்கே சிஷ்யர்களும் அபிமானிகளும் செய்துவைக்கும் நித்ய ததியாராதனமாக நடந்துகொண் டிருக்கிறது.

சில ஸந்யாஸிகள் செய்வதுபோல் இல்லறத்தைத் துறக்கும் பொழுது பிள்ளைகளுக்கு நல்ல வேலை ஆகவேணுமே, பெண்களுக்குக் கலியாணம் ஆக வேணுமே, கடன்கள் ஏதேனும் இருந்தால் அடையவேணுமே என்றெல்லாம் கவலைப்பட்டு முன்னேற்பாடுகள் செய்யாமல் எல்லாருக்கும் ஸர்வேசுவரனே தஞ்சமென்று துறவறத்திற்காகக் கூப்பிட்டதும் ஓடிவந்தது அனைவராலும் வியக்கத்தக்கது.

ஆண்டவன் ஸ்தானத்திற்கு எழுந்தருளக்கூடிய இன்னும் சில வ்யக்திகளுக்கிருந்த இன்னல்களைக் கணிசித்து அவர்களிடம் இரக்கங் கொண்டு, தானே தனக்குள்ள சிரமங்களைப் பொருட்படுத்தாமல் ஸம்பிரதாயம் தழைக்கும் பொருட்டு ஆவலோடு துறவறம் பூண்டது வேறு எவருக்குத்தான் முடியும்?

பணக்காரர்கள், ஏழைகள் என்கிற பேதமில்லாமல், இன்னும் சொல்லப்போனால் ஏழைகளிடம் அதிக அன்பைக் காட்டுவது அதிசயிக்கத்தகுந்தது.

ஆண்டிகள் பணத்தைத் தொடக்கூடக் கூடாது என்கிற நியமத்தைப் பின்பற்றித் தனக்கு என்று எந்த திரவியத்தையும் வைத்துக் கொள்ளாதது மிகவும் மெச்சத்தக்கது.

ஸ்திரீகளுடன் மந்திரோபதேசம் செய்யவேண்டிய காலம் போக மற்ற காலங்களில் பேசாமலிருப்பதுடன் அவர்களை ஏறிட்டுப் பாராமலிருப்பதும், அவர்களோடு ஒருபொழுதும் ஏகாந்தத்தில் உரையாடாததும் நைஷ்டிகப் பிரஹ்ம சாரிக்குக்கூட ஸித்திக்காத உயர்ந்த குணத்தை உலகம் போற்றுகிறது.

'வையமாண்டார் மாண்டார்', 'ஈசுவர்கள் நசுவரர்கள்' என்பதைப் பணக்காரர்கள் மனதிலும் படும்படி செய்யவேண்டும் என்பதற்காக அவர்கள் இல்லங்களிலும் பொன்னடிச் சாற்றி 'ஊசியின் ஓட்டையில் ஒட்டகம் நுழையும், ஆனால் பணக்காரன் பரமபதம் பார்ப்பது பரமதுர்லபம்' என்கிற பழஞ் சொல்லைப் பொய்ப்பித்து பணக்காரர்களையும் உய்யும் படி செய்யப்பாடுவதை யார்தான் போற்றமாட்டார்கள்? பணக்காரர்களும் பற்றைத்தானே விடவேணும், பணத்தையே முற்றிலும் விடவேண்டாமே!

இராமானுசனுடைய திவ்ய ஆக்ஞையை உலகெங்கும் பரவச் செய்வதற்காகத் தானே ஸந்யாஸாசிரமத்திலும் வடநாட்டுத் திருப்பதிகளுக்கு எழுந்தருளிப் போவதாகவும், அங்கங்கே வித்வான்களையும், அனுஷ்டாதாக்களையும், சரணாகதி சாஸ்திரத்தில் விசுவாஸமுள்ளவர்களையும் பிரசாரம் செய்வதற்காக நியமிக்கப் போவதாகவும் ஸத்சிஷ்யர்கள் சொல்லுகிறார்கள். அந்தச் சொல்லை சரண்யன்தான் ஆண்டவன் மூலம் மெய்ப்பிக்கவேணும்.

வைராக்கியத்தினால் மனதை ஜயித்தவர்களும், தயையினால் ஜயிக்கப்பட்டவர்களும், பிரபத்தியினால் ஈசுவரனை ஜயித்தவர்களுமான ஆசாரியர்களின் பிராபவத்தை யாரால் அளவிட முடியும்? அவர்களாலுமே அளவிட முடியாதே!

பூர்வாசிரமத்தில் திவ்ய ஸுக்தி திவாகரராக விளங்கிய கண்ணன் ஸ்வாமியைக் 'கண்ணனென்னுங் கருந்தெய்வம்' காத்தருளியது. உத்தராசிரமத்தில் 'ஆண்டவனுக' எழுந்தருளியிருக்கும் ஆசாரிய ஸார்வபௌமனை ஆண்டவன்தான் அநுக்ரஹிக்கவேணும். 'ஆண்டிக்கு அறுபதாண்டுக் கொண்டாட்டமென்ன?' என்று அசடுகள் கூறுவார்கள். ஆனால் அபிமானிகள் கொண்டாடுவது அடுத்ததே. நம்முடைய நன்மைக்காக அறுபதாண்டில்லை, அறுநூறாண்டில்லை, அறுபதாயிரத்தாண்டுமில்லை, கல்பகோடி காலம் கருணாநிதியான கடவுள் குடந்தைக் காவலனைக் காப்பாராக! அப்படியே ஆகட்டும்.

ஆசாரியர்கள் விஷயத்தில் அபசாரமே படக்கூடாது என்பது நமது ஸித்தாந்தம். உபசாரங்கள் என்று நினைத்து நாம் செய்கிற அபசாரங்களை புருஷோத்தமனை ஸ்ரீமந் நாராயணன் க்ஷமிப்பது போல ஸ்ரீமதாசாரியர்களும் சிறியோருடைய பெரும் பிழைகளையும் ஒன்று பார்க்காமலிருக்க வேணும், அல்லது மன்னிக்கவேணும், அல்லது மறக்கவேணும், அல்லது 'நன்று செய்தார் போலும்' என்று மறைக்கவேணும்; அதுவன்றே மறையோர்களின் முறை.

ஸ்ரீ:

பரமஹம்ஸ ப்ரபாவ பரிசயம்

(ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி, ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி)

''அத்ய மே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதாச மே நிசா'' என்று அநுஸந்தித்துக் கொண்டே இஃதெழுதத் தொடங்குகின்றேன். வர்த்தமாந ஸ்ரீமதாண்டவனுக்கு ஸமீபித்திருக்கும் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீ ஸ்வாமியின் பெருமைகளைப் பேசியு மெழுதியும் மகிழும் பாக்கியமுடையார் திரளிலே அடியேனு மொருவனுக அந் வயிக்கப் பெற்றது அரும் பெரும் பேறு. ப்ரக்ருத விஷயத்தில் பல பலர் எழுத நேருமாயினும் மற்றெல்லாரைக்காட்டிலும் அடியேனுக்கே அஸாதாரணமான உரிமையுள தென்று செருக்குடையேன்.

ஸ்ரீ ஸ்வாமியை உத்தமாச்ரமஸ்வீகாரத்திற்குப் பிறகு அறிந்தவர்கள் பலர்; சென்னைக்கு எழுந்தருளின நாள் முதலாக அறிந்தவர்கள் பலர்—என்னைக் கூடுமாயினும் இளமையே தொடங்கி ஸ்வாமியை நன்கறிந்தவர்கள் எத்தனைவர்? என்று கேட்டால் அடியேனொருவனே யென்னில் அதிசயோக்தியாகாது. திருக் குடைந்தையிலெழுந்தருளி யிருந்த ஸ்ரீமது பயவே இளையவில்லி ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி இப்போதெழுந்தருளியிருந்தால் அவரை முதல்வராக்கி அடியேனை இரண்டாமவனுக்குவேன். அந்த ஸ்வாமி சிலவாண்டுகட்கு முன்பு திருநாடலங்கரித்தமையால் மேற்குறித்த விஷயத்தில் அடியேன் அத்விதீயனுகவே நிற்கிறேன். எழுபத்தாருவது பிராயப் பூர்த்தியிலிருக்கு மடியேன் அறுபதாண்டு பூர்த்தியிலெழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீஸ்வாமியை அறியாக்காலத்திலிருந்தே யறிவேன். அடியேன் திருக் குடந்தைக்கு விடை கொண்ட பர்யாயங்கள் பலவுண்டு. ஒரு பர்யாயத்தில் ஆராவமுதன் ஸன்னிதியில் அருளிச் செயல் கைங்கர்யத்தில் ஊன்றியிருந்த ஒரு ஸ்வாமியின் யாத்ருச்சிக கடாக்ஷவீக்ஷணத்திற்கு இலக்கானேன். அந்த ஸ்வாமியின் திருநாமம் ஸ்ரீபத்ம

நாபாசாரென்பது. (அவரே ஸ்ரீ ஸ்வாமியின் திருத் தகப் பனார்.) அந்த ஸ்வாமியோடுண்டான பரிசயம் அங்குர தசையிலேயே அநாதிபோல் தோன்ற நின்றது. ப்ரதமகூ ணத்திலேயே புத்ர வாத்ஸல்யங் கொண்டார் அடியே னிடத்தில். அப்போது அடியேனுடைய வயது முப்பதுக்குள் ளிருக்கும். பாட்டராசார் தெருவில் சிலரும், ஐயங்கார் தெருவில் சிலரும் அடியேனுக்கு ஏற்கெனவே ஸுஹ்ருத்துக் களாக இருந்தாலும் அவர்களின் ஸௌஹார்தம் பகல் விளக் கும் மின்மினியுமாயிற்று. ஆராவமுதன் ஸன்னிதி வீதியில் (ஐந்து) 5. கதவிலக்கமுள்ள திருமாளிகை நெஞ்சிற் பதிந்து விட்டது. இந்தத் திருமாளிகைக்கு எத்தனே பரியாயம் விடை கொண்டிருப்பேன் தெரியுமோ? எனக்கே தெரியாது.

ஸ்ரீஸ்வாமி அப்போது வித்யார்த்தி தசையில் எழுந்தருளி யிருக்கிறார். பல நாள் வரையில் 'திருக்குடந்தை கண்ணன்' என்கிற வ்யவஹாரமும், சில வாண்டுகளாகக் கண்ணன் ஸ்வாமி யென்கிற வ்யவஹாரமுமே என்னிடத்துக் கண்ட தாகும். அர்ஜுநன் கண்ணபிரானுடைய விச்வரூபங் கண்ட பின் ''யச்ச அபஹாஸார்த்தம் அஸத்க்ருதோஸி விஹார சய்யாஸந போஜநேஷு'' என்று, தான் கண்ணனோடு விளை யாடினகாலம் உடன் சயனித் திருந்தகாலம் உடனுண்ட காலம் முதலான ஸமயங்களில் மரியாதையின்றி நடந்து கொண்ட படியை நினைப்பூட்டி ''தத் க்ஷாமயே த்வாமஹமப்ர மேயம்'' என்று அவற்றுக்கு க்ஷமை வேண்டினேன். 'விஹார சய்யாஸந போஜநேஷு' என்று அர்ஜுனன் ப்ரஸ்தாவித்த விஹாராதிகள் அடியேனுக்கும் கண்ணன் ஸ்வாமிக்கும் நேர்ந்த வளவு க்ஷ்ணூர்ஜுனர்களுக்கு நேர்ந்திரா தென்பது திண்ணம். ஸ்ரீஸ்வாமியின் திருவுள்ளத்தில் அவை இன்னமும் ஊறிக் கிடக்குமவையே. ஆனால் அர்ஜுனன் 'தத் க்ஷாமயே' என்று அவற்றுக்காக க்ஷமைவேண்டினேன். திருப் பாவையில் ஆய்ச்சியர் கண்ணனை நோக்கி ''உன்றன்னைச் சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே'' என்றார்கள். இவ் விடத்துச் சிறுபேராக விவக்ஷிதம் நாராயணநாம மென்று நம் ஆசாரியர்கள் வியாக்கியானம் செய்தருளினார்கள். ஸௌலப்ய ஸௌசீல்யங்களே வடிவெடுத்த கண்ணபிரானிடத் திலே பரத்துவம் பொலிந்த பேச்சுக்களைப் பேசினதற்குத் தான் க்ஷமை வேண்ட வேணுமென்று ஆய்ச்சிகளின் கருத்தாக இருந்தது. அதேபோலே அடியேன் ஸ்ரீஸ்வாமியென்று எழுது வதற்கு க்ஷமை வேண்டவேணுமென்று நினைக்கின்றது அந்த ரங்கம். கீர்த்தி மூர்த்தியான ஸ்ரீமத் தேரழுந்தூராண்டவன்

ஸ்ரீகாஞ்சிக்கு எழுந்தருள்வதற்கு முன்பு திருநாராயண புரத்தில் வயிரமுடி யுத்ஸவத்தில் ஸேவை ஸாதித்தருளின நாள் முதலாக (ஸ்ரீகாஞ்சியிலேயே) திருநாட்டுக் கெழுந்தருளின நாளளவும் அவ்விடத்துப் பரமக்ருபைக்குப் பாத்திரமாயிருந்தவடியேன் அந்த மஹா சார்யருடைய ஸௌலப்ய ஸௌசீல்யாதிகளை அபரிமிதமாக அநுபவிக்கப் பெற்றவன். அத்தகைய அநுபவமெல்லாம் அடியேனுக்கு இவ்வாண்டவன் பக்கல் பூர்வாச்ரமத்தில் ஆயிற்றத்தனை. ''ஆக்யாதி ஹ்ருதயம் ஹ்ருதா'' என்று ஸ்ரீராமாயணத்திலுள்ளபடி ஸ்ரீஸ்வாமி திருவுள்ளமும் அடியேனுள்ளமுமே யறிந்த பரிமாற்றங்களை என்னவென்றியம்புவேன். நூற்றுக் கணக்கான ஸந்நிவேசங்கள் நினைவுக்கு வருகின்றன. ஒன்றிரண்டே யெழுதுகிறேன். ஒரு ஸமயம் ஸ்ரீரங்கத்திலிருந்து அடியேன் திருக்குடந்தை வழியாகத் திருவாலி திருநகரிக்கு (ரைலில்) செல்லுகின்றேன். அப்போது ஸ்ரீஸ்வாமி கும்பகோணத்திலிருந்து திருநாகேச்வரம் செல்லப் புறப்பட்டு அடியேனிருந்த வண்டியிலேறினர். அப்போது ஸ்வாமியின் திருத்தகப்பனருடைய பரிசயம் அடியேனுக்கு அதிகமாயிருந்ததேயன்றி ஸ்வாமியின் பரிசயம் அவ்வளவாக இல்லாமலிருந்தது. ஆனாலும் ''கஸ்யசித் க்வசிதேவ தாராமைத்ரீ'' என்று காளிதாஸ மஹாகவி சொன்ன கணக்கிலே இருவோமுக்கும் தாரா மைத்ரி அப்ரமேயமாகவிருந்தது. அப்போது பகல் மூன்று மணி. வண்டி யேறினவுடனே எவ்வளவு தூரம் பயண மென்றேன். இதோ இறங்கப் போகிறேனென்றார். அப்போது தேவனார் விளாகத்தில் எழுந்தருளியிருந்த . . . ஸ்ரீஸ்வாமி ஸன்னிதியிலே நியாயக்ரந்தம் வாசித்துக் கொண்டிருப்பதாக ஸாதித்து, கையிலிருந்த கதாதரீயக்ரந்தத்தையும் காட்டினர். அடுத்த க்ஷணத்திலே திருநாகேச்வரம் வந்துவிட்டது; போய்வருகிறேனென்று சொல்லி இறங்கினர். கூடவே நானும் இறங்கிவிட்டேன். அன்று பாடம் வாசிக்கச் செல்லவில்லை. இருவரும் இறங்கின விடத்திலேயே யிருந்து இரவி மறையுமளவும், இரவு கழியுமளவுங்கூடப் பேசியிருந்து பிரிந்தோம். அது முதலாக நட்பு வளர்ந்தபடிகளைப் பன்னியுரைக்குங்காற் பாரதமாம். பவபூதி மஹாகவி உத்தர ராம சரிதத்தில் ''அத்வைதம் ஸுகது:க்கயோ ரநுகதம்'' என்றொரு ச்லோகரத்னத்தை ஸ்ரீசக்ரவர்த்தி திருமகனார் வார்த்தையாக வைத்து வரைந்துள்ளதை நினைப்பூட்டி நிற்கிறேன்.

ஸ்ரீஸ்வாமி திருக்குடந்தையை விட்டு சென்னைக்கு எழுந்தருள்வதற்குமுன் ஒரு ஸமயம் திருக்குடந்தை விடைகொண்டு

திருமாளிகையில் திருத் தகப்பனாரோடு வார்த்தையாடுகையில் ஸ்ரீஸ்வாமியும் கூடவேயிருக்கையில்) ''பிள்ளையாண்டானை பம்பாய் நகரத்தில் சில ஆப்தர்கள் அழைத்தபடியே யிருக்கிறார்கள்; இவனும் புறப்பட விருப்பத்தோடிருக்கிறான் . . '' என்று ஸாதிக்கிறார் திருத்தகப்பனார். அடியேன் விஜ்ஞாபிக்கிறேன்—இளமையில் அவ்வளவு தூரம் செல்ல தேவரீர் இசைந்தருளுகிறதா? சென்னையிலேயே இனிதாக வாஸங் கொள்ளலாமே யென்று. அந்த ஸமயம் ஸ்ரீஸ்வாமி ''அதே வீதியில் ஒரு திருமாளிகை வாசலில் ஸ்ரீராமாயண ப்ரவசனம் நடத்திக் கொண்டிருந்தபடியால் அதற்குப் புறப்பட்டு விட்டார். கூடச் சென்ற வடியேனும் இருந்து கேட்டு உள்ளம் பூரித்தேன். அப்போதே நினைத்தேன்—விளக்கானவிது நாளடைவில் ஸூர்யனையும் வென்று விளங்குமென்று. இதைத் திருத் தகப்பனாரிடம் அப்போதே விஜ்ஞாபித்து ''இந்த விளக்கு குடவிளக்காகாமல் குன்றிலிட்ட விளக்காம்படி சென்னைக்கே அனுப்பியருளவேணும்'' என்று பிரார்த்தித்து விடைகொண்டேன். பிறகு விரைவில் தானே சென்னையில் மாம்பலத்தில் பரோடா வீதியில் ஸந்திப்பு வாய்த்து விட்டது. அதற்குமுன் என்வாக்கில் கண்ணெனை நின்றவர் அன்று தொட்டுக் கண்ணன் ஸ்வாமியாயினர்.

ஸ்ரீஸ்வாமி சென்னைக் கெழுந்தருளின பிறகு ஸ்வல்ப காலத்திலேயே மஹாவாக்மியாயினர். முதலில் ந்யாய சிரோமணியாய், பிறகு வ்யாகரண சிரோமணியுமாகி உபய வேதாந்த ரஹஸ்யங்களையும் வரியடைவே அதிகரித்த ஸ்ரீஸ்வாமியின் வாக்மித்வம் வியக்கத்தக்கதாகுமோ? சென்னையில் மட்டுமல்லாமல் கோயில், சேலம் முதலான விடங்களிலும் ஸ்ரீஸ்வாமியின் உபந்யாஸங்களைப் பல விஷயங்களில் கேட்கப் பெற்றவனடியேன். அவ்வப்போதுகளில் அடியேன் நினைத்ததை யெழுதித் தலைக்கட்டுகுறேனிதை. நம்முடைய யஜுர் வேதத்தில் இரண்டாவது காண்டம் முதற் பிரச்நத்தில் ''ஸாரஸ்வதீம் மேஷீமாலபேத'' என்று தொடங்கியும், மூன்றுவது காண்டம் நான்காவது ப்ரச்நத்தில் ''ஸாரஸ்வதீ மாலபேத'' என்று தொடங்கியும் ஓர் இஷ்டி விதிக்கப் பட்டுள்ளது. இந்த இஷ்டிகளுக்குப் பலன் யாதென்னில்; (யஸ்ச்வரோ வாசோ வதிதோஸ் ஸந் வாசம் நவதேத்.) வாக்மியாயிருக்கத் தக்க கல்விகளைக் கற்றும் வாய்திறந்து பேச முடியாமலிருப்பவர் இந்த இஷ்டியை யநுஷ்டித்தால் தாராளமாகப் பேசவல்லவராவர் என்று ஸ்பஷ்டமாக வோதியிருத்தலால் 'வாக்மித்வமே பலன்' என்று அறியத்

தக்கது. நம் ஸ்வாமி ஒருகால் இந்த இஷ்டியை அனுஷ்டித் திருப்பரோ! என்று அவ்வப்போதுகளில் அடியேன் நினைத்த துண்டு. இப்பிறப்பிலில்லையாயினும் முற்பிறப்பில் அனுஷ் டித்திருக்கலாம். பரிஷ்கரிக்க வேண்டாமல் ஸுபரிஷ்க்ருத மான ப்ரவசனப்ரணாளியை ஸ்ரீஸ்வாமி பக்கலில் நாடு நகரமும் நன்கு கண்டிருப்பதால் இதனை அடியேன் விவரிப்பது மிகை யென்று நிற்கிறேன். வைதுஷ்ய வாக்மித்வங்களுக்கு மேற் பட விளங்கும் ராஜிக்ய ஸௌசீல்ய ஸௌஜந்யாதிகளை அடி யேன் அநுபவிக்க நேருங் காலங்களில் ஸ்ரீமத் தேரழுந்தூ ராண்டவனுடைய ஆவேசாவதார மென்றே அறுதியிட் டிருப்பேன்.

ஸ்ரீ:

ஸ்ரீ ஆண்டவனை உபாசிப்பவர் ஸ்ரீ ஆண்டவனே

(பிரஹ்மஸ்ரீ சேங்காலீபுரம் அனந்தராம தீக்ஷிதர்)

ஸ்ரீ ஆண்டவன் ஸர்வ ஜகத்பிதா; அந்த பிதாவை காண் பித்தது தாயான சுருதியே யாகும், அவனுடைய கல்யாண குணங்களை—தாயான அந்த சுருதியே கூறியிருக்கிறுள். யாரிடத்திலும் அன்பு காட்டுவது, சுலபமாக இருப்பது, பிற ருடைய துக்கங்களை போக்குவது, அண்டினவர்களைக் காப்பது, போன்ற பல குணங்கள் ஸ்ரீ ஆண்டவனிடத்தில் உள்ளவை கள். அம்மாதிரி குணங்களை இன்று ஸ்ரீ ரங்கம் பெரியாசிர மம் ஆண்டவன் ஸ்வாமிகளிடத்தில் காண்கிறோம். பூர்வ (முந்தின) ஆச்ரமத்திலேயே இவர்களுக்கு ஸ்ரீ ஆண்டவனிடத் திலுள்ள குணங்களெல்லாம் அமைந்திருந்தன, இப்பொழுது அவர்களுக்கு இருப்பு ஆச்சரியமில்லை. இவர்கள் பூர்வாசிர மத்தில், ஸ்ரீ பகவானுடைய குணங்களை உபன்யசிக்கும்போது, சொற்களை தேடி எடுக்காமல், கங்கா பிரவாஹம்போல் அ யாஸமாய் உபன்யாசம் செய்வார்கள். பல சிறந்த நூல்களி லிருந்தும் பிரமாண வாக்கியங்களை அவ்வாறே கூறுவார்கள். பழங்களின் ரஸத்தை எடுத்துக் கொடுப்பதுபோல், உபன் யாசம் அமைந்திருக்கும். முதன் முதலில் புதுக்கோட்டை திவாஸ்த இருந்தவர்களும் பண்டித குடும்பத்தைச் சேர்ந்த வர்களும் ஸ்வயம் நல்ல பண்டிதர்களுமான பிரம்ம ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார் அவர்களின் பங்களாவில் (சென்னையில்) இவர்களின் திருப்பாவை உபன்யாசத்தைக் கேட்டேன். ஸ்ரீ ஆண்டவனே நேரில் உபதேசித்தால்கூட இவ்வாறு கூறமுடி யுமா என ஆச்சரியப் பட்டேன். ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார் களோ வெனில் உபன்யாசத்தில் சிறிது தோஷமிருந்தாலும், கபட மில்லாமல் அதைச் சொல்லி (மாற்றிக் கொள்ளும்படி) கூறுவது வழக்கம். புதுக் கோட்டையில் சீஃப் ஜட்ஜியாக இருந்த இவர்களுடைய தம்பி ஸ்ரீநிவாஸாசாரியார் அவர் களும் இவ்வாறேதான் கூறுவார்கள்.

அவர்களும் ஸ்ரீ கண்ணன் ஸ்வாமிகளுடைய உபன்யாசத்தை, தான் அடிக்கடி கேட்டு அநுபவிப்பதோடு என்னையும் கேழ்க்கும்படி செய்தார்கள். பின்பு மற்றும்பல இடங்களிலும் நான் அவர்களது உபன்யாசத்தைக் கேட்டு ஆனந்தமடைந்தேன். அவர்கள் காஞ்சிக்கு விஜயம் செய்திருக்கும் சமயம் நான் அவர்களைப் போய் தரிசித்தேன். அது சமயம் கஜேந்திர மோக்ஷத்தை உபன்யசிக்கும்படியும் அவ்வாறே அவர்கள் திருநெல்வேலியில் விஜயம் செய்தபோது என்னை வாமனாவதாரத்தை உபன்யசிக்கும்படியும் கட்டளை யிட்டார்கள். எனது உபன்யாசத்தைக் கேட்டு ஆனந்தித்து ஆசீர்வதித்தார்கள். ஸாதாரணமாக அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டாலே மனச் சாந்தி ஏற்படும். இவ்வாறு அளவற்ற குணங்கள் இவர்களிடத்தில் குடிகொண்டிருப்பதற்கு காரணம் இவர்கள் ஸ்ரீ பகவானை இடைவிடாது ஆராதிப்பதேயாகும், ஸ்ரீ மஹாபாரதத்தில் ஸ்ரீ பீஷ்மர் தர்மத்தைக் கூறும்போது ஸ்ரீ கோபாலனை ஆராதிப்பவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனை ஸ்மரித்துக்கொண்டு படுக்கையில் படுப்பார்கள். படுத்து விழித்துக் கொள்ளும் போதும் ஸ்ரீ கிருஷ்ண, கிருஷ்ண என பகவன் நாமத்தைக் கூறிக்கொண்டும் ஸ்ரீ கோபாலனை தியானம் செய்து கொண்டும் எழுந்திருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனாகவே ஆகி அக்நியில் விட்ட நெய்யானது அக்னியில் சேர்ந்து விடுவதுபோல் மனதை ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் வைத்தவர்கள் முடிவில் ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் கலந்து விடுகிறார்கள் என உபதேசித்துள்ளார்.

கிருஷ்ணவிரதா: கிருஷ்ணமநுஸ் மரந்த: ராத்ரௌச
கிருஷ்ணம்புநருத்தி தாயே
தேகிருஷ்ண தேஹா: பிரவிசந்தி கிருஷ்ணம் ஆஜ்யம்
யதா மந்திரஹீநம் ஹுதாசே

ஸ்ரீ பகவானைப் பற்றி பேசும் ஸாதுக்கள், அவனைப் பற்றி பேசிப் பேசி ஸ்ரீ பகவானாகவே ஆகிவிடுவதைக் காண்கிறோம். இந்த அநுபவத்தை ஸ்ரீ ஆண்டவன் ஸ்வாமிகளை தரிசித்தவர்கள் உணறுவார்கள். தர்மங்களைப் பற்றி சுலபமாகப் பேசி விடலாம். அநுஷ்டிப்பது தான் மிகவும் சிரமம். அனுஷ்டித்தால்தான் அதன் பயனைப் பூரணமாக அடையலாம், இவர்கள் யதிதர்மத்தை முனிவர்கள் எழுதி வைத்தபடி அநுஷ்டித்து வருகின்றனர்; தர்மங்களை அநுஷ்டிக்க வேண்டுமானாலும் ஸ்ரீ பகவானுடைய அருள்தான் தேவை. ஆதலால்

தான் ஸ்ரீ நாராயண பட்ட பாதரும் கேரளத்திலுள்ள ஸ்ரீ குருவாயூர் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ குருவாயூரப்பனைப் பார்த்து ஓ குருவாயூரப்பா தங்கள் அருளை வெகு சீக்கிரத்தில் இக் கலியில் சுலபமாக அடைவதற்கு எட்டு மார்க்கங்கள் என முனிவர்கள் கூறியுள்ளனர். அவைகளாவன: (1) கங்கா ஸ்நானம், (2) பகவத் கீதையைப் படிப்பது, கேட்பது. (3) காயத்ரியை முறைப்படி ஜபிப்பது. (4) துளஸியை வைத்து வளர்த்துப் பூஜிப்பது. (5) கோபீசந்தனத்தை தரிப் பது. (6) ஸாளகிராம சிலையைப் பூஜிப்பது. (7) ஏகாதசி விரத மநுஷ்டிப்பது. (8) நாமஸங்கீர்த்தனம் செய்வது (ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம் முதலிய ஸ்தோத்திரங்களை ஜபிப் பது) என்ற இந்த எட்டு விஷயங்களிலும் எனக்குப் பற்று (ஆசை) ஏற்பட வேண்டுமென ஸ்ரீ அப்பனைப் பார்த்து வேண் டினர். ஸ்ரீ அப்பனும் அவ்வாறே செய்வதாய்த் தலையை அசைத்து அங்கீகரித்தாராம்.

''கங்கா கீதாச, காயத்ரியபிச, துளஸிகா, கோபிகா சந்தனம் தத், ஸாளகிராம பூஜா பரபுருஷ, ததெள காதசீநாமவர்ணா: ஏதான்யஷ்டாப் யத்ஞான்யயி கலி ஸமயே, த்வத் பிரஸாத. ப்ரவிருத்தயா, க்ஷிப்ரம், முக்தி பிரதாநீத்யபிது ருஷய: தேஷாமாம் ஸஜ்ஜயேதா:'' ஸ்ரீ பகவானுடைய அநுகிரஹத் தால்தான் தர்மங்களை அநுஷ்டிக்கும் பாக்யம் கிட்டும். ஆனால் அந்த பகவதநுகிரஹத்தை அடைவதற்கு, மஹான் களை அண்டித்தான் அடைய வேண்டும். இதை ஸ்ரீ நாரத முனிவரும், பக்தி ஸூத்திரத்தில் ''முக்யதஸ்து மஹத் கிருபயைவ.''

ஸ்ரீ பகவானுடைய அருளை அடைவதற்கு முக்யமான ஸாத னம் ஸாதுக்களுடைய கிருபைதான் எனக் கூறியுள்ளார். இப்படிப் பட்ட மஹான்களாகிய ஸ்ரீ ஆண்டவன் ஸ்வாமிக ளுடைய திரு மேனிக்கு 60 (அறுவது) வருஷங்களாவது அவர்களது ஆத்ம ஞானத்தின் வளர்ச்சியையே காட்டுகிறது. இப்படிப்பட்ட மஹா புருஷாள் சதாபிஷேகம் முதலிய வைப வங்களை யெல்லாம் அநுபவிக்கும்படி ஸ்ரீ ரங்கநாதன் அருள் புரிய வேண்டும். இப்படிப்பட்ட மஹான்கள் உலகில் ஸஞ் சரிப்பது ஸ்ரீ பகவானே ஸஞ்சரிப்பது போலாகும். கருணை யுள்ள ஆசாரியர்களின் ஸ்வபாவமே பக்தர்கள் இருக்குமிட மெல்லாம் சென்று அவர்களை அநுகிரஹிப்பதுதான். பக்தி யற்றவர்கள்கூட இவர்களைத் தரிசிப்பார்களேயானால்.

அவர்களது பாபங்க ளெல்லாம் விலகி பக்தி யுள்ளவர்களாக. ஆகி விடுவார்கள். அப்படிப் பட்டவர்களே. அநுகிரஹிப் பதற்காகத்தான் ஸாதுக்களுடைய ஸஞ்சாரமென ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

அநுகிரஹா யேஹ சரந்தி நூநம் பூதாநிபவ்யாநிஜநார் தனஸ்ய

ஸ்ரீ ஆண்டவன் ஸ்வாமிகளுடையவும் ஸ்ரீ பகவானுடைய வும் அநுக்ரஹம் நம் யாவருக்கும் பரிபூர்ணமாக உண்டாகும் படி ஸ்ரீ பகவானே வேண்டுகிறேன்.

ஸ்ரீ:

ஆசார்ய குணபூர்த்தி

(ஸ்ரீ உப. வே. கே. விஜயராகவாசார்யர் ஸ்வாமி, காஞ்சி)

''பெரியோர் பேசிலும், பேதையர் பேசிலும் தன்குணங் களுக்குரிய சொல்லென்று முடையவன்'' என்று அமுதனர் யதிவரனர் விஷயத்தில் பேசியபடி ஞாநாதிகர்களும் அடி யேனைப் போன்ற சிறிய ஞானத்தவர்களும் தங்கள் தங்கள் யோக்யதைக்குத் தகுந்தபடி துதிக்கத் தகுந்த குணங்களை யுடைய ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் என்கிற ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகனின் ஷஷ்ட்யப்த பூர்த்தி மலரில் ஸ்ரீ ஸ்வாமியைப் பற்றி யத்கிஞ்சித் விஞ்ஞாபித்து அடியேனை தந்யனாக்கிக் கொள்கிறேன்.

வ்யங்ய ப்ரதாந காவ்யமான ஸ்ரீமத் ராமாயணத்தில் சுந்தர காண்டத்தில் பிராட்டிக்கு சுபஸூசகமான சகுனத்தை ராக்ஷஸி களுக்கு த்ரிஜடை சொல்லும்

பக்ஷீ சாகா நிலய: ப்ரவிருஷ்ட:
புந: புந: சோத்தம ஸாந்த்வ வாதீ
ஸுஸ்வாகதாம் வாசமுதீரயாந:
புந: புந: சோதயதீவ ஹ்ருஷ்ட: ||

என்கிற ச்லோகத்தில் வ்யங்யமரியாதையாக ஆசார்ய லக்ஷ ணம் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் சொல்லப்பட்டிருக் கும் ஆசார்ய லக்ஷணங்களை நம் ஆண்டவனிடத்தில் ப்ரத்யக்ஷ மாகக் காணலாம். சுந்தர காண்டத்திலில் அநாதியாக பக வத் ஸம்பந்தமுடைய சேதனுடைய உஜ்ஜீவனத்தில் முயற்சி பண்ணுகிற ஆசார்யனுடைய க்ருத்யமானது வ்யங்க்யமாக (மறைமுகமாக) சொல்லப்படுகிறது. அதன்படி லங்கை யென்பது சரீரம். ஏகாக்ஷீ முதலிய ராக்ஷஸிகள் இந்திரியங் கள்; ராவண கும்பகர்ணர்கள் அஹங்கார மமகாரங்கள்; இந்திரஜித் முதலானவர்கள் காமக்ரோதாதிகள்; இப்படிப் பட்ட சரீரத்தில் (லங்கையில்) வைக்கப்பட்ட ஸீதை ஜீவன். அந்த ஜீவனுக்கு பகவத் ஞானத்தை உபதேசிக்கும் ஆசார்யன்

ஹநுமான் இந்த ஆசார்யனுடைய லக்ஷணம் இந்தலோச் கத்தில் ஸூசிப்பிக்கப்படுகிறது.

இந்த ச்லோகத்தில் பக்ஷியானது (கருடன்) தளிர், புஷ்பங் கள், பலங்கள் நிறைந்த கிளைகளில் இருந்துகொண்டு பழங் களைச் சாப்பிட்டு ஸந்துஷ்டமாய் அடிக்கடி பிராட்டியைப் பார்த்து ''ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஏள்ளப் போகிறூர். நீ ஏன் ஸ்நாந அலங்காரங்கள் இல்லாம லிருக்கிறூய்'' என்று சப்திப்பதுபோல் இருக்கிறது என்று வெளிப்படையாக அர்த் தம் ஏற்படுகிறது.

அந்த ச்லோகத்தின் வ்யங்க்யமான அர்த்தத்தை பார்க்கப் புக்கால் பக்ஷி என்கிற பதம் பரமகதிக்கு ஸாதநமான ஞாந கர்மங்களை உடைய ஆசார்யனைச் சொல்லுகிறது. ஆசார்ய குணபூர்த்தி நம் ஆண்டவனிடத்தில் பரிபூர்ணமாக அனுப விக்கிறோம்.

சாகாநிலய: என்கிற பதமானது உபநிஷத்துக்களிலும் அத னுடைய அர்த்தங்களிலும் நிஷ்டையுடையவரைச் சொல்லு கிறது.

பூர்வாச்ரமத்தில் புராணாதி ப்ரவசநங்களைக் கேட்டு அனு பவித்த நகரவாசிகளான பல பக்தர்கள் ஸ்ரீ ஸ்வாமி துரீயாச் ரமத்தை ஸ்வீகரித்தால், புராணத்யனுபவங்களை இழக்க நேரி டுமே என்று எண்ணி துரீயாச்ரம ஸ்வீகாரத்தை நிஷேதித்த படி.

ப்ரஹ்ருஷ்ட: பகவத் விஷயாதி காலக்ஷேபங்கள் ஸாதிக் கும்போது ஆனந்தக் கண்ணீர் வடித்து மெய்மறந்து நிற்கும் நிலையை ஸேவித்தவர் பலர். எப்போதும் கூடவே இருந்து கைங்கர்யம் பண்ணிக்கொண்டு அநுபவிக்கும் தந்யர்கள் பலர். அநுபவிக்கப் போகும் பாக்யமுள்ளவர்களும் பல ஸஹஸ்ர முள்ளனர்.

சிஷ்யர்களின் பொருட்டு ப்ரமாத்ம ஜீவாத்ம ஸ்வரூபங்களை மனதில் படும்படி அடிக்கடி கதைகளைச் சொல்லி உபபாதநம் பண்ணுவது மிகவும் விலக்ஷணம். இதற்கு உதாஹரணமாக ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்த கதைகளில் ஒன்றை அனுபவிப்போம்.

ஆசார்யனுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தின் மஹிமையை ஸாதிக் கும்போது மேற்கண்ட கதையை ஸாதித்தபடி ஸாந்தீபிநி

SRIRANGAM SRIMAD ANDAVAN ASHRAMAM

யினிடத்தில் ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மா வித்யார்த்திகளோடு தானும் ஒருவித்யார்த்தியாக அக்ஷராப்யாஸம் செய்து கொண்டிருக்கும்போது ஆசார்யன் எல்லோருக்கும் அக்ஷராப்யாஸம் செய்வித்து அந்த அக்ஷரங்களைப் பலகையில் எழுதிக் காண்பிக்கும்படி நியமித்தார். எல்லோரும் அப்படியே எழுதிக் காண்பித்தார்கள். இந்த எழுத்துக்களை அழித்து வாருங்கள். வேறே எழுதித்தருகிறேன் என்று நியமிக்க, க்ருஷ்ணன் தவிர மற்ற பிள்ளைகள் அழித்துக்கொண்டு வந்தார்கள். க்ருஷ்ணன் அழிக்காமலேயே பலகையைக் கொடுத்தார். க்ருஷ்ணா! இதை ஏன் அழிக்கவில்லை என்று ஆசார்யன் கேட்டபோது நான் எழுதின எழுத்தை என்னால் அழிக்கமுடியவில்லையே என்னூர், க்ருஷ்ணன். ஆசார்யன் தன்னெதிரில் அவைகளை அழிக்கச் சொன்னபோது க்ருஷ்ணன் அவைகளை அழித்தும் அவைகள் அழியவில்லை. பிறகு பலராமன் முதலிய இதர பிள்ளைகளை அழிக்கச் சொல்ல அவர்களாலும் முடியவில்லை. பிறகு ஆசார்யன் தானே பலகையை வாங்கி யமுனை தீர்த்தத்தினால் அழித்துப் பார்த்தும் அழியவில்லை. இதைக்கண்டு ஆசார்யன் மிகவும் ஆச்சர்யப்பட்டு க்ருஷ்ணனையே இதனுடைய மர்மத்தைச் சொல்லும்படி நியமித்தார். அதற்கு க்ருஷ்ணன் ''அடியேன் எழுதின எழுத்தை ஒருவராலும் அழிக்க முடியாதே. அப்படி அழிய வேண்டுமானால் ஒரு வழிதான் உண்டு'' என்று விஞ்ஞாபித்து ஆசார்யன் திருவடிகளிலிருந்து பெருகிய ஸ்ரீபாத தீர்த்தத்தின் ஒரு சிறு துளியினால் தான் எழுதிய அக்ஷரங்களை அழித்தார். அவைகள் உடனே அழிந்து விட்டன. இந்தச் சிறுகதையினால் ஆசார்யனுடைய ஸ்ரீ பாத தீர்த்தத்தின் மஹிமையைப் பாமரர்களும் அறியும்படி உபபாதித்தபடி 'ஸுஸ்வாகதாம் வாசமுதீரயா ந:' ஸம்ப்ரதாய விச்சேதமில்லாமல் ஆசார்ய பரம்பரையில் தமக்குக் கிடைத்த அர்த்த விசேஷங்களையும் மந்த்ர விசேஷங்களையும் பரம க்ருபையால் ஆங்காங்கு ஏள்ளி, சிஷ்யர்களுக்கு உபதேசித்து உஜ்ஜீவிக்கும்படி செய்வது எல்லோராலும் போற்றத்தகுந்தது. காலக்ஷேபம் ஸாதிக்கும்போதும் உபந்யஸிக்கும்போதும் தம்முடைய ஆசார்ய பக்தி தோன்றும்படியாக ''ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவன் இப்படி அதிவிலக்ஷணமாக ஸாதித்தாகும்'' என்று அடிக்கடி வித்வான்களெல்லாரும் சிரஸ்கம்பம் பண்ணும்படி ஸாதித்தாகும்.

'புந: புந: சோதயதீவ ஹ்ருஷ்ட:'' தான் உபதேசித்த அர்த்த விசேஷங்களை சிஷ்யர்களுக்கு அநுஷ்டானபர்யந்தமாக்கி ஸந்துஷ்டராய் ஏள்ளியிருப்பர் ஸ்ரீ மதாண்டவன்.

அநுஷ்டான பர்யந்தமாகச் செய்யாவிடில் உபதேசோ நிரர்த்தக: என்று ஆகிவிடுமல்லவா? இதைத்தான் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் 'சாஸ்திதாரம்' என்று ஆசார்யலக்ஷணம் சொல்லுமிடத்தில் ஸாதித்தார்.

ஸ்ரீமதாண்டவன் பூர்வாச்ரமத்தில் ஸகலவித ஸந்தான ஸம்பத்துக்களுடன் கூடியவராயிருந்தும் ஈஷணத்ரய விநிர்முக்தராய் துரீயாச்ரம ஸ்வீகாரம் செய்தருளினது தேசிகன் ஸாதித்த ''ஜித விஷயகண.'' என்கிற ஆசார்ய லக்ஷணபூர்த்திதியை உலகமறிய ப்ரசித்தமாக்குகிறது.

பூர்வாச்ரமத்தில் சீக்ரகமன ஸாதனயாஞ்ஞா ரோஹணம் (மோட்டார்) தவிர வேறு அறியாத ஸ்ரீமதாண்டவன் திருவடிகள் துரீயா ச்ரமஸ்வீகாரமானவுடன் த்ரிவிக்ரமசரணம் புஜத்வய ஸதிருசமாக ஆகிவிட்ட ஆச்சர்யம் வசாமகோசரம்.

ஸ்ரீ பெரியாண்டவனுடைய ஸ்வரூப குணாதிகள் நேரில் காணலாம்படி ஏள்ளியிருந்த தெம்பரை ஆண்டவன் ஸ்ரீமத் ரங்கநாத மஹா தேசிகனுடைய திருவடி ஸம்பந்தம் தங்கள் கிராமாதிகளுக்குக் கிடைக்கவில்லையே என்று சோகித்த சிஷ்யர்களுடைய சோகம்தீர ஆங்காங்கு எள்ளி அனுக்ரஹித்து சிஷ்யர்களை பரமானந்த பரிதர்களாகச் செய்த பரம க்ருபையை என்னவென்று சொல்லுவது.

ஸ்ரீ தேரழந்தூர் ஆண்டவன் வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகன் திருவடிவாரத்தில் பகவத் விஷயாதிகள் ஸேவிக்கவும் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோற்சவத்தை அனுபவிக்கவும் (ஷஷ்டியப்த பூர்த்திக்கு முன்னடியாகவே பரமபதித்துவிட்டபடியால்) ப்ராப்த மில்லாத குறைதீர நம் தேரழந்தூர் ஆண்டவனின் அபராவதாரமான திருக்குடந்தை ஆண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகனுடைய திருவடிவாரத்தில் பகவத் விஷயாதிகள் ஸேவித்தும் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோற்சவத்தை அனுபவித்தும் க்ருதார்த்தர்களாக ஆகும் படியான பாக்யம் நேர்ந்ததே என்று சிஷ்யகோடிகள் மிக்க சந்தோஷத்துடன் இருக்கிறார்கள்.

பாதுகாபக்திமானான ஸ்ரீமதாண்டவன் ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோற்சவம் ஸ்ரீரங்கம் பாதுகாச்ரமத்தில் 'புஷ்யேஜாதஸ்து பரத:' என்று புஷ்ய நக்ஷத்திரத்தில் அவதரித்தவராயும்

பாதுகா பக்திமான்களுக்கு ப்ரதமோதாஹரணராயும் உள்ள ஸ்ரீ பரதாழ்வானுடைய திருநக்ஷத்திரமான சித்திரை புஷ்யத்தில் நடப்பதும் ஸ்ரீ ரங்கநாத பாதுகையின் திருவுள்ளம்.

ஆசார்ய லக்ஷணபூர்த்தியையுடைய திருக்குடந்தை ஆண்டவன் லோகோபகாரார்த்தமாக, அவதரிப்பித்த ஸ்ரீதெம்பிறை ஆண்டவன் ஸ்ரீரங்கநாத மஹா தேசிகன் திருவடிகளில் நாம் எல்லோரும் தலைசாய்த்து க்ருதஞ்ஞர்களாக இருக்கப் ப்ராப்தம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தக மஹா தேசிகாய நம:

ஸ்வாமியுடன் அடியேன் பெற்ற அநுபவங்கள்

(ஒப்பிலியப்பன் ஸந்நிதி ஸ்ரீ உப. வே.
வ. ந. சேஷாத்ரியாசார்யர் ஸ்வாமி, அண்ணாமலை யூனிவர்ஸிடி)

பரம ஹம்ஸைத்யாதி வர்த்தமான ஸ்ரீமத் ஆண்டவன் அறுபதாண்டு நிறைவு நினைவுமலராக வெளிவருகின்ற இந்த மலரில் இச்சிறிய கட்டுரையின் மூலம் அடியேனுடைய சில அநுபவங்களைக் கூறி வானிலிருந்து விழுந்த சிறு மழைத்துளி கடலில் வீழ்ந்து கடலெனப் பெயர் பெறுவதுபோல் (வர்ஷ பிந்தோ ரிவாப்தள ஸம்பந்தாத் ஸ்வாத்மலாப:) மகிழ விரும் புகிறேன்.

வர்த்தமான ஸ்ரீமத் ஆண்டவன் பூர்வாச்ரமத்தில் அடியே னுடைய பெரிய தகப்பனார் குமாரர் ஸ்ரீ உப. சடகோபா சார்ய ஸ்வாமியிடம் வித்யாக்ரஹணம் செய்து கொண்டிருந்த காலத்தில் நம் ஸ்வாமியின் பரிசயம் கிடைக்கப் பெற்றேன். பின் பரம ஹம்ஸைத்யாதி ஸ்ரீமத் தேவநார்விளாகம் அழகிய சிங்கரின் பூர்வாச்ரம காலத்தில் தினந்தோறும் திருக்குடந்தை யிலிருந்து தேவநார்விளாகத்துக்கு எழுந்தருளி ந்யாய க்ரந் தங்கள் அதிகரித்துக் கொண்டிருந்த காலத்தில் அந்த பரிசயம் வளர்ந்து ஸௌஹார்தமாகப் பரிணமித்தது. ஒவ்வொரு நாளும் ஒப்பிலியப்பன் ஸந்நிதியில் அடியேனுடைய க்ருஹத் துக்கு எழுந்தருளி ஸல்லாபம் செய்துவிட்டு எழுந்தருள்வது வழக்கமாயிற்று. அப்போது அடியேன் திருவையாறு கலா சாலையில் வாசித்துக் கொண்டிருந்தே னுகையால் ஒய்வு நாள் களில் ஏற்படும் ஸமாகமம் அந்தந்த காலத்தில் நம் ஸ்வாமி வாசித்துக் கொண்டிருந்த ந்யாய க்ரந்தங்களில் விசாரங்கள் செய்ய உடலாகி பரம போக்யமாகவும் ஸ்மர்யமாண மதுர மாகவும் அமையும். சதுர் தசலக்ஷணீயில் முடிவிலுள்ள கூட கடித-கூடா கடித லக்ஷணங்கள் வ்யதிகரண தர்மாவச் சிந்நா பாவ கண்டநம், பக்ஷதையில் ஸார்வபௌம பக்ஷதை இத்யாதி

மிகக் கடிந பாகங்களில் ''போதயந்த: பரஸ்பரம்'' என்ற ரீதியில் கதாதர பட்டாசார்யரின் விஷய நிரூபண வைகரீயை முற்றிலும் அநுபவிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அடியேன் கலாசாலையில் வாசித்த ந்யாய க்ரந்தங்களை 'பலரிடம் கேட்க வேண்டும், பல முறையில் கேட்க வேண்டும்' (பகுப்ய: ச்ரோதவ்யம், பஹுதா ச்ரோதவ்யம்) என்ற மூதுரையின்படி அடியேனுடைய திருத்தகப்பனாரும் ஆசார்யருமான ஸ்ரீமத்-நவநீதம் ஸ்வாமியிடமும், பரமஹம்ஸத்யாதி-ஸ்ரீமத்-தேவநாராயணம் அழகியசிங்கரிடமும் மறுமுறை கேட்டுத் தெளிவு பெறுவது வழக்கம். அந்த ஸமயங்களில், ஸ்ரீமத்-அழகியசிங்கர், நம் ஸ்வாமியின் விஷய க்ரஹண சாதுரீயையும் கேட்டறிந்த விஷயங்களில் வ்யவஹார கௌசலத்தையும் பாராட்டி அடிக்கடி ஸாதிப்பதுண்டு.

பலர் ந்யாய சாஸ்த்ரத்தைக் கற்கலாம். அச் சாஸ்திரத்தில் நூல்களையும் இயற்றலாம். ஆனால் அச்சாஸ்திரத்தின் உள்ளுறை மருமங்களை உணர ஆற்றல் பெற்ற அறிஞர் மிகச் சிலரே. ரகுநாத சிரோமணி கூறியிருப்பதுபோல் ந்யாய சாஸ்த்ரத்தில் ப்ரவேசமும் விசாரங்களின் மருமங்களை யுணர்வதும் உணர்ந்த பாகத்தைப் பிறருக்கு உணர்த்த வ்யவஹார சக்தியும் ஒருங்கே அமைந்தவர் மிகச் சிலரே. இவை மற்ற சாஸ்த்ராப்யாஸத்துக்கும் ஸாதாரணமே யாயினும் ந்யாய சாஸ்த்ர விஷயத்தில் வ்யவஹார கௌசலம் மிக அவச்யமானது. இந்த வ்யவஹார சக்தியைப் பெற்றவர் செய்யும் மற்ற சாஸ்த்ர வ்யவஹாரங்களும் புராண ப்ரவசநம், உபந்யாஸம் முதலியனவும் மிகச் சிறப்புடன் அமைவதைக் காணலாம். நம் ஸ்வாமி இளமையில் ந்யாய சாஸ்த்ரத்தை அதிகரித்து அதில் வ்யவஹார சக்தியையும் பெற்றிருந்தது பிற்காலத்தில் இப்போது நாம் அநுபவிக்கும் ஸ்வாமியின் தேனிலுமினிய சொற் பொழிவுகளுக்கு மூலகாரணமாகும் என்பது அடியேனுடைய அபிப்ராயம்.

சுமார் 30 வருஷங்களுக்கு முன் நம் ஸ்வாமி ப்ரவசநத்திற்காகச் சென்னைக்கு எழுந்தருளிய ஸமயம். நவராத்திரி காலத்தில் புதுக் கோட்டையில் ஸரஸ்வதி பூஜையன்று திவானுடைய மாளிகையில் கூடும் வித்வத் ஸதஸ் அவ்வருஷம் சீஃப் கோர்ட்டு கட்டிடத்தில் கூடியது. அப்போதிருந்த திவான் மகம்மதியராகையால் அவர் தலைமையில் நடந்த ஸபையில் வழக்கமாக நடைபெறும் வேதாந்த விஷயமான விசாரத்தைத் தவிர்த்து ஸத்ய வசநாதிரூப ஸாமாந்ய

தர்மங்களைப் பற்றிய விசாரமே நடைபெற்றது. ஒரு லௌகிக ப்ரமுகர் எழுந்து ஒரு குறளைக் கூறி அதில் தமக்குள்ள ஸம்சயத்தை விளக்கி அதற்குப் பரிஹாரத்தை அங்கு கூடியுள்ள பண்டிதர்கள் தெளிய வைக்குமாறு அபேக்ஷித்தார். பல பண்டிதர்கள் பலவாறு ஸமாதாநம் கூறினர்கள். முடிவில் நம் ஸ்வாமி எழுந்து தம்முடைய திருவுள்ளத்தை அமைதி, தெளிவு, அழகு முதலிய சிறப்புக்கள் செறிய உபந்யஸித்தது அங்கு கூடியிருந்த ரஸிகர்கள் அனைவரையும் தலை குலுக்கச் செய்தது. ஸதஸ் முடிந்து வெளியே வருகையில் நம் ஸ்வாமியிடம் அடியேனுடைய அபிநந்தநத்தைத் தெரிவித்தேன்.

நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் உபய வேதாந்தங்களிலும் சதுரச்ரமான பாண்டித்யத்தைப் பெற்று ஆழ்வார்களுடைய அருளிச் செயலில் ஈடுபாட்டுடன் அவற்றை வாசோவிதேயமாகக் கொள்ளும் மஹாபாக்யத்தைப் பெற்றுள்ள மஹான்கள் ஸமீபகாலத்தில் மிகக் குறைந்து விட்டார்கள். ஆழ்வார்களின் அமுதத் திருவாயீரத் தமிழினிசை மனத்திலூறப் பெற்றுள் எம்பெருமானை அநுபவிக்கும் ரீதியே பரமவிலக்ஷணமாக இருக்கு மென்பது அநுபவ ஸித்தமான உண்மை, தவமும் தவமுடையார்க்காகும் என்ற நியாயமாக அருளிச் செயலை மனத்திலே தரிக்கும் பாக்யமும் எம்பெருமானுடைய ஜாயமாந கடாக்ஷம் போல் கருவிலே ஆழ்வாருடைய திருவருளைப் பெற்றவருக்கே கிடைக்கும் இந்த மஹாபாக்யத்தைப் பூரணமாகப் பெற்றுள்ள நம் ஸ்வாமி இளமையிலேயே அருளிச்செயல் கோஷ்டிகளில் அந்வயித்து நிர்வஹிக்கும் ப்ரகாரத்தைக் கண்டு மகிழ்ந்து அடியேனுடைய ஆசார்யன் நம் ஸ்வாமியிடம் பரம ப்ரீதியுடன் சிறுமாமனிசர் என்ற ப்ரதி பத்தியுடன் ஸல்லாபம் செய்வதை அடியேன் பலமுறை கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

ஸாமாந்ய சாஸ்த்ரஜ்ஞான பரிகர்மிதமான உபய வேதாந்த வைதுஷ்யம் அந்யாத்ருசமான உபந்யாஸ சக்தியுடன் இணைவது பொன்மலர் மணம் பெறுவது போலாகும். நாஸ்திக்யம் மிகுந்து மநோ வாக் காயங்கள் தூய்மையின்றியிருக்கும் இந்நாளில் ஸத்விஷயங்களைக் கேட்பதிலும் தர்மகார்யங்களைச் செய்வதிலும் ருசி உண்டாக்குவதை விடச் சிறந்த பணி வேறென்றில்லை. பூர்வாச்ரமத்திலேயே இப்பணியில் இறங்கி ஆயிரக் கணக்கில் உபந்யாஸங்களைச் செய்து நாவீறு பெற்ற நம் ஸ்வாமி உத்தமாச்ரமத்திலும் தம்முடைய

ஆச்ரம தர்மங்களுக்கு வழுவின்றி நாடு முழுவதும் யாத்திரை செய்து அம்ருத தாரையான உபந்யாஸங்களால் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்குச் செய்துவரும் மஹா கைங்கர்யத்துக்கு ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹம் நன்றியறிவுடனிருக்கப் ப்ராப்தம். சென்ற ஆண்டு திருச் சித்திர கூடத் தெம்பெருமானே மங்களாசாஸநம் செய்ய எழுந்தருளி யிருந்தபோது செய்த உபந்யாஸங்களைக் கேட்டு மனமுருகிய பல மதாந்தரஸ்த ப்ரமுகர்கள் நம் ஸ்வாமியை மறுபடி இங்கெழுந்தருளச்செய்யப் பெருமுயற்சிகள் செய்தது நம் ஸ்வாமியின் சிறந்த பணிக்குச் சான்றாகும்.

இந்த மஹா கைங்கர்யத்தைத் தொடர்ந்து செய்தருள நம் ஸ்வாமிக்குப் பூர்ணமான ஆரோக்யத்தைக் கொடுத்து தமிழ் நாட்டில் போல பாரத தேசத்தின் மற்ற பகுதிகளிலும் ப்ரவசநங்களால் பலரும் உஜ்ஜீவிக்கும்படி செய்து இந்த ஷஷ்ட்யப்த பூர்த்தி மஹோத்ஸவத்தைப் போல் பன்மடங்கு சிறப்பாக சதாபிஷேக மஹோத்ஸவத்தையும் நடத்திவைக்க அருள்புரியமாறு விரிதிரை நீர்விண்ணகரம் மருவி நின்று தண்குடந்தைக் கிடந்தமாலே வேண்டுவோமாக.

ஸ்ரீ:

ஆச்ரமோயம் விபாதி

(ஸ்ரீ உப. வே. ஆர். வி. சேஷாத்ரி,
அட்வகேட், சென்னை)

உபயவிபூதி வ்யாவ்ருத்தமா யிருப்பதும், ஸகல ஆழ்வார் களாலும் ஆசாரியர்களாலும் பெரிதும் போற்றப்பட்டுள்ள தும், திவ்ய க்ஷேத்ரங்களுள் தலை சிறந்ததுமான திருவரங்கப் பெருநகர் அரங்கம் என்று பெயர் பெற்ற காரணத்தைக் கீழ்க் கண்டபடி சான்றோர் பகர்வர்:

க்ஷீராப்தேர்மண்டலாத்பாஜ்ஞே: யோகிநாம் ஹ்ருதயாதபி |
ரதிம் கதோ ஹ்யிரிர்யத்ர தத்ரங்கம் முனயோ விது: ||

[திருப்பாற்கடல், சூரியமண்டலம், யோகிகளின் மனது இவற் றைக் காட்டிலும் இத்தலத்தின்மீது பகவான் அதிகப்பற்று வைத்தது பற்றி, இந் நகரை ரங்கம் என்று முனிவர்கள் அறி கின்றனர்.]

இவ் விலக்ஷணமான நிருக்தி ஒன்றே போதும் இந் நகரின் பெருமையை விளக்க. அழகிய மணவாளனின் அதுல, அவிச் சின்ன சம்பந்தம் பெற்ற இத் திவ்ய க்ஷேத்ரத்தின்கண் பல ஜீயர்களின் மடங்களும், அநேகம் ஆசார்ய புருஷர்களின் திரு மாளிகைகளும் தொன்று தொட்டு இதற்குப் பெருமையை விளைவித்து வருகின்றன. இவற்றுள் பூர்வாசார்யர்களுகந்த வடதிருக்காவேரியின் கரையிலுள்ளதும், எழில் மிகுந்ததும், சிறந்த ஆசார்ய பீடங்களுளொன்றுகத் திகழ்வதுமான பெரி யாச்ரமம் ஒன்று. சந்நியாசிகளின் இருப்பிடமாயிருத்தலால் இவ்விடத்தை மடம் என்று கூற வேண்டியிருப்பினும், ஏனைய மடங்களைக் காட்டிலும் இயற்கையெழில் மிஞ்சிய இதை அவற்றிலிருந்து வ்யாவர்த்தித்துக் காட்ட முன்னோர் 'ஆச்ரமம்' என்னும் அந்வர்த்தமான பதத்தை உபயோகித்து இதற்குப் பெயர் வைத்தனர் போலும்.

''வண்டின முரலும்சோலை மயிலினமாலும் சோலை
கொண்டல் மீதணவும்சோலை குயிலினம் கூவும்சோலை
அண்டர் கோனமரும்சோலை அணிதிருவரங்கம்''

என்று தொண்டரடிப்பொடியாழ்வாரும்,

கதலவகுள ஜம்பூபூகமாகந்தகண்ட த்வயஸஸரஸ நீரா
மந்தரா ஸ யகந்யாம் |
ப்ரபல ஜலபிபாஸா லம்பமாநாம்புதெளக ப்ரமகரதரு
ப்ருந்தம் வந்த்யதாமந்த ரீபம் ||

[வாழை, மகிழ், நாவல், கமுகு, தேன்மா முதலிய மரங்களின் கழுத்தளவு வெள்ளமிட்டிருக்கும் திருக் காவேரியினிடையே 'அளவற்ற தாகத்திலுல் தண்ணீர் குடிக்கவந்து கழுத்தளவும் தண்ணீர் குடித்து நகரமாட்டாமல் தொங்குகின்ற மேகங்களோ இவை' என்று ப்ரமிப்பதற்குரிய வ்ருக்ஷஸமூஹங்களையுடைத்தான தீவை வணங்குமின்] என்றும்,

ஸ்புரித சபர தீர்யந் நாரிகேளீ குளுச்ப்ரஸ்ருமரமது
குல்யா வர்த்திதா நோகஹாநி |
ரதிமவிரதி ரங்காராம ரம்ய ஸ்தலா நிக்ரமுக பநஸ
மோசாமேசகாநி க்ரியாஸு: ||

[காவேரியிலுள்ள பெருமீன்கள் துள்ளியெழும்பித் தென்னங் குலைகளின் மேற்பாய, அதனால் காய்கள் உடைந்து இளநீர் வாய்க்காலாக ஓட, அதனால் செழித்து வளர்கின்ற பாக்கு, பலா, வாழை முதலிய மரங்களின் அடர்த்தியால் கறுத்திருக்கும் ஸ்ரீ ரங்கச் சோலைகள் நம்மை மகிழ்விக்கக்கடவன] என்றும் பட்டரும் அருளிச் செய்துள்ள வருணனைகளுக்கு இலக்கியமாக விளங்குகிறது இப் பெரியாச்ரமம்.

இவ் வாச்ரமத்தின் புறவெழிலையும் விஞ்சியது இதன் அகவெழில், அதாவது இங்கு பீடாதிபதிகளாக விளங்கியவர்களும், ஞானபக்தி வைராக்யங்கள் நிரம்பப் பெற்றவர்களுமான தேரழுந்தூராண்டவன், ஆக்கூராண்டவன், தெம்பரை யாண்டவன், வர்த்தமான திருக்குடந்தை யாண்டவன் ஆகிய இம் மஹா புருஷர்களால் இதன் அகவெழில் உயர்ந்தது. இப் பெரியார்களைப் பற்றிச் சிந்திக்கும் போதே ''சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டரொன்றினர் அற்றபற்றர் சுற்றிவாழும் மந்தணீரரங்கமே'' என்ற திருச்சந்த விருத்தப் பாசுரம்தான் நினைவுக்கு வருகிறது. இவ்வாறு

ஸ்தல ராமணீயகம், சரித்ர ப்ராசுர்யம், பீடப்ராசஸ்த்யம் முதலியவை ஒருங்கே அமையப்பெற்ற இவ்வாசாரிய பீடத்தைத் தற்போது அலங்கரித்துவரும் திருக்குடந்தை யாண்டவனின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோற்சவம் கொண்டாடப்படும் இத் தருணத்தில் அம்மஹானுபாவரின் குணநுபவஞ் செய்து ஸத்தை பெறலா மென் றெண்ணி இவ் வியாசம் எழுதப்படுகிறது.

ஸ்வாமி தேசிகன் ஸுபாஷிதநீவீயில் மஹாபுருஷ லக்ஷணம் கூறுகிறார்:

"அநந்தக்யாதிஸம்பன்ன: சுத்தஸத்வ: ஸதீபல: |
தத்தேபஹ்ன முகம்போகம் ச்ருதித்ருஷ்டி ஸ்திராசய: ||

[அபரிமிதமான கீர்த்தியை யுடையவரும், சுத்த ஸத்வகுணமுடையவரும், சிறந்த அறிவுபலத்தோடு கூடியவரும், பக்தி நிரம்பப் பெற்றவரும், மறைப் பொருளிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பவரும், உறுதியான நம்பிக்கை படைத்தவருமான மஹாபுருஷர் பலவிதமான சுகங்களை யடைகிறார்]. மேலே கூறிய மஹா புருஷ லக்ஷணத்திற்கு இலக்கியம் நம் வர்த்தமான ஆண்டவன் ஸ்வாமிதான். பூர்வாச்ரமத்திலிருந்தே ஸ்வாமியின் கீர்த்தி அநிதர ஸாதாரணமானது. ஸத்வ குணத்திற்கு ஸ்வாமியே உறைவிடம், ரஜஸ்தமோ குணங்கள் ஸ்வாமி இருக்கும் திக்கிலேயே ப்ரஸரிக்கமாட்டா. ஸ்வாமியின் ஞான பலமோ வாசாமகோசரம். ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகள் ஸ்வாமியின் திருவாக்கிலிருந்து வரும் போது மிகவும் ஸுரபிதமாயிருக்கும். அருளிச் செயலில் ஸ்வாமிக்குள்ள ஊற்றமும், அவற்றை ஸ்வாமி ப்ரவசனம் செய்யும் வைகரியும் அடியேன் போன்றவர்களால் எடுத்துரைக்கற் பாலதன்று. 'ச்ருதித்ருஷ்டிஸ்திராசய:' என்கிற தேசிகன் திருவாக்கை யநுவதித்துத்தான் விளக்கவேண்டும். எவரையும் மகிழ்விக்கக் கூடியதும், ஒருவரையும் பாதிக்காததுமான ஸ்வாமியின் மிருது ஹாஸ்யம் அதிமாநுஷமான தென்னில் மிகையாகாது. ஸ்வாமியின் சித்த வைசால்யம் அநந்யஸாமான்யமானது.

ஸ்வாமியின் விரக்தி அதிவிலக்ஷணமானது. இதற்கும் ஏனைய பல சந்நியாசிகள் விரக்திக்கும் பெருவாசியுண்டு. (லோகோபகாரக்ஷ மமாச்ரமம்—எல்லோருக்கும் உதவியாயிருக்கும் ஆச்ரமம்) என்று சான்றோரால் போற்றப்படும் கிரஹஸ்

தாச்ரமத்தைப் பலர் பல காரணங்களால் விட்டு விட்டு சந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரிக்கிறார்கள். கிரஹஸ்தாச்ரமத்தில் படும் கஷ்டங்களி லிருந்து தப்பித்துக் கொள்ளச் சிலரும், பல மடங்களுக்கு அதிபதியாகலாமென்ற ஆசையால் பலரும் துரீயாச்ரமிகளாக மாறுகின்றனர். நம் ஸ்வாமிக்கோ கிரு ஹஸ்தாச்சரமத்தில் அபரிமிதமான வசதிகளும், ஐஹிகசாத னங்களும் நிரம்பியிருந்தன. அவற்றை யெல்லாம் விட்டு விட்டு, துரீயாச்ரமத்தில் நம் ஸ்வாமி அடையப் போகும் க்யாதி லாப பூஜைகள் புதிதாக ஒன்றுமில்லை. இவற்றை யெல்லாம் ஸ்வாமி உதறியதுகூடப் பெரிதல்ல. யதேஷ்ட மாகப் பலபல இடங்களுக்குச் சென்று பல்லாயிரக் கணக்கான ரஸிக பக்த ஜனங்களுக்கு அருளிச் செயல், ஆசார்ய ஸ்ரீஸூக்தி கள் இவற்றைத் தமக்கே உரித்தான பாணியில் ப்ரவசனம் செய்து பொழுது போக்கி வந்த நம் ஸ்வாமி ஜீவ நாடியாகக் கருதிவந்த அத்தையும் விட்டு விட்டு, துரீயாச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டதுதான் உண்மையில் பெரிய த்யாகம். மேலும் ஸ்வாமியின் ஸாஹித்யஞானம் புஷ்கலமானது. காளி தாஸன், பவபூதி, மாகன், ஸ்ரீஹர்ஷன் முதலிய மஹா கவி களின் சுலோகங்களே மணிக்கணக்காகச் சொல்லித் தாமும் மகிழ்ந்து கேட்போரையும் மகிழ்விக்கும் ஸ்வாமியின் ஆற்றல் அளவு கடந்தது. தற்சமயம் ஸ்வாமி ஏற்றுக் கொண்டுள்ள ஆச்ரமத்திற்குரிய அநுஷ்டானங்களுக்கும், அலங்கரிக்கும் பீடத்திற்குரிய கட்டுப்பாடுகளுக்கும் மேலே கூறப்பட்ட ஸ்வா மிக்கு ஹ்ருதயங்கமமான விஷயப்ரவச ஹர்ஷ பக்த ஜனப்ர ரணங்கள் பெரும்பாலும் ப்ரதிகோடிகள், ஏதோ சிற்சிலசமயங் களில் சிலபேர்களுக்கு மட்டும் ஸ்வாமி ப்ரவசனம் செய்ய இயலுமே தவிர, முன்போல் அதே பொழுதுபோக்காக இருக்க முடியாது. இதுதான் ஸ்வாமியின் விரக்தியின் பராகாஷ்டை. இவ் வாச்ரமத்தில் இதை யெல்லாம் விட்டு விடவேண்டிவரும் என்று நன்கு தெரிந்திருந்தும் நம் ஸ்வாமி கிரஹஸ்தாச்ரமத் துடன் இத்திவ்யானந்தாநுபவத்தையும் விட்டது பெரிய த்யாகம். ஸங்கல்பஸூர்யோதயத்தில்

யதிகுப்யதி கோபாய நகோபமதிவர்த்தே |
அகோபவிஷயம் கோபம் கதம் கஸ்சித் விஜேஷ்யதே ||

[கோபத்தின் மேல் ஒருவன் கோபம் கொண்டால் தாலே அவன் கோபத்தை விடமுடியும்? அப்படிக் கோபத்தின் மேல் கோபம் கொண்டவன் கோபத்தை விட்டவனாகிறானல்லன். கோபத்தின் மேல் கோபத்தைக் காட்டாவிடில், கோபத்தை

எப்படி ஜயிக்க முடியும்? ஆகவே, கோபம் ஓரளவு இருந்தே தீரவேண்டி யிருக்கிறது என்று தாத்பர்யம்]

என்ற கோபத்தைப் பற்றிய சுலோகரத்னத்தை யொற்றி நம் ஸ்வாமியின் த்யாகம் அமைந்தால் தேவலே யென்று தோன்றுகிறது. எல்லாவற்றையும் தியாகம் செய்யத் தயாராக விருக்கும் நம் ஸ்வாமி தன் த்யாகத்தையும் ஓரளவு த்யாகம் செய்து பக்த ஜனங்களின் ஆனந்த பரிவாஹத்தை அலங்குசிதமாகச் செய்யலாகாதா என்று தோன்றுகிறது. ஏனெனில் ஆச்ரமம், ஆசார்யபீடம் இவற்றுல் அது பெரிதும் குறைந்துவிட்டது.

இப்போர்ப்பட்ட மஹானுபாவரால் சந்நியாஸாச்ரமம் மேன்மையோடு விளங்குகிறது. இம் மஹான் பீடாதிபதியா யிருப்பதால் பெரியாச்ரமம் பொலிவு பெறுகிறது. ஆசார்ய பீடம் சிலருக்கு உயர்வையும், சிறப்பையும் கொடுக்கின்றது. சிலமஹநீயர்கள் பீடத்தை விளங்கச் செய்கின்றனர். நம் ஸ்வாமியால் ''ஆச்ரமோ விபாதி''.

ஸ்ரீ:

சொல்லின் செல்வன்

(ஸ்ரீ உப. வே. வாஸுதேவாசார்யர் ஸ்வாமி உத்தரமேரூர்)

கல்வியில் பெரியோன் தந்தது இந்தத் தொடர், இனிய சொல்; அதுவும் செல்வம் போன்றது, இன் சொல் செல்வன் என, மாறிப் பொருள்தரும், இனிய சொற்களைச் செல்வமாகப் பெற்றவன் என்றவாறு.

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனின் திருவாக்கு இது; திருவடிக்கு அவன் சூட்டின பிருதம்.

''இல்லாத உலகத்து எங்கும் ஈங்கு இவன் இசைகள் கூறக்
கல்லாத வேதக் கடலுமே என்னும் காட்டி
சொல்லாலே தோன்றிற்று அன்றே யார் கொல்
இச் சொல்லின் செல்வன்
வில்லார் தோள் இளைய வீர விரிஞ்சனை விடைவலானை''

(கம்பராமாயணம்-அநுமப்படலம்)

என்னும் பாசுரத்தில் இதைக் காணலாம்.

திருவடி தம்மிடம் பரிமாறும் முன்பு, பிராட்டியைப்பிரிந்து பெருமாள் பட்ட தாபம் வாசாமகோசரம்; மறுபடியும் ஜானகியைப் பெறுவோமோ என்று ஏங்கிக்கொண்டிருந்தான்.

திருவடிப் பெருமாள் திரு முன்பே விநயத்துடன் நின்று கொண்டு சில விண்ணப்பங்களைச் செய்தவாறே, அச் செவிக்கினிய செஞ் சொற்களால், பிராட்டியைப் பெற்றது போன்ற இன்பம் உற்றனன் எம்பெருமான். ஹநுமானின் திருவாயினின்றும் ஸகல சாஸ்த்ரார்த்த ஸாரமாக இனிய சொற்செல்வம் சொரிந்தது.

''ப்ரபஞ்ஜந தநய பாவுக பாவித ரஞ்ஜித ஹ்ருதய'' என்பது மஹாவீரவைபவத்தில் இந்தக் கட்டத்தின் கத்யம்; ஆஞ்ஜநேயனை 'பாவுகன்' என்றார் ஸ்ரீ வேதாந்த தேசிகன். (பாவுகன்-ரஸிகன்).

'சொல்லின் செல்வன்' என்றூர் கம்பன்.

இனி, சரிதத்தின் வழியே சிறிது அநுபவிப்போம்.

ரிச்ய மூகத் தாழ்வரையினூடே ராமன் ஸீதையைத் தேடிக் கொண்டு வந்து கொண்டிருக்கிறான். இளைய பெருமான் திரு மேனிக் காவலாக உடன் வருகிறான்.

மஹாராஜர் (ஸுக்ரீவன்), இவர்கள் வாலியினால் அனுப்பப் பட்டவர்களோ என ஐயமும் பயமும் அடைந்தார்; யார் இவர் என்று அறிந்துகொண்டு வருமாறு தன் மந்திரியான ஹநுமானை அனுப்புகிறார்.

மாறுவேஷம் தரித்துவந்த திருவடி, இருவரையும் கண் டான். ''எய் வண்ண வெம் சிலையே துணையாய் இங்கே இரு வராய் வந்தார் என் முன்னே நின்றார், கை வண்ணம் தாமரை வாய் கமலம் போலும் கண் இணையும் அரவிந்தம் அடியும் அஃதே'' என்னும் அநுபவ ரஸம் தலை எடுக்கிறது.

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனின் திவ்யமங்கள விக்ரஹத்தின் அழகு, திருவடியை நிலைமாறச் செய்கிறது.

அவ்வெம் பெருமானின் திருக் கண்களின் அழகுக்குத் தோற்று, 'நமஸ்தே' என்று அவன் திருவடிகளில் விழுகிறான், திருவடி.

அப்போது, அவ்வநுபவ ரஸ பரிவாஹமாக, செவிக்கினிய செஞ் சொற் செல்வம் திருவடியின் திருவாயினின்றும் புறப் படுகிறது.

(1) ''ஸர்வ பூஷண பூஷார்ஹா:, கிமர்த்தம் ந விபூஷிதா:''

(2) ''மஞ்சு எனத் திரண்ட கோல மேனிய)
மகளிர்க்கு எல்லாம் நஞ்சு எனத்தகைய
ஆகி, நளிர் இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம் ஒத்து அலர்ந்த செய்ய கண்ண''

என்னும் இவ்விரண்டு வாக்கியங்களை மாத்ரம் இப்போது அநுபவிப்போம்.

பெருமாளின் வடிவழகு படுத்தும்பாடு இது. காண் தகு தோள் அண்ணல் தேவப்பெருமாளிறே ராமன், கண்ணெச்சில் படுமே! என்னுகுமோ? திருவாபரணங்களால் திவ்யாவயவங் களை மறைத்துக்கொடு காட்டியருளலாகாதோ!

இயற்கையில் தலைவியின் கண்களிறே தலைமகனின் தோள்களில் ஆழ்ந்திடுமவை.

ஞானியான திருவடி பெண்ணுடை உடுத்துப் பேசும் பாசுரம் இவை. 'மகளிர்க்கு எல்லாம் நஞ்சு எனத் தகைய' என்றான்.

ஏகதார வ்ரதமுடையவனை ஒருவனே நோக்கி, ப்ரஹ்மசாரியான ஒருவன் சொல்லும் வார்த்தையா இது! நிலைமாறினால் அல்லவோ பொருந்தும்.

ஜீவாத்மாவாகிய தான் ஒரு நாயகி; ''ஸ்த்ரீ ப்ராயமிதரத் ஜகத்'' என்றிறே ப்ரமாணகதி; அவன் புருஷோத்தமன்; பேச்சு அந்த: புரபரிமாற்றம். காந்தா ஸம்மிதமான வார்த்தையிறே ஸரஸமாகவிருக்கும்.

(இந்தப் பரிமாற்றம் ஸர்வசாஸ்த்ர ஸாரார்த்தமாகும். நிதி—செல்வம் போல, நம் பூர்வாசார்யங்கள் நமக்கு உபகரித்திருக்கிறார்கள்.

''பக்தி; ச்ருங்கார வ்ருத்யா பரிணமதி'', ''சுத்தாந்தா சாரசுத்தை:'', ''கண்ணனுக்கே ஆமது காமம்'' இத்யாதிகள் இங்கே அநுஸந்திக்க ப்ராப்தங்கள்.)

பெருமாள், இப்போது, இளைய பெருமாளிடம் திருவடிக்கு, ''சொல்லின் செல்வன்'' எனப் பிருதம் சூட்டி மகிழ்கிறான்.

திருவடியைப் போலே, நம் காலத்தில், பகவத் விஷயத்தில் ஈடுபாடு மிகும்படி வார்த்தை சொல்லுமவர் சிலரே, அவர்களில் தலையாயவர் ப்ரக்ருதம், நம்முடை ஆண்டவன் ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகன்.


கலியனுரை குடிகொண்ட கருத்துடையோனை இவரோடும், அடியோமோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு.



ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன்
ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்



பெங்களூர் விஜயம்



ஸ்ரீமத் ஸ்ரீவேதாந்தராமானுஜ மஹாதேசிகன்



ஸ்ரீமத் ஸ்ரீரங்கராஜ மஹாதேசிகன்




ஸ்ரீ மத் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்



ஸ்ரீமத் ஸ்ரீவேதாந்தராமாநுஜ மஹாதேசிகன்



ஸ்ரீமத் பாதுகாஸேவக ராமாநுஜ மஹாதேசிகன்



ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

ஸ்ரீ:

ஸ்ரீமதாண்டவன்

(ஸ்ரீ உப. வே. பி. டி. நரஸிம்மாசார்யர் ஸ்வாமி,
காஞ்சீபுரம்)

ஸ்ரீமத் ஆண்டவனுடைய ஞானானுஷ்டான வைராக்யங்களைப் பற்றியும் ஆத்ம குணங்களைப் பற்றியும் விரிவாக அநேக ஸ்வாமிகள் தங்கள் வ்யாஸங்களில் எழுதியிருப்பார்கள். ஸ்ரீமதாண்டவன் பூர்வாச்ரமத்தில் ஏள்ளியிருந்தபோது அடியேன் ஈடுபட்ட ஒரு விஷயத்தை மட்டும் விஞ்ஞாபிக்கிறேன்.

ஸம்ப்ரதாயங்கள் இருக்கும் இடம் தெரியாமல் அலையும் காலத்தில் கைகொடுத்து ஸம்ப்ரதாயத்தைக் காட்டிக் கொடுக்கும் எம்பெருமான்கள் இருவர்: ஆராவமுதனும் அருளாளனும். ஆழ்வாரின் ஆயிரத்தின் அடிச்சுவடு அறியாமல் அலையும் தருவாயில் ஆராவமுதனன்றே அருள் புரிந்து ஆழ்வாரைக் காட்டியருளினன் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு. அதுபோல் இளையாழ்வார் (இராமானுசன்) 'ஆவாரார் துணை' என்று ஸம்ப்ரதாயம் இருக்குமிடம் தெரியாமல் இளைத்துக் களைத்து நிற்கும்போது அருளாளனன்றே கைகொடுத்து ஸத் ஸம்ப்ரதாயத்தைக் காட்டிக் கொடுத்தான். இந்த இரண்டு எம்பெருமான்களும் இல்லை என்றால் ஆழ்வாரும் இல்லை, ஆழ்வார் ஸம்ப்ரதாயமும் இல்லை நமக்கு.

ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி தீடிரென்று பரமபதித்தவுடன் பகவத் விஷயம் அடியோடு மறைந்து விட்டது என்று எல்லோரும் ஒரு முகமாகச் சொல்லி மிகவும் துக்கித்தார்கள். இந்த மாதிரி ஒரு சமயம் நேரும் என்று ஸர்வக்ஞனான ஆராவமுதன் முன்கூட்டியே பகவத் விஷயம் மறுபடி யதாக்ரமமாக ப்ரவசனம் நடப்பதற்கென்றே திருக் குடந்தையில் ஸ்ரீமதாண்டவனை அவதரிப்பித்தருளினன். இதனால் ஆராவமுதனின் பெருமை நன்கு புலப்படுகிறது.

ஸ்ரீ திருக் கோட்டியூர் ஸ்வாமியின் வருஷத் திருநக்ஷத்ர மஹோத்சவம் ஒரு வருடம் பெருமாள் கோயிலில் ஸ்ரீ ரங்க ராஜ வீதியில் 10 நாட்கள் விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. அந்த சமயம் ஸ்ரீமதாண்டவன் பூர்வாச்ரமத்தில் மதராஸில் பகவத் விஷய ப்ரவசனம் பண்ணிக்கொண்டு

ஏள்ளியாயிருந்தது. அடியோங்களின் ப்ரார்த்தனைக் கிணங்கி ஒரு நாள் காஞ்சிபுரத்திற்கு ஸ்ரீ ஸ்வாமிகள் திரு நக்ஷத்திர உற்சவத்தில் கலந்துகொள்ள ஏள்ளியாயிற்று. அப்போது மத்யான்னம் 3 மணிக்குமேல் ஸ்ரீமதாண்டவன் உபந்யாஸம். உபந்யாஸத்திற்கு எடுத்துக் கொண்ட விஷயம்

'நம்பியைத் தென்திருங்குடி நின்ற அச்
செம் பொன்னே திகழும் திருமூர்த்தியை
உம்பர் வானவர் ஆதியஞ் சோதியை
எம்பிரானை என் சொல்லி மறப்பனே'

என்ற நம்மாழ்வார் பாசுரம் வெகு அழகாக உபந்யாஸம் 3 மணி காலத்திற்குமேல் நடந்தது. அப்போதுகூடப் பாசுரத்தின் ஏகதேசம் தான் ஆயிற்று. அடியோங்களெல்லாம் காலம் போகிறதே தெரியாமல் மெய்ம்மறந்து அனுபவித்துக் கொண்டிருந்தோம். காலத்தை நாம் ஆள்வது பரமபதத்திலே. இங்கு காலம் நம்மை ஆளுகிறபடியால் ஸந்த்யா கால மாகிவிடுகிறதே என்று உபந்யாஸத்தை முடிக்க நேரிட்டது. அப்போது அடியோங்கள் எழுந்து ஸ்ரீமதாண்டவனை அநேக ப்ரணமங்கள் பண்ணினோம். இப்படி மணிக்கணக்காக அடியோங்களை மெய்ம்மறக்கச் செய்து ஆனந்தமாக அம்ருத வர்ஷம் வர்ஷித்ததிற்கு இந்த ப்ரணமங்கள் தான் அடியோங்கள் செய்யும் ப்ரத்யுபகாரம் என்று விஞ்ஞாபித்தோம்.

அப்போது ஸ்ரீமதாண்டவன் ஸாதித்தபடி ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி ஒரு பாசுரமோ, ஒரு ச்லோகமோ எடுத்துக் கொண்டால் மணிக் கணக்காக உபந்யஸித்தாகும். அப்படிப்பட்ட ஸ்ரீ ஸ்வாமியின் உபந்யாஸங்களை அநேகம் நான் கேட்டிருக்கிறேன். இன்று சொன்ன பாசுர உபந்யாஸம் கூட ஸ்ரீ ஸ்வாமியிடம் கேட்டதுதான். எனவே ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமிதான் எனக்கு வழி காட்டி. ஆகையால் அந்த ஸ்வாமியின் திரு நக்ஷத்திர வைபவத்தில் கலந்து கொள்வது எனக்குப் பரம பாக்யம் என்று கருதி இன்று இங்கு வந்தேனே தவிர, உங்களிடம் ஒரு ப்ரத்யுபகாரத்தை அபேக்ஷித்து வரவில்லை என்று. ஸ்ரீமதாண்டவனுடைய ஆத்ம குண பரிபூர்த்தி இதிலிருந்து நன்கு ஏற்படுகிறது. ஆசார்யனிடத்தில் கேட்ட அர்த்த விசேஷங்களைக்கூட தனக்குத் தோன்றிற்று இந்த அர்த்த விசேஷங்கள் என்று சொல்லிக் கொள்வர்கள் பலர்; என்னுடைய மேதையினால் இப்படி விருத்திக்கு வந்தேன் என்று பெருமைப் பட்டுக் கொள்வர்கள். ஸ்ரீமதாண்டவன் ஸ்வயம் ஞான பரிபூர்ணராயிருந்தாலும்

ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமியிடம் கேட்ட அர்த்த விசேஷங்கள் இவை என்று ஒரு பெரிய ஸதஸ்ஸில் ஸாதிக்கும்படி இருந்தால் ஸ்ரீம தாண்டவன் குணபூர்த்தியை என்னென்று புகழ்வது. மந்த்ரார்த்தங்களின் அனுஸந்தானத்திலுள்ள ஊற்றத் தாலேதான் ஆத்மகுண பரிபூர்த்தி ஏற்படும் என்று ஸ்ரீமத் ரஹஸ்த்ரயஸாரத்தில் ஸ்ரீ தேசிகன் வாக்யம். இதனால் ஸ்ரீமதாண்டவனுடைய மந்த்ரார்த்தங்களில் உள்ள ஊற்றம் நன்கு விசதமாகிறது.

ஆகையால் திருக் குடந்தையில் அவதரித்து ஆராவமுதன் க்ருபையினால் பகவத் விஷயத்தைப் பல படியாகப் பூர்வாச்ரமத்திலும் துரீயாச்ரமத்திலும் ப்ரவசனம் செய்வதினால் ஆராவமுதன் திருவுள்ளத்தை உகக்கச் செய்வதோடு அவன் ஆக்ஞையைப் பரிபாலிப்பதினால் தம்மையும் ரக்ஷித்துக் கொண்டு, தம்முடைய சிஷ்ய கோடிகளையும் உஜ்ஜீவிக்கப் பண்ணுகிறார் ஸ்ரீமதாண்டவன். இப்படியே பல நூற்றாண்டுகள் ஏள்ளியிருந்து எல்லோரையும் உஜ்ஜீவிக்க அனுக்ரஹிக்கும்படி அருளாளன் அடியிணைகளை அநவரதம் இறைஞ்சுவோம்.

ஸ்ரீ :

திருநாட் பாட்டு

(ஸ்ரீ கி. வேங்கடசாமி ரெட்டியார்—வி. பூதூர்)

அகர உயிர்ப்பொரு ளாகவிளங்கும்
அரங்கன் மகிழ்ந்திடுநாள்;
அவனும்விரும்பிடும் அப்பாதுகைதன
தருமைவிளங்கிடு நாள்.

மகிழ்மா லிகையணி நம்மாழ்வார்திரு
வாய்மொழிவீறுறு நாள்;
வண்புகழ் எம்பெரு மானர்தரிசன
மாண்புடனேங்கிடுநாள்.

தகவுறு தூப்புற் பிள்ளோயினுள்ளம்
தனிமகிழ் வுற்றிடு நாள்;
தரணியில் ஆண்டவன் ஆண்டவன்என்றே
சான்றோர்மேம் படுநாள்.

புகழ் வேதாந்த இராமாநுசனர்
புவியி லுதித்திடு நாள்;
புண்ணிய மாதமெனும் பங்குனியிற்
பூசம்எனும்நாளே.

ஸ்ரீ:

ஆசார்யர்களின் பெருமை

(ஸ்ரீ உப. வே. வங்கிபுரம் பருத்திப்பட்டு
ரங்காசாரியர் ஸ்வாமி)

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமதாண்டவன் ஸன்னிதி தென்னிந்தியாவில் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த ஸ்தாபனம். ஆசார்ய சிஷ்ய ஸம்பத்து வளர, வேறு இணையில்லாத ஒரு குருகுலமாக கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டாக நடத்தப்பட்டு வந்திருக்கிறது. நாம் நேரில் ஸேவிக்க கொடுத்துவைக்காமல் போனாலும், ஸ்ரீமத் பெரியாண்டவன் ஸ்ரீனிவாஸ மஹா தேசிகன் ஸ்வாமியைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். ஸன்யாஸாச்ரமத்தின் சிகரமாக விளங்கிய ஆசார்யன் தன்னிடம் வந்த சிஷ்யனை பரீக்ஷைபார்த்து, சேர்த்துக்கொண்டு, அனுக்ரஹிக்கும் கருணை. தன் ஸன்யாஸத்துக்கும், ஆச்ரமத்தின் நியதிக்கும், ஸம்ப்ரதாயத்துக்கும் அனுகூலமாக சிஷ்யனைத் திருத்திப் பணிகொள்வது அந்த ஆசார்யனின் வழக்கம். தன்னிடம் வந்த சிஷ்யன் ஸதாசாரத்துடனும், ஆர்த்தியுடனும் வந்திருக்கிறானு என்பதைப் பரீஷை பண்ணமல் பரந்யாஸம் பண்ணிவைக்க ஸம்மதித்ததில்லை. இவை யெல்லாம் அந்தக் காலத்தில் ஸ்ரீ வைணவர்கள் ஒப்புக்கொண்ட ஸம்ப்ரதாய வழக்கங்களுக்கு ஒத்தவையாக இருந்தன.

ஸ்ரீமத் பெரியாண்டவன் பெரிய மனுஷ்யர்கள் என்பதற்காக, தன் ஆச்ரம நியதியையோ, வழக்கத்தையோ வழுவவிட்டதில்லை. என் தாத்தா சொல்லிய ஒரு கதையை கேட்டிருக்கிறேன். ஒரு ஸமயம் அவர் மாதாமஹர் அய்யவாச்சார் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் தாஸிதிகாரியாக இருந்தார். அது ஸமயம் புதுக்கோட்டையில் ஸ்ரீ ராமசந்திரத் தொண்டமான் ராஜாவாக இருந்தார். தன் தாஸிதிகாரியிடம் மஹாராஜா அடிக்கடி ஸ்ரீமத் பெரியாண்டவன் பெருமையையும், விரக்தியையும் பேசக் கேட்டிருக்கிறார். ஒரு நாள் மஹாராஜா திருச்சிராப்பள்ளி வந்தபோது தாஸிதிகாரியும் ஸ்ரீரங்கம் வந்தார். மஹாராஜா தான் பெரியாச்ரமத்துக்கு

வந்து ஸ்ரீ ஆண்டவனை தெண்டம் ஸமர்ப்பிக்கவேணுமென்றும் அதற்கு ஸ்வாமியிடம் அனுமதி பெறவேண்டு மென்று தாஸதிகாரியைக் கேட்டுக் கொண்டார். தாஸதிகாரியும் ஸ்ரீமத் ஆண்டவனிடம் வந்து தெண்டம் ஸமர்ப்பிவித்து விஷயத்தைச் சொல்லி மஹாராஜா ஆச்ரமத்துக்கு வந்து ஸேவிக்க அனுமதி ஸாதிக்கப் பிரார்த்தித்தார். ஸ்வாமியோ ஒப்புக் கொள்ளவில்லை. தான் ஸன்யாஸி யென்றும், மற்ற வெளியோர்களிடத்தில் துடர்பு வைத்துக் கொள்வது ஸரியாகத் தோன்றவில்லை யென்றும் அதனல் நேரில் வந்து ஸமாகமம் பண்ணுவது உசிதமில்லை யென்றும் ஸாதித்தாயிற்று. தாஸதிகாரி திருச்சியில் காத்துக்கொண்டிருக்கும் மஹாராஜாவிடம் போய் ஸ்ரீமதாண்டவன் திருவுள்ளத்தைச் சொன்னர். மஹாராஜாவுக்கோ மேலும் ஸ்வாமியைத் தெண்டம் ஸமர்பிக்க வேணுமென்ற த்வரை ஜாஸ்தியாகிறது. அவர்தான் ஆச்ரமத்துக்கு வரவில்லை யென்றும், ஸ்வாமி கோவிலுக்குப் போகும் ஸமயம் வழியில் காத்திருந்து ஸ்வாமி எழுத்தருளும்போது ஸ்வாமியை தூர நின்று ஸேவித்தால் போருமென்று சொல்லியனுப்பினர்.

தாஸதிகாரி மறுபடி ஸ்வாமியிடம் போய் விஷயத்தை விஞ்ஞாபித்தார். ஸ்வாமி மறுபடியும் யோசித்தாயிற்று, பிறகு அதுவும் வேண்டாம் என்றும், தான் கோவிலுக்கும் போகும் வழியில் மஹாராஜா நின்று ஸேவித்தால் தான் அவ்விடம் நிற்க வேண்டியிருக்கும் என்றும், நின்றல், குசலப்ரச்னம் பண்ணவேண்டி யிருக்குமென்றும், அது செய்வதானல், மஹாராஜா ஆச்ரமத்துக்கே வந்து நேரில் ஸேவிக்க ஸம்மதித்திருக்கலா மென்றும், ஆகையால் அதுவும் உசிதமல்ல வென்றும் திருவுள்ளம் பற்றியாயிற்று. இதை தாஸதிகாரி மறுபடி போய் மஹாராஜாவுக்கு சொன்னர்.

மஹாராஜா பெரிய தர்மஞ்ஞர், மஹான். ஸ்ரீமதாண்டவன் ஸாமியின் வைராக்யத்தையும், விரக்தியையும், சிஷ்டாசாரத்தில் பிடிவாதத்தையும் புரிந்துகொண்டுவிட்டார். உடனே தாஸதிகாரிக்கு பதில் சொன்னர். "எனக்கு ஸ்வாமியின் நிலை புரிந்துவிட்டது. அவர்களது ஆச்ரமத்திற்கேற்ற விரக்தியும் தெளிவாகத் தெரிகிறது. அந்த மஹானை நான் நேரில் ஸேவிக்க வேண்டுமென்பதில்லை. அந்த திக்கில் தெண்டம் ஸமர்ப்பித்தால் போதும். எனக்கு ஸுக்ருதம் கிடைத்துவிடுமென்று சொல்லி ஆச்ரமம் இருந்த திக்கில் நான்கு தரம் கீழே விழுந்து ஸேவித்தாராம். அப்படி ஸன்யாஸாச்ரமத்தின்

தியதியையும், வைராக்யத்தையும் காப்பாற்றின ஸ்தாபனம் நம்மாண்டவன் ஸன்னிதி. வைஷ்ண ஸமூஹமே பெருமைப் படவேண்டிய அம்சம்.

ஸ்ரீமத் பெரியாண்டவன் காலத்திற்குப் பிறகு அந்த பரம் பரையில் வந்த ஆசாரியர்கள் மடி தர்மத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். ஒரு ஊருக்கு போவதானாலும், ஸஞ் சாரம் போவதானாலும் கால் நடையாகத்தான் போவது என் பதை நாளது வரை நடத்திக்காட்டி யிருக்கிறார்கள். இது ஆச்ரமத்துக்கும் அனுஷ்டானத்துக்கும் கொடுக்கும் கௌர வம். ஸன்னிதியில் வாழையடியாக வந்திருக்கும் ஆசார்யர் கள் அவர்களிடம் சென்ற சிஷ்யர்களுக்கு இஹபரஸாதகங்களை அனுக்ரஹிக்காமல் கைவிட்ட தில்லை. இந்த ஆச்ரமத்தின் மற்றொரு பெருமை. பெருமாள் ஆராதனத்தைத் தவிர பூர் வாசாரியாளுடைய பாதுகாராதனம் முக்யம். பாதுகா பிர பாவம் நன்றாக ஊன்றி இருக்கும் இந்த ஆச்ரமத்தில் ஆசார்ய பாதுகையே உஜ்ஜீவ்யம் என்ற நம்பிக்கை. மேலும் இந்த ஆச் ரமத்தில் ஸ்ரீரங்கநாத திவ்ய மணிபாதுகைக்கு தனித் தனி யன் ஸேவிக்கிறது வழக்கம் நடப்பில் வருகிறது. ஸ்ரீ தேர முந்தூர் ஆண்டவன் தன்னிடம் வந்த சிஷ்யர்களுக்கு பாது கா ஸஹஸ்ரம் புஸ்தகம் ஒன்று கொடுத்து வாசிக்கச் சொல்வ துடன், மறுபடி ஆச்ரமத்துக்கு வரும்போது எத்தனை ச்லோ கம் வாசித்துச் சொல்ல வரும் என்று பரீக்ஷை வைப்பதுண்டு. அது ஆசாரியர்கள் ஸ்ரீதிவ்யமணி பாதுகையிடம் வைத்திருக் கும் பக்தி ச்ரத்தை.

ஆச்ரமத்துக்கு வரும் சிஷ்யன், ஒரு ரயிலில் வந்து மறு ரயிலில் திரும்பாமல் இரண்டு நாள் இருந்து, ஆசாரியன் ஸாதிக்கும் காலக்ஷேபத்தைக் கேட்டு, அனுபவித்து, தான் கற்காதிருக்கும் விஷயங்கள் எவ்வளவு பாக்கி இருக்கிற தென்று புரிந்து கொள்வானானால், மடி சிஷ்யனுக்கு அக்கரை வருவதுடன், பகவத் ஆசார்ய பக்தி ருசிக்க ஆரம்பிக்கும். பிறகு அதைக் கடமையாகச் செய்யாமல் ருசியுடனும், அதன் ரஸத்தை யனுப்பவிக்கவும் செய்வன்.

இந்த ஆச்ரமத்தில் நமக்கு ஆசாரியர்களாக ஏற்பட்டிருப் பவர்கள் நம்மை வெகுவாகத் தங்கள் அனுஷ்டானம், தனை, வைதுஷ்யத்தாலும் ஆகர்ஷித்திருக்கிறார்கள். அவர்களிடம் அடிக்கடி போய்ப் பழகக் கற்றுக் கொண்டால் நமக்கே நம் மிடம் ஒரு எதிர்பாராத மாறுதல் தெளியும். அப்படி ஏற்

படுவதற்கும் ஆசார்யர்களின் கிருபை வேண்டும். ''தம் மையே தமர்க்கு நல்கும்'' கருணைமூர்த்திகள் நம்மாசாரியர் கள். அதைப் போற்றி, வணங்கி, அனுபவித்து, நம்முடைய புத்ர பௌத்ராதிகளுக்கு வழிகாட்டியாக இருக்கும்படி நம் மாசாரியர்கள் ஸ்ரீ பெரிய பெருமாள் ஸ்ரீ ரங்கநாச்சியார் க்ருபையை நமக்கு அனுக்ரஹிக்கப் பிரார்த்திக் கிறேன்.

ஸ்ரீ :

ஆண்டவன் போற்றித் திருவகல்

(அயிந்தை, ஸ்ரீ உப. வே. கு. கிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமி)

காப்பு நேரிசை—வெண்பா

செங்கமலச் செல்விதிகழ் சீரங்கராசனவன்
பைங்கமலப் பாதம் சேர்ப்பாதுகையை—நங்கட்கு
ஏமமாம் இவ்வுலகில் என் மனமே, ஆண்டிடுமால்
நேமம்வே றில்லை நினை.

திருமகள் கொழுநன் திருவடி போற்றி
மருவிடும் மார்பில் மலர்கள் போற்றி.
திருமால் கோயிலில் தினம் செயல் முறைபணி
குருவாம் நாற்படைக் கொரு முதல் நாயனார்
மற்றிவை யமைப்பும் வணங்கிடு முறைதுறை
பொற்புடன் நடாத்தும் பொற்பிரம்பதனின்
நுனியது அசைய உலகம் பலவும்
இனிது சால்புடனே இயங்கிட ஆட்சிசெய்
விச்வச்சேன்ராம் எழில் உருமுதலியார்
அச்வமாம் அசுரனை அன்றழித்தவனடி
அன்னவர் அடியினை மலர்ப்பதம் போற்றி
சொன்ன நால் வகை மறைச் சொன்னயம் தெளியவே
நன்னத் தமிழினில் நால்வரும் அறிந்திட
இன்னிசை ஓசையால் செப்பிடும் வாய்மொழி
வாறன் விளைப்பதி மகிழ்ந்துமே பாடிடும்
மாறன் பராங்குசன் மலரடி போற்றி.
குருகாலப்பன் கோயிலில் வந்து
குருகூரப்பன் குணவடி பணிந்து
நலந்தரும் குலபதி அடிமலர் சூடும்.
வலந்தரும் வாய்மொழி மறுமகற் கருளிய
தெய்வநாத முனியின் செறிகழல் போற்றி

உய்யக் கொண்டார் மொய்கழல்போற்றி
போனகஞ் செய்யப் புதுமணத்தூதளே
கானகஞ் சென்று அநுதினங்கொணர்ந்து
கருவிலே திருவுடை ஆளவந்தார்க்கு
வணக்கமும் ஒடுக்கமும் வழக்கமும் இணங்கும்
மணக்கால் நம்பி மலர்க்கழல் போற்றி
மீளவந் தெம்மையும் விரும்பியும் ஆண்ட
அளவந்தார் எனும் அம்முனிபோற்றி
உரிய பூதூரரை ஒளிபெறச் செய்தவர்
பெரிய நல்நம்பியின் எழில் அடிபோற்றி.
அன்புடை உடையவர் ராமானுசனின்
கன்மமும் தீர்க்கும் கழலடி போற்றி
திருமறைப் பாடியம் திருவாய் மொழிப்பொருள்
தரும்புகழ் பிள்ளான் ஆழ்வான் அம்மாள்
இன்னவர் சீடராம் கிடாம்பி அப்புளார்
மன்னிடும் மணங்கமழ் மலரடிபோற்றி.
சிந்துரச் சிலம்பின் செல்வனும் வரதன்
தந்தநம் தேசிகன் தளிரடி போற்றி.
வேதாந்த ஆரியன் மெல்லடி போற்றும்
போதாந்த நயனர் பொலங்கழல் போற்றி.
உத்தமக் குருவாம் ப்ரும் தந்திரராம்
எத்திசைப் புகழ்கொள் எம்மலும் போற்றி.
சாட்சாத் சுவாமி தகவுடைப் பெரியோர்
காட்சியில் உடையவர் அவர்கழல் போற்றி.
மற்றவர் மகிழ்ந்தருள் மறைபயில் ஒழுக்கமால்
உற்றவர்க்கொருபுகல் கோபால தேசிகன்
குடந்தையில் வந்து கோமளச் சார்ங்கன்
இடந்தரவிளங்கிய எழிற்குருபோற்றி.
ஏமமார் அவர்தாள் இறைஞ்சிப் பணியும்
நாமமார் வழுத்தூர் ஆண்டவன் போற்றி.
விளக்குடி ஆண்டவன் விரைகழல் தொழுது
அளப்பருஞ்சீர் சேர்ப் பாதுகை போற்றி.
தத்துவம் ஒழுக்கம் தவஞ் செய்துருக்கொள
எத்திசையோர் புகழ் பெரியாண்டவனும்

நெடுங்கழல் நடை பயில் நீண்முடி உடையவர்
படுந்துயர் மிடிபிணி பட்டிறும் பெயர்சொல
சீனிவாச மாதேசிகன் எனும் பெயர்புகழ்
மானிவாசம் செய் மாண்புடைப் பொழில்மடம்
அரங்கன் ஒருகால் மரவடி பொறித்ததால்
வரங்கொள் நல்லோர் வந்து வந்தீண்டும்.
உவந்தும் வணங்கிட உறுபகை நில்லா.
பவந்தீர் மருந்தாம் பாதுகைபோற்றி.
மன்னும் ஆண்டவன் மடந்தனில் புகழ் கொளும்
சின்னண்டவனின் சேவடி போற்றி.
மந்திரப் பொக்கிடம் மாண்தவத் தின்னுரு
பந்தமில் தூயரம் பாங்குடைச் சீலராம்
அட்டாக் கரமும் காயத்ரீயும்
திட்டம் முடனே எழுகோடியுரு
செபஞ்செய் நற்பயன் தேர முழ்தூரார்க்(கு)
உபகரித்து வந்தார் ஒளியுடன் மிளிர
காடந்தேத்தி ஆண்டவன் பெயர் சொலி
நாடப் பயன் தரும் நளிரடி போற்றி
மணத்துடன் முளைக்கும் வண்டுழாய் போலக்
குணத்துடன் ஈயுணிக்குலத்தினில் தோன்றி
நல்லாசிரியர் பால் நானிலம் பயிலும்
எல்லா நூலும் இனிது பயின்று
பலதலம் சென்று பாரினில் ஆண்டவன்
வலந்தரும் பெயர்ச்சீர் மலிந்துமே பரவ
கனிவுடன் பேசிக் கருணை யோடழைத்துக்
குனிவுடன் வந்தார் குன்று நேர்புகழ்பெற
சாத்திரம் பாத்திரம் தகுதியும்பாரார்
கோத்திரம் சூத்திரம் குணநலம் கருதார்
அதிசயமுறையில் அகந்தையும் திருத்தி
புதியவராக்கிப் போதமும் செய்த
நம்மாண்டவன் வேதாந்த ராமானுசன்
செம்மை செய்ப்பதமலர்ச் சேவடி போற்றி.
ஆக்கூர் வந்தார் கடிகாசலத்தே
நோக்கும் கொண்டார் நுவலருந்தவத்தார்

கடிமலர்த்திருவின் கருணையால் வரதன்
அடிமலர் இறைஞ்ச அருவினை போக்கும்
என்றுமே கூறிச் செல்லிடந் தொறும் பலர்
கன்றுபோல் பின்வரக் கறவைபோல் அருளினர்.
எங்களாண்டவனெனும் என்னையும் ஆண்ட
அங்கணர் செங்கழல் பாதுகை போற்றி.
பாமணிக் கோரையும் பயந்தர ஒன்றிடும்
ஏமமாய் அமைகரை இருந்திக் கொன்றுதான்
இயற்கையின் வன்மையை எழில் கொளும் நன்மையாய்ச்
செயற்கையார் அபயமும் திருடிய வெண்ணெயும்
கொண்டுமே நடஞ் செயும் குழகனர் கண்ணனின்
வண்டுறழ் மலர்ப் பொழில் மாண்புடைத் தென்பெரை
என்னுமோர் நற்றலம் இன்புகழ் கொள்ளவே
மன்னிடும் துறவுகொள் மாதவத் தெம்மலாம்
தென்பெரை ஆண்டவன் இன்று நம் கண் முனம்
மன் பெரியாண்டவன் வானிலே கண்டுவந்(து)
இங்குபின் கண்ணனும் திருக் குடந்தை யாண்டவன்
பொங்குநற் புகழ் பெற உயர்துறவளித்தனர்
அங்கையால், பெயர் நினைந்தவர் புகழ் அநுதினம்
பங்கயத்தளங் கொடுபாதுகை போற்றி.
அணங்கார் கொழுந்தும் அந்தொடைக் கதம்பம்
மணங்கமழ் சாதி, மல்லிகை மருவும்
நறவம் துளிக்கும் நாண் மலர்ச்சோலை
பறழ்சூழ் விலங்கார்ப் பண்ணையார் வயலும்
சுமுகுடன் காய்க்கும் கதலியும் தெங்கும்
அமுதனின் புரியாம் அணிநகர்க் குடந்தை!
கரும்புடன் சென்னெல் கதிர்வயல் உயர்த்தும்
வரும் புனல் பொன்னிமாமணி யலைக்கும்
செல்வம் மல்கு தென் திருக்குடந்தை!
சொல் வன்மையுடன் தொல் புகழ்க் கலைசேர்
செழுவயல் பொழில் சூழ் திருக் குடந்தையாள்
கெழு புகழ்க் கோமளக் கிளி மொழியன்னை
அமுதினையுண்டு அகங்களித்திரங்கி
நமுடை வினைகள் நலிவடைந்திறவே

தேசிகன் வகுத்த திருமறை விளங்க
ஆசிகள் செய்து ஆரியன் ஒருவரைத்
தந்தனள் வந்தார் தரணியும் மகிழவே
அந்தணர் அவரே, கண்ணனின் அடிகள்!
அழகார் சன்னதி அகலமாம் தெருவில்
குழகனும் கண்ணன் குனிவிற்சார்ங்கன்
ஒத்தபேர் புகழ்கொள் முதலியாண்டானின்
அத்திருக்குலத்தினில் அவதரித்தனரால்!
''பாசுரச் செல்வம்'', பண்பினில் மிக்கார்
தேசுடன் பொலியும் தேரழுந்தூர் நம்
ஆண்டவன் அடியை அநுதினம் பயிலும்
ஈண்டிடும் அன்பர் இருவினை வரையைப்
போக்கிடப் புகலும் புண்ணிய கதைகள்
நாக்கினுக்கிறை பணி நாமகள் வதியும்.
பாசுர மொழிகள் பண்ணுடை மொழிகள்
பேசுவார், சலியார், பேர் பெருங்குருவாம்.
சூடிக் கொடுத்த சுடர் கொடிக் கோதை
பாடிக் களித்த பாசுரமுடனே
பாவை நல்நோன்பைப் பலகால் நோற்றூர்.
சேவையும் பெரிதாம் செவ்வியும் பெரிதால்!
தென்பெரை ஆண்டவன் இன்னருள்பூண்டு
சன்மமும் மாறிச் சன்னியாசங்கொடு
பெரியாண்டவனைப் பேணிப் பணிந்து
கரியமாலரங்கன் ஆலயம் சென்று
முறையுடன் வணங்கி ஊர்வலம் வந்து
குறையிரந்தடைந் தோர் குலவியும் சூழ
மக்கள் ஆன்மா வாழவும் எண்ணி
திக்குகள் விஜயம் செய்திடப் போந்து
அப்பக்குடத்தான் வடுவூர், நாகை
செப்பரும் புகழார் த்திருக்கண்ணபுரம்
கச்சிப் பதியும் கடிகா சலமுடன்
நச்சிடும் திருமலை நாகணைத்திருப்பதி
நீர்மலைசென்று இடந்தையும் அடைந்து
பேர்பதிய யிந்தைப் பிரானிடம் தங்கி

உடன் மேல் திக்கில் உயர் மேல் கோட்டை
நடந்தும் சென்றே நல்லூர் சோசலே
மண்டையம் தொண்டனூர் மைசூர், மாவூர்
பண்டை உடையவர் பதமலர் மணங்கமழ்
பல்லூர் தங்கிப் பல கல் தாண்டி,
செல்லூர் ஆசனம் சென்றும் திரும்பி
பெங்களூர் வந்து பேர்புகழ் கொண்டு
மங்களம் தங்கும் வண்ணகர்க் குடந்தை
வந்திருந்து மலர்மகன் மகிழ
செந்திருமகட்டும் எழில் மணி மாலே
அன்புடன் ஏந்த அவன் அணிந்துகக்க
பொன்மகள் கோமளம் பூரிப்படைய
அது கண்டுருகி அரிதிற் பிரிந்து
முதுபுகழ் நகராம் கூடலிற் சேர்ந்து
கள்ளழகர் தாம் கனபரி ஊர்ந்திடும்
கொள்ளையாம் அழகைக் குழாமுடன் கண்டு
மற்றும் குருகூர் வளநகர்க் கோளூர்
சுற்றிய பின்னர் தொலைவில் உள்ள
கொடையில் மிக்க கோயம் புத் ர்
நடையே நடந்து நகரடைந் திருந்து
அதன்பின் மேலார் மலையாளத்தே
மதனும் வெள்கும் அழகுடை மைந்தன்
அநந்தசயனம் மற்றும் அருகுள
வநஞ்சூழ்வரையிடை வதியுந்திருமால்
வாட்டாறடைந்து மாகுருவாயூர்
மேட்டில் உள்ள வித்துவக்கோடாம்
தலங்கள் சார்ந்து தருநெல்வேலியில்
நலந்திகழ் பேர், கீழ் நதீதம் உறைந்து
பூதலந்தன்னே ஊர்வலஞ் செய்து
காதலால் அரிமால் கலந்துறைப்பல்தலம்
கடந்தும் சலிப் பிலார், ஆருயிரம் மைல்
நடந்துமே சென்றனர், நற்றவம் பெரிதரோ!
பூண்டநற்றுறவும் பொலிந்துமே உயர்ந்திட
ஆண்டவன் சன்னிதி அளவிலாப்புகழ் கொளச்
செய்தனர் நம்மிறை திருக்குடந்தையாண்டவன்.

மொய்கழல் பணிவோம் உடனுய்மன்னி
அணிவிழாக்கொள்ளும் அறுபது ஆண்டாம்
மணிவிழா என்பர் வளர்தமிழ் மக்கள்
இத்துணைச் சீர்க்கும் ஏற்றமாம் மாரணம்
பத்துடை அடியவர் பாதுகை காப்பே!!
இன்னுமோர் நூற்றாண்டிருமெனப்
பன்னுவோம் பணிவோம் பாதுகைபோற்றி!!!

வாழி! (வேறு)

வாழி ஆனினம் அந்தணர் வாழியே!
வாழி அரிமுகன் மலர்மகள் அரங்கம்!
வாழி மா மறை வாய் மொழித்தேசிகன்!!
வாழி ஆண்டவன் அணி பாதுகையே!!!

ஸ்ரீ:

ஸ்ரீமத் ஆண்டவனுடன் பூர்வாச்ரம அநுபவங்கள்

(ஸ்ரீ உப. வே. குங்குமம் வரதாசார்யர் ஸ்வாமி)

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்ய, லோகானு கூலார்த்தம் எழுந்தருளி யிருக்கும் ப்ரக்ருதம் ஸ்ரீமத் ஆண்ட வனின் ஞானதிசயங்களை எழுதவோ சொல்லவோ அசக்த னை அடியேன், இந்த ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவத் தில், இம்மாதிரி ஈடுபடுவது ஸாஹஸமே. இருந்தும், அடி யேனையும் பொருளாக்கி என்ற கணக்கிலே, ஸ்வாமியின் காலக்ஷேபாதியசங்களில் ஈடுபடும்படியும், அந்த அநுபவத் துக்குச் சேர திவ்ய தேச யாத்திரையும் செய்வித்த பேரு காரத்திற்கு வேறு கைம்மாறு செய்ய இயலாதலால், பெரி யோர்களின் நியமனத்திற்கிணங்கி, இந்த ஸாஹஸத்தில் ஈடுபட்டுள்ளேன்.

''பொருந்திய தேசம் பொறையும் திறலும் புகழும் நல்ல
திருந்திய ஞானமும் செல்வமும்சேரும் செறுகவியால்
வருந்திய ஞாலத்தை வன்மையினல் வந்தெடுத்தளித்த
அருந்தவன் எங்களிராமானுஜனே யடைந்தவர்க்கே''

என்ற பாசுரத்தின் பொருள் போல, நம் ஆண்டவனும், அதே திருநாமத்தை அடைந்திருப்பது பொருந்தும்.

ஸ்ரீ ஸ்வாமி திருக்குடந்தை ஸன்னிதித் தெருவில் எழுந் தருளியிருந்த ஸ்ரீ உ. வே. பத்மனாபாசாரியார் குமாரராய் அவதரித்து, பின் ஸகல சாஸ்திர வித்வத்தும் பெற்று தகப்ப னார் நியமனப்படி திருக்குடந்தையிலேயே, காலக்ஷேபாதிகளை செய்துகொண்டு பூர்வாசார்யர்களான ஸ்ரீமத் நம்மாண்டவன் தேரிழந்தூர் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகனிடம் பஞ்ச சமஸ்காரமும், ஸ்ரீமத் ஆக்கூர் எங்களாண்டவன் ஸ்ரீனி வாஸ மஹா தேசிகனிடம் பரமார்ப்பணமும் காலக்ஷேபங் களும் ஆகி, பிறகு ஸ்ரீமத் தென்பிறை ஸ்ரீ ரங்கநாத மஹா தேசிகனிடம் புனர் பஞ்சஸம்ஸ்காரமும், காலக்ஷேபங்களும், மந்த்ரோபதேசமும் பெற்று, அவர்கள் அனுக்ரகத்துக்குச்

சேர, க்ரந்த கால கேஷபங்களால் பல்லாயிரக் கணக்கானவர் களை பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்திப் பிறகு, சென்னை முத லான பெரிய நகரங்களுக்கு (இந்தியா முழுவதும்) எழுந்தருளி அங்கெல்லாம் யாதுமறியாத பாமரர்களையும் தன்னுடைய திருப்பாவை, ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம், ரஹஸ் யத்ரயஸாரம், ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம், முதலிய கிரந்த உபன் யாஸங்களால், எல்லோரையும் திளைக்கச்செய்து, பல மஹான் களால் பாராட்டப்பெற்று எழுந்தருளியிருந்தாயிற்று.

இன்றைக்குச் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னரே ஸ்வா மிக்கு ஒரு மகத்தான ஸ்தானம் உண்டு என்று போற்றப்படு கையில் 5-7-51-ல் ஸ்ரீ பத்ரி யாத்திரையாக ஸங்கல்பித்து பல சிஷ்யர்களுடன் புறப்பட்டு முதலில், கிருஷ்ணை நதி ஸ்நா னம், அடுத்து கோதாவரி, பிறகு வால்டேரில் இறங்கி ஸ்ரீ பானக நரசிம்மன் மங்களாசாஸனம். அதையடுத்து ஸ்ரீ காகுளம் அடைந்து ஸ்ரீ கூர்மம், ஜகந்நாதம் ஸ்ரீ கயா, அவ் விடம் சிராத்தாதிகளைப் பூர்த்தி செய்துகொண்டு ஸ்ரீ காசி கேஷத்திரம், அங்கு ஹனுமான் காட்டில் கங்கா ஸ்நானம். தர்ப்பணம் பிந்துமாதவன் மங்களாசாஸனம். அலகாபாத் திருவேணி ஸங்கமம் ஸ்நானம்; அடுத்து சித்ரகூட கேஷத் திரம் மந்தாகினிஸ்நானம். பெருமாள் எழுந்தருளி யிருந்த திருமலை மங்களா சாஸனம். அடுத்து அயோத்தி சரயூநதி ஸ்நானம். மேலே நைமி சாரண்யம் கோமதி நதி ஸ்நானம், அரண்யம், சக்ரதீர்த்தம், பிறகு ஹரித்வாரம், ரிஷீகேசம், தேவப்ரயாகை கீர்த்திநகர், ஸ்ரீநகர், கங்காஸ்நானம் முடித்து கர்ணப்ரயாகை, நந்தப்ரயாகை, சமோலி அதற்குமேல் வாகன வசதி யில்லாததால் பாதசாரியாக பிப்பல்காட், கருட கங்கை மார்க்கமாக, பாதாள கங்காஸ்நானம். பிறகு பிப் பல்காட், ஜோஷீமட், ஹனுமான்காட், உடன் 29-7-57-ல் பத்ரிநாத்தை அடைந்து உஷ்ணகுண்ட ஸ்நானம், அவ்விடத் தில் கிரியைகளை முடித்துக்கொண்டு, ஸ்ரீ பத்ரி நாராயணன் மங்களா சாஸனம், மூன்று தினங்கள் எம்பெருமான் ஸேவை, அங்கிருந்து புறப்பட்டு மறுபடியும் மேற் குறிப்பிட்டபடி, ஹரித்வாரம், குருகேஷத்திரம் அங்கே அனேக தீர்த்தங்கள், அங்கிருந்து 8 மைலில் கீதோபதேசம்—கீதாபாராயணம். பிறகு டெல்லியில் பாண்டவர்கள் வாஸம் செய்த இந்திர ப்ரஸ்தம் வடமதுரை, பிருந்தாவனம், கோவர்த்தனம் கோகு லம், ஸ்ரீ கிருஷ்ணன் ஸஞ்சரித்த இடங்கள் சேவித்து, அவ் விடம் கருடன் 60 மைலுக்கு ஸஞ்சரிப்பதில்லை என்ற வ்ருத் தாந்தங்களை உபந்யசித்து, புஷ்கரம், சித்தபூரில் ஸரஸ்வதி

ஸ்நானம், முதலியவைகளை முடித்துக் கொண்டு பம்பாய், பஞ்சவடி, த்வாரகா யாத்திரையுடன் திரும்பி, சென்னை. மேற்சென்ற இடங்களில் ஒவ்வொரு நாளும் புண்யாகவாசனத் துடன் ஆகாரக் குறைவின்றி திருவாராதனங்களை முடித்து, ஒரு வேளை பகவத் ப்ரஸாதத்துடன் ஸ்வாமியுடன் அனுபவித் தவர்கள், இன்றும் நாளையும் அனுபவிப்பவர்கள் முதலில் கூறிய இராமானுஜ நூற்றந்தாதி பாசுரப்படி ஸகல ஸௌக்யங் களையும் அடைவதில் ஸந்தேகமுண்டோ!

ஸ்ரீ:

பல்லாண்டு

(ஸ்ரீ ஆர். ஆராவமுதன்)

(ராகம் - பூர்விகல்யாணி) (தாளம் - ஆதி)

பல்லவி

ஆரா அமுதா அரவிந்த லோசனே
ஆனந்த துயில் கொள்ளும் சாரங்கபாணே

(ஆரா)

அனுபல்லவி

ஈடில்லா எழிலாலே ஈர்ந்திட்டாய் என் மனதை
ஈசா உன் பேரருளே எண்ணுத நேரமுண்டோ?

(ஆரா)

சரணம்

காவிரி நதிபாயும் குடந்தை நகர்தன்னில்
கோலாகலமாக கோமளவல்லியுடன்
கோயில் கொண்டவனே மோஹனரூபா
கோரும் வரம் தரும் கோடிய சூர்ய ப்ரகாசா

(ஆரா)

(ராகம் - யமுனாகல்யாணி) (தாளம் - ஆதி)

பல்லவி

வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்
பாதார விந்தங்களே பணிந்தால் பிணிதீரும்

(வேதாந்த)

அனுபல்லவி

ரங்கஸ்தல மஹா தேசிகன் கருணையால்
பொங்கும் புகழுடன் பீடத்தில் அமர்ந்திட்ட

(வேதாந்த)

சரணம்

பாதுகா ஸஹஸ்ரத்தை பக்தியுடன் உரைத்து
பாமர மக்களையும் பரவசமாக்கிடும்
வேதாந்த சாரத்தை எளிதாக விளக்கிட்டு
வையத்தை வாழ்விக்க வரம்பெற்று வந்திட்ட

(வேதாந்த)

அறுபதாண்டு நிறைந்திட்ட — ஸ்ரீமத்
ஆண்டவனின் மலர்பதங்கள்
இடைவிடாது பூஜித்தால்
சன் அருள் கிடைத்திடுமே!
உறவு நமக்கு அவர் பதங்கள்
ஒளண் நமக்கு அவர் மொழிகள்
எத்தனையோ பிறவிகளில் — நமக்கு
ஏற்பட்ட அறியாமை
ஐயமின்றி தீர்ந்திடவே
ஒருமனதாய் வணங்கிடுவோம்,
ஓராயிரம் கோடி முறை
ஔஷதமாய் நம்மவநோய்க்கு
அமுதன் திருவருளால் — அவர்
வாழ்ந்திடுவார் பல்லாண்டு

ஸ்ரீ :

ஆசார்யன் தைவம்போல்

(ஆகவே போற்றத் தகுந்தவர்)

(ஸ்ரீ உப. வே. மா திருமலாசார்யர் ஸ்வாமி, தில்லைஸ்தானம்)

நாதமுனி, யாமுனமுனி, ராமானுஜமுனி என்ற மும்முனி களின் பரம்பரையான தொடர்ச்சியே முனித்ரயமாகும். சிலர் முதலாழ்வார்கள் மூவர்களுடைய பரம்பரையே முனித் ரயம் என்றும் கூறுவர். ஆனால் ஒன்று ஸமஸ்கிருத வேத முனித்ரயம் மற்றொன்று திராவிட வேத முனித்ரயமென்று கொள்ளில் பொருத்தமாகும்.

அம்முனித்ரய பரம்பரையில் ஸ்ரீரங்கம் பெரியாண்டவன் ஆச்ரம பரம்பரையில் தற்சமயம் நவீன வேதாந்த ராமானுஜ ஸ்வாமி எழுந்தருளி யிருந்து சிஷ்ய வர்க்கங்களை ஸதுப தேசங்களால் அனுக்ரஹித்துக் கொண்டுள்ளார்கள். ஆசார்ய ஸம்பந்தமின்றி எந்த சேதனனும் உஜ்ஜீவிக்க முடி யாதென்பது நிச்சயம். ஆசாரியனுடைய ஸம்பந்தத்தா லேயே மிகப் பாபியான க்ஷத்ரபந்துவுக்குக்கூடப் புண்ணியம் செய்தவர்களின் ஸ்தானம் கிடைக்கப் பெற்றதாகப் பிர சித்தம். ஆகையால், உலகில் எவ்விடத்திலும், எப்பொழு தும் ஆசார்யனைக் கொண்டாடும் படிக்கும், பிரகாசிக்கும் படிக்கும் அவர் உபதேசங்களைக் காப்பாற்றும் படிக்கும் சொல் லப்படுகிறது. அதற்காகவே, இவ்வுத்சவ நிகழ்ச்சிகள் இன்றி யமையாதவைகளாகின்றன. ஆதலாலேயே தெய்வ மில்லை யென்று சொல்லும் சமுதாயத்திலும் கூட ஆசார்யர்களையும் அவர் உபதேசங்களையும் ஒப்புக் கொள்ளும் சமுயாதங்களை இவ்வுலகின் கண் இன்றும் காண்கிறோம். ஆதலால் எல் லோராலும் ஏக மனதாக ஒப்புக் கொள்ளப்படும் ஆசார்யர் என்பர் மிகவும் போற்றத் தக்கவர் ஆகிறார் என்பதில் ஐய மில்லை. ஆயினும் போற்றப்படுவதற்குப் பல காரணங்கள் உள. அவற்றுள் சிலவற்றை விளக்குவோம்.

தெய்வ மில்லை யென்ற சமுதாயத்துக்கு ஆசார்யனைத் தவிர. வேறு தெய்வமில்லை என்று கொள்ளுவோ மாகில்,

அவரே பலவிதத்தில் மிகவும் போற்றத் தகுந்தவர் என்று கிடைப்பதால் ஜாஸ்தி கூற வேண்டியது கிடையாது.

ஆனால் தெய்வமுண்டென்ற சமுதாயத்தில் ஆசார்யனையும் தெய்வத்தையும் ஒப்பிட்டுப் பார்க்குங்கால் ஆசார்யனுடைய பெருமையே விஞ்சியிருப்பது பிரசித்தம். இதைக் கருத்தில் கொண்டே, தலைப்பில் தெய்வம் போல், தெய்வமாகவே, என்றும் இரண்டு அம்சங்களும் காண்பிக்கப் பட்டுள.

மேலும் தெய்வமான விஷ்ணுவே தயவால் குருவாக அவதரித்து, சாஸ்திரங்களைக் கைவிளக்காகக் கொண்டு பிரகிருதி மாயையில் மண்டிக் கிடக்கும் சேதனர்களைக் கடைத் தேத்துகிறது என்று கூறுகிறபடியால், தெய்வத்துக்கும் குருவுக்கும் வாசியில்லை யென்பது புலப்படுகிறது. குருவினால் உபதேசிக்கப்படும் மந்திரத்திலும், மந்திரத்தில் சொல்லப் படுகிற தெய்வத்தினிடத்திலும், அதை உபதேசிக்கும் குருவினிடத்திலும் சமமான பக்தியைச் செய்ய வேண்டுமென்பதில், குரு தெய்வங்களிடங்களில் ஸமபக்தி என்பதும் ஏற்பட்டது. நேரில் காணும் குருவினிடத்தில் முறையான பக்தியைச் செய்யாது, கண்ணுக்குப் புலப்படாத தெய்வத்தினிடத்தில் பக்தி செய்வது, கையிலிருக்கும் நிதியை இழந்து, பூமிக்குள் மறைந்து கிடக்கும் செல்வத்தைத் தேடுவதுபோலும், குடிக்கும் பாத்திரத்திலுள்ள தண்ணீரை விட்டு, மேகத்தில் உள்ள தண்ணீரை எதிர் பார்ப்பது போலும் பரிகசிக்கத் தகுந்ததாகும்.

மேலும் ஸர்வேச்வரனுடைய கிருபை அனுதியாலானாலுங்கூட இவ்வுலகைக் காக்குங் காரியத்துடன் சேர்ந்த தாகையால் தண்டனையுடன் கலந்தேயிருக்கும். ஆசார்யனுடைய கிருபையையும் அனுசரித்ததாகும். ஸாக்ஷாத் ஆசார்யனுடைய கிருபையோ வெனில் சிஷ்யனைக்காக்கும் நோக்குடனுள்ளதால் சுத்தமான தயவாகவே மிளிரும். ஈச்வரனுடைய தண்டனையையும் தணிக்கக் கூடியதா யிருக்கும், தெய்வத்தின் கிருபை ஒரு சமயம் சேதனனைக் கீழ்மை யாக்கக்கூடிய தாகவும் ஆகலாம், அதுபோல் மேன்மை படுத்தக்கூடிய தாகவும் ஆகலாம். குருவின் கிருபையோ எப்பொழுதும் சிஷ்யனை மேன்மை படுத்தக்கூடியதாகவே யிருக்கும். தெய்வத்தின் தயவு ஒரு சமயம் சேதனனை நல்லது செய்யத் தூண்டிவிடுவதுபோல், ஒரு சமயம் கெடுதலைச் செய்யவும் தூண்டிவிடலாம். குருவின் தயவோ எப்பொழுதுமே சிஷ்யனை நல்லது செய்யவே தூண்டிவிடக் கூடியதாயிருக்கும். கெடு

தல்களிலிருந்து விலக்கவும் செய்யும். மேலும் தெய்வத்தினிடத்தில் ஒவ்வோர் அவதார விசேஷங்களில் விபரீத உபதேசமும், விபரீத ஆசரணமுங் காணுகிறோம், ஆனால் ஆசார்யனிடத்தில் எப்பொழுதும் ஸதுபதேசமும் ஸதாசாரணமுமே காணக் கிடக்கும்.

ஆசார்யன், குரு, தேசிகன், என்ற சொற்களெல்லாம் ஒரே பொருளில் உபயோகப் படுத்தப் பட்டாலுங்கூட அதற்கென்று சிறப்பான பொருளுமுண்டு. அதில் ஆசார்யனென்றால், சாஸ்திரங்களை நன்கு தெரிந்துகொண்டு தானும் அனுஷ்டித்துச் சிஷ்யர்களையு மனுஷ்டிக்கச் செய்பவரே. தெய்வத்தினிடத்தில் இது சில அவதாரங்களில் காணக் கிடைப்பதரிது. குரு என்றால் சிஷ்யனுடைய அகத்திருளைப் போக்குபவரே. ''தேசிக'' என்றதற்கு தெய்வம்போல் ப்ரகாசித்துக் கொண்டு சிஷ்யர்களையும் சீர்மைப் படுத்தி கருணைமூர்த்தியாகமிளிருபவரே என்றும் பொருள். ஆக இச் சொற்களே மேன்மேலும் ஆசார்யருடைய பெருமையை வெளிப் படுத்துகின்றன.

ஆக இன்னமும் இதேபோல் பலவற்றை ஆராயுங்கால், சிறுமையன் தனக்கு ஆசார்யனையே எல்லாமாகவும் ஏற்றுக் கொள்ளலா மென்பதும் ப்ரசித்தம். இது ஆளவந்தார் அருளிய, நம்மாழ்வார் தனியனில், ஸர்வம் யதேவ நியமேன என்ற வாக்கியத்தில் எல்லாம் முறையே எனது ஆசார்யரை என்று குறிப்பிடுகையால் புலப்படுகிறது. மதுரகவி யாழ்வாரும் ''தேவுமற்றறியேன் குருகூர் நம்பி'' யென்று ஆசார்யனையே தெய்வமாகப் பற்றியதும் காணலாம், ஸ்வாமி தேசிகனுங்கூட, அக்ஞானத்தைப் போக்கடித்தல் முதலிய பல காரணங்களால் ஸர்வேச்ரனுக்கும் ஆசார்யனுக்கும் ஒத்துதுமையிருக்கிறபடியால், ஆசார்யனைத் தெய்வம் கோல் (தெய்வமாகவே) போற்ற வேணு மென்று நியாஸவிம்சதியில் பணித்தார். ஆதலால் ஆசார்யன் தெய்வம் ஆகவே (போல்) போற்றத் தகுந்தவ ரென்பது பல சான்றுகளால் வெளியிடப்பட்டது.

அதேபோல் தற்சமயம் அந்த ஆசார்ய ஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள மே. ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகனையும் சிஷ்ய சமுதாயராகிய நாம் இந்த நற் காலத்தில் போற்றிக் கிடைப்பத கரிதான பேரின்பத்தை அத்ர ப்ரஹ்மஸமச்னுதே என்ற கணக்கில், இங்கு நேர்ந்த ப்ரம்மானந்தானுபவம்போல் அனுபவிப்போமாக.

ஸ்ரீ:

திருநாமச் சிறப்பு

(ஸ்ரீ உப. வே. வித்வான் அத்தி கிருஷ்ணமாசார் ஸ்வாமி)

''ஆசார்யவான் புருஷோவேதம் ஆசார்யவத்த யாமுக்தேள தஸ்மாதாசார்யவான் பவேத்:'' என்கிறபடி ஸகல ஜனங்களுக்கும், ஆசார்ய சம்பந்தமே உத்தாரகம் என்பது ஸர்வஜன விதிதம், க்ஷத்திர பந்துவும், (மஹாபாபி) புண்டரீகனும் (மஹா புண்யசாலி) ஆசார்ய சம்பந்தத்திலேயே மோக்ஷம் பெற்றார்கள் என்று சரித்திரம் கூறுகிறது. ஆகவே குருவைப்ரகாசப்படுத்த வேண்டும் என்கிறபடி, அவனவன் சக்திக்குத் தக்கபடி குரு ப்ரகாசனம், கர்தவ்யமாக, விதிக்கப்பட்டது. அந்தக்ரமத்தில் நம் ஸ்ரீமதாண்டவன், என்கிற மஹாசார்யனின் ஷஷ்டியப்தப் பூர்த்தி மஹோத்சவத்தில், அடியேனது பிரணமங்களை விக்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.

பகவானைக் காட்டிலும் பகவன் நாமத்து (பெயர்) ப்ரபாவம் அதிகம் என்பதை திருப்பாவை மூலமாக அறிகிறோம். திருப்பாவையில் ''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி'' என்பதே பகவன் நாமத்தின் மஹிமையை விளக்கிக்காட்டுகிறது. வாமனாவதாரத்தில், உலகளந்த சீர்மையைப் பேசுகின்றது. இதில் உத்தமனைப்பாடி என்பதே போதுமானது. உத்தமனைப் பாடுவது என்பது உத்தமன் பேரின்றிப் பாட முடியாதல்லவா? ஆகவே உத்தமனைப் பாடி என்பதே போதுமானது. அப்படியிருக்க ஸ்ரீ ஆண்டாள் உத்தமன் பேர் பாடி என்றருளிச் செய்ததை ஊன்றிக் கவனித்தோமானால் பகவானைக் காட்டிலும், பகவன் நாமாவுக்கு அதிக ப்ரபாவம் உள்ளது என்று ஸ்ரீ ஆண்டாள் திருவுள்ளம் தோன்றுகிறது. பகவான் என்பவன், ஆஸ்திகர்களால் மாத்திரம் போற்றப்படுபவன். பகவன் நாமாவோ வெனில், ஆஸ்திக நாஸ்திக விபாகமற எல்லோராலும் போற்றப்படுகிறது.

அச்யுதானந்த கோவிந்த நாமோச்சா ரணபேஷஜாத் |)
நச்யந்தி ஸகலா ரோகா: ஸத்யம் ஸத்யம் வதாம் யஹம் ||)

என்பதே போதிய ப்ரமாணமாகும். நாஸ்திகர் உள்பட வியாதி பரிஹாரார்த்தமாக ஸஹஸ்ரநாம ஜபதப் பாராயணாதிகள் செய்வதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

உலகத்தில் மூர்க்கனான சிறுவன் தன்னை வளர்த்த தாயினிடம் ஏதோ காரணமாக நலிய புகுந்தான், கைகளால் அடிக்கிறான். அப்பொழுது கைநொந்தவாறே ''ஐயய்யோ அம்மா'', என்று கத்துகிறான். அச் சிறுவனே நலிவதுதான் தாயை, அவனுடைய வாயில் அவனுக்கும் தெரியாமல் ''அம்மா'' என்று கத்துகிறான். இது போல் நாஸ்திகனும், பகவானிடத்தில் துவேஷமிருக்கச் செய்தேயும், வியாதி பரிஹாரார்த்தமாக பகவந் நாம ஸ்மரணத்தைச் செய்வதால். பகவானைக் காட்டிலும் பகவன் நாமம் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று ஏற்பட வில்லையா? அது போல ஆசார்யனுடைய திருநாமம் கூடச் சிறந்தது. ஏனெனில் பகவானே, ஆசைப் பட்டதன்றோ? ஆசார்யாவதாரம், ஸாது பரித்ராணார்த்தமாகவே, ராமக்ருஷ்ணாதி ரூபத்திலல் அவதரித்தான், பகவான். அப்படி யிருக்கச் செய்தேயும், ஒருவன் கூட பகவானைக் கிட்டி ஆச்ரயிக்கவில்லை. இவ் விஷயத்தை கீதையில் 'அவஜானந்தி மாம்மூடா': என்று அருளிச் செய்தான். ஆகவே, ஆசார்யாவதாரமே, சிறந்தது, திருத்திப் பணி கொள்ளக் கூடியதன்றோ இவ்வவதாரம். ஆகவே பகவதவதாரத்தைக் காட்டிலும், ஆசார்யாவதாரமே சிறந்தது என்று ஏற்படுகிறது. ஆசார்யா வதாரத்துக்கு அனுப்ரவேசாவதாரம் என்று பெயர் - இந்த அவதாரத்தைக் கூட பகவானே செய்கிறான். अनुप्रविश्य कुरुते यत्समोहि तमच्युत என்கிற ப்ரமாணத்திலல் அறிகிறோம். அப்படிப்பட்ட ஆசார்ய பரம்பரையில் நம் ஸ்ரீமதாண்டவன் அவதாரம் ஏற்பட்டது நம் பாக்ய விசேஷமே. ஸ்ரீமதாண்டவனின் திருநாமமோ வெனில் 'ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்' என்று, गुरोर्नाम सदा जपेत् என்கிற கணக்கில் ஸதாத்யானம் பண்ணுவதற்கே. இத் திருநாம சிறப்பைப்பற்றி கொஞ்சம் விக்ஞாபித்துக் கொள்ளுகிறேன். வேதாந்தம் என்பது ஸ்ரீநிகமாந்த தேசிகனைக் குறிக்கிறது. ராமானுஜன் என்பது ஸ்ரீ பாஷ்யகாரரை. ஆகவே, இந்தத் திருநாமத்தில் கர்மதாரயசமாசத்தை விவரித்தால், ஸ்ரீ தேசிகனும், ஸ்ரீ பாஷ்யகாரரும் சேர்ந்து ஒருவராக நம் ஸ்ரீமதாண்டவனாக அவதரித்தார்கள் என்று சொல்லலாம்.

आचार्यन् கீழ் விண்ணப்பித்த பிரமாணத்திதிலுல், பகவா னுடைய அம்சமாகையாலே, 'தே வ மி வ ஆசாரியம் உபாஸீத' என்று சுருதியிட்ட கட்டளைக் கிணங்க மலர் வழி யாக அர்ச்சித்து, இப்படிப்பட்ட 'ஸ்ரீமதாண்டவன், பல் லாண்டு பல்லாண்டு இந்த நிலவுலகத்தில் எழுந்தருளி இருந்து சிஷ்யோஜ்ஜீவனம் செய்யும்படி அனுகிரஹிக்கும்படி, ஸ்ரீரங்க நாச்சியாருடன் கூடின ஸ்ரீ ரங்கநாதனை ப்ரார்த்திப்போமாக. பாதுகையே துணை.

ஸ்ரீ:

ஸ்ரீமதாண்டவன் ப்ரபாவம்

(ஸ்ரீ உப. வே. வானமாமலை தோஸகாசார்யர் ஸ்வாமி)

சுரக்கும் கருத்துடைய தேசிகன் கண்றென நம்மை எண்ணி சுரக்கும் சுரபிகள் போல் சொரிகின்றனர் சொல்லமுதே, என்று சாஸ்திரங்களும் வேதங்களும் முறையிடுகின்றன. திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதாழ்வார் என்கிற அயர்யாப்தாமிருதன் நித்யவாஸம் செய்யும் ஸன்னிதி கோபுரச் சாயையில் வாதூல பத்மனாபாசார்யர் என்னும் மஹநீயன் மேற்படி ஸந்நதியில் அத்யாபக கைங்கர்யபரராக ஏள்ளியிருக்க, 1907 (பராபவ) ஹூ பங்குனி மாதம் சுக்லபக்ஷ புஷ்ய நட்சத்திரத்தில் புருஷப் பிரஜை ஜனிக்க தம்பதிகள் (தமத்புதம்) என்கிற படி பிதாபுத்ரேண்விதமான் (புத்நாம்ந: நரகாத் த்ராயதே இதிபுத்ர:). உன்னைக் கண்டார் என்ன நோன்பு நூற்றூர்களோ? ''இவனைப் பெற்ற வயிறு உடையாள்'' என்கிற பெரியாழ்வாரின் ஸூக்திப்படியும் ஸஜாதோயேந ஜாதேந) ''ஈன்ற பொழ்தில் பெரிது உவக்கும் தன்மகனைச் சான்றோர் எனக்கேட்ட தாய்'', ''தாயின் குடல் விளக்கம் செய்த தாமோரனே'' என்கிறபடி குலம் விளங்கவந்த குழந்தையைக் கண்டு களித்து, ஸந்தோஷித்து, புஷ்யேஜாதஸ்து பரத: மீன லக்னேப்ரஸன்னதீ: என்கிறபடி ஸ்ரீநிவாஸராகவன் என்ற நாம கரணம் செய்தார்கள். ஹிரண்யகசிபு தபஸுக்குச் சென்ற சமயம் அவனுடைய பத்நீ கயாது கர்ப்பத்தில் ப்ரஹ்லாதாழ்வான் வாஸம் செய்த போது, தேவேந்திரன் ராக்ஷஸப்பூண்டு கூடாது என்று அவளை வதம் செய்யப் பலாத்காரமாக இழுத்துச் செல்ல நாரதர், ஸ்திரீயை அதிலும், கர்ப்பஸ்திரீயை வதம் செய்வது சூரத்தனமல்ல; உனது பெளரு ஷத்தை ஹிரண்ய கசிபுவிடம் செலுத்து என்று தடுத்துக் கயாது வைத் தனது ஆச்ரமத்துக்கு அழைத்துப் போய் வைத்திருக்க, தனது புருஷன் தபசில் இருந்து திரும்பி வந்த பிற்பாடு, தனது குழந்தை ஜனிக்கும்படியாகப் பிரார்த்திக்க,

அப்படியே நேர்ந்ததாகவும், ஸ்ரீ நாரதர் கயாதுவுக்குப் பகவானின் சரிதங்களையும், தர்மங்களையும் கதையாகச் சொல்ல, அசதியினால் கயாது தூங்க, கர்ப்பத்தில் இருக்கும் சிசு பிரஹலாதன் ''ஊம்'' கொட்டி ரசித்து, கதையைக் கேட்டு, தத்வத்தை உணர்ந்ததாக ஸ்ரீபாகவதத்தில் சுகபிரஹ்மம் நிரூபிக்கிறது. கருவிலே திருவுடையார்—கர்ப்ப ஸ்ரீமான். ஸ்ரீ என்பது ஸம்பத்து, யசோதனர், தபோதனர் என்பது போல் வித்தையாகிற ஸ்ரீயை, ஸம்பத்தைக் கருவிலேயே மேற்படி குழந்தை அடைந்த படி. ஸ்ரீபத்மனாகாசார்யா சிஷ்யர்களுக்கு ஸ்ரீ ஆழ்வார்கள் ஸூக்திகளைச் சந்தை திருவை சொல்லும் போதே கேட்டு ஞானவானைத் திகழ்ந்தது. கர்ப்பாத் அஷ்டமே வர்ஷே ப்ராம்மணம் உபநயீத என்கிற பிரகாரம் உபநயனத்பூர்வமே ஸ்ரீ ஆழ்வார் ஸூக்திகளையும் ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்ரஜாலங்களையும் கரதலாமலகமாகக் கற்றுணர்ந்தபடி. ஏக ஸந்த க்ராஹியாகத் திகழ்ந்தபடி. காவ்யம், சம்பூ, அலங்காரம், நாடகம், ந்யாயம் கற்று, சிரோமணி பாஸ் செய்து, ஸபைகளில் பரீக்ஷைகள் கொடுத்து ஸம்மானம் பெற்றுத் திகழ், தேரழுந்தூர் ஆண்டவனிடம் பஞ்சஸம்ஸ்காரம் உபதேசம் முதலியவற்றைப் பெற்ற காலத்தில் ஸ்ரீ தேசிகமாதுலரான ராமாநுஜனுடன் ஐந்து வயதில் காலக்ஷேப கோஷ்டிக்குப் போன சமயம் விசேஷ கடாக்ஷம் பெற்றதாகச் சரித்திரம். அன்றே அடக்கலம் கொண்ட நம் அத்திகிரித் திருமால் என்கிறபடி, ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவன் கிருபா கடாக்ஷத்துக்கு இருபது திரு நக்ஷத்திரத்திலேயே புராணங்கள், ஆழ்வார் ஸூக்திகள், ஸ்ரீ தேசிகன் ஸூக்திகள், ஸ்ரீ பாஷ்யம் முதலிய ஸம்பரதாய கிரந்தங்களை மதராஸ், பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் கேட்டவர்கட்கு, காலக்ஷேபம், ப்ரவசனம் செய்து கொண்டு எழுந்தருளி இருக்க ஆக்கூர் ஸ்ரீமதாண்டவனிடம் ஆத்ம ஸமர்ப்பணம், பர ஸமர்ப்பணம் என்னும் உபாயத்தை அனுஷ்டித்து மேற்படி ஆண்டவன் பரிபூர்ண கடாக்ஷத்தைப்பெற்று, 1963-ம் வரு மார்ச்சு மாதம் ஸ்ரீ தெம்பரை ஆண்டவன் பரமபதித்தபோது மேற்படி ஆசார்யர்களின் நியமனத்தினாலும் மானிட உலகம் செய்த தவப்பயனாலும் துரீயாச்ரமத்தை ஏற்று, இந்த மூன்று வருஷங்களில் தமிழ் நாடு, ஆந்திரம், கேரளம், மைசூர் முதலிய இடங்களில் கால்நடையாகவே ஐயாயிரம் மைலுக்கு மேல் தேச சஞ்சாரம் செய்து ஆங்காங்கு பஞ்ச ஸம்ஸ்காரம்,

பரமர்ப்பணம், உபதேசங்கள், புராண ப்ரவசனம், உபந்யாசங்கள் செய்துகொண்டு உலகத்தை உஜ்ஜீவிக்கச் செய்கிறபடி. பெரியாழ்வார் பல்லாண்டு பாடியது போல் பலகாலம் எழுந்தருளி இருக்கப் பிரார்த்தனை. இப்போது ஷஷ்டியப்த பூர்த்தி விழா நடப்பதுபோல் சதாபிஷேகமும் ஸஹஸ்ராபிஷேகமும் நடக்கும்படி ஸ்ரீ ரங்கநாதன் அனுக்ரஹிக்க வேணுமாய்ப் பிரார்த்தித்து, ஞான விளக்கைக் கொண்டு மனத்தில் இருளை மாற்றியவர்க்கு ஒரு கைம்மாறுயனும் காண்கிலான். ஆசார்யன் திருவுள்ளம் உகக்க, குரும்ப்ரகாசயேத்—மந்திரம் யத்னேன கோபயேத் என்கிறபடி கொண்டாடுவது நமக்கு ஸ்வரூபம் என்று விக்ஞாபிக்கிறேன்.

ஸ்ரீ:

நல்வாழ்வளிக்கும் திருவாக்கு

(வித்யார்த்தி தி ஈ கிருஷ்ணதேசிக தாஸன்)

திருமாமணி வண்ணன் செங்கண்மால், எங்கள் பெருமான் திருவடிசேரப்பெற்றதால் வாழும் வகை யறிந்தேன் என்றூர் சேமமுடன் திருமாலைக் கண்டு திருக்கண்டேனென உரைத்த பேயாழ்வார்.

கற்றூர்க்கோர் பற்றூகும் கண்ணன் கழலினையே என்றூர் காரிமாறன் சடகோபன். அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் நிற்க அருமறைகள் தமிழ் செய்தான் தானே தலைமேல் கொண்டு, தென்குருகூர் நம்பி என்றக்கால் அண்ணிக்கு மமுதூறும் என்நாவுக்கே என்றும், அன்னையாய் அத்தனாய் என்னை யாண்டிடும் தன்மையான் என்றும், மாறனை யல்லால் மறந்தும் தேவு மற்றறியேன் என்றும் மொழிந்தார் மதுரகவிகள்.

கருத்தில் புகுந்து உள்ளத்தின் கள்ளம் கழற்றி, ஓதிய வேதத்தின் உட்பொருளாய், அதன் உச்சி மிக்க சோதியை, நாதன் என்று அறியா துழல்கின்ற தொண்டர் பேதமை தீர்த்த, கற்றூர் பரவும் இராமானுசனைத் தொழும், கருதும், உள்ளம் பெற்ற பெரியோர் எவரோ எம்மை நின்றுளும் பெரியவர் என்றும், அவர் திருப்பாத மல்லால் என் தன் ஆருயிர்க்கு யாதொன்றும் பற்றில்லையே என்றூர், பூசுரர்கோன் திருவரங்கத் தமுதனார்.

இவ் வுலகில், பரமன், பாகவதர், பாகவதரைத் தொழும் பெரியோர் என்று மூவகை உண்டு. பரமன் பூமியில் பிறந்து புவியோர்க் கருளும் கருத்தோடு, கண்ணன் கணைகழலே காண்பதற்கு நன்கறிந்த இந் நாவலம் சூழ்ந்த நாட்டில், சாரதியாய் நின்று, சோதிவாய் திறந்து, அன்று ஐவர் தெய்வத் தேரினில் சிலவிசயனுக்குக் காய்ச் சீராக செப்பிய கீதையைக் கேட்டுச் சிந்தையில் கொண்டு சிரீதரனைச் சேர்ந்தவரும் சிலரே, சுகம் பெற்றவரும் சிலரே. நாரணனைக் காட்டிய வேதம் களிப்புறவும், தென் குருகூர் வள்ளலுடைய இன்பத்

திருவாய் மொழி யமுதைப் பாங்காய் மொழிந்து, பாரினில் வாழும் வகையைக் கண்ணன் காட்டிய வழியில் வகுத்துக் கொடுத்த நம் மிராமானுசனைப் பணிந்த அன்றே, அப் பொழுதே நானிலத்துள்ளோர் நண்ணரு ஞானம் தலைக் கொண்டு நாரணற்காளாயினர் என்பர் பெரியோர். அப் பெரியோர்களையே பரம பாகவதோத்தமர்களாகிய தொண் டர்கள் என்றும், எப்பொழுதும், தொழுது எழுவர்கள். இவ் விதம் இம் மூவரும் மொழிந்த மொழிவழி நடந்தால் நல் வாழ்வு நமக்கு அமையுமாம்.

அண்ணல் அச்சுதன் அர்ச்சுனனுக்கு மொழிந்தான், இம் மடவுலகர்கள் எல்லாம் காண வேண்டி எங்கள் கண் முகப்பே இருந்திடாய் ஒருநாள் என்றுழ்வார்கள் கனிந்துருகும் இவ் வுலகில், மண்மிசை யோனிகள் தோறும் மாதவனே பிறந்து கண்ணுற நிற்கிலும் இவ்வுல கோர்களெல்லாம் அவனைக் காணவில்லை. பரமனே என்னைக் காண்பாரில்லையே, அறி வாரில்லையே என்றும் குறைப் படுகிறான். ஏன் இது? கண் ணன் கூறியவைகளைக் கேட்டு அறிந்து கொள்வார் இல்லை. புரியவும் இல்லை.

கண்ணன் கனைகழல் காணவும், கருத்தில் கொள்ளவும் நன்கறிந்தது எப்பொழு தென்றுல் அந்தமிலா ஆரணங்களின் கருத்தை ஆய்ந்தெடுத்து செந்தமழாலளித்த ஆழ்வார்களின் அமுத வாயினின்றும் பெருகித் தெவிட்டாத தேனைகத் தித் திக்கும் தூய தமிழ் மறை தோன்றிய பிறகுதான். அப் பொழுதும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால் வகைப் புருஷார்த்தங்களின் மெய்ப் பொருளை உலகோர் உணர முடியவில்லை. அதை உலகோர் அறியும் வண்ணம் உகந்து உணரும்படி உரைத்தார் உடையவர்.

நம் ஆண்டவன் திருவருள் நோக்காலும், அமுத மொழி யாலும் ஆகர்ஷிக்கப்பட்டு அனைவரும் ஆனந்தக் கூத்தாடு வார்கள். அது மட்டுமா! அவனியிலுள்ள அனைவரும் வாழ வும், நன்முக நலமுடன் வாழவும் அல்லவோ இத் தேனிலும் இனிய திருவாக்கு தாரணியில் பெருக்கெடுத்தோடுகிறது. தேனே, பாலே, கன்னலே, அமுதே என்றிருக்கும் நந்திருமால் திருநாமங்களும், ஸ்ரீ ஆண்டவன் திருவாக்கிலிருந்து வரும் பொழுது, வஞ்சனை நெஞ்சுடையோரையும் உருக்கி, உள் கரைந்து கண்ணீர் அருவி சோர வல்லவோ வைக்கும். மேலும் உள்ளத்தை மாசறுக்கும், உலகளந்தோலுடு கூடிக் களிக்கவில்லையே என்றும் ஏங்கச் செய்யும்; உண்மையை

உணரச் செய்யும், உன்னை யெங்ஙனம் மறந்து வாழ்வேன் என்று பித்தர் போல பிதற்றச் செய்யும்; மேலும் அனைவரையும் ஆட்கொள்ளத் தோன்றிய ஆயர் தங் கோவினுக் கடிமையாக்கும் நம் ஆண்டவனின் நல்வார்த்தைகள். அருள் நோக்காலும், மொழியமுதாலும், அனைவருக்கும், அளித்த, அளிக்கிற, அளிக்கப்போகும் பேரருளுக்குப் புவியில் பகரும் பல மொழிகளாலும் புகழ்ந்துரைத்தாலும் போறாது. அப்படி அருள் பெற்ற, பெற்றுக்கொண் டிருக்கிற அடியார் குழாங்களுள் அடியேனும் ஒருவன். மூன்று வருடத்திற்கு முன் அந்த மில் சீர் அயிந்தையில் அடியவர்க்கு மெய்யன் திருவடி பணிந்து ஆண்டாளின் அமுதமாம் திருப்பாவை ஆறைந்தும் காலக்ஷேபம் ஸாதித்தருளியிருந்த பொழுது, அடியவர்க்கு மெய்யன் மாசிக் கடலாடி வந்து உலாவும் இராஜகோபாலன் திருவாசல் முன் ''மாலே'' என்கிற திருப்பாசுரத்தன்று, அடியேனுக்கு அன்றைய முகவுரையை சுருக்கமாகவும், அழகாகவும் ஸாதித்து, கோஷ்டியில் விண்ணப்பிக்கும்படி நியமித்தாயிற்று. சொன்னதைச் சொல்லும் பக்ஷி களாயிருந்தால், ஆனால் சொன்னதை மறக்கும், ஏன் சொல்லும் பொழுதே மறுக்கும் நிலையுடைய அடியேன் ஏதோ ஒருவாறு அன்று விண்ணப்பித்துவிட்டேன். பிறகுதான் யாத்திரையாகவே ஸ்ரீ ஸ்ரீ ஆண்டவன் திருவடிவாரத்தில் இருந்துகொண்டு செவிக்கினிய செஞ்சொல்லைப் பருகும் பாக்கியம் பெற்றேன். சில சிறிய உபன்யாஸங்கள், பகவத் விஷயம் முதலானவைகளை உபதேசிக்க ஆரம்பித்தாயிற்று. விச்வாவஸு வரு மார்கழி மாதத்தில் அடியேனை திருப்பாவை சொல்லவேண்டும் என்று நியமித்து திருப்பாவையை விசேஷமாக காலக்ஷேபமாக ஸாதித்தாயிற்று. மதுரை தல்லாகுளம் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் கோயிலில் உபன்யாஸம் சொல்லவும் அனுப்பி யருளியாயிற்று. அடியேனுக்கோ ஒன்றுமே தெரியாது. ஆனால் ''ஆசையோ பெரிது கொள்க அலைகடல் வண்ணர் பாலே'' என்கிறபடி உபன்யாஸம் சொல்லவேண்டும் என்ற எண்ணமோ அன்றும், இருந்தது, இன்றும் உள்ளத்தில் எழுந்து கொண்டே இருக்கிறது. நம் ஆண்டவனின் அருளைப் பெற்றிருப்பதினால் அது பூரணமாகிவிடும் என்ற நம்பிக்கை மட்டும் என்றும் உண்டு. கூட இருந்தவர்கள் இவனால் என்ன சொல்ல முடியும்! என்றனர், அதற்கு ஆண்டவன் நயினாசாரியாரின் சிஷ்யரான பிரதிவாதி பயங்கரம் அண்ணனின் திவ்ய சரித்தத்தை ஸாதித்து, விசேஷமாகப் பூர்வாசார்யர்களுடைய திருப்பாதுகைகளையும் அனுக்ரஹித்து, அடியேனை அனுப்பியருளியாயிற்று. ''நன்னெஞ்சே நம்பெருமான் நமக்

கருள் தான் செய்வானே'' என்று நினைத்துக் கொண்டு மதுரைக்குச் சென்றேன். பெரியாக்காட்பட்டக்கால் பெரும் பயன் கிட்டுவதைக் கண்கூடாகக் கண்டு குதூகலம் கொண்டேன். இம்மாதிரி பயன் பெற்றோர், பெறுகிறவர், பெறப் போகிறவர் இப் பூவுலகில் உள்ளோர் அனைவருமே.

கண்ணன் கழல் தொழவும் காணவும் கருதும் கருத்தே என்றும், கண்ணன்தாள் வாழ்த்துவதே கல் என்றும் ஸ்ரீஸூக்தியால் பூர்வாசிரமத் திருநாமத்திலீடுபட்டு அடிபணிந்து அல்லல் எல்லாமகலப் பெற்றவர்கள் இப்பொழுது வந்து நம் ஆண்டவனின் திருவடித் தாமரைகளில் பணிந்து, மேன்மேலும் மேன்மையடையவும், நல்வாழ்வு பெறவும் நல்வாக்கு அருள வேண்டுவதையும் கண்டால், கரிய மாமுகில் உருவாகிய அக்கமலக் கண்ணனையும் விஞ்சிய பெருமை காண்கிறோம். துரீயாச்ரமத்தில் அபிநவ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகனாக அவதரித்து, அருளும் பெருமையோ அளவிடவொண்ணாது; தேரழுந்தூர் ஆண்டவனின் திருவவதாரமே என்று எல்லோரும் போற்றிப் பணியும் நம் குடந்தை ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் அடிபணிந்தவர்கள் அவ்விடம் விட்டு அகலவே மாட்டார்கள். ஸ்ரீமந் நிகமாந்த தேசிகனையும், நம்பி ராமானுசனையும் ஸேவிக்கப் பெருமல், அவர்களுடைய நல்மொழிகளுக்கு நேரில் கேட்க முடியாமல், இந் நூற்றாண்டில் பிறந்த நமக்கு, ஆண்டவனை ஸேவிக்கப் பெற்றவுடன், அக்குறை எல்லாம் நீங்கிவிடும், இதை இப் பொழுதும் திவ்ய தேசங்களிலுள்ளவர்கள் அனுபவித்திருக்கிறார்கள். 108 திருப்பதிகள் என்றிருக்கும் க்ஷேத்ரங்களில் திருவைகுந்தம், திருப்பாற்கடல், இவ்விரண்டும் இப் பூமண்டலத்தில் இல்லாததினாலும், சாளக்கிராமம் என்கிற க்ஷேத்ரம் ஸேவிக்கவில்லை யாகையாலும், இம் மூன்று தலங்கள் தவிர, மற்றுமுள்ள 105 திவ்ய தேசத் தெம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்தாகி இருப்பதை நம் ஆண்டவன் மலை நாட்டுத் தென் திருக்காட்கரையில் ஸாதித்தாயிற்று. கல்மாரி பொழிந்திட கடிதானைக்கிடர் நீக்க, சென்றுகுன்ற மெடுத்தானும் கண்ணன். தொண்டர் உள்ளவிடம், தாமரை யன்ன திருவடிகள் நோவ தண்டகாரணியம் தேடிச் சென்று துணைபுரியும் ஓர் அற்புதமாய் அயோத்தியில் தோன்றிய தூய கற்பகமாம் தாசரதி என்று போற்றப்படும் பரமனைப் போல், பரமகிருபையாலே பாததூளி படுதலால் பாக்கியம் செய்த இப் பாரினில் பாத இலச்சினைபடி நடந்து, பூதலம் காக்கவும், பாகவதர்களுக்குப் பாங்காகவும், சாலவும் பரிந்து அருளும் பூங்குடந்

SRIRANGAM SRIMAD ANDAVAN ASHRAMAM

தைப் பீதகவாடைப் பிரானின் பழமொழிகளின் பெருஞ் சிறப்பு பன்னியுரைக்குங்கால் பாரதமாம் என்று போற்றிப் பாதக் கமலங்களைப் பணிந்து, பேதையேன் பெற்ற பெரும் பயனை விண்ணப்பித்து, உலகை நன்முக நல்வாழ்வு வாழ வைக்கும் திருவாக்குடைய நம் திருக்குடந்தை ஆண்டவன் திருவடிகளில் இம் மஹோத்ஸவத்தில் இம் மலரை ஸமர்ப் பிக்கிறேன்.

ஸம்ஜீவயதி லோகான் வையஸ்யவாணீ ஸுதாமயீ |
தம்வந்தே நூதனவேதாந்த லக்ஷ்மணயோகி புங்கவம் ||

ஸ்ரீ:

ஸ்ரீமத் ஆண்டவன் பாத இலச்சினை பட நடந்தருளிய பிரதேசங்கள்

(டி. இ. கிருஷ்ணதேசிகன், வித்யார்த்தி)

தேவாதிநாத கமலாப்ருத நேசபூர்வாம்
தீப்தாந்தராம் வகுளபூஷண நாதமுக்யை:
ராமாநுஜப்ரபிருதிபி: பரிபூஷிகாக்ராம்
கோப்த்ரீம் ஜகந்தி குருபங்தி மஹம் ப்ரபத்யே ||

பங்கயக் கண்ணன், பெரிய பிராட்டியார், சேனைநாதன் முதலாக உள்ளதும், வகுளாபரணரான நம்மாழ்வாரை நாதனைக் கொண்டதால், தீபம் போல் ப்ரகாசிக்கும் ஆழ்வார்களால் நடுபாகத்தை யுடைதாயும், ராமானுசன், ராமனுச அப்புள்ளார் முதலான ஆசார்ய ச்ரேஷ்டர்களால் விசேஷமாக அலங்கரிக்கப்பட்டும், உலகையே ரக்ஷிக்கின்றதான இப் பொழுது வரையிலுள்ள ஆசார்ய கோஷ்டியை அடியேன் அடிபணிந்து நிற்கிறேன் என்று நம் தூப்புல் வள்ளல், ஆசார்யர்களுடைய பெருமையை நினைந்து போற்றிப் பேசுகிறார். அவ்வளவு பெருமை யுடையவர் ஆசார்யர்கள் என்பது இதனால் நமக்குத் தெரிகிறது. திருமாமகள் என்றும் சேரும் திருமார்பனை தேவாதி தேவன் செய்தருளும் பேரருளுக்குப் போற்றிப் பேசியோ, பல மொழிகளால் பலவிதமாக விரித்தெழுதியோ முடித்துவிடலாமென்றல் நம்மால் முடியாது. அன்றொரு நாள் இவ் வுலகை யாக்கிய எம்மீசன் இங்கே நாம் பெறுவதெல்லாம் பெற்று வாழ வகை செய்தான். பாரினில் தானும் வேண்டுருக்கொண்டு பல படியாகப் பாங்காகப் பக்தர்களுக்குப் பேரருள் புரிந்தான். பூதலங் காக்கவே பாரித்துக் கொண்டு பலபதிகளைத் தோற்றுவித்துத் தானும் அவ்விடங்களில் அர்ச்சையாக எழுந்தருளினான். அத் திருப்பதி எம் பெருமானே மங்களாசாஸனம் பண்ண வேண்டித் தானே ஆழ்வார்களாயும் ஆசார்யர்களாயும் அவதரித்தான். ஏன் இம்மாதிரி அவன் தோன்ற வேண்டும் என்றால், அதுவும் அவன்

திருவருளேதான். உலகை ரக்ஷிக்கவே ஆசார்யனுடைய திருவுருவில் அவன் எழுந்தருளுகிறான் என்பதை நாம் அனேக திவ்ய ஸூக்திகளால் தெரிந்து கொள்கிறோம். அவ்விதமாக அனுக்ரஹிக்கத் திருவுள்ளங் கொண்டு தோன்றிய திரு அவதாரங்களில் ஸ்ரீமத் ராமானுஜ முனியாகிய அவதாரமும் ஒன்று. அந்த அவதாரத்தில் ஸ்ரீமத் ராமானுஜ முனி என்னும் ஸ்ரீ பாஷ்யகாரர் நூற்றெட்டு திவ்ய தேசங்களுக்கு எழுந்தருளியும், எம் பெருமான்களை மங்களாசாஸனம் பண்ணியருளியும், பரமனடியார்களுக்குப் படிப்படியாகப் பாங்காக உபதேசங்கள் செய்தருளியும், தான் திருவவதாரம் பண்ணிய பிரயோஜனம் பூர்த்தியான படியாலே பேரானந்தம் கொண்டார். இதைக் கூரத்தாழ்வான் திருக்குமாரரான ஸ்ரீபராசரபட்டர் முக்தக ஸ்லோகத்தில்

ஸ்ரீரங்கம் கரிசைலமக்ன கிரிம் தார்க்ஷ்யாத்ரி சிம்மாசலெள
ஸ்ரீகூர்மம் புருஷோத்தம் ச பதரீ நாராயணம் நைமிசம் |
ஸ்ரீமத்வாரவதி ப்ரயாக மதுரா யோத்யா கயா: புஷ்கரம்
ஸாலக்ராம கிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோ யம்முனி:

என்று அருளிச் செய்திருக்கிறார்.

ஸ்ரீரங்கஸ்தல வேங்கடாத்ரி கரிகிர்யோதெள சதேஷ்டோத்தரே
ஸ்தானேக்ராம நிகேதனேஷு ஸதா ஸாந்நித்யமாஸேதுஷே |
அர்ச்சாரூபிண மர்ச்சகாபிமதித: ஸ்வீகுர்வதே விக்ரஹம்
பூஜாம்சாகில வாஞ்சிதான் விதரதே: ஸ்ரீசாய தஸ்மைநம:

என்று பரத்வாதி பஞ்சகத்தில் ஸ்ரீமத் வேதாந்த தேசிகனுடைய ப்ராசார்யராயும், நடாதூர் அம்மாள் என்றும் பிரசித்தராயும் எழுந்தருளியிருந்த வாத்ஸ்ய வரததேசிக ஸ்வாமியும் ஸ்ரீரங்கம் முதலான திவ்ய தேசங்களிலும், கிராமம், நகரம் முதலான இடங்களிலும் அர்ச்சையாய் எழுந்தருளி, பரம கிருபையுடன் திருவாராதனம் கண்டருளி இவ்வுலகோர்களுக்கெல்லாம், அவரவர் ஆசைப்படும் பயன்கள் அனைத்தும் கொடுத்தருளும் ஸ்ரீய: பதியை ஸேவிக்கிறேன் என்று மங்களாசாஸனம் செய்துள்ளார்.

ஸ்ரீமத் பாஷ்யகாரர் ப்ரத்யக்ஷமாய் அனுபவித்தும், நடாதூர் அம்மாளால் மங்களாசாஸனம் பண்ணப்பட்டதாயுமிருக்கிற திவ்ய தேசங்கள், புராண ஸ்தலங்கள், நகரங்கள், கிரா

மங்கள் எல்லாவற்றிற்கும் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்தில் எழுந்தருளி அனுக்கிரஹிக்கும் வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் என்னும் நம் திருக்குடந்தை ஆண்டவன், ''நாதனே நரசிங்கனே நவின்றேத்துவார்களுழக்கிய பாத தூளிபடுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே'' என்று ஆழ்வாரால் போற்றப்படும் திருப்பதிகளுக் கெல்லாம் பாதயாத்திரையாகவே எழுந்தருளி எம் பெருமான்களை எல்லாம் மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு ஆராமம் சூழ்ந்த திருவரங்கமாநகரில் உள்ள நம் பெரியாச்ரமத்திற்கு எழுந்தருளியாகி யிருக்கிறபடி. அடியார்களுக்காக அன்றொரு நாள் அன்னமாய் அருமறை தந்தான் அரவனைத் துயில் கொள்ளும் அண்ணல். பிறகு அருமறையின் பொருள் ஆழ்வார்களாய் இன் தமிழ் மறை தந்தான். அது மறையவே அன்றொருநாள் அலைகடலைக் கடைந்து ஆராவமுதாகிய தான் பெண்ணமுதுண்டு, விண்ணவர்க்கு அமுதூட்டிய அவ்வாரா வின்னமுதே முன்னம் மறையும் தந்து, அமுதும் அளித்து நாதமுனிகளுக்காகவும், நம்முடைய பாக்யத்தாலும் நமக்கே நாலாயிரமாம் தமிழ்மறை யென்னும் ஆராவமுதக் கடலை தந்தளித்தான் என்பதினுலேயே அர்ச்சையிலேயே தான் ஆராவமுதாழ்வானகி நின்றான். அவ்வாராமுதாகிய பூங்குடந்தைக் கண்ணபிரானே இப்பொழுது குருமணியாக அவதரித்து தன்னுல் உண்டான உலகில் தன் பெருமையை நிலைநாட்டத் திருவுள்ளங்கொண்டு, ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ மஹா தேசிகனகத் திருவவதாரம் செய்திருக்கும் பெருமையை எழுத்திலும் வடிக்க முடியாது, சொல்லாலும் கூற இயலாது. மூவரில் முதல்வனுய் ஒருவனை அவ்வெம் பெருமான் பரகால நாயகிக்கு எப்படி பஞ்சேந்திரியங்களுக்கும், அனுபவிக்கும் வகையில் திருக்குறுந் தாண்டகத்தில், கண்ணுக்கினியனகவும், செவிக் கினியனகவும், நாவிற் கினியனகவும், திருமேனியைத் தொழுது அணையலாம்படி ஆசைப்பட இனியனகவும், நாசிக் கினியனகவும் அனுபவித்தாரோ, அம்மாதிரியே நம் ஆண்டவனும் நமக்கு அனேக விதங்களிலும் அவனிலும் இனியனக ஸேவை ஸாதிக்கிறபடியைக் கண்கூடாக இப்பொழுதும் நாம் காணமுடியும், ''மாசற்றூர் மனத்துள்ளானே வணங்கி நாமிருப்பதல்லால் பேசத்தானுவதுண்டோ'' என்பதற்கேற்ப, நாம் இப்பொழுது எழுதத் தொடங்குவதும், சொல்லுவதும், நாம் ஸத்தை பெறுவதற்காகவே யல்லது ஆண்டவன் பெருமையை உள்ளபடி அறிந்து சொல்லவே முடியாது. பெருங் காற்றிலே இழியுமவர்களைப் போலே உள்ளே அமுங்கி இருக்கலாமே யொழிய பேசித் தலைக்கட்ட வொண்ணுது, என்றுதான் கூறத் தோன்றுகிறது.

இந்த ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவத் திருநாளில் அவ்வாசார்ய வள்ளல் பரமகிருபையுடன் எழுந்தருளி திருப்பாத இலச்சினை தந்து, பக்தர்களை அனுக்ரஹித்த பரம பாவனமான பிரதேசங்களின் பெயர்களை எழுதி பயன் பெறலாமே என்று திருவரங்கம் முதல் ஆரம்பித்து ஆந்திரம், கன்னடம் தமிழ் நாடு, மலையாளம் முதலான பிரதேசங்களில் எழுந்தருளியான பெயர்களை எழுதி திருவரங்கமாநகர் வந்து சேர்ந்தருளிய வரை யனுபவிப்போம்.

ஸ்ரீரங்கம்
கொண்டயம்பேட்டை
உத்தமசேரி
தோஹூர்
கோவிலடி
புதுச்சத்திரம்
கோனேரி ராஜபுரம்
தில்லைஸ்தானம்
ராயம்பேட்டை
கல்யாணபுரம்
வெண்ணற்றங்கரை
மாரியம்மன்கோவில்
கம்பயந்தத்தம்
வடுவூர்
மன்னர்குடி
சேனங்குளம்
லக்ஷ்மணங்குடி
திட்டாணிவட்டம்
தாழக்குடி
திருக்கண்ணமங்கை
திருவாரூர்
கீவளூர்
நாகப்பட்டணம்
கீவளூர்
ஆழூர்
திருக்கண்ணபுரம்
உபயவேதாந்தபுரம்
சிறுபுலியூர்
மேட்டுப்பாக்கம்
மாயவரம்
செம்பேருனூர்கோயில்
தலைச்சங்காடு
பார்த்தன்பள்ளி
திருநாங்கூர்
திருநகரி
சீர்காழி
ஆயங்குடிப்பள்ளம்
சிதம்பரம்
புவனகிரி
புதுச்சத்திரம்
சம்பாரெட்டிப்பாளையம்
ஆதிநாராயணபுரம்
சுப்ரமண்யபுரம்
ராமாபுரம்
திருவஹீந்திரபுரம்
கடலூர், மஞ்சகுப்பம்
நெல்லிக்குப்பம்
பன்ருட்டி
பொய்யரசூர்
கிராமம்
டி. எடையார்
ஆவியூர்
திருக்கோவிலூர்
ஆவியூர்
டி. எடையார்
கிராமம்
பேரங்கியூர்
விழுப்புரம்
பொய்கைப்பாக்கம்
விக்ரவாண்டி
கூட்டேரிப்பட்டு
சிங்கனூர்

அஸூர்	அரக்கோணம்
வெள்ளிமேடு	அம்மனூர்
தையார்	புதுச்சத்திரம்
வந்தவாசி	காஞ்சீபுரம்
திருவத்தூர்	பழையசீவரம்
குடநகர்	வடக்குப்பட்டு
வேளியநல்லூர்	கரிச்சங்கால்
ஆக்கூர்	குரோம்பேட்டை
மாமண்டூர்	பல்லாவரம்
காஞ்சீபுரம்	நங்கைநல்லூர்
மாறல்	பல்லாவரம்
உத்திரன்மேரூர்	குரோம்பேட்டை
மாறல்	திருநீர்மலை
அரசாணிப்பாலை	பல்லாவரம்
காஞ்சீபுரம்	திருவல்லிக்கேணி
திருப்புட்குழி	மைலாப்பூர்
தாமல்	திருவல்லிக்கேணி
கூரம்	மூட்டைக்காரன்பேட்டை
சங்கரம்பாடி	செம்மஞ்சேரி
அவளூர்	சிறுசேரி
திருப்பாற்கடல்	திருவிடந்தை
பூண்டி	குளத்தூர்
வாலாஜா	சிங்கப்பெருமாள்கோயில்
ராணிப்பேட்டை	புலிப்பாக்கம்
லாடபுரம்	பொன்விளைந்தகளத்தூர்
அம்மூர்	மணப்பாக்கம்
பெருங்காஞ்சி	நெல்வாய்
சோளஸிம்ஹபுரம்	உத்திரன்மேரூர்
ராமகிருஷ்ணபேட்டை	பாதிரி
தரணி	ஓரத்தி
புத்தூர்	சிங்களூர்
வடமலைப்பேட்டை	விக்ரவாண்டி
திருச்சானூர்	வெங்கடாத்ரியகரம்
திருமலை	ஸவர்ணவூர்
கீழத்திருப்பதி	நெல்லிக்குப்பம்
திருச்சானூர்	திருவஹீந்திரபுரம்
வடமலைப்பேட்டை	மஞ்சகுப்பம்
புத்தூர்	சிங்கிரிகோயில்
நகரி	பாண்டிச்சேரி
திருத்தணி	ஸ்வர்ணவூர்

நெல்லிக்குப்பம்
திருவயிந்தை
புதுப்பாளையம்
அயிந்தை: புதுப்பாளையம்
சுரப்பூர்
புராணசிங்கபாளையம்
திருமங்கலம்
வளவனூர்
ஸ்வர்ணபுரி
நெல்லிக்குப்பம்
மாளிகைமேடு
வெங்கடாத்ரி அகரம்
பொய்யப்பாக்கம்
விழுப்புரம்
சென்னெல்களம்
திருக்கோவலூர்
விரையூர் - மேற்கே
திருவண்ணாமலை
பெரிய குளப்பாடி
செங்கம் மேல்சங்கம்
சிங்காரப்பேட்டை
சாவல்பேட்டை
மத்தூர்
தொகரப்பள்ளி
கிருஷ்ணகிரி
புளியஞ்சேரி
சூளகிரி
சாமன்தோட்டம் -
பேரண்டப்பள்ளி
ஓசூர்
கித்திகானஹல்லி
பெங்களூர்
மல்லேசுவரம்
கவிபுரம்
கங்கேரி
விடுதி
ராம்நகர்
மழூர்
மத்தூர்
மண்டியா

துக்தா
மேல்கோட்டை திருநாராயணபுரம்
தொண்டனூர்
ஸ்ரீரங்கபட்டணம்
மண்டியா குப்பல்
உக்கரிக்கரை
ஸ்ரீரங்கராஜபுரம்
ஸோஸலே
டி. நரஸிப்பூர்
தலைக்காடு
கொள்ளேகாலம்
சிவசமுத்திரம்
ககநசுக்கி
பரசுக்கி
பிளக்வாடி
கிருஷ்ணபுரம்
ஸோஸலே
உக்கரிக்கரை
கிருஷ்ணபுரம் வழியாக
ஹெம்பிகை
தலைக்காடு
குமாரபுரம்
பிளிகிரி
சம்பாமரம் பார்கவநிதி
பிளிகிரி கோயில்
குமாரபுரம்
கொள்ளேகாலம்
சிவஸமுத்திரம்
மாரஹள்ளி
மரவல்லி
காளமுத்தனதொட்டி
மத்தூர்
மழுவூர்
ராம்நகர்
விடுதி
கங்கேரி
பெங்களூர்
கவிபுரம்
டபிள்ரோடு

மல்லேச்வரம்	மத்தூர்
தாஸாஹள்ளி	மண்டியா
நிலமங்கலா	ஸ்ரீரங்கப்பட்டணம்
த்யாமகுண்டல்	பச்சிமவாஹினீ
ஹீரஹள்ளி	மைசூர்
தும்கூர்	கண்ணம்பாடி அணைக்கட்டு
கொல்லஹல்லி	கே. ஆர். ஸாகரம்
குப்பி - ஹுப்பி	ஸாகரகட்டை
கடப்பா	ஹம்பாபுரம்
ஒடவனகட்டா	ஸாளக்ராமம்
மாஹிசந்திரா	சிஞ்சினகட்டை
பள்ளூர்	கே. ஆர். நகர் (எடத்தரை)
கதபள்ளி	பிளிக்கரை
கிலிஸாவே	எலிவாலா
நுக்கஹள்ளி	மைசூர் (ஒண்டிக்கப்பல்)
ஆல்தபள்ளி	மைசூர் ஸரஸ்வதிபுரம்
சாந்திக் கிராமம்	ஸ்ரீரங்கப்பட்டணம்
ஹாஸன்	மண்டியாகுப்பல்
அகரம்	பன்னூர்
பேலூர்	உக்கலிக்கரை
மாதஹல்லி	ஸோஸலே
ஹாஸன்	மோகூர்
அம்புகா	மாரள்ளி—எலந்தூர்
சாந்திகிராமம்	குமாரபுரம்
அப்பன்ஹள்ளி	பிளிகிரிமலே
சென்னராயப்பட்டணம்	குமாரனபுரம்
ஹிரிஸாவே	சாமராஜ நகரம்
கதஹள்ளி	மங்கலம்
நெல்லிக்கரை	மோகூர்
எடியூர்	டி. நரஸிப்பூர்
குணிக்கல்	ஸோஸலே
நாரசந்திரா	ஸ்ரீரங்கராஜபுரம்
நிலமங்கலம்	பன்னூர்
பெங்களூர் மல்லேச்வரம்	ஸ்ரீரங்கப்பட்டணம்
கவிபுரம்	தொண்டனூர்
மல்லேச்வரம்	மேல்கோட்டை
கங்கேரி	துக்தா
விடுதி	மண்டியா
ராம்நகர்	மத்தூர்
மழுவூர்	மளுவூர்

ஸ்ரீராம்நகர்
விடுதி
கங்கேரி
பெங்களூர் கவிபுரம்
மல்லேச்வரம்
வின்ஸன்கார்டன்
எப்பார் ஸ்ரீவைஷ்ணவஸபா
ஸ்ரீனிவாஸாகாலனி
கண்டோன்மென்ட்
சிக்கானஹள்ளி
ஓசூர்
காமன்தொட்டி
பழக்கோட்டை
சூளகிரி
புளியஞ்சேரி
கிருஷ்ணகிரி
காவேரிப்பட்டணம்
காரிமங்கலம்
தர்மபுரி
பாகல்பட்டி
தொப்பூர்
பூசாரிப்பட்டி
ஓமலூர்
சேலம்
மேட்டுப்பட்டி
ஏத்தாப்பூர்
ஆத்தூர்
தலைவாசல்
நயினார்பாளையம்
அடரி
விளாங்காடு
விருத்தாசலம்
ஸ்ரீமுஷ்ணம்
தொண்டைமுத்திரம்
காட்டுமன்னார்கோவில்
எய்யலூர்
காளி
தேரழுந்தூர்
நடுவக்கரை
நடுவக்கரை
கும்பகோணம்
திருவெள்ளியங்குடி
ஒப்பிலியப்பன்கோவில்
மாங்குடி
ஒப்பிலியப்பன்கோவில்
நடுவக்கரை
திருக்குடந்தை
நாதன்கோவில்
இன்னம்பூர்
புள்ளம்பூதங்குடி
கபிஸ்தலம்
ஆடுதுறைப் பெருமாள் கோவில்
வழுத்தூர்
கும்பகோணம்
நாச்சியார் கோவில்
திருச்சேறை
திருப்பிராஜபுரம்
நீடாமங்கலம்
மன்னார்குடி
விளக்குடி
மருதவனம்
தெம்பிறை
திருமக்கோட்டை
மதுக்கூர்
பட்டுக்கோட்டை
ஓட்டன்காடு
பேராவூரணி
ஆயன்குடி
அறந்தாங்கி
அரிமளம்
கடயக்குடி
புதுக்கோட்டை
ஆருங்கல்
திருமெய்யம்
நெடுமரம்
திருக்கோட்டியூர்
S. S. கோட்டை (சத்ருஸம்ஹாரகோட்டை)
மேலூர்

திருமோகூர்
மதுரை
ஆவணியாபுரம்
வலையங்குளம்
ஆவியூர்
கல்குரிச்சி (காரியப்பட்டி)
பாலையம்பட்டி
பந்தல்குடி
முத்தலாபுரம்
எட்டையபுரம்
எப்போதும் வென்றான்
காட்டுநாயகன்பட்டி
வாலஸமுத்திரம் (குறுக்குச் சாலை)
தூத்துக்குடி
வாகைக்குளம்
திருப்புளிங்குடி
ஸ்ரீவைகுண்டம்
பெருங்குளம்
தென்திருப்பேரை
ஆழ்வார்திருநகரி
திருக்கோளூர்
இரட்டைத் திருப்பதி
கருங்குளம்
மூலக்கரைப்பட்டி
வானமாமலை
திருக்குறுங்குடி
வானமாலை நூல்மில்
பொன்னைக்குடி
திருநெல்வேலி
கீழநத்தம்
மானூர்
அழகிய பாண்டியபுரம்
பணவடலிசத்திரம்
சங்கரன்கோவில்
கரிவலம்வந்த நல்லூர் (சோலைசேரி)
ராஜபாளையம்
ஸ்ரீவில்லிபுத்தூர்
மல்லி
செங்கமல நாச்சியார்புரம்
திருத்தண்கால்
கவளூர்
விருதுநகர்
வில்லூர்
தரளி
திருநகர்
டி. வி. எஸ். நகர்
சொக்கிகுளம்
தேசிகர்கோவில்
அழகர்கோயில்
நூபுரகங்கை
மதுரை சொக்கிகுளம்
தேசிகர்கோயில்
தானப்பமுதலிதெரு
சொக்கிகுளம்
அழகர்கோயில்
மேலூர்
வெள்ளியார் கோயில்
சிவகங்கை
சுந்தரநடப்பு
மாலைமதுரை
புதுக்கோட்டை
பரமக்குடி
பாண்டிக்கம்மாய்
ராமனுதபுரம் ஐயப்பன் மில்
திருப்புல்லாணி
ராமனுதபுரம்
பாண்டிக்கம்மாய்
பரமக்குடி
திருவரங்கி
மாலைமதுரை
சிவகங்கை
திருமாஞ்சோலை
திருப்புவனம்
மணலூர் (சிலைமான்)
மதுரை
துவரிமான்
சோழவந்தான்
வாடிப்பட்டி

அம்மையப்பநாயக்கனூர்
காந்திக்கிராமம்
திண்டுக்கல்
ரெட்டியார் சத்திரம்
பச்சிலைநாயக்கன்பட்டி
நரஸிம்மர் கோயில்
பழனி
மடத்துக்கொளம்
உடுமலைப்பேட்டை
கோலார்பட்டி
பொள்ளாச்சி
கிணற்றுக்கடவு
ஸுந்தராபுரம்
கோயம்புத்தூர்
கோயம்புத்தூர்
பாபநாயக்கன்பாளையம்
ஆவாரம்பாளையம்
கோயம்புத்தூர்
ராமனுதபுரம்
கோயம்புத்தூர்
கந்தய கவுண்டன் சாவடி
கஞ்சிக்கோடு
பாலக்காடு பள்ளிபுரம்
ஒற்றைப்பாலம்
மங்கரை
கொளப்பள்ளி
திருவித்துவக்கோடு
பட்டாம்பி
திருநாவாய்
இடப்பால்
சாலைச்சேரி
குருவாயூர்
சுரக்காட்டுக்கரை
திருச்சூர்
நெல்லாய்
சாலக்குடி
திருமூழிக்களம்
ஆல்வாய்
திருக்காட்கரை
எர்ணாகுளம்
உதயம்பேரூர்
வைக்கம்
கருத்திருத்தி
ஏட்டுமானூர்
கோட்டயம்
சிங்கவனம்
திருக்கடித்தானம் (செங்ணைச்சேரி)
திருவல்லவாழ்
திருவண் வண்டூர்
திருச்செங்கன்னூர்
திருவாறன்விளை
திருச்செங்குன்றூர்
திருப்புலியூர்
மாவலிக்கரை
கிருஷ்ணபுரம்
கருநாதப்பள்ளி (ச்யவரா)
கொல்லம்
பாரிப்பள்ளி
வற்கலை (ஜனார்த்தனம்)
ஆற்றங்கல்
குழக்கூட்டம்
திருவனந்தபுரம்
நையாற்றங்கரை
பாரசாலை
திருவாட்டாறு
புலியூர் குறுச்சி
திருவண்பரிசாரம்
பணகுடி (சத்திரம்)
கோவையிலிருந்து நாகர் கோவில் வரை உள்ள 610 மைல் ஒரு மாதத்தில் எழுந்தருளியாயிற்று
திருக்குறுங்குடி
வானமாமலை
நாங்குனேரி மில்
வானமாமலை
பொன்னக்குடி
பெருமாள்புரம்
கீழநத்தம்

கருங்குளம்
ஆழ்வார் திருநகரி
திருக்கோளூர்
ஸ்ரீவைகுண்டம்
நத்தம் (வரகுண மங்கை)
திருப்புளிங்குடி
கிருஷ்ணபுரம்
கீழநத்தம்
திருநெல்வேலி டவுன்
சேரன்மாதேவி
அம்பாசமுத்திரம்
ஆலங்குளம்
வீரகேரளம்புதூர்
குறிஞ்சாக்குளம்
சங்கரநாராயணன் கோவில்
சோலசேரி
ராஜபாளையம்
ஸ்ரீவல்லிபுத்தூர்
நத்தம்பட்டி
கல்லுப்பட்டி
ஸ்ரீப்பலாபுரம்
திருமங்கலம்
மதுரை சொக்கிகுளம்
கோச்சடை
சோழவந்தான்
அம்மைநாயக்கனூர்
திண்டுக்கல்
வடமதுரை
வையம்பட்டி
மணப்பாரை
ராம்நகர்
திருச்சி
ஸ்ரீரங்கம் வரை மொத்தம்
5,000 மைல்கள் இவ்வூர்கள்
எழுந்தருளியபடி.

श्रीः

ब्रह्मसूत्राधिकरणाववेकः

श्री. उभ. वे. विद्वान् गोपालाचार्यः

श्रीमते रामानुजाय नमः

अध्यायः १ पादः १

शं :— अधि–११ सू–३१ राः —अधि–११ सू–३१

अधिकरणसंख्या उभयोः समाना ।

"हेयत्ववाचनाच्च" इत्येतदनन्तरं "प्रतिज्ञावचनात्" इति एकं सूत्रं श्रीभाष्यकारसम्मतं वर्तते । शङ्करार्यरीत्या सूत्रमेतत् नास्ति । एवं मध्वार्यभास्करादयः केचित् नाङ्गीचकुर्वन् ।

आद्येऽध्याये च पादे पुनरधिकरणान्याहु रेकादशेति ।
द्वात्रिंशत्सूत्रसंख्ये त्यवहितमनसो लक्ष्मणार्या स्वभाष्ये ॥

संख्यासाम्यं प्रयाताह्यधिकृतिगणने शङ्करार्या स्वभाष्ये ।
सूत्रं यन्नाद्रियन्ते मुनिकरकलितं तत्प्रतिज्ञाविरोधात् ॥

सौत्री संख्या **शुभाशीः** [545] अधिकृतिगणना चिन्मयी [156] लाक्ष्मणीया ।
तद्वत्संख्या नमाना[555] ह्यधिकृतिगणना योभयी [191] शाङ्करीया ॥

आधिक्यन्यूनता यत्क्वचिदिह विहिता तत्प्रतिज्ञाविरोधात् ।
इत्यालोच्यैव सर्वं सुखकरनयनं कर्तुं आलोचयन्तु ॥

अध्यायः १ पादः २

शं :—अधि–७ सू–३२ रा :—अधि–६ सू–३३

अत्रधिकरणानन्तरं गुहाधिकरण मिति एकं अधिकतया अङ्गीकृत्य "अत एव च स ब्रह्म" इति सूत्रं अधिकमिति तत्यजुः शङ्कराचार्याः ।

अन्तराधिकरणे "सुखविशिष्टाभिधानादेव च" इति सूत्रानन्तरं "अत एव च स ब्रह्म" इति व्यासाभिहितं स्वाभिमतमिति कीर्तयन्तः तस्य भाष्यं आलिलिखुः । शङ्करकल्पितं गुहाधिकरणं अनभिधाय अन्तराधिकरण मेव उररीचक्रुः रामानुजाचार्याः ।

"द्वात्रिंशत्सूत्रसंख्येत्यधिकृतिगणना सप्तचेत्युक्तमार्यैः ।
सौत्री संख्यैकतोऽन्या षडधिकृतय इत्यूचिरे लक्ष्मणार्याः ॥

स ब्रह्मेत्यन्त आदौ अत इति पठितं मध्य एवेति चेति ।
प्रोक्तं सूत्रं "गुहेतिह्यधिकृतिरधिका शाङ्करीयेति भाव्या" ॥

सूत्रद्वययुक्तं पृथगधिकरणं शङ्करार्यकल्पितं परिहाय चतुस्सूत्रघटितं अप्रधिकरणमेकमेव अभ्युपगम्य तदुदीरिताधिकरणसूत्रे द्वे अपि स्वोक्ताधिकरण एव प्रायुङ्क्त चतुरमतयः श्रीभाष्यकृतः ।

अध्यायः १ पादः ३

शं :—अधि–१३ सू–४३ रा :—अधि–१० सू–४४

अनुकृत्यधिकरणं, कम्पनाधिकरणं, ज्योतिरधिकरणं च शङ्करार्याः अधिकतया व्यलिखन् ।

श्री भाष्यकाराः अनुकृत्यधिकरणं विहाय तत्रस्थ सूत्रद्वयं तत्पूर्वतन-दहराधिकरणे अन्तरभावयन् । देवताधिकरणानन्तरं मध्वाधिकरणं अभ्युपागच्छन् । तत्र च अधिकरणे "मध्वादिषु" "ज्योतिषि" "भावंतु" इत्येतत्सूत्रत्रयं पर्यगणयंश्च ।

सौत्री संख्या तृतीये "लव" [43] मितिरधिकारा लये [13] त्याहुरार्याः ।
सौत्री मेकाधिकां तां जगदुरधिकृतौ लक्ष्मणार्या दशेति ।
सूत्रं संत्यक्तवन्तोऽप्यधिकृतिमधिकां कांक्षमाणा विभान्ति ।
सूत्रान्मैकाज्ञयार्याः अधिकृतिमितकृत्यां यशोभाज आसन् ॥

अध्यायः १ पादः ४

शं:—अधि–४ सू–२७ रा:—अधि–४ सू–२९

अधिकरणसंख्या यादेऽस्मिन् उभयोः आचार्ययोः समाना ।

सूत्रपरिगणने रामानुजार्याः एकेन अधिकाः । २६ तमसूत्रं एकमेवेति भाष्यं तस्य चक्रुः शंकराचार्याः । श्री भाष्येतु तदेव सूत्रं-द्विधाकृतं व्यासैरिति द्वेधास्थितस्य भाष्यं व्यरचयन् भाष्यकाराः । अत एव एते ततोऽपि सूत्रेणैकेन अधिका इति अभिहितं ।

आद्येऽध्याये चतुर्थे चरण उभयधी रष्टसंख्याधिकारे ।
एकेनोनाहि सूत्रक्रमपरिगणने शंकरार्या अभूवन् ।
द्वेधाभूतं तदेकीकृतमिति विशदं भाष्यकारैः विवव्रे ।
एकोनत्रिंशदेवेत्यनघवचनतो सूत्रसंख्यामवोचन् ॥

अध्यायः २ पादः १

शं:—अधि–१३ सू–३७ रा:—अधि–१० सू–३६

सू-११ तर्काप्रतिष्टानादप्यन्यथा-प्रसङ्गः "इत्येकं सूत्रम्"	एतदत्र "तर्काप्रतिष्ठानादपि" इति "अन्यथानुमेयमिति चेदेवमप्य-विमोक्षप्रसङ्गः" इति च द्वेधाभूतं परिपठितम् ।
सू-१७ "असद्व्यपदेशान्नेतिचेन्न... वाक्यशेषात्" सू-१८ "युक्तेः शब्दान्तराच्च एवं सूत्रद्वयम्"	अत्रद्विधापठितं एकीकृत्य एकमेवेदं सूत्रमिति कीर्तितम् ।

अधि ९ कृत्स्नप्रसच्यधि सू-२६-२९ पर्यन्तम्	एतदधिकरणं सू-२६-३२, पर्यन्तं अनुधाव्य परिसमाप्तं परिदृश्यते।
अधि १० सर्वोपेताधि सू-३०-३१	इदमत्र न। अत्र प्रसक्तं सूत्रद्वयं पूर्वाधिकरणे अन्तर्भूतम्।
सू-३५ "नकर्माविभागात्...अनादित्वात्" सू-३६ "उपपद्यते चाप्युपलभ्यते च"	सूत्रद्वयमिदमत्र एकीकृत्य पठितं एकमेवेवि।

अध्याये स्युर्द्वितीये प्रथमचरणगाः अष्टपञ्चाधिकाराः।
छागां[27] कान्यत्र सूत्रान्यकथिषत पुनः शंकरार्यैं स्वभाष्ये॥

षट्त्रिंशत्सूत्रसंख्येत्यधिकृतिदशकं प्रोचिरे लक्ष्मणार्याः।
एवं न्यूनाधिकत्वं विशदमभिहितं प्रायशो भावभेदात्॥

अध्यायः २ पादः २

शं:—अधि—८ सू—४५ रा:—अधि—८ सू—४२

उभयोः अधिकरणसंख्यामात्रं समानम्।

शं—सू-१-२ सूत्रद्वयमिदं एकसूत्रतया परिगणय्य पठितम्।

१९ तमं सूत्रं "इतरेतरप्रत्ययत्वादिति चेन्न उत्पत्तिमात्रनिमित्तत्वात्" इति पठितं शंकरैः।

रामानुजार्यैस्तु तदेव सूत्रं "इतरेतरप्रत्ययत्वात् अनुपपन्नमिति चेन्न सङ्घातभावानिमित्तत्वात्" इति पठितं व्याख्यातं च।

शंकररीत्या ५ अधिकरणं "अभवाधिकरणं" इति नाम्ना आहूय तत्र सूत्रद्वयं वर्तते इति ज्ञायते।

इद मेवाधिकरणं "उपलब्ध्यधिकरणं" इति आभाष्य "न भावोऽनुपलब्धेः" इत्येत्पर्यन्तं सूत्रत्रयात्मकं तदिति तस्य भाष्यं चक्रुः रामानुजाचार्याः।

३१ तमं सूत्रं एकं वर्तते शंकरभाष्ये। एतत् नास्ति श्रीभाष्ये, ३२ तमं सूत्रं "सर्वथानुपपत्तेश्च" पृथक्त्वेन सर्वथानुपपत्त्यधिकरणनाम्ना च वर्तते।

